
# சாவி.85



ணிமைந்தன்



# சாவி-85

## ராணிமைந்தன்

சாவி பப்ளிகேஷன்ஸ்
7 முதல் ட்ரஸ்ட் குறுக்குத் தெரு
மந்தவெளி சென்னை 600 028
✆ 493 9965

முதற் பதிப்பு ஜனவரி 2001
விலை 150/-
ஒளி அச்சு சித்ரா காமராஜ் சென்னை-15
© 435 48 40, 624 7797

அட்டை வண்ணப்படம்
மற்றும் உள்ளே பெரும்பாலான
படங்கள்: 'பாச்சா'

அச்சிட்டோர்:
**ரத்னா ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,**
ராயப்பேட்டை,
சென்னை-600 014.



என்னையும்
தமது மகன் போலப் பாவித்து
என் மீது
பேரன்பு காட்டி வரும்
ஆசிரியர் சாவி அவர்களின்
அன்புத் துணைவியார் –
திருமதி ஜானகி அம்மையார்
அவர்களுக்கு
இந்நூல்
என் நன்றிக் காணிக்கை.

**– ராணிமைந்தன்**

This book is published with
financial aid by

**Mr. P. Obul Reddy**

Managing Director, Indo Nippon Ltd.
and

**Srimathi Gnanamba**

through their Charitable Trust

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

# அணிந்துரை

மகிழ்ச்சிகரமான நாட்களில் மட்டுமல்லாமல், துன்ப காலங்களிலும் எனக்குத் துணையாகித் தோளுக்கு வலிமை சேர்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ள தூய நண்பர் திரு. சாவி அவர்களின் 85வது பிறந்த நாளையொட்டி அன்புக்குரிய திரு. ராணிமைந்தன் அவர்கள் 'சாவி – 85' எனும் பெயரில் அருமையான நூலொன்றை உருவாக்கியிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

"உழைப்பு, நேர்மை, துணிவு – இந்த மூலதனம் ஒருவரை உயர்த்துமா?

உயர்த்தும் என்பதுதான் சாவியின் வாழ்க்கை"

– என்று இந்நூலின் ஆசிரியர் திரு. ராணிமைந்தன் இதன் முகப்புரையில் கூறுவது முற்றிலும் பொருந்தும்.

திரு. சாவி அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை ஓர் ஆவணமாகத் தொகுக்க வேண்டும் என ஆசை கொண்டு, ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளாகத் திரு. சாவி அவர்களுடன் பழகிக் களித்த அனுபவங்களின் அடிப்படையில் இந்த அருமையான நூலைப் படைத்துள்ளார் திரு. ராணிமைந்தன்.

நீதிக்கட்சி தோன்றிய 1916ஆம் ஆண்டில் பிறந்த திரு. சாவி, அதன் தாக்கமாகச் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளையும் இதயத்தில் தாங்கியுள்ளவர்; அதனை எழுத்தில் வடித்து வளர்த்தும், வாழ்வில் கடைப்பிடித்தும் பாராட்டுகள் பெற்றுள்ள பெருமைக்குரியவர்.

தந்தை பெரியார் அவர்களிடம் பெருமதிப்புக் கொண்டுள்ளவர் திரு. சாவி. அவர் தந்தை பெரியார் மீது தாம் ஈர்க்கப்பட்ட விதத்தை

விவரித்துள்ள பாங்கு இந்நூலில் பக்கம் 162ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

''நான் அப்போது நாச்சியப்ப செட்டித் தெருவில் வசித்து வந்தேன். பெரியார் அப்போது ஒருநாள் எங்கள் தெருமுனையில் ஒரு கூட்டத்தில் பேசினார். அவர் பேசி நான் கேட்ட முதல் கூட்டம் அதுதான். தம்முடைய கொள்கைகளை அவர் எடுத்து வைத்து, மட்டைக்கு இரண்டு கீற்றாக விளக்கிய விதம்தான் என்னைப் பெரிதும் கவர்ந்தது. எளிமையான, சக்தி வாய்ந்த சொற்கள், அழுத்தம் திருத்தமான உச்சரிப்பு, ஏழை எளிய மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்துவிடக்கூடிய விதத்தில் வார்த்தைகளைப் பெரியார் கையாண்ட முறை எல்லாமே என்னைக் கவர்ந்தது. பிராமணீயத்தின் மீது எனக்கே வெறுப்பு தோன்றும் அளவுக்குச் சக்தி வாய்ந்த சொற்பொழிவாக அவருடைய அன்றைய பேச்சு இருந்தது.''

''பெரியார் அவர்கள் தமது சொந்த வாழ்க்கையில் பல பிராமணர்களை நண்பர்களாகப் பெற்றிருந்தார் என்ற உண்மை பலருக்குத் தெரியாது. பார்ப்பனீயம், பிராமண ஆதிக்கம் ஆகியவற்றைதான் அவர் தம் வாழ்நாள் முழுதும் எதிர்த்துப் போராடினாரே தவிர, பிராமணர்களை அல்ல. இந்த உண்மை தெரியாமல் அவர் மீது கோபப்பட்ட பிராமணர்கள் உண்டு. பெரியாரின் சொற்பொழிவைக் கேட்டதிலிருந்து அவர் மீது எனக்கு ஒரு பாசமே வந்துவிட்டது. பிராமணீயத்துக்கு எதிராக அவர் எடுத்து வைக்கும் ஆதாரங்களும், உண்மைகளும் கோர்ட்டில் நீதிபதி முன்பாக ஒரு வழக்கறிஞர் பாயிண்ட் பாயிண்டாகச் சொல்லி வாதாடுவது போலிருக்கும். பெரியாரின் பேச்சுத் திறனில் மயங்கிப் போன நான் பின்னர் அவர் எங்கே பேசினாலும் அங்கெல்லாம் போய் அவரது பேச்சைக் கேட்டுவிட்டு வருவேன்''

– இப்பகுதிகளை இந்நூலில் படிக்கும் பொழுது பெரியார் மீது சாவி கொண்டுள்ள மதிப்பு புலனாகும்.

தந்தை பெரியார் அவர்களுடன் மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர் ஆகியோருடனும் அன்பு கொண்டிருந்த திரு. சாவி அவர்கள் அப்பெருமக்களின் பாராட்டுகளையும் பெற்றுள்ளவர் என்பது இந்நூலின் மூலம் ஆங்காங்கே விளக்கம் பெறுகிறது. நண்பர் சாவி அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட நட்புப் பிணைப்புகளை எண்ணி அடிக்கடி நான்

மகிழ்வதும், நெகிழ்வதும் உண்டு. 'குங்குமம்' இதழ் தொடங்கப்பட்ட வரலாறு, அவர் என் மீதும், நான் அவர் மீதும் கொண்டுள்ள நட்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதனை இந்நூல் 256-259 ஆம் பக்கங்களில் எடுத்துரைக்கிறது.

13.5.1992 தேதியிட்ட சாவி இதழில் திரு. சாவி வெளியிட்ட நகைச்சுவைத் துணுக்கு ஒன்றிற்காக மாதர் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க, அது தொடர்பாக, "உள்நோக்கம் ஏதுமின்றி இயல்பாகப் போடப்பட்ட இந்த ஜோக் உங்கள் உணர்வுகளைப் பாதித்திருக்கிறது என்றால், ஐ ஆம் ஸாரி" என்று வெளிப்படையாகவே அவர் வருத்தம் தெரிவித்த பின்னரும், முந்தைய ஆட்சி அவரைக் கைது செய்து காவலில் வைத்ததும், நான் காவல் நிலையத்திற்கே சென்று அவர் ஜாமீனில் வெளிவர ஆவன செய்ததுடன், அவர் வீட்டிற்குச் சென்று, அவரது துணைவியாரிடம் நேரில் ஆறுதல் கூறிய நிகழ்வும், எங்களுடைய நட்பின் வரலாற்றுக் குறிப்புகளாக இந்நூலில் 273-278 ம் பக்கங்களில் இடம் பெற்றுள்ளன.

ஒரு சிறு கிராமத்தில் பிறந்து, ஏழ்மை நிலையில் வளர்ந்து, விளம்பர போர்டு எழுதுபவராக, சிறுகதை எழுத்தாளராக, ஆனந்த விகடன், தினமணி கதிர், குங்குமம் இதழ்களில் உதவி ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பணியாற்றி 'சாவி' எனும் பெயரில் சொந்தமாகப் பத்திரிகையையும் தொடங்கி, ஒரு சிறந்த பத்திரிகையாளராகப் புகழுடன் விளங்குவதுடன், 'வாஷிங்டனில் திருமணம்' போன்ற புகழ்பெற்ற நகைச்சுவைப் புதினங்கள் பலவற்றையும் படைத்துப் பெருமைகளைக் குவித்துள்ளவர் திரு. சாவி. இவரது வாழ்வின் களங்கள் இன்றைய இளம் தலைமுறைக்கு முன்னேறும் தளங்களாகப் பயன்பட்டு, வலிவும் வளமும் வழங்கக்கூடியவை. அவற்றையெல்லாம் நறுமணம் கமழும் மலர் மாலையாகத் தொடுத்துள்ளது இந்நூல். நூலாசிரியர் திரு. ராணிமைந்தன் அவர்களுக்கு என் பாராட்டுகளும், நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.

அன்புள்ள,

(மு. கருணாநிதி)

**எஸ்.பாலசுப்ரமணியன்**
ஆசிரியர்

ஆனந்த விகடன்
757, அண்ணா சாலை,
சென்னை – 600 002
தொலைபேசி : 8524054, 8524064
ஃபேக்ஸ் : 91–44–8523819

தனது 85வது வயதில் அடியெடுத்து வைத்திருக்கும் திரு. சாவியின் வாழ்க்கை வரலாற்றை எழுதி ஒரு நூலாக வெளியிட்டிருக்கும் ராணிமைந்தனின் முயற்சி பாராட்டுக்குரியது.

நாற்பது வருடங்களுக்கு மேலாக நான் திரு.சாவியை அறிவேன். விகடனில் என்னுடன் சாவி பணிபுரிந்த அந்த நாட்கள் இன்னமும் என் நினைவில் பசுமையாக இருக்கின்றன.

பத்திரிகைத் துறை என்பது சாவியின் ரத்தத்துடன் கலந்துவிட்ட ஒன்று. எழுத்து அவருடைய ஜீவன். நகைச்சுவை அவரது உயிர்மூச்சு. இரவு பகல் பார்க்காமல் உழைப்பதற்குத் தயங்காதவர். எடுத்துக் கொண்ட பணி எதுவாக இருப்பினும் அதில் முகம் சுளிக்காமல் முழுமூச்சுடன் ஈடுபடுபவர். சுறுசுறுப்பானவர்.

'வயதானாலும் எண்ணத்தில் இளமையானவர்' என்பது சாவியைப் பொறுத்தவரை அலங்கார வார்த்தை இல்லை. அவருடன் பழகியவர்களுக்கு இது தெரியும்.

85 வயது இளைஞர் சாவி இதே சுறுசுறுப்புடனும், பூரண ஆரோக்கியத்துடனும் தம்முடைய இலக்கியப் பணியைப் பல்லாண்டு தொடர வாழ்த்துகிறேன்.

எஸ்.பாலசுப்ரமணியன்
ஆசிரியர்



*Dr. M.A.M.Ramaswamy*
*B.A., D.Litt.,*

CHETTINAD HOUSE
RAJAH ANNAMALAIPURAM,
CHENNAI - 600 028.

அன்புள்ள திரு. ராணிமைந்தன் அவர்களுக்கு,

வணக்கம். "சாவி" என்று அன்புடன் அழைக்கப்பெறும் திரு. சா.விஸ்வநாதன் அவர்கள் தமது 85வது வயதை அடைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதும் முயற்சியில் தாங்கள் ஈடுபட்டிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களையும் பாராட்டி தங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் தனது 60 ஆண்டுகளுக்கு மேலான அனுபவ முதிர்ச்சியால் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பவர். தலைசிறந்த ஒரு நகைச்சுவை எழுத்தாளர். நகைச்சுவையுடன் கருத்துச் செறிவினையும் கலந்து இலக்கியம் படைக்கும் வல்லவர். பழகுவதற்கு இனிய பண்பாளர். தமிழ் வளர்ச்சிக்கு தன் அறிவாற்றலைப் பயன்படுத்தி முத்திரை பதித்தவர். வாழ்க்கையின் பல்வேறு கால கட்டங்களையும் தமது சோர்விலா உழைப்பால் கடந்து வெற்றி கண்டவர். அவருடைய வாழ்க்கை வரலாறு இளம் பத்திரிகையாளர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் படித்துப் பயன் பெற உதவும் என்பதில் ஐயம் இல்லை. திரு. சாவி அவர்கள் ஓய்வு பெற்றிருந்தாலும் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, தமிழ்ப் பத்திரிகை உலகிற்கு தமது அறிவாற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்று அருள் தரும் ஐயன் ஐயப்பன் திருவடிகளைச் சிந்தித்து வணங்குகிறேன்.

அன்புடன்,

மு.அ.மு.இராமசாமி



# 'சாவி – 85' எழுதியது ஏன்?

இப்போது அவருக்கு வயது எண்பத்தைந்து. இதில் அறுபது ஆண்டுகள் அவரது சுவாசம் பத்திரிகைப் பணியாகவே இருந்தது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நாள்தோறும் நேரில் அவரைப் பார்க்கவோ அல்லது தொலைபேசி மூலம் பேசவோ எனக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு என் வாழ்க்கையின் பெருமை.

பத்திரிகை உலகில் அவரது கரம் பிடித்துக் கொண்டு நடை பயின்றவன் நான்.

உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவரோடு சேர்ந்து போனபோதெல்லாம் – அவரோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் – அவரது அனுபவங்களைக் கேட்ட போதெல்லாம் – நான் ஒரு பத்திரிகை ஆசிரியரோடு பழகுவது போன்றே உணர்ந்ததில்லை. ஒரு பல்கலைக் கழக நூலகத்தில் படித்துக் கொண்டிருப்பது போலவேதான் உணர்ந்திருக்கிறேன்.

உழைப்பு, நேர்மை, துணிவு – இந்த மூலதனம் ஒருவரை உயர்த்துமா?

உயர்த்தும் என்பதுதான் சாவியின் வாழ்க்கை.

சாவி அவர்களின் வாழ்க்கை அனுபவங்களைப் பகுதி பகுதியாக நான் கடந்த கால் நூற்றாண்டு காலம் கதை கேட்பது போலக் கேட்டிருக்கிறேன். கூடவே இருந்தும் கவனித்திருக்கிறேன். இவற்றை ஒரு நூலாக – ஓர் ஆவணமாகத் தொகுக்க வேண்டும் என்று ஆசை கொண்டேன்.

'வேண்டாம்' என்றார் சாவி. ''என்னைவிட எத்தனையோ பேர் எப்படியெல்லாமோ உழைத்து முன்னுக்கு வந்திருக்கிறார்கள். அப்படி என்ன சாதித்து விட்டேன் என் வாழ்க்கையில்? ஒன்றுமில்லை. வேண்டாம்.''

நான் விடாக்கண்டன்.

இந்த ஆண்டு அவரது 85வது பிறந்த ஆண்டு.

"நான் எழுதத்தான் போகிறேன்" என்றேன் பிடிவாதமாக.

என் ஆர்வம் வென்றது.

ஒன்பது மாதங்களுக்கும் மேல் அவரைப் படாதபாடு படுத்தி விட்டேன். ஓய்வெடுக்கவே விடவில்லை. எனக்காக – இந்த நூலுக்காக – தமது வாழ்க்கையை அவர் திரும்பிப் பார்க்க வைத்தேன்.

வருட வாரியாக வாழ்க்கையைப் பதிவு செய்யும் நாட்குறிப்பு அல்ல இந்த நூல். இது ஒரு தேதியில்லா டயரி! ஆனால் அனுபவங்களின் அணிவகுப்பு.

சாவி அவர்களோடு பழகியவர்கள் சொல்வதையும் எழுத்தில் வாங்கி புத்தகத்தில் சேர்த்துக் கொள்ள விரும்பினேன். அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினேன். குவிந்தன பதில்கள். அவற்றில் பொருத்தமான வரிகளைப் பொருத்தமான இடத்தில் இந் நூலில் பொருத்தியிருக்கிறேன்.

"நான் எழுதிய எவ்வளவோ மேட்டர்கள் தங்களது 'எடிட்டிங்'கில் பொலிவு பெற்றிருக்கின்றன. இந்த நூலையும் 'எடிட்' செய்து தர வேண்டும்" என்று சாவியிடம் உரிமையுடன் கேட்டேன்.

சிரித்துக் கொண்டே 'சரி' என்றார். செய்து தந்தார்.

இந்த நூலின் பக்கங்களை நேர்த்தியாக அச்சுக் கோக்கும் பணியினை பொறுப்பேற்றுக் கொண்ட நண்பர் திரு. தங்க.காமராஜ் –

எத்தனை முறை திருத்தினாலும் முகம் சுளிக்காமல் அச்சுக் கோத்துத் தந்த நண்பர் திரு. செல்வின் –

கண் கவரும் வகையில் முகப்பு அட்டையை கணினியில் வடிவமைத்துத் தந்த ஓவியர் நண்பர் திரு. அரஸ் –

நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஆனந்த விகடன் அதிபர் மதிப்பிற்குரிய திரு. பாலசுப்ரமணியன் –

அனைவருக்கும் என் நன்றி என்றென்றும்.

அனைத்திற்கும் மேலாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அற்புதமான முன்னுரை இந்நூலுக்குக் கிடைத்திருப்பது நூலுக்கும் பெருமை. எனக்கும் பெருமை. அரசியல், தனிப்பட்ட வாழ்க்கை நியதிகள் இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்ட தூய்மையான, ஆழமான நட்புக்கு சாவி - கலைஞர் நட்பு அழகான உதாரணம். இந்நூலுக்கு முன்னுரை வழங்க அவரை விடவும் தகுதியானவர்கள் வேறு யார் இருக்க முடியும்? கலைஞர் அவர்களுக்கு என் கனிவான நன்றி.

'சாவி - 85 எழுதியது ஏன் ?' என்ற தலைப்புக் கேள்விக்குப் பதில்: 'சாவிக்கு நன்றி சொல்ல.' எதற்காக?

- ரிசர்வ் வங்கி எனும் கடலில் கரைந்து போகும் ஒரு துளியாக, கரன்ஸி நோட்டுகளோடும், கனமான லெட்ஜர்களோடும் உறவாடிக் கொண்டிருந்த என்னை எழுதச் சொல்லி ஊக்குவித்தாரே, அதற்காக.

- உலகின் பல நாடுகளுக்கும் என்னை அழைத்துப் போய், 'உற்றுப் பார். கற்றுக் கொள்' என்று என் சிந்தனையைச் செம்மைப் படுத்தினாரே, அதற்காக.

- வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வாய்ப்புகள் மட்டுமல்லாமல், சில வெளிநாட்டு வானொலிகளுக்காகச் செய்தி வாசிக்கும் வாய்ப்புகள் கிடைத்ததற்கும், இன்று லண்டன் பி.பி.சி. உலகச் சேவையில், 'தமிழோசை' வானொலி நிகழ்ச்சியில் பங்கேற்கவும், நேயர் நல்லுறவுப் பணியில் ஈடுபடவும், 'சாவி உருவாக்கிய பத்திரிகையாளன்' என்ற தகுதியும் ஒரு முக்கிய காரணமாக அமைந்ததே, அதற்காக.

புதுக்கவிதை பாணியில் சொல்வதானால் வேருக்குத் தலை வணங்கி அதற்கு ஒரு விழுது சொல்லும் நன்றியே இந்த 'சாவி - 85.'

– ராணிமைந்தன்

'மருதம்'
2, மணவாளன் தெரு,
வெற்றி நகர் எக்ஸ்டென்ஷன்,
செம்பியம், சென்னை - 600 082.
தொலைபேசி : 5378743 / 5571950
மின்னஞ்சல் : ra_main@yahoo.com

**AVM**

**PRODUCTIONS**

திரு. ராணிமைந்தன் அவர்களுக்கு,

வணக்கம்.

இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் சிறந்த தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களில் என் மதிப்பிற்குரிய திரு. சாவி அவர்கள் மூத்தவர் மட்டுமின்றி, தமது நகைச்சுவையால் பல்லாயிரக் கணக்கான வாசகர்களைப் பெற்றிருப்பவர்.


அவரது வாழ்க்கை ஒரு அற்புதச் சுரங்கம்; ஆழ்கடல். அவர் பழகிய பிரமுகர்களின் பட்டியல் நீண்டது.

85–வயது ஆகும் திரு. சாவி அவர்களது வாழ்க்கை அனுபவங்களை 'சாவி – 85' என்ற தலைப்பில் ஒரு நூலாக இனிய நண்பர் திரு. ராணிமைந்தன் அவர்கள் எழுதியிருப்பது அறிந்து மிகவும் மகிழ்கிறேன். இந்தப் பயனுள்ள முயற்சியை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

திரு.சாவி அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள் இளைய தலைமுறைப் பத்திரிகையாளர்களுக்கு, அவர்கள் தங்களைச் செம்மைப்படுத்திக் கொள்ள பெரிதும் உதவும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.


85 – வயதாகும் திரு. சாவி அவர்களுக்கு என் வணக்கம்.

'சாவி – 85' நூலுக்கு என் வாழ்த்துகள்.



தங்களன்புள்ள,

மெ. சரவணன்



திருமதி ஜானகி, திரு. சாவியுடன் ராணிமைந்தன்

**உள்ளே...**



| | |
|---|---|
| மாம்பாக்க நாட்கள் | 17 |
| திருப்பாதிரிப்புலியூரில்... | 25 |
| எழுத்தாளர் ஆனது எப்படி? | 34 |
| 'ஆனந்த விகடன்' அங்கீகாரம் | 40 |
| ஒன்பது மாதம் கடுங்காவல் | 48 |
| சிறையில் கொழுக்கட்டை | 54 |
| ஆதித்தனாரின் பெருந்தன்மை | 59 |
| நவகாளி யாத்திரை | 66 |
| ராஜாஜியின் அறிவுரைகள் | 72 |
| வெள்ளி மணி ஓசை | 78 |
| மல்யுத்தப் போட்டி | 86 |
| காஃபி பேலஸ் | 94 |
| மீண்டும் விகடனில் | 97 |
| முத்திரைக் கதை | 104 |
| வாஷிங்டனில் திருமணம் | 111 |
| பெருந்தலைவர் காமராஜ் | 121 |
| 'விசிறி வாழை'க்குப் பிறகு | 129 |
| முதல் தரிசனம் | 134 |
| இளையாத்தங்குடியில்... | 139 |
| மாமனிதர் வாசன் | 144 |
| நடுக்கடலில் ஒரு பயணம் | 150 |
| மணியன் திருமணம் | 155 |
| காமராஜரின் மதிநுட்பம் | 158 |
| பெரியாருடன் ஒரு நாள் | 162 |
| புதுமனை புகு விழா | 168 |
| காமராஜருக்கு வந்த கோபம் | 173 |


ஜெயகாந்தன் அறிமுகம் 177
விந்தை மனிதர் ஜி.டி.நாயுடு 181
அறிஞர் அண்ணாவின் பாராட்டு 187
அருட்செல்வர் மகாலிங்கம் 190
'அன்பே வா' அனுபவம் 194
'கதிர்' காலம் – 1 202
'கதிர்' காலம் – 2 207
காமராஜ் – சோ சந்திப்பு 217
கருகிய மொட்டு 222
எழுத்தாளர் துமிலன் 228
கதிர் ஸர்க்குலேஷன் 232
இரட்டை நாயனம் 236
கலைஞருடன் கனிந்த நட்பு 239
கதிர் ஆசிரியர் யார்? 252
இடுக்கண் களைந்த கலைஞர் 256
குங்கும நாட்கள் 260
சொந்தப் பத்திரிகைகள் 267
நட்புக்கு இலக்கணம் 273
சாவி வாயால் சபாஷ்! 279
பத்திரிகை அவர் மூச்சு 292
பயணங்கள் – நண்பர்கள் 301
நடத்திய விழாக்கள் 315
நண்பர்கள் வட்டம் 319
நல்லதொரு குடும்பம் 329
இருதய ஆபரேஷன் 340
சாவி – இன்று 345



சாவியின் நூல்கள் வெளியீட்டு விழாவில் கலைஞரும் சாவியும்.

சாவியின் பிறந்த நாளன்று வீட்டுக்கு வந்து வாழ்த்துகிறார் கலைஞர். சாவியின் பேரக் குழந்தைகள், மாப்பிள்ளை விசுவநாதன், ராமமூர்த்தி.





இடமிருந்து - 'பாச்சா' (சாவியின் புதல்வர்), சாதிக்பாட்சா, கலைஞர், சாவி, ஜானகி (மனைவி), முரசொலி மாறன்.

டெல்லி ராஜ்காட் காந்தி சமாதிக்கு சாவி மலர்வளையம் வைத்து அஞ்சலி. உட்கார்ந்திருப்பவர் எம்.ஜி.ஆர். பின்னால் வி.என். ஜானகி, வலது ஓரம் நிற்பவர் டாக்டர் சுப்பிரமணியம்.





↑ சாவி, பேராசிரியர் அன்பழகன்




அருட்செல்வர் மகாலிங்கம் அவர்களுடன் →

சாவி எண்பதாவது பிறந்த நாளன்று தூர்தர்ஷன் முன்னாள் இயக்குநர் திரு. ஏ. நடராஜன், நல்லி குப்புசாமி செட்டியார்



← சாவி - கல்கி சதாசிவம்



கலைஞருக்குப் பொன்னாடை
அணிவித்து மகிழ்கிறார்....



சென்னை ஷெரீப் எம்.ஏ.எம்.
ராமசாமி அவர்களுடன்...





↑ முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் கேரளா கவர்னர் பா. ராமச்சந்திரன் அவர்களுடன்...



← சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் சத்திய சபா தொடக்க விழா. அப்போதைய கவர்னர் மைசூர் மகாராஜா, செயலாளர் சாவி, பின்னால் அப்போதைய முதலமைச்சர் பக்தவத்சலம்.



ஊட்டியில் : காமராஜுடன் சாவி



நியூஜெர்ஸியில் – சாவி, பேத்தி ரம்யா, மகள் வைஜயந்தி, மருமகள் சீதா.
பின்னால் நிற்பவர் வைஜயந்தியின் கணவர் விசுவநாதன்

திருமதி மாலதி (சாவியின் மகள்), திருமதி ஜானகி (சாவியின் மனைவி),
திரு. ராமமூர்த்தி (மாலதியின் கணவர்) திவ்யா, ரதி, ராமமூர்த்தி – மாலதியின் செல்வங்கள்.





திருமதி ஜானகிக்கு பிறந்த நாள் கேக். மகள் உமா, மாலதி, வைஜயந்தி, பேரக்குழந்தைகள்.




நிற்பவர் பேரன் கௌதம், உட்கார்ந்திருப்பவர் பேரன் விஜய், பேத்தி ஆர்த்தி, ரதி, திவ்யா, வைஷ்ணவி, கீழே பூப்போட்ட சட்டையில் பேரன் அமிதாப்



முக்தா சீனிவாசன், சாவி தம்பதியர், மூப்பனார்



கோபுலு தம்பதியருடன்...
ஜானகி, மைதிலி, கோபுலு, சாவி

திரு. ஏவி. மெய்யப்ப செட்டியார் அவர்களுடன் சாவி, மணியன்



# 1. மாம்பாக்க நாட்கள்

அந்தக்கால கிராமத்துக்குரிய அனைத்து 'சாமுத்ரிகா லட்சணங்க'ளோடும் அமைதியாக இருந்தது மாம்பாக்கம். வட ஆற்காடு மாவட்டத்தில் மற்ற எல்லா கிராமங்களைப் போலவே அதுவும் ஒரு கிராமம்.

ஈசுவரன் கோவில், பெருமாள் கோவில், கருட கம்பம், பிள்ளையார் கோவில் என்று எல்லாமே இருந்தன.

வயல்களுக்கப்பால் சற்று தொலைவில் பெரிய ஏரி. அதைத் தொடர்ந்து சிற்றேரி, குளம், குட்டை, ரோடு ஓரப் புங்க மரம், திண்ணை வைத்த வீடுகள் என்று அது ஒரு செழுமையான கிராமம்.

சாமா சுப்பிரமணிய சாஸ்திரியின் வீடுதான் அக்ரகாரத்தில் பெரிய வீடு. மனைவி மங்களம்மாவுடன் ஆசார சீலராய் கொஞ்சம் நிலபுலத்தோடு தானுண்டு தன் சமஸ்கிருதப் புலமை உண்டு என்று வாழ்ந்து கொண்டிருந்தார் சாஸ்திரிகள்.

மீனாட்சி, கண்ணம்மா (எ) கமலம் ஆகிய இரு மகள்களுக்கு அடுத்து 1916 ஆகஸ்ட் 10ம்தேதி சாஸ்திரிகளுக்கு ஒரு மகன் பிறந்தான். காசி யாத்திரை போய் வந்தபின் பிறந்ததால் விசுவ நாதன் என்று பெயர் வைத்தார்.

பெற்றோரால் அவனைப் படிக்க வைக்க முடியவில்லை என்பதைவிட, படிப்பில் விசுவநாதனுக்குப் பெரிய மோகம் ஏதும் இல்லை என்பதுதான் உண்மை.

கிராமத்தில் நான்காவது வகுப்போடு படிப்பை நிறுத்தி ஆயிற்று.

பதினான்கு வயதுப் பையனாக இருந்தபோது விசுவநாதனுக்கு எதையுமே குறும்புத்தனமாகச் செய்வதிலேயே ஆர்வம் அதிகமாக இருந்தது.

தாழ்ந்து தரையைத் தொடுகின்ற புங்கமரத்துக் கிளைகளில் தொத்தி, கிளை விட்டுக் கிளை பாயும் கலையில் சூரனாக இருந்தான்.

சாமா சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு இரண்டு பழக்கங்கள். ஒன்று, தனக்கிருந்த சமஸ்கிருதப் புலமையைக் கொண்டு அவ்வப்போது ராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது. இன்னொன்று, கிராமத்தில் சக மனிதர்களுக்குக் கடன் கொடுத்து உதவுவது. இவருக்கே பொருளாதார நிலை சரியில்லாதபோது இவர் எப்படி மற்றவர்களுக்குப் பண உதவி செய்தார்?

கிராமத்திலிருந்த கூட்டுறவு வங்கியில் நூறு, இருநூறு என்று கடன் வாங்கி அதைத் தன் கிராமத்தில் பயிர் வேலை செய்யும் குடியானவர்களுக்கு பத்து ரூபாய், இருபது ரூபாய் என்று பிரித்துக் கடனுதவி செய்வார்.

வேர்க்கடலை அறுவடை முடிந்ததும், அவர் கொடுத்த கடன் வேர்க்கடலையாய்த் திரும்பி வரும். அந்த ஈர வேர்க்கடலையை உலர்த்தி விற்கும்போது சிறிதளவே லாபம் கிடைக்கும். அந்த ஈர வேர்க்கடலையை குளத்துக்கு அருகேயுள்ள மைதானத்தில்– மயான மைதானம் என்று பெயர் – பரப்பிக் காய வைக்கும் நாட்களில் மகனை அழைத்து ''டேய்... விசுவநாதா, போய் வேர்க்கடலையைப் பார்த்துக்கோ...'' என்பார்.

மயானத்தை அடுத்து சர்க்கார் சாலை. விசுவநாதன் கண்ணில் படவேண்டுமென்றே 'கார்த்திகேயன் பஸ் சர்வீஸ்' ஆரணி – செய்யாறு வழித்தடத்தில் மாம்பாக்கம் கூட்டு ரோடு

வழியாகப் போய் வந்து கொண்டிருக்கும். கூண்டு வண்டியில் வேர்க்கடலைக்குக் காவல் இருந்து கொண்டே தலை நீட்டி எட்டிப் பார்த்தால் 'கார்த்திகேயன்' போவது தெரியும்.

'ஒருநாள் நாமும் இந்தப் பஸ்ஸில் போக மாட்டோமா?' என்ற ஆவல் விசுவநாதனின் பிடரியைப் பிடித்து உலுக்கும்!

அந்த ஒரு நாளை தானேதான் வரவழைத்துக் கொள்ள வேண்டும் என்று விசுவநாதன் முடிவு செய்தான். அப்பாவுக்குத் தெரியாமல் கொஞ்சம் வேர்க்கடலையை எடுத்துக் கொண்டு போய் விலைக்குப் போட்டதில் ஒன்றரை அணா கிடைத்தது.

நேராக மெயின் ரோடு போய் கைவீசி 'கார்த்திகேய'னை நிறுத்தி பஸ்ஸுக்குள் ஏறி உட்கார்ந்ததுமே ஏதோ மிகப் பெரிய சாதனையைச் சாதித்து விட்ட திருப்தி! ஒன்றரை அணாவுக்கு பஸ் எவ்வளவு தூரம் போகுமோ அது வரைக்கும் டிக்கெட் வாங்கிக் கொண்டு கூட்டு ரோடு சந்திப்பு வரை போய் இறங்கி, தன் கனவு நனவான மகிழ்ச்சியை ஒரு சிலிர்ப்புடன் அசை போட்டுக் கொண்டே பொடி நடையாய் மீண்டும் மைதானம் திரும்பிய அனுபவம்... அது தனி!

பஸ்ஸைத் தவிர இன்னும் மூன்று சமாசாரங்கள் அப்போது அவனைக் கவர்ந்திழுத்தன.

காரணமே தெரியாது; ஆனால் அச்சில் வந்த எழுத்துக்களை எங்கே பார்த்தாலும் அவன் மனம் கும்மாளமிடும்.

இன்னொன்று, அவன் கிராமத்துப் பிள்ளையார் கோவில். தினமும் கோயிலுக்குப் போய் பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் போடத் தவறியதில்லை.

மூன்றாவது சமாசாரம் தெருக்கூத்து. அந்த நாட்களில் அந்த வட்டாரத்தில் பார்வையாளர்களில் ஒருவனாக தான் உட்காராமல் தெருக்கூத்து எதுவும் நடந்ததாக அவனுக்கு நினைவில்லை.

அப்போது 'சுதேசமித்திரன்' பத்திரிகை மட்டுமே அந்தக் கிராமத்துக்கு வந்து கொண்டிருந்தது.

'கொஞ்சம் பணம் புரட்டி ஒரு வாசகசாலை ஆரம்பித்தால் என்ன?' என்று விசுவநாதன் மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. உடனே, பள்ளித் தோழன் கிருஷ்ணமூர்த்தி அவன் நினைவுக்கு வந்தான்.

பொருளாதார நிலையில் விசுவநாதனின் குடும்பத்தைவிட எந்த வகையிலும் ஏற்றமில்லாத குடும்பத்தில்தான் கிருஷ்ண மூர்த்தியும் பிறந்தான். இரண்டு பேரும் நெருங்கிய நண்பர்கள். அக்ரகார ஏழைகளின் நட்பு உறுதியாக இருந்தது. ஆனால் கிருஷ்ணமூர்த்திக்கு திடீரென்று ஓர் அதிர்ஷ்டம் அடித்தது. மாடி வீட்டு அய்யாவு ஐயர் அவனைத் தத்து எடுத்துக் கொண்டார். அதனால் ஒரே இரவில் கிருஷ்ணமூர்த்தி அந்தஸ்தில் உயர்ந்து போனான்.

''லைப்ரரி தொடங்க கிருஷ்ணமூர்த்தியிடம் போய் நன் கொடை கேட்டால் என்ன?'' என்று விசுவநாதனுக்குத் தோன்ற, கிருஷ்ணமூர்த்தியிடம் போனான். விவரம் சொன்னான்.

''நான் இப்பதானேடா இந்த வீட்டுக்கு வந்திருக்கேன். இன்னும் பணம் எடுத்துச் செலவு செய்கிற அளவுக்கு அதிகாரம் என் கைக்கு வரலையே! இருந்தாலும் நீ மத்தியானம் வா...'' என்று சொல்லி அனுப்பினான்.

மத்தியானம் போனபோது மூன்று ரூபாய் எடுத்துக் கொடுத்தான்.

உடனே, வாழைப்பந்தல் சென்று (அது கொஞ்சம் பெரிய கிராமம்) அங்கே கிடைத்த சில புத்தகங்களை வாங்கி வந்து காலியாகயிருந்த ஒரு வீட்டுத் திண்ணையைச் சார்ந்த அறையில் புத்தகங்களை அடுக்கி வைத்து வாசல் விட்டத்தில் சாக்பீஸால்

'நாமகள் வாசக சாலை' என்று எழுதி வைத்தான். பகத்சிங் பெயர்தான் வைக்க வேண்டும் என்பது விசுவநாதனின் ஆசை. ஆனால் 'நன்கொடை' தந்தவனின் ஆசை நாமகள் வாசக சாலை. தட்ட முடியாதே!

எழுத்து வாசனை அறியாத கிராம மக்களுக்கு லைப்ரரி ஏன்? யாருமே வாசகசாலைப் பக்கம் கூட எட்டிப் பார்க்க வில்லை. இருந்தாலும் வாங்கிய புத்தகங்களைத் தானே படித்துப் படித்துச் சரளமாகப் படிக்கப் பழகிக் கொண்டான் விசுவநாதன்.

தெருக்கூத்து பார்ப்பது என்பது விசுவநாதனுக்கு அல்வா சாப்பிடுவது போல. அதற்குத் தடையாக எது வந்தாலும் அதைத் தகர்த்தெறிய அவன் தயங்கியதில்லை. அக்கம் பக்கம் கிராமங்களில் எங்கே கூத்து என்றாலும் அங்கே விசுவநாதன் ஆஜர். புரிசை நடேசனார் கூத்து அந்தக் காலத்தில் பிரபலம். இரவு நேரங்களில் வீட்டில் தங்காமல் ஊர் ஊராகப் போனால் அப்பா அடிப்பார்தான். அதற்காகக் கூத்து பார்க்காமல் இருக்க முடியுமா?

இந்த இடத்தில் குண்டு ஐயர் என்பவர் பற்றிச் சொல்ல வேண்டும்.

அவரது கதை ஒரு சோகக் கதை. பாலாமணி டிராமா கம்பெனியில் குண்டு ஐயர் (காரணப் பெயர்தான்) பஃபூன் வேடம் பூண்டு கலக்குவார். நன்றாக முன்னுக்கு வந்து கொண்டிருந்தவர்தான். சில ஆண்டுகளுக்குள்ளாகவே, அவரது போதாத காலம், நாடகக் கம்பெனி திவாலாகி அவரும் பாப்பராகி அனாதையாக வயதான காலத்தில் சொந்த கிராமத்துக்கே வந்து சேர்ந்து விட்டார். ஒண்டிக் கட்டை. கழுத்திலே ருத்திராட்சக் கொட்டை.

வாழ்க்கையில் நொந்து போய்விட்டாலும் அவர் ஒரு

கலைஞர் என்பதற்காகவே அந்த அக்ரகாரத்தில் வீட்டுக்கு ஒரு நாள் என்று முறை போட்டுக்கொண்டு குண்டு ஐயருக்கு வாரச் சாப்பாடு போட்டார்கள். விசுவநாதன் வீட்டிலும் ஒருநாள் 'முறை' உண்டு.

காலையில், அவரே வீட்டில் ஏதேனும் டிபன் செய்து கொள்வார். அவ்வப்போது விகடக் கச்சேரிகள் நடத்துவார். அதன் மூலம் கொஞ்சம் பணம் கிடைக்கும். குண்டு ஐயர் காலை வேளைகளில் சேமியா உப்புமா செய்யும்போது ஊரே மணக்கும்.

விசுவநாதன் மாட்டை மேயவிட மந்தை வெளிக்குக் கொண்டு போகும்போது 'டேய் பையா, திரும்பிப் போறச்சே வந்து போ' என்று குரல் கொடுப்பார். அவர் அப்படிக் குரல் கொடுத்தால் 'வந்து வாணலியில் நான் மீதி வைத்திருக்கிற உப்புமாவைச் சாப்பிட்டு விட்டுப் போ...' என்று அர்த்தம்!

குண்டு ஐயர் திடீரென்று ஒருநாள் இறந்து போய் விட்டார். அவர் மரணத்தின் பாதிப்பு நீண்டகாலம் அவனுள் இருந்தது.

பள்ளிப்படிப்பு மேல் அவனுக்குப் பிடிப்பே இல்லாமல் போனாலும் சுதேசமித்திரனை விடாமல் படித்து வந்ததால் 'விஷயம் அறிந்த பையன்' என்று விசுவநாதனுக்கு ஒரு பெயர். அந்த ஊர் 'பெரிசு'களுக்கு அப்போது ஒரு சந்தேகம் மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது.

'பஸ்ஸுக்கும் காருக்கும் என்ன வித்தியாசம்?'' திண்ணைப் பேச்சின்போது அந்த சந்தேகம் எழுந்தது. யாருக்கும் சரியான விடை சொல்லத் தெரியவில்லை. 'விசுவநாதனைக் கூப்பிட்டுக் கேட்போம்.'

அவனுக்கு அழைப்பு வந்தது. போனான்.

''நீதான் பேப்பர் படிக்கிறவன். உனக்குத் தெரிந்திருக்கணுமே! சொல்லு, பஸ்ஸுக்கும் காருக்கும் என்ன வித்தியாசம்?''

''பஸ்ஸில் ஐம்பது அறுபது பேர் பயணம் செய்யலாம். டிக்கெட் வாங்கினால் யார் வேண்டுமானாலும் போகலாம். காரில் ஐந்தாறு பேர் மட்டுமே போக முடியும். காரை பணக்காரர்கள் மட்டுமே வைத்துக் கொள்ள முடியும்.'' – பளிச்சென்று பதில் சொன்னான் விசுவநாதன்.

''பாத்திங்களா!''

விசுவநாதனின் விளக்கமான பதிலுக்கு அன்று ஒரே பாராட்டு மழை! எப்படியும் எழுத்தாளன் ஆகிவிடவேண்டும் என்ற பேரவா விசுவநாதன் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. சாத்தியம்?

தினம் தவறாமல் பிள்ளையார் கோவிலுக்குப் போய் அவரோடு பேசிக் கொண்டிருப்பான். பிள்ளையாருக்குச் செல்லப் பிள்ளை ஆனான்.

''பிள்ளையாரப்பா! நானும் பத்திரிகையில் எழுதணும். அது மட்டுமல்ல... ஒரு பத்திரிகைக்கு ஆசிரியனாகவும் வரணும்...'' என்று பிள்ளையாரிடம் தினம் தினம் மன்றாடிக் கொண்டிருந்தான். இப்படி வேண்டிக் கொள்ள அவனுக்கு எந்தவிதமானத் தகுதியும் இல்லை; பின்னணியும் இல்லை. இருந்தாலும் காரணம் சொல்ல முடியாமல் சில எண்ணங்கள் தோன்றும் அல்லவா, அப்படித்தான் அந்த எழுத்தாளராகும் ஆசையும் தோன்றி உலுக்கிக் கொண்டிருந்தது.

ஒருநாள் பிள்ளையார் கோவிலுக்குப் போய் வழக்கம்போல வேண்டிக் கொண்டான். அந்தத் தருணத்தில் அவன் கண்ணுக்குத் தெரிந்த மெய்சிலிர்க்கும் காட்சி... அற்புதம்!

அந்தி மயங்கும் வேளை அப்போது. அவன் வேண்டிக் கொண்ட போது சிலை வடிவில் அமர்ந்திருந்த விநாயகர் எழுந்து நின்று ஆனந்த நடனம் ஆடிக் காட்டினார். எதிர்பாராத அந்தக் காட்சியைக் கண்ட அவன் பிரமிப்புடன் நின்று விட்டான். ஒரு வித பயம் அவனைக் கவ்விக் கொண்டது.

''இந்த அனுபவத்தை நான் சொன்னால் நீங்கள் நம்பாமல் போகலாம். ஆனால் நான் இந்தக் காட்சியை அன்று பார்த்தது சத்தியம். இப்போது அதை நினைத்தாலும் புல்லரிக்கிறது. ஒரு வேளை என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து அந்த விநாயகர் 'நீ பிற்காலத்தில் பத்திரிகை ஆசிரியராகப் புகழ் பெறுவாய்' என்று என் முன் நடனமாடி குறிப்பாய்க் காட்டினாரோ என்று கூட எனக்குத் தோன்றுவதுண்டு'' என்கிறார் சாவி.

விசுவநாதன் எழுதிய முதல் கதைக்குப் பெயர்: மௌனப் பிள்ளையார்.

---

# 2. திருப்பாதிரிப்புலியூரில்...

பையனுக்கு படிப்பு மீது ஆர்வமில்லாமல் போய்விட்டதே என்று அப்பாவுக்கு வருத்தம்தான். போதாதற்கு வீட்டுக்கு வருகிறவர்கள் எல்லாம் 'பையன் என்ன படிக்கிறான்? படிக்க வைக்கறதுதானே?' என்று துக்கம் விசாரிக்க ஆரம்பிக்கவும் அப்பாவுக்கு ரொம்பவும் கவலையாகி விட்டது.

இதற்கிடையில் விசுவநாதனுக்கு படிப்பில்தான் அக்கறை இல்லையே தவிர, கலர் மீது அபார மோகம். வண்ணச் சுவரொட்டிகள் எங்கேனும் கண்ணில் பட்டால் போதும்... விளம்பரப் பலகைகள் பக்கம் போனால் போதும், கண்கள் விரிய அந்த வண்ணங்களையே பார்த்து ரசிப்பான். அப்போது ஒருமுறை அங்கே கிராமத்தில் 'தென்னிந்திய ஜீவரட்சக சங்கம்' என்ற அமைப்பு ஆடு, மாடு, கோழிகளைப் பல வண்ணங்களில் வரைந்து சுவரொட்டிகளாக ஒட்டியிருந்தது. விஷயம் என்னவென்றால் அக்கூரம்மன் கோயில் திருவிழாவின்போது பிராணிகளைப் பலி கொடுப்பது வழக்கம். இந்த வழக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்து வந்த அந்த ஜீவரட்சக சங்கம் ஆடு, மாடு, கோழிகளே 'நாங்கள் என்ன பாவம் செய்தோம். பலி என்ற பெயரில் எங்களை ஏன் சித்திரவதை செய்கிறீர்கள்?' என்று கேட்பதுபோல சுவரொட்டிகளை ஒட்டியிருந்தது.

விசுவநாதன் அந்த் போஸ்டர்களைப் பார்த்து வியக்காத நாளில்லை.

ஒருநாள் அந்தப் போஸ்டரை உற்றுப் பார்த்தபோது அதில் அந்த சங்கத்தின் முகவரி போட்டிருந்தது. விசுவநாதன் மூளையில் 'பளிச்'சென்று ஒரு யோசனை!

'ஐயா... உங்கள் சுவரொட்டிகளைக் கொஞ்சம் எனக்கு அனுப்பி வைத்தால் நான் இங்கே எல்லா ஊர்களிலும் ஒட்டுவேன். ஆடு மாடுகளே சொல்வது போன்ற கருத்து எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது' என்று அந்த முகவரிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினான்.

உடனடியாக, கட்டுக்கட்டாய் அந்த வண்ணச் சுவரொட்டிகள் விசுவநாதனுக்கு தபாலில் வந்து சேர்ந்தன.

'அட, இந்தச் சின்னப் பையனுக்கு இவ்வளவு தபாலா? பெரிய ஆள்தான் போலிருக்கிறது' என்று தபால்காரருக்கு விசுவ நாதன் மீது ஒரு மரியாதையே ஏற்பட்டு விட்டது. உண்மையில் அந்தச் சுவரொட்டிகளை எல்லா இடங்களிலும் ஒட்ட வேண்டும் என்ற ஆசையை விட, அதைக் கையில் வைத்துக் கொண்டு 'குளோஸ் – அப்'பில் கலர்களைப் பார்த்து ரசிக்கலாமே என்ற ஆசைதான் அவனுக்கு அதிகமாக இருந்தது. ரசித்தான். கூடவே அதிலுள்ள ஆடு, மாடு, கோழி போலவே வரைந்து பார்த்து மகிழ்ந்து போனான்.

வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும், தனக்குப் படிப்பறிவு போதாது... நாலாங்கிளாஸ் எதற்கும் உதவாது என்ற வருத்தம் விசுவநாதனுக்கு இல்லாமல் போகவில்லை.

இந்த வருத்தம் ஒரு நாள் விசுவரூபம் எடுத்தது. 'எப்படியும் மேலே படித்தே தீருவது' என்று உறுதி எடுத்தான். கடைசியில் ஒரு நாள் கேட்டே விட்டான்.

''அம்மா... நான் ஆரணியில் போய் படிக்கட்டுமா?''

ஆரணியில் விசுவநாதனின் பெரியம்மா – ஜானகி என்று பெயர் – குடும்பத்துடன் வசித்து வந்தார்.

அம்மாவுக்குத் தன் மகன் ஆரணியில் போய்ப் படிப்பதில் விருப்பம் இருந்தாலும் 'அப்பா என்ன சொல்லுவாரோ?' என்று யோசித்தார்.

'அங்கே போய் இவன் எங்கே ஒழுங்காகப் படிக்கப் போகிறான்? குரங்கு போல மரத்துக்கு மரம் தாவிக் கொண்டிருப்பான். இவனாவது படிக்கிறதாவது...' என்றார் அப்பா.

தொடர்ந்து நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அப்பாவின் மனம் மாறியது.

'சரி, இவன் ஆரணியில் போய் படிக்கட்டும். செலவை ஈடுகட்ட அவர்களுக்கு அவ்வப்போது ஒரு மூட்டை அரிசி அனுப்பி விடலாம்' என்று முடிவானது.

மறுநாள் சனிக்கிழமை. விடியற்காலம். நல்ல நேரம். பேய் மழை பெய்து ரோடு ஓரமெல்லாம் தண்ணீர் தேங்கியிருந்தது.

காலை ஐந்து மணிக்கெல்லாம் விசுவநாதனும் அவன் அப்பாவும் புறப்படத் தயாரானார்கள். அம்மா தயிர் சாதம் பிசைந்து கட்டிக் கொடுத்தாள்.

'இவ்வளவு காலையில் சாப்பிடப் பிடிக்காது. வழியில எங்காவது சாப்பிடட்டும்.'

தந்தையும் மகனும் கொஞ்ச தூரம் நடந்தே போனார்கள். வழியில் ஒரு குட்டை அருகே சாப்பிட்டுவிட்டு காலி டிபன் பாக்ஸை அப்பாவிடமே கொடுத்து அவரை வீட்டுக்கு அனுப்பி விட்டு, விசுவநாதன் தனியாகவே நடந்து ஆரணி போய்ச் சேர்ந்தான்.

ஆரணியில் போர்டு ஹைஸ்கூலில் இவனைச் சோதித்த தலைமையாசிரியர் பிரம்மதேசம் சுப்பிரமணிய ஐயர் 'அட, பையன் புத்திசாலியா இருக்கானே!' என்று நற்சான்றிதழ் தந்து ஆறாம் வகுப்பில் சேர்த்துக் கொண்டார். நான்காவதிலிருந்து

ஆறாவதுக்கு மாறியபோது ஏதோ 'கிளை விட்டுக் கிளைத் தாவுவது' போல இருந்தது விசுவநாதனுக்கு!

சந்தான கோபாலய்யர் என்பவர் கணக்கு டீச்சர். கணக்கில் நல்ல சூரத்தனம் வாய்த்திருந்தது விசுவநாதனுக்கு.

அடுத்த சில மாதங்களுக்குள்ளாகவே மாம்பாக்கத்தில் நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டு விசுவநாதனின் தந்தையும் தாயும் ஆரணிக்கே குடி போய் விட்டார்கள்.

கணக்கில் நூற்றுக்கு நூற்றைந்து மதிப்பெண்கள் வாங்கினான் விசுவநாதன். சந்தான கோபாலய்யர் 'என்ன சாஸ்திரிகளே! உங்க பையன் மகா புத்திசாலியா இருக்கிறான். கணக்கில் நூற்றைந்து மார்க்காக்கும்' என்று அப்பாவிடம் தன்னைப் பற்றி பெருமையாகச் சொன்னதாகக் கேள்விப்பட்டபோது விசுவநாதன் ஏதோ வானத்தில் பறப்பது போல் உணர்ந்தான்.

அந்த வயதிலும் அப்பா சும்மா இராமல் அடிக்கடி ராமாயண உபந்நியாசங்கள் நிகழ்த்தி வருவதைப் பார்த்த விசுவ நாதனுக்குத் தானும் அப்பாவைப் போல் சுறுசுறுப்பாக இயங்க வேண்டும் என்று தோன்றியது.

'வாழ்க்கையில் எப்போதும் சோர்வுக்கு இடம் தந்து விடக்கூடாது' என்பது ஒரு கொள்கையாகவே அவன் மனதில் பதிந்து போனது.

இந்தச் சமயத்தில் சென்னை வில்லிவாக்கத்தில் சிங்காரம் பிள்ளை உயர்நிலைப் பள்ளியிலிருந்து விசுவநாதனின் தந்தை சாமா சுப்பிரமணிய சாஸ்திரிக்கு ஒரு தகவல் வந்தது.

''எங்கள் பள்ளியில் புதிதாக சமஸ்கிருதப் பாடப் பிரிவு தொடங்கியிருக்கிறோம். தாங்கள் வந்து ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்ற முடியுமா?'' என்று அந்தப் பள்ளிக்கூட நிர்வாகி

வெங்கடராயர் கேட்டிருந்தார். சாஸ்திரிகள் அடுத்த மாதமே குடும்பத்தை வில்லிவாக்கத்துக்கு மாற்றி விட்டார்.

அப்பாவுடன் விசுவநாதனும் வில்லிவாக்கம் போய்ச் சேர்ந்தான். அப்பா வேலைக்குச் சேர்ந்த சிங்காரம் பிள்ளை ஹைஸ்கூலிலேயே இவன் அட்மிஷனுக்குத் தேர்வு வைத்தார்கள்.

அங்கேயும் விசுவநாதனின் திறமையைக் கண்டு வியந்த ஹெட் மாஸ்டர் இவனை எட்டாம் வகுப்பில் சேர்த்துக் கொண்டார்.

அப்போது ஆறிலிருந்து எட்டுக்குத் தாவினான். அதற்கு மேல் தாவ அந்தப் பள்ளிக்கூடத்தில் வகுப்பு இல்லை.

அப்புறம் பெரம்பூரில் கலவலகண்ணன் உயர்நிலைப் பள்ளியில் ஃபோர்த் ஃபார்ம் சேர்ந்த போதுதான் விசுவ நாதனுக்கு ஒரு வில்லன் வந்து முளைத்தான்.

அந்த வில்லன்: இங்கிலீஷ் ஹிஸ்டரி. அவனுக்கு அதில் எதுவுமே புரியவில்லை.

ஏற்கெனவே, அவனுக்கும் ஆங்கிலத்துக்கும் ஏழாம் பொருத்தம். அதிலும் அந்த இங்கிலீஷ் ஹிஸ்டரி பாடம் அவனைப் பாடாய்ப்படுத்தியது.

படிப்பைத் தொடர்வது வீண்வேலை என்று முடிவெடுத்தான்.

மூன்று மாதம் கூட முழுசாக ஆகவில்லை. அப்போது பள்ளிக்கூட டெர்ம் ஃபீஸ் ஆறே கால் ரூபாய். அப்பா தந்த அந்த ஆறேகால் ரூபாயை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு 'டாட்டா' சொல்லி விட்டு ரயில் ஏறி விட்டான்.

எங்கே போகப் போகிறோம்? தெரியாது. என்ன செய்யப் போகிறோம்? அதுவும் தெரியாது.

மனம் போனபோக்கில் தஞ்சாவூர், திருச்சி, மதுரை,

மானாமதுரை வரை பயணம் செய்தான். கையிலிருந்த காசும் அநேகமாய்த் தீர்ந்து போயிற்று.

அங்கிருந்து திருப்பாதிரிப்புலியூர் திரும்பினான். அங்கே அவன் அத்தை மகன் சுப்பராயன் படித்து வந்த வேத பாட சாலையில் தானும் சேரலாமே என்று ஒரு சின்ன ஆசை!

''விசுவநாதா, எங்க வேத பாடசாலையில் எல்லோருக்கும் சாப்பாடு இலவசம்' என்று சுப்பராயன் எப்போதோ சொன்னது நினைவுக்கு வந்தது.

விசுவநாதன் அங்கே போன போது கூடவே அவன் துரதிர்ஷ்டமும் அவனைத் துரத்த, வேத பாடசாலைக்கு அப்போது கோடை விடுமுறை! மாணவர்கள் எல்லோருமே தங்கள் சொந்த ஊருக்குப் போயிருந்தார்கள்.

திரும்பிப் போக காசில்லை. வேறுவழியின்றி அந்த வேத பாடசாலையின் விசாலமான திண்ணையில் போய்ப் படுத்துக் கொண்டான்.

சட்டைப் பையைத் துழாவினால் ஒரே ஒரு தம்படி (அப்போது ரூபாய்க்கு 192 தம்படி) மட்டுமே மிச்சமிருந்தது. பசிக்கொடுமை வேறு. அன்றிரவு திண்ணையில் படுத்துத் தூங்கி விட்டு மறுநாள் காலை குளிப்பதற்காக அருகிலிருந்த ஆற்றை நோக்கி நடந்தான்.

பாடசாலைக்கு எதிரில் கோவிலுக்குப் பக்கத்தில் யாரோ ஒருவர் உயரமாக சாரம் கட்டி அதன்மேல் நின்று கொண்டு 'டோங்ரே பாலாமிர்தம்' என்று கலர் கலராய் விளம்பர போர்டு எழுதிக் கொண்டிருந்தார்.

ஓவியம், கலர் என்றால் அலட்சியமாக விட்டு விடுவானா? குளிக்கப் புறப்பட்டதை மறந்து அப்படியே நின்று, அந்த விளம்பர போர்டு கலைஞனையும், அந்த வர்ணங்களையும் 'ஆ'வென்று அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

மேலேயிருந்து அந்தக் கலைஞன் கீழே பார்த்தபோது 'ஏதடா... இந்தப் பையன் நம்மையே பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்று நினைத்தானோ, என்னவோ? விசுவநாதனின் கோலம் அவனது கருணை உணர்வைத் தூண்டியிருக்க வேண்டும். ஓரணாக் காசு ஒன்றை அங்கிருந்து தூக்கிப் போட்டான். 'போய் ஒரு டீ வாங்கி வா. நீயும் குடிச்சிக்கோ!'

அந்தக் கணத்தில் 'நீயும் ஒரு டீ குடிச்சிக்கோ' என்ற வார்த்தைகள் அவன் காதில் தேனாக ஒலித்தன. அந்த அளவுக்குப் பசி காதை அடைத்திருந்தது அவனுக்கு.

அதற்கடுத்த நாளும், ஆற்றங்கரை போய் குளித்துக் கொண்டிருந்தான். அப்போது அருகில் துணி துவைத்துக் கொண்டிருந்த இரண்டு வைதிகப் பிராமணர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்:

''என்ன வோய்... இலை போட எப்படியும் ஒரு மணி ஆயிடும் போலிருக்கே...!''

இதைக் கேட்ட விசுவநாதனுக்கு ''ஓகோ! இரண்டு பேரும் குளித்து முடித்து எங்கேயோ சாப்பிடப் போகப் போகிறார்கள் போலிருக்கிறது'' என்கிறவரை புரிந்து போயிற்று.

அவ்வளவுதான்; அவர்கள் புறப்படும் வரை காத்திருந்து அவர்கள் கூடவே நிழல் போல் தொடர்ந்தான்.

சந்நிதித் தெருவில், ஒரு வீட்டில் ஏதோ விசேடம். ஹோமப் புகை தெரிந்தது. வீட்டின் முகப்பில் இருந்த கம்பத்தில் சாய்ந்தபடி, நடராஜர் கோயிலில் நந்தனைப் போல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளே எப்படிப் போவது?

நல்ல வேளையாக கைவண்டி ஒன்று வந்து வீட்டின் முன் நின்றது. பலாப்பழம், எண்ணெய் டின், பூசணிக்காய், வாழைத் தார் என்று ஏகப்பட்ட அயிட்டங்கள்.

ஆளாளுக்கு ஒன்றை எடுத்துக் கொண்டு உள்ளே போனார்கள். சட்டென்று பலாப்பழத்தைத் தூக்கிக் கொண்டு கும்பலோடு கும்பலாய் அவனும் உள்ளே போய்விட்டான். தோட்டத்தில் பந்தல் போட்டு சமையல் நடந்து கொண்டிருந்தது. ரசம் கொதிக்கும் வாசனை மூக்கைத் துளைத்தது.

பலாப்பழத்தை இறக்கி வைத்ததும், சமையல்காரர், 'ஏய் அம்பீ! பலாப்பழம் அறுக்கணும்... உள்ளே போய் மாமி கிட்ட எண்ணெய் வாங்கிட்டு வா...' என்றார். விசுவநாதனுக்கு ஒரே குஷி! அப்புறம் என்ன?

அந்த சமையல்காரருக்கு உதவியாக ஓடி ஓடி எடுபிடி வேலைகள் செய்தான்.

காத்திருந்த அந்தத் தருணம் வந்தது. பந்தியில் உட்கார்ந்து ஒரு பிடி பிடித்து விட்டுக் கிளம்பிய போது ஒரு அதிகாரக் குரல். ''ஏய்... அம்பீ.''

அடிவயிறு கலங்கியது. 'மாட்டிக் கொண்டோம்!'

அந்த அதிகாரக் குரலுக்குடையவர் ''இப்படி வா; இங்கே வந்து உட்கார்'' என்றார். உட்கார்ந்தான். வெற்றிலைப் பாக்கோடு தட்டில் நாலணா 'தட்சிணை' வைத்துக் கொடுத்தார். 'அட! சாப்பாடும் போட்டுக் கையில் பணம் வேறா!'

ஏதோ அந்த வீட்டு விசேடம் அன்று அவன் வயிற்றை நிரப்பியது. சரி; அடுத்த வேளை வேண்டுமானால் பட்டினி இருந்து விடலாம். அதற்குப் பிறகு?

வீட்டை விட்டு வந்தது தவறு என்று உள்ளம் கலங்கியது.

அந்தத் தெருவிலேயே இருந்த ஒரு ஓட்டலுக்குள் போய் முதலாளியிடம் தன் நிலைமையைச் சொல்லி, அவர் கருணையில் அங்கேயே தங்க இடம் கிடைத்து, அவன் தன் அப்பாவுக்குக் கடிதம் எழுதி, வில்லிவாக்கத்தில் அப்பாவின் குடும்ப நண்பர்

ஆர்.கே.மாமா (ஆர்.கல்யாண சுந்தரம் ஐயர்) அவனைத் தேடி வந்து அன்றிரவே சென்னைக்குத் திரும்ப அழைத்துப் போனது தனிக் கதை.

'பையன் திரும்பி வந்து விட்டான்' என்று அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மகிழ்ச்சி பிடிபடவில்லை.

தடபுடலாக விருந்துக்கு ஏற்பாடு செய்து மகன் கிடைத்த மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டார்.

விருந்துக்கு வந்த ஒருவர் பையனைத் தனியாக அழைத்து, 'அம்பீ... நீ அடிக்கடி இப்படி காணாமல் போய்க் கொண்டிரு! அப்போதுதான் எங்களுக்கு இந்த மாதிரி சாப்பாடு கிடைக்கும்' என்று ஜோக் அடித்ததை விசுவநாதன் இன்னும் மறக்கவில்லை.

# 3. எழுத்தாளர் ஆனது எப்படி?

வில்லிவாக்கம் சிங்காரம் பிள்ளை உயர்நிலைப் பள்ளியில் அப்போது ஆசிரியராக இருந்த ராமநாதன் என்பவருக்கும் விசுவநாதனைப் போலவே விளம்பர போர்டுகளின் மீது தீராத காதல் இருந்தது. போர்டுகள் எழுதுவதில் அவர் வல்லவ ராகவும் இருந்தார்.

விசுவநாதனின் போர்டு எழுதும் ஆசை, ஏற்கனவே ராம நாதனுடன் இருந்த நெருக்கத்தை மேலும் அதிகமாக்கியது. அந்த நெருக்கம் இரண்டு பேருமே ஒன்றாக இணைந்து போர்டு எழுதும் தொழிலை மேற்கொள்ளும் அளவுக்கு வளர்ந்தது. பகல் நேரங்களில் ராமநாதன் சுற்றி அலைந்து 'ஆர்டர்' பிடித்து வருவார். இரவு நேரங்களில் அவருக்குக் கூடமாட ஒத்தாசை செய்வது விசுவ நாதனுடைய வேலை.

மண்ணடி ராமசாமி தெருவில், ஒரு மொட்டை மாடியில் இவர்களின் 'விளம்பர நிறுவனம்' செயல்பட்டது. விசுவநாதனுக்கு இந்தத் தொழிலின் மூலம் அவ்வப்போது கொஞ்சம் வருமானம் கிடைக்கும். அதில் ஒரு பகுதி சிற்றுண்டிக்கும்,இன்னொரு பகுதி சினிமாவுக்கும் செலவாகிவிடும். சின்ன வயதிலிருந்தே சினிமா பார்க்கும் வழக்கம் விசுவநாதனுக்கு அதிகம் இருந்தது. கூத்து பார்த்த கண்கள் ஆயிற்றே!

அப்போது செலக்ட் தியேட்டர் சென்னையில் ரொம்பவும் பிரசித்தம். அதன் முதலாளி பட்டேல் என்பவருக்குச் சொந்தமாக

சாகர் டாக்கீஸ் என்று இன்னொரு தியேட்டரும் இருந்தது. விசுவநாதனும் ராமநாதனும் அவரை சிநேகம் பிடித்துக் கொண் டார்கள். தியேட்டரில் ஓடும் படங்களுக்கான விளம்பரத் தட்டிகள் வைப்பது, போஸ்டர்கள் ஒட்டுவது போன்ற வேலைகளை விசுவ நாதன் விரும்பிச் செய்ததற்குக் காரணம்: போர்டு பாஸ்!

அப்போதெல்லாம் 'போர்டு பாஸ்' என்று ஒரு இலவச பாஸ் கொடுப்பார்கள். அது வைத்திருந்தால் இலவசமாக சினிமா பார்க்கலாம். ஆக, செலக்ட் தியேட்டரிலும் சாகர் தியேட்டரிலும் ஓடும் எல்லாப் படங்களையும் இருவரும் பார்த்து விடுவார்கள். இப்படியே மற்ற தியேட்டர்களோடும் தொடர்பு கொண்டு எல்லா பெரிய தியேட்டர்களிலும் விசுவநாதன் 'போர்டு பாஸ்' வாங்கியது பெரிய சாதனை.

இந்த நிலையில் 'இனிமேல் சுயமாக நாமே போர்டு எழுதினால் என்ன?' என்ற ஆசை விசுவநாதனுக்கு ஏற்பட, அப்புறம் ராமநாதனிடமிருந்து நட்போடு பிரிந்து வெளியே வர ரொம்ப நாள் ஆகவில்லை.

அப்போதெல்லாம் தெருவில் நடந்து போகும்போதெல்லாம் எங்கேனும் விளம்பர போர்டுகளில் உள்ள எழுத்து அழிந்திருந்தால் மட்டுமே அது அவனது கண்களில் படும்!

உடனே அந்தக் கடைக்குள் போவான். அழிந்து போன எழுத்தை மீண்டும் எழுதித் தருவதாகக் கேட்டு 'ஆர்டர்' பிடிப்பான்.

அப்படி ஒரு நாள் போர்டுகளைப் பார்த்தபடியே அரண் மனைக்காரன் வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தபோதுதான் 'விசித்திரன்' என்ற பத்திரிகை போர்டு கண்களில் பட்டது.

அந்த எழுத்துக்கள் அழிந்திருப்பதைப் பார்த்து விட்டு உள்ளே போனான். அங்கே அமர்ந்திருந்த அந்தப் பத்திரிகையின் உரிமையாளரை அணுகி "போர்டு அழிந்திருக்கிறதே; புதுசாக எழுதித் தரட்டுமா?" என்று கேட்டான்.

''எவ்வளவு சார்ஜ்?''

''ஐந்து ரூபாய்.''

''சரி, எழுதிக் கொண்டு வா'' என்றார் முதலாளி.

''ஏதாவது அட்வான்ஸ்...'' என்று இழுத்தான் விசுவநாதன்.

''ஏம்ப்பா... உன்னை நம்பி போர்டையே கொடுக்கறேனே, நீ என்னடான்னா அட்வான்ஸ் கேக்கறியே...''

போர்டு எழுதிக் கொடுத்த பின் பணத்துக்கு நடையாக நடந்தான்.

ஐந்து ரூபாய் வந்த பாடில்லை.

ஒரு மாதம் இழுத்தடித்த பிறகு எட்டணா கொடுத்தார்.

விசுவநாதனும் அத்தோடு விடுவதாக இல்லை. நச்சரித்துக் கொண்டே இருந்தான்.

'பணம் மட்டும் குறிக்கோள் இல்லை. பணம் கேட்கும் சாக்கில் அடிக்கடி இப்படி வந்து போய்க் கொண்டிருந்தால் முதலாளியுடன் பரிச்சயம் ஏற்படும். அந்த நெருக்கத்தை வைத்துக் கொண்டு அந்த பத்திரிகை ஆபீஸிலேயே வேலை கேட்கலாமே' என்ற சபலம்தான்.

அப்போது வில்லிவாக்கத்திலிருந்த விசுவநாதன் தினமும் பட்மேடு என்ற இடத்தில் 'கூலி ட்ரெயினி'ல் – தொழிலாளர்கள் மட்டுமே பயணம் செய்யும் வண்டி என்பதனால் ஏற்பட்ட காரணப் பெயர் – ஏறி ராயபுரத்தில் இறங்கி, பர்மா ஷெல் டாங்க் பக்கமாக நடந்து அரண்மனைக்காரன் தெருவிலுள்ள விசித்திரன் ஆபீஸ் போய், 'ஸார்... அந்த போர்டு எழுதியதற்கு பாக்கிப் பணம்...' என்று கேட்பதை ஒரு தவமாகவே செய்து வந்தான்.

ஒருநாள் துணிந்து 'உங்கள் பத்திரிகை ஆபீஸில் வேலை

செய்ய ஆசை' என்று தன் விருப்பத்தை வெளியிட்டான்.

முதலாளி சில வினாடிகள் யோசித்து விட்டு எந்தக் கேள்வியும் கேட்காமல் உள்ளே ஒரு நாற்காலியைக் காட்டி 'சரி, அங்கே போய் உட்கார்' என்றார்.

நம்பவே முடியவில்லை.

பத்திரிகை ஆபீஸில் வேலை செய்ய வேண்டும் என்ற கனவு நிறைவேறியதில் விசுவநாதன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அங்கே முனுசாமி என்று ஒரு கம்பாஸிடர். அவர்தான் விசித்திரனில் எல்லாம். பத்திரிகை ஆபீஸுக்குள் புகுந்து விட்ட விசுவநாதனுக்குள் ஒரு கேள்வி குடைந்து கொண்டே இருந்தது.

'சம்பளம் எவ்வளவு கொடுப்பார்?'

ஒரு மாதம் ஆயிற்று. உரிமையாளர் முன் போய் சம்பளம் பற்றி தாழ்ந்த குரலில் கேட்டான்.

"முனுசாமி கிட்ட சொல்லியிருக்கேன். முதல்ல இருபத்தஞ்சு வாங்கிக்கோ. அப்புறம் உன் வேலையைப் பார்த்துக் கூட்டித் தரேன்" என்றார் முதலாளி.

'அடேயப்பா! இருபத்தைந்து ரூபாயா! மாதச் சம்பளமா! அடிசக்கை' என்று மனம் குதூகலித்தது. முனுசாமியிடம் போய்க் கேட்டான்.

'என்னது! இருபத்தைந்து ரூபாய் என்றா சொன்னார்?' என்று முனுசாமி ஆச்சரியப்பட்டார்.

முதலாளி தன் இடத்திலிருந்து குரல் கொடுத்தார்.

'முனுசாமி ஒரு இருபத்தஞ்சு எடுத்து கொடுப்பா' என்றார் முதலாளி.

உடனே விசுவநாதனிடம் அந்த மாதம் வெளியான 'விசித்திரன்' பிரதிகள் இருபத்தைந்தை எடுத்துக் கொடுத்தார் முனுசாமி.

'இதுதான் சம்பளம். கொண்டு போய் வித்து எடுத்துக்கோ.'

'விசித்திரன்' பிரதிகளைத் தூக்கிக் கொண்டு நேரே கந்தசாமி கோவில் அருகிலிருந்த பழைய பேப்பர் கடை ஒன்றில் விலைக்குப் போட்டான். எட்டணா கிடைத்தது.

அதுதான் அவனது முதல் மாதச் சம்பளம்!

உண்மையில் அவன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மாறாக பத்திரிகை ஆபீஸில் வேலை கிடைத்ததே பெருமகிழ்ச்சியாக மனதில் நிரம்பியிருந்தது.

'விசித்திர'னில் வேலை பார்த்த அந்த ஒரு வருட காலமும் ஒவ்வொரு இதழிலும் அவன் எழுதியதெல்லாம் வெளியாகிக் கொண்டிருந்தன. அவன் என்ன எழுதிக் கொடுத்தாலும் முனுசாமி கம்போஸ் செய்து அச்சேற்றி விடுவார். முனுசாமிதான் கம்பாஸிடர், ஆசிரியர், சம்பளம் கொடுப்பவர் எல்லாம்!

மாம்பாக்கம் சாமா சுப்பிரமணிய சாஸ்திரிகள் மகன் விசுவ நாதன் என்பதைச் சுருக்கி மா.சா.வி. என்ற பெயரில் முதலில் கொஞ்ச நாள் எழுதி பிறகு அதில் 'மா'வை எடுத்து விட்டான். அப்புறம் கொஞ்ச நாள் போனதும் 'சா'வுக்கும் 'வி'க்கும் நடுவில் இருந்த புள்ளியையும் தூக்கி விட்டான். அதிலிருந்து 'சாவி' என்ற புனைபெயர் நிலைத்துப் போயிற்று.

" 'விசித்திர'னில் இருந்த ஒரு வருட காலமும் சம்பளம் இல்லை. அதனால் நாள் முழுதும் பசியோடு வேலை செய்து விட்டு வீடு திரும்புவேன். அரண்மனைக்காரத் தெருவும், போஸ்ட் ஆபீஸ் தெருவும் சந்திக்கும் இடத்தில் ஒரு தண்ணீர்ப் பந்தல் உண்டு. அந்தக் காலத்தில் சிற்றுண்டி வழங்கும் இடங்களை

'தண்ணீர்ப் பந்தல்' என்று சொல்வார்கள். காலையில் எட்டரை மணியிலிருந்து அங்கே புளியோதரை, தயிர் சாதம், இட்லி, வடை, தோசை எல்லாம் கிடைக்கும். தினமும் பகல் நேரத்தில் 'விசித்திரன்' அலுவலகத்திலிருந்து அங்கே போய் தண்ணீர் மட்டும் வாங்கி வயிறு நிரம்பக் குடித்துவிட்டு வெளியே வருவேன். அப்போது அங்கே வைக்கப்பட்டிருக்கும் அத்தனை அயிட்டங்களையும் ஆசை தீரப் பார்த்து விட்டு அவ்வளவையும் சாப்பிட்ட மாதிரி என்னை நானே ஏமாற்றிக் கொண்டு பசி மறப்பேன்'' என்று அந்த நாட்களை எண்ணி உணர்ச்சி வசப்படுகிறார் சாவி.

---

# 4. 'ஆனந்த விகடன்' அங்கீகாரம்

விசுவநாதன் முதன்முதலாக சென்னை வந்தது உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்காக. சின்னஞ் சிறுவனான அவனுக்கு ஒரே த்ரில்! பவழக்காரத் தெருவில் உறவினர், வக்கீல் ராமச்சந்திர ஐயர் வீட்டில் பெற்றோருடன் தங்கினான். அவர் ஆனந்த விகடன் பழைய இதழ்களைத் தம் பீரோவில் ஒழுங்காக அடுக்கி பத்திரப் படுத்தி வைத்திருந்தார். அத்தனை விகடன் இதழ்களையும் படித்து விட வேண்டும் என்று விசுவநாதனுக்குத் துடிப்பு. வக்கீலிடம் தயக்கத்துடன் கேட்டான். 'கசக்காமல், அழுக்காக்காமல் படிக்க வேண்டும்' என்ற நிபந்தனையோடு இரண்டே இரண்டு விகடன் பிரதிகளை மட்டும் எடுத்துக் கொடுத்தார். அந்த இரண்டு இதழ் களையும் படித்து முடித்ததும், இன்னும் இரண்டு. இப்படி எல்லாவற்றையும் படித்துத் தீர்த்தான்.

ஒருநாள் அந்த வக்கீல் மாமா அவனுக்கு நாலணா கொடுத்தார். மனதுக்குள் போராட்டம். ஆசைகள் விசுவரூப மெடுத்தன. ஒன்று, போட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை. அந்தக் காலத்தில் நாலணாவுக்கு இரண்டு சின்ன சைஸ் போட்டோ எடுத்துக் கொடுப்பார்கள். இன்னொரு ஆசை, அந்த வருடம் வெளியாகி இருந்த விகடன் தீபாவளி மலரை வாங்கிப் படிக்க வேண்டும்.

போட்டோவா? விகடனா? நீண்ட நேர யோசனைக்குப் பிறகு விகடன் என்று முடிவு செய்தான்.

நேராக விகடன் ஆபீஸை நோக்கி நடந்தான்.

செக்குமேடு போலீஸ் ஸ்டேஷன். கினிமா சென்ட்ரல் வழியாக தங்கசாலைத் தெருவை அடைந்தான். அப்போது விகடன் அலுவலகம் 244, தங்கசாலைத் தெருவில் இருந்தது. அது திண்ணையுடன் கூடிய ஒரு சின்ன வீடு. வாசலில் ஒரு குப்பைத் தொட்டி.

கூடத்தில் கம்போஸிங் கேஸ்கள் இரண்டு. கம்பத்துக்கும் சுவருக்கும் இடையே உள்ள சின்ன இடத்தில் குட்டி நாற்காலி ஒன்றில் அமர்ந்திருந்தார் அந்த கம்பீரமான மனிதர். நாலணாவை அவரிடம் தந்து 'தீபாவளி மலர் வேணும்' என்று கேட்டான். உள்ளே போய் தீபாவளி மலர் ஒன்றை எடுத்து வந்து தூசி தட்டிக் கொடுத்தார் அந்த கம்பீர மனிதர். அவர்தான் எஸ்.எஸ்.வாசன் என்பது அப்போது அவனுக்குத் தெரியவில்லை. பிற்காலத்தில்தான் தெரிந்து கொண்டான்.

விசித்திரன் பத்திரிகையில் சாவி வேலை பார்த்தபோது சம்பளம் சரியாகக் கிடைக்காவிட்டாலும் பல முக்கிய மனிதர்களின் அறிமுகமும், அன்பும் கிடைத்தன. அவர்களில் ஒருவர் தி.ஜ.ரங்க நாதன் (தி.ஜ.ர.). சாவிக்கும் அவருக்குமிடையே தொடங்கிய நட்பு வளர்ந்து பாசமாகவே மாறியிருந்தது.

விசித்திரனுக்குப் பிறகு 'சந்திரோதயம்' பத்திரிகையில் சேர்ந்து ஒரு வருடம் வேலை செய்தபின் சாவி சும்மா இருந்த நாட்களில் தாம் தங்கியிருந்த ஓட்டல் அறையில் அவரையும் தங்கவைத்து ஆதரவு தந்தார் தி.ஜ.ரங்கநாதன். அப்போது திரு. சதாசிவம், ஆர்.பார்த்தசாரதி, துமிலன், றாலி, ரா.அ.பத்ம நாபன் ஆகிய ஐந்து பேரும் விகடனிலிருந்து விலகி 'ஹநுமான்' என்ற பெயரில் 'கேசரி பிரிண்ட்டிங் ஒர்க்ஸ்' அதிபர் சுந்தரம் ஐயருடன் சேர்ந்து புதிதாக வாரப் பத்திரிகை ஒன்று தொடங்கி மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகை தொடங்கிய ஒரு வருடத்துக்குள்ளாகவே

நிர்வாகத்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு சதாசிவமும், அவரது நண்பர்களும் விலகிவிட்டார்கள். அவர்கள் விட்டுச் சென்ற இடத்தில் சங்கு சுப்பிரமணியமும், தி.ஜ.ர.வும் அமர்ந்தார்கள். அப்போது சாவிக்கும் அங்கே வேலை கிடைத்தது. பி.எம்.கண்ணன், நெ.பி.ஸ்ரீரங்கன் இருவரும் உதவி ஆசிரியர்கள். சாவி உப ஆசிரியர். சம்பளம் இருபத்தைந்து ரூபாய்.

இந்நிலையில் 'ஹிந்துஸ்தான்' என்ற தமிழ்ப் பத்திரிகை ஒன்று ஹநுமானுக்குப் போட்டியாக வெளியானது. நாராயண அய்யங்கார் என்பவர் அதன் ஆசிரியர். பக்கம் பக்கமாய் புகைப் படங்களைப் போட்டு ஹிந்துஸ்தான் அசத்தியது.

அதைப் பார்த்ததும் 'ஹநுமான் பத்திரிகையிலும் நிறையப் படங்கள் போட வேண்டும்' என்று ஆசிரியர் குழு முடிவெடுத்தது.

'இந்த இதழில் ஐம்பது படங்களுக்கு மேல்' என்று ஒரு வாரம் ஹிந்துஸ்தான் மிகப் பெரிய அளவு போஸ்டரில் விளம்பரப் படுத்தியது.

இதைப் பார்த்ததும் ஹநுமான் ஆசிரியர் குழு அவசரமாகக் கூடி ஆலோசனை நடத்தியது.

'நாம் அதைவிட அதிகமாகப் படங்கள் போடவேண்டும். ஆனால் நம்மிடம் அதற்கு வசதி இல்லையே! என்ன செய்யலாம்?' என்று யோசித்தது.

சாவி ஒரு ஐடியா சொன்னார். ''அவங்க ஐம்பது படங்களுக்கு மேல் என்று விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். நாம் 'நூறு படங்களுக்குக் கீழ்' என்று விளம்பரப்படுத்திடலாம்.''

எல்லோரும் சிரித்தாலும் யோசனை புதுமையாக இருக்கிறது என்று ஏற்றுக் கொண்டார்கள்.

'ஹநுமான்' பத்திரிகை பெரிய அளவில் ஹிண்டு பேப்பர்

சைஸில் வெளியாயிற்று. புகைப்படங்களைப் பெரிய பெரிய பிளாக்குகளாகச் செய்து அச்சிடுவார்கள். அவை பலமுறை பயன் படுத்தப்பட்டு கறுப்பு மசியால் அழுக்குப் படர்ந்து எது எந்தப் படத்தின் பிளாக் என்று கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஓர் இருட்டறையில் குவிந்து கிடக்கும். சாக்பீஸ் அல்லது பவுடர் தடவிப் பார்த்தால்தான் ஓரளவு கண்டுபிடிக்க முடியும். அப்போதும் நிச்சயமாகத் தெரியாது.

பிளாக்குகள் தேடித் தரும் பொறுப்பு சாவியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒரு நாள் ஏதோ ஒரு படத்தின் பிளாக்கைத் தேடிக் கொண்டு வரும்படி ஆசிரியர் சங்கு சுப்பிர மணியம் சாவியைப் பணித்தார். பிளாக்குகள் குவிக்கப்பட்டிருந்த இருட்டறையில் போய்த் தேடி, ஏதோ குழப்பத்தில் ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகை அருகே உள்ள செஞ்சதுக்கத்தின் பிளாக்கைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டார்.

அது அப்படியே தவறான தலைப்பின் கீழ் பிரசுரமாகி விட்டது.

சங்கு சுப்பிரமணியத்துக்கு வந்ததே கோபம்! சாவியைக் கோபாவேசமாகத் திட்டித் தீர்த்து விட்டார். அதே கோபம் சாவிக்கும் வந்தது. ''நான் முதன் முதல் கோபக்காரன் ஆனது அப்போதுதான்'' என்கிறார் சாவி. தன் கையில் இருந்த பிளாக்கை சங்கு சுப்பிரமணியம் அவர்களின் கண்ணாடி பதித்த மேசை மீது 'படீர்' என்று வீசி அடித்தார். கண்ணாடி சுக்கு நூறாக நொறுங்கிப் போயிற்று. அன்றே சாவியின் வேலையும் போய் விட்டது.

மீண்டும் வேலையில்லா இளைஞனாக சென்னையைச் சுற்றிக் கொண்டிருந்தார். தி.ஜ.ர.வின் ஆதரவு மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது.

தம்முடைய நண்பர் வேலையில்லாமல் திண்டாடிக்

கொண்டிருப்பது தி.ஜ.ர.வுக்கு மிகுந்த வேதனை அளித்தது. ஒருநாள், 'நீங்களே சொந்தமாக ஒரு பத்திரிகை நடத்துங்களேன்' என்று தி.ஜ.ர. யோசனை கூறியது கேட்டு சாவி வாய் விட்டுச் சிரித்தார்.

"நானா? பத்திரிகையா? சொந்தமாகவா? பணத்துக்கு எங்கே போவது?" என்று கேட்டார்.

"அதெல்லாம் பணமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். நான் சொல்கிறபடி கேளும். 'கத்தரி விகடன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை வரப்போவதாக பத்திரிகையில் விளம்பரம் போடும். நடக்கப் போவதை அப்புறம் பாரும்" என்று தி.ஜ.ர. ஒரு புதிர் போட்டார். சாவிக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன யோசிக்கறீங்க? மற்ற பத்திரிகைகளில் வரும் சுவாரசியமான செய்திகளையெல்லாம் கத்தரித்துப் போட்டுப் பத்திரிகை தயார் செய்வது. அதுதான் கத்தரி விகடன்."

ஹநுமான் வாலையும், விகடன் அரசியல் நிருபர் வாலையும் சேர்த்து ஒரு கத்திரிக்கோல் வெட்டிக் கொண்டிருப்பது போல் படம் வரைந்து அதையே அந்தப் பத்திரிகையின் சின்னமாக்கி விடலாம்!" என்பது தி.ஜ.ர.வின் யோசனை.

"சரி, பணம்?"

"பணம் எதற்கு? விகடன் என்ற பெயரில் இன்னொரு பத்திரிகை வருவதை ஆனந்த விகடன் நிர்வாகம் நிச்சயம் விரும்பாது. அப்படி ஒரு விளம்பரத்தைப் பார்த்ததுமே உம்மை வரச் சொல்லி, "நீ பத்திரிகையெல்லாம் ஆரம்பித்து சிரமப் படாதே, பேசாமல் விகடனில் சேர்ந்து விடு' என்று உமக்கு வேலை போட்டுத் தந்து விடுவார்கள்!" என்றார் தி.ஜ.ர. இது கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துப் பிடிப்பது போலிருக்கிறதே என்று சாவி யோசித்தார்.

ஆனாலும் தி.ஜ.ர.வின் யோசனைப்படியே சாவி ஒரு விளம்பரம் வெளியிட்டார். அதுவும் ஹநுமான் பத்திரிகையில் தி.ஜ.ர.வே தம் சொந்தப் பொறுப்பில் வெளியிட்டு உதவினார்.

தி.ஜ.ர.வின் கணிப்பு பொய்யாகவில்லை. விளம்பரம் வந்த மறுநாள் மாலை சாவியும் தி.ஜ.ர.வும் கடற்கரை நோக்கி தம்பு செட்டித் தெரு வழியாக நடந்து கொண்டிருந்தபோது ஆனந்த விகடனிலிருந்து சைக்கிளில் வந்த பியூன் அவர்களைத் துரத்தி வந்து சாவியின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

'Please go over here immediately as the Editor wants to see you' என்று ஒரு சின்னக் காகிதத் துண்டில் எழுதி உதவி ஆசிரியர் தேவன் கையெழுத்திட்டிருந்தார்.

'நம்ம கணிப்பு எப்படி?' என்று தி.ஜ.ர. சாவியைப் பார்த்துக் கண் சிமிட்டினார்.

சாவி மறுநாள் காலை பதினோரு மணி அளவில் பிராட்வேயில் உள்ள விகடன் அலுவலகம் போய் கல்கி அவர்களைப் பார்த்தார். சாவியை ஏற இறங்கப் பார்த்த கல்கி 'நீதானா அந்த விளம்பரம் போட்டது? சில நாட்களுக்கு முன் இங்கே வந்து வேலை கேட்டது நீதானே?' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றார் சாவி.

''பத்திரிகை நடத்தப் பணம் போடப் போவது யார்?''

அப்போதைக்கு சட்டென்று மனதில் தோன்றிய உறவினர் ஒருவர் பெயரைச் சொல்லி வைத்தார் சாவி.

''இப்போது உனக்கு விகடனில் உதவி ஆசிரியர் வேலை தர முடியும். சம்மதமானால் நாளைக்கே வேலைக்குச் சேர்ந்து கொள். சம்பளம் நாற்பது ரூபாய். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார் கல்கி.

சாவி தயக்கத்தோடு லேசாக இழுத்த மாதிரி ''நாளைக்குச் சொல்கிறேன்'' என்றார். தி.ஜ.ர.வைக் கலந்தாலோசித்த பிறகு ஒப்புக் கொள்ளலாம் என்பது சாவியின் நினைப்பு.

''என்ன யோசிக்கறே? பத்திரிகை நடத்துவதெல்லாம் அவ்வளவு சுலபமில்லே. பேசாமல் வேலையை ஒப்புக் கொள்'' என்றார் கல்கி சற்று அழுத்தமாகவே.

''யோசனை ஒண்ணுமில்லை; இதுவரை என் புதிய பத்திரிகைக்காகப் பணம் செலவழித்தவருக்கு என்ன பதில் சொல்வ தென்பதுதான் பிரச்னை'' என்றார் சாவி.

''அவர் எவ்வளவு செலவு பண்ணியிருக்கார்?''

''நூத்தியிருபது ரூபா'' சட்டென்று வாயில் வந்த தொகை ஒன்றைச் சொல்லி வைத்தார் சாவி.

உடனே ஒரு காகிதத்தில் 'please pay Rs. 120/- to M.S.Visvanathan' என்று கையெழுத்துப் போட்டு சாவியிடம் தந்து, ''இந்தா, இதை அக்கவுண்டன்ட் கிட்ட போய்க் கொடு. பணம் கொடுப்பார், வாங்கிக் கொள்'' என்றார்.

சாவி முதல்முதல் பார்க்கும் பெரிய தொகை அது. குஷி பிடிபடவில்லை. பணம் கிடைத்ததும் நேரே அம்பீஸ் கேப் போய் மசாலா தோசை சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து அப்படியே பூக்கடை போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரிலுள்ள கதர்க் கடைக்குச் சென்று சில்க் ஜிப்பா ஒன்று தைத்துப் போட்டுக் கொண்டார். அப்போதெல்லாம் கதர்க் கடையில் ஒரு டெய்லரும் மெஷினுடன் உட்கார்ந்திருப்பார். மறுநாள் சில்க் ஜிப்பாவுடன் போய் நின்ற போது, கல்கி அவர்கள் பார்த்து விட்டு ''நேற்று கொடுத்த பணத்தில் ஜிப்பாவா? பேஷ்!'' என்றார்.

சாவி வெட்கத்தோடு தலையசைத்தார்.

"சீச்சீ! சில்க் ஜிப்பாவெல்லாம் போடக் கூடாது. கதர்ச் சட்டையாக வாங்கிப் போட்டுக் கொள். அதுதான் கௌரவமாக இருக்கும்" என்ற உபதேசத்துடன் சாவியை வேலையில் சேர்த்துக் கொண்டார் விகடன் அஸோஸியேட் எடிட்டர் கல்கி.

அன்று வீட்டுக்குத் திரும்பியதும் சில்க் சட்டையைக் கழற்றிப் போட்டதோடு சரி. அதன் பின் சாவியினுடைய வாழ்க்கையின் பெரும்பகுதி நாட்கள் கதர்ச் சட்டை நாட்களாகவே ஆயின.

# 5. ஒன்பது மாதம் கடுங்காவல்

ஆனந்த விகடனில் ஏறத்தாழ இரண்டாண்டு காலம் உதவி ஆசிரியராக வேலை பார்த்தபோது மாலி, தமிலன், தேவன், நாடோடி, கதிர், நாரதர் சீனிவாச ராவ், தாணு, வர்மா, ரவி என்று பல ஜாம்பவான்களுடன் சாவிக்கு ஏற்பட்ட அறிமுகமும் நட்பும் அவரது எழுத்துலக வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன.

அப்போது விகடன் அலுவலகம் பிராட்வேயில் இருந்தது. இப்போது அப்பர் அச்சகம் உள்ள இடம். அன்றாடம் வரும் சிறுகதைகளைப் படித்து ஒவ்வொன்றுக்கும் கதைச் சுருக்கம் எழுதி வைக்க வேண்டும் என்பது சாவிக்கு இடப்பட்டிருந்த பணி.

ஒருநாள் மினர்வா தியேட்டரில் நைட்ஷோ ஆங்கிலப் படம் பார்த்துவிட்டு மறுநாள் காலை ஏழரை மணிக்கே அலுவலகம் போய் விட்டார். படித்து முடிக்க வேண்டிய கதைகள் நிறையச் சேர்ந்து விட்டதால், காலையிலேயே ஆபீஸுக்குப் போய் எல்லா வற்றையும் படித்து முடித்துவிட முடிவு செய்தார். ஆபீஸ் புறப்படும் முன் மண்ணடி 'மினர்வா கபே'யில் சுடச்சுட இட்லியும் வடையும் சாப்பிட்டு விட்டுத் தன் அறையில் போய் உட்கார்ந்தார்.

தலைக்கு மேல் மின்விசிறிக் காற்று, நைட் ஷோ, இட்லி – சாம்பார் எல்லாமாகச் சேர்ந்து, கதை படிக்கத் தொடங்கியதுமே

தூக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. அப்படியே ஆனந்தமாகத் தூங்கிவிட்டார்.

ஏற்கெனவே அவரது பக்கத்து அறையில் இருந்த ஓவியர் வர்மா இப்படித்தான் தூங்கிவிட அதை மாலி பார்த்துவிட்டு, அவருக்கு 'சீட்டு' கிழித்து விட்டார்கள். அது அப்போது ஞாபகத்துக்கு வர 'தூங்கக் கூடாது' என்ற தீர்மானத்துடன் கதையைப் பிரித்து படித்த போதிலும் இரண்டு நிமிடங்களில் மெய்மறந்து தூங்கிப் போனார். அவரது போதாத காலம், அன்று பார்த்து வாசன் அவர்கள் காலையிலேயே 'ஸர்ப்ரைஸ் விஸிட்' வந்து யார் என்ன செய்கிறார்கள் என்று பார்த்திருக்கிறார். அந்த நேரம் சாவி தலையை மேஜை மீது சாய்த்துத் தூங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு எதுவும் பேசாமல் போயிருக்கிறார்.

பதினோரு மணிக்கு சாவிக்கு ஒரு தகவல் வந்தது. 'அக்கௌண்டன்ட் உங்களைக் கூப்பிடுகிறார்.' அக்கௌண்டன்ட் வாஞ்சிநாதய்யர் முன் போய் நின்றார். 'உங்க கணக்கைத் தீர்த்து அனுப்பச் சொல்லி முதலாளி உத்தரவு' என்று அதுவரையிலான சம்பளத்தைக் கையில் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

''முதல் நாள் டிஸ்மிஸ் ஆன வர்மாவுக்கும் அன்றுதான் கணக்கு தீர்க்கப்பட்டது. அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு நாங்கள் இருவரும் நேராக 'அம்பீஸ் கபே' போய் அபூர்வமாக ஸ்வீட் சாப்பிட்டு ஆனந்தமாய் துக்கம் கொண்டாடினோம்'' என்கிறார் சாவி.

ஆக, மறுபடியும் வேலையில்லா இளைஞராகச் சுற்ற ஆரம்பித்தார். சில நாட்களுக்குள்ளாகவே உலகப் போர் மூண்டு சென்னை நகரம் இருட்டடிப்பில் மூழ்கியது. பல குடும்பங்கள் குண்டு வீச்சுக்குப் பயந்து வீட்டைக் காலி செய்து கொண்டு தங்கள் சொந்த ஊருக்குப் போய் விட்டார்கள். தானும் சென்னையை விட்டு கிராமத்துக்குப் போய் விடலாமா என்று யோசித்துக்

கொண்டிருந்த வேளையில்தான் 'ஏர் ரெய்ட் வார்டன்' வேலை சாவியைத் தேடி வந்தது.

தினமும் ஏ.ஆர்.வி. டிரஸ்ஸில், இரவு நேரங்களில் தெருத் தெருவாக விசில் ஊதிக் கொண்டே போய் பொதுமக்களை எச்சரிக்க வேண்டும். வீட்டுக் கதவுகள் மூடப்பட்டு, விளக்குகள் அணைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். இதுதான் ஏர் ரெய்ட் வார்டனின் வேலை.

சம்பளத்தோடு இலவசமாய்ச் சாப்பிட்டுக் கொள்ள ஒவ்வொரு வார்டிலும் தனித்தனியாக மெஸ்ஸும் உண்டு.

விகடனில் உதவி ஆசிரியராக இருந்து விட்டு இப்படித் தெருத் தெருவாக விசில் ஊதிக் கொண்டிருக்கிறோமே என்ற சோகமும் கூடவே உள்ளுக்குள் சாவியை வாட்டிக் கொண்டிருந்தது.

1942 ஆகஸ்ட் எட்டாம் தேதி. 'வெள்ளையனே வெளியேறு' என்று குரல் கொடுத்த மகாத்மா காந்தி பம்பாயில் கைது செய்யப்பட்டார். அடுத்தடுத்து நேரு, படேல் போன்ற காங்கிரஸின் பெருந்தலைவர்களும் கைது செய்யப்பட்டு நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தது.

காந்திஜி கைதானதும், நாடெங்கும் ஆங்காங்கே தலை மறைவாக இருந்த காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்ட்களும் 'காந்திஜி அதைச் செய்யச் சொன்னார்... இதைச் செய்யச் சொன்னார்...' என்று எதையாவது செய்தி பரப்பிக் கொண்டே இருந்தார்கள். 'தண்டவாளத்தைப் பெயர்க்கச் சொன்னார்... தந்திக் கம்பிகளை அறுக்கச் சொன்னார்... தபாலாபீஸைக் கொளுத்தச் சொன்னார்...' என்று காந்திஜி பெயரைச் சொல்லி ஏராளமான துண்டுப் பிரசுரங்கள் ரகசியமாகச் சுற்றி வந்தன.

'தினமணி'யில் அப்போது உதவி ஆசிரியராக இருந்த சாவியின் நண்பர் என்.ராமரத்னம் சில துண்டுப் பிரசுரங்களை சாவியிடம் தந்து அவற்றை ரகசியமாக விநியோகிக்கச் சொன்னார்.

மிகப் பெரிய தேசப் பணியில் ஈடுபடுகிறோம் என்ற

பெருமிதத்துடன் அவற்றை சாவி விநியோகம் செய்தார். காந்திஜி சிறைப்பட்டார் என்ற செய்தி கேட்டதும் நெஞ்சம் பொறுக்காமல் கொதித்துப் போனார். 'தேச விடுதலைக்காக எதையாவது செய், உடனே செய்...' என்று உள்ளிருந்து ஒரு குரல் சாவியை வெறியேற்றிக் கொண்டிருந்தது. என்ன செய்வது? தந்திக் கம்பி அறுப்பது, தண்டவாளம் பெயர்ப்பது போன்ற பயங்கரங்களைத் தான் மட்டும் தனியாகச் செய்யக்கூடியதாக அவருக்குத் தோன்ற வில்லை. ஆனாலும், அருகில் உள்ள மண்ணடி தபாலாபீசைக் கொளுத்தி விடலாம் என்ற முடிவுடன் ஒரு காலை வேளையில், வீட்டில் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டார். ஒரு தீப்பெட்டியுடன் தபாலாபீஸ் வாசலில் போய் நின்று எல்லாத் தீக்குச்சிகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பற்ற வைத்து டக்கென்று அவ்வளவையும் தபால் பெட்டிக்குள் போட்டார். மார்பு படபடவென அடித்துக் கொண்டது. வயிற்றுக்குள் ஒரு ஜ்வாலை கிளம்பியது. 'அவ்வளவு கடிதங்களும் அப்படியே பற்றிக் கொண்டு பெரிதாக எரிந்து, தபாலாபீசே சாம்பலாகி விடப் போகிறது, தான் பெரிய ஹீரோவாகப் போகிறோம்' என்று ஒரு அதீத கற்பனை.

சில நிமிடங்கள் ஆயின. எதுவும் எரிந்ததாகத் தெரிய வில்லை. தபால் பெட்டிக்குள்ளிருந்து லேசாக வெறும் புகை மட்டுமே வந்தது. சற்று நேரத்தில் அதுவும் அடங்கிப் போய் விட்டது. இது சாவிக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தாலும், தன் வீரத்தை வெளியுலகுக்குப் பிரகடனப்படுத்தி விடவேண்டும் என்ற ஆவலில் வெகு அருகே இருந்த செக்குமேடு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்தார்.

'யார் நீ?' என்றது செக்குமேடு.

"நான் இங்கே மண்ணடி போஸ்ட் ஆபீஸுக்குத் தீ வைத்துவிட்டேன். உடனே வாங்க" என்று ஒரு பரபரப்போடு அழைத்தார் சாவி.

"நீ அங்கேயே நில். இதோ வருகிறோம். உன் அடையாளம் என்ன?" என்று கேட்டது போலீஸ்.

''நான் ஒரு காங்கிரஸ்காரன். கதர்ச் சட்டை அணிந்திருப்பேன். தபாலாபீசுக்கு எதிரிலேயே உங்களுக்காகக் காத்திருப்பேன். உடனே வாங்க'' என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் போலீஸ் வேன் பறந்து வந்தது. அதிலிருந்து இறங்கிய போலீசார் சாவியைக் கைது செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் கேஸ் எழுதிக் கொண்டு லாக்கப்பில் போட்டார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். கோர்ட்டில் பதினோரு மணிக்கு விசாரணை ஆரம்பமாயிற்று. பெயரை மூன்று முறை கூவி அழைத்தார்கள். 'குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?' என்று கேட்டார் மாஜிஸ்ட்ரேட்.

'ஆகஸ்ட் போராட்டத்தில் ஈடுபடும் எவரும் கோர்ட்டில் குற்றத்தை ஒப்புக் கொள்ளக் கூடாது' என்பது மேலிடத்துக் கட்டளை. அதனால் 'நான் குற்றவாளி அல்ல' என்று திருத்தமாகச் சொன்னார் சாவி.

ஒன்பது மாதம் கடுங்காவல் தண்டனை விதித்து மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புக் கூறினார். சிறையில் மூன்றாம் வகுப்பு.

''எனக்கு 'பி' கிளாஸ் வேண்டும்'' என்று கேட்டார் சாவி.

''அதற்கெல்லாம் ஒரு தகுதி வேண்டும். அந்தஸ்து வேண்டும். உனக்கு ஏதேனும் சொத்து இருக்கிறதா?'' என்று கேட்டார் மாஜிஸ்ட்ரேட்.

''கிராமத்தில் சொந்த வீடு இருக்கிறது.''

''என்ன மதிப்பு?''

''இருபதாயிரம் ரூபாய்!''

''என்ன! கிராமத்து வீட்டுக்கு இருபதாயிரம் ரூபாயா?''

''யுவர் ஹானர், அது என் சொந்த வீடு. நான் அதற்குப்

போடும் மதிப்பு இருபதாயிரம்'' என்று சாவி சொன்னதைக் கேட்டு மாஜிஸ்ட்ரேட் சிரித்து விட்டார்.

''உன் நகைச்சுவை உணர்வைப் பாராட்டுகிறேன். ஆனால் 'சி' வகுப்புதான்'' என்று தீர்ப்புக் கூறி அனுப்பி விட்டார் மாஜிஸ்திரேட்.

பெல்லாரி பக்கத்தில் இரண்டு மூன்று மைல் தள்ளி அமைந்துள்ள அலிபுரம் சிறைச்சாலைக்குக் கொண்டு போகப் பட்டார் சாவி.

அதே சிறையில் கக்கன்ஜி, எஸ்.ஏ.ரஹீம், ஆதம்பாக்கம் ராமகிருஷ்ண ஐயர், மதுரை வைத்தியநாத ஐயர், திருக்கோவிலூர் ராஜகோபாலன், கொடுமுடி ராஜகோபாலன், பின்னாளில் காமராஜருக்கு மிகவும் நெருக்கமாக இருந்த ஜி.ராஜகோபாலன், தமிழக அரசின் தலைமைச் செயலாளராகப் பதவி வகித்த க.திரவியம் போன்ற முன்னணி விடுதலைப் போராட்ட வீரர்களும் இருந்தார்கள். 'இவர்களுடன் நாமும் இங்கேயா?' என்ற பெருமை கலந்த மகிழ்ச்சி, தனக்கு 'பி' கிளாஸ் கிடைக்க வில்லையே என்ற சாவிக்கு இருந்த ஏக்கத்தைப் போக்கிவிட்டது.

பெரிய தலைவர்களுக்குச் சிறையில் 'ஏ' வகுப்பு தரப் பட்டிருந்தது. அவர்களுக்கு தினந்தோறும் காலையில் சிற்றுண்டிக்கு உப்புமா, இட்லி போன்ற ஐட்டங்கள் கிடைக்கும். சாவி போன்ற 'சி' வகுப்புக் கைதிகளுக்கு வெறும் கஞ்சிதான். அதுவும் புழுக்கள் நெளியும் கஞ்சி.

'ஏ' வகுப்புக்கும் 'சி' வகுப்புக்கும் இடையே கம்பிவேலி தடுப்பு மட்டுமே இருந்தது. சிற்சில நாட்களில் சாவி அந்தத் தடுப்பு பக்கம் போய் நின்று 'ஏ' வகுப்பு சிறைத் தோழர்களிடமிருந்து அன்பளிப்பாகக் கிடைக்கும் உப்புமா, இட்லி ஆகியவற்றை வாங்கிச் சாப்பிடுவதும் உண்டு.

# 6. சிறையில் கொழுக்கட்டை

அலிபுரம் சிறைச்சாலை அனுபவம் சாவிக்கு முற்றிலும் புதுமையாக அமைந்தது.

அரசியல் கைதிகளாயிருந்தாலும் சிறைக்குள் வேலை செய்தாக வேண்டும். சிலர் சமையலறை வேலைக்குப் போனார்கள். சாவியோ நூலகத்தின் பொறுப்பைக் கேட்டு வாங்கிக் கொண்டார். புத்தகங்களை ஒழுங்காகப் பராமரிப்பது, கைதிகள் படிக்க விநியோகம் செய்வது போன்ற சுலபமான வேலைதான். இந்தச் சாக்கில் அங்குள்ள புத்தகங்கள் முழுவதையும் படித்து விடும் வாய்ப்பு சாவிக்குக் கிடைத்தது. ஜான் பான்யன் (John Banyan) எழுதிய 'பில்க்ரிம்ஸ் ப்ராக்ரஸ்' (Pilgrims Progress) போன்ற பழமை மிக்க புத்தகங்களை அவர் படித்தது அலிப்பூர் சிறையில்தான்.

அப்போது அதே சிறையில் இருந்த கக்கன்ஜி போன்ற பெருமைக்குரிய காங்கிரஸ் தலைவர்கள் சாவியைத் தேடி வந்து புத்தகங்கள் வாங்கிப் போவார்கள். புத்தகங்கள் படிக்கும் நேரம் தவிர சங்கீதமும் கற்றுக் கொண்டார். ஆதம்பாக்கம் ராமகிருஷ்ண ஐயர் ஒரு காங்கிரஸ்காரர். இசைக்கலையில் மிகுந்த ஞானம் பெற்றவர். பத்திரிகைகளில் இசை நிகழ்ச்சி பற்றிய விமர்சனங்கள் எழுதியவர். விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு அலிபுரம் சிறைக்கு வந்திருந்தார். சாவியின் இதயத்தில் அடக்கமாக இருந்து வந்த இசை ஆர்வம், ராமகிருஷ்ண ஐயரின் சங்கீத ஞானம் பற்றி அறிந்ததும் 'இவரிடம் வாய்ப்பாட்டு கற்றுக் கொண்டால் என்ன' என்று தீவிரமாக யோசிக்க வைத்தது.

சிறைத் தோழராக இருந்த நடேசன் என்பவரையும் சேர்த்துக் கொண்டு கொஞ்ச நாள் ராமகிருஷ்ண ஐயரிடம் இசைப் பயிற்சி பெற்றார். ஆரம்பித்த சில நாட்களிலேயே குருவுக்குத் துல்லியமாக ஓர் உண்மை புரிந்து விட்டிருக்க வேண்டும். ஒருநாள் சாவியை அழைத்து "நீங்க சங்கீதத்தை ரசிப்பதோடு நிறுத்திக் கொள்ளலாம். கற்றுக் கொள்வதை இன்றோடு நிறுத்தி விடலாம். ஏற்கெனவே ரொம்பப் பேர் இங்கே சிறைத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்க வேறு அவர்களைச் சிரமப்படுத்த வேண்டாமே" என்று நாசூக்காகச் சிரித்துக் கொண்டே சொல்லி இசைப் பயிற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

சாவிக்குப் பெரும் ஏமாற்றம்தான். ராமகிருஷ்ண ஐயர் மீது சற்று கோபம் கூட.

"ம்... என்ன செய்வது? நான் மட்டும் விடாப்பிடியாக இசைப் பயிற்சியைத் தொடர்ந்திருந்தால் இன்று மகாராஜபுரம் விசுவநாதய்யர் போல மாம்பாக்கம் விசுவநாதய்யர் என்ற பெயரில் பெயரும் புகழும் கிட்டியிருக்கும். ராமகிருஷ்ண ஐயரால் போச்சு! இசை உலகம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று எண்ணிக் கொண்டேன்" என்கிறார் சாவி.

சிறையில் 'ஹிண்டு' பத்திரிகை ஒன்று மட்டும்தான் உள்ளே வரும். அதுவும் சிறை அதிகாரிகளுக்குத் தெரியாமல் ரகசியமாக இரவு நேரங்களில் வார்டர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள். தினந்தோறும் வரும் அந்தப் பத்திரிகையை 'கொடுமுடி' ராஜ கோபாலன் என்பவர் முழுதும் படித்து செய்திச் சுருக்கங்களை ஒரு ஸ்லேட்டில் எழுதிக் கொண்டு இரவில் கைதிகளை ஓரிடத்தில் கூட்டி, அவர்களுக்கு அந்தச் செய்திகளைப் படித்துக் காட்டிய பிறகு அந்த ஸ்லேட்டை எல்லா பிளாக்குகளுக்கும் அனுப்பி வைப்பார். தவிர தினமும் வெளியிலிருந்து 'உள்ளே' வந்து சேரும் அரசியல் கைதிகள் வாய் வழியாகச் சில தகவல்களும்

கிடைப்பதுண்டு. அவை சில சமயம் உண்மையாக இருக்கும். சில சமயம் பொய்யாகவும் இருக்கும்.

'ஜெயிலுக்குள் விடுதலைப் போராட்ட வீரர்கள் சும்மா இருக்கக் கூடாது. 'Jail is also a field of action' என்று மகாத்மா காந்தி சொன்னதாக ஒரு நாள் சிறைக்குள் ஒரு செய்தி பரவியது. அங்கே இருந்த கம்யூனிஸ்ட்டுகள்தான் இதைப் பரப்பினார்கள். கம்பிகளை உடைத்துக் கொண்டு வெளியே செல்லும்படி காந்திஜி சொன்னதாக அந்தச் செய்தி விசுவரூபமெடுத்து உலா வந்தது.

அவ்வளவுதான்; சாவி உள்ளிட்ட பலருக்கும் 'ஜிவ்'வென்று ரத்தம் சூடாகியது. 'காந்தியே சொல்லிட்டார். பிறகென்ன?' என்று ஆங்காங்கே கைதிகள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள்.

'ஜெயிலை உடைத்துக் கொண்டு வெளியேறுவது' என்று அன்றிரவு ஒருமனதாகத் தீர்மானம் போட்டு, அதை உடனடியாகச் செயல்படுத்துவது' என்றும் முடிவெடுத்தார்கள்.

இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்ட வார்டர் ஒருவர் அதை அப்படியே சிந்தாமல் சிதறாமல் சிறைச் சாலை அதிகாரியிடம் (ஜெயிலர்) வத்தி வைத்து விட்டார்.

அப்போது ஹௌ துரை என்கிற வெள்ளைக்காரன்தான் அந்த ஜெயிலின் சூப்பரின்டென்டன்ட். பொல்லாதவன். திருச்சி சிறையில் பிரகாசம்காரு இருந்த சமயம், அவன் கொட்டத்தை அடக்க ஒருநாள் அவனைச் செருப்பாலேயே அடித்து விட்டாராம். அன்றிலிருந்து காங்கிரஸ்காரர்கள் என்றால் ஹௌ துரைக்கு மகா வெறுப்பு. அவர்களைப் பார்த்தாலே எரிச்சலுடன் மிகக் கடுமையாக 'யூ... காந்தி கேப்' என்று தலை முடியை முரட்டுத் தனமாகப் பற்றி இழுத்து கொடுமைப்படுத்துவான்.

'அரசியல் கைதிகள் சிறையை உடைத்து வெளியேறப் போகிறார்கள்' என்று அவன் கேள்விப்பட்டால் சும்மா இருப்பானா?

மறுநாள் விநாயகர் சதுர்த்தி. திங்கட்கிழமை. அதற்கு

முதல் நாள்தான் எல்லோரும் கும்பலாகப் பேசிக் கொண்டிருந்தனர். விநாயகர் சதுர்த்தி பண்டிகையை ஒவ்வொருவர் வீட்டிலும் எப்படி எல்லாம் கொண்டாடுவார்கள் என்று அவரவர் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.

'போன வருடம் பிள்ளையார் சதுர்த்திக்கு என் வீட்டில் கொழுக்கட்டை சாப்பிட்டேன். ஹூம், இந்த வருடம், 'சதுர்த்தியாவது பண்டிகையாவது? புழு நெளியும் கஞ்சிதான்!' என்று சொல்லி சாவி பெருமூச்சு விட்டார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் கைதிகள் எல்லோரும் வழக்கம்போலக் கஞ்சி சாப்பிட்டுவிட்டு ஆங்காங்கே மரத்தடியில் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். திங்கட்கிழமை காலை ராகு கால நேரம்.

திடீரென இடைவிடாத பயங்கரமான விசில் சப்தம். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பதை எளிதில் யூகிக்க முடிந்தது. சிறையைச் சுற்றிலும் ரிசர்வ் காவல் படை அணி வகுத்து நிற்க, 'எல்லோரும் பிளாக்குக்குள் ஓடுங்க... ஜெயிலையா உடைக்கப் போறீங்க? இதோ, இப்ப உங்க மண்டையை உடைக்கிறோம் பாருங்க...' என்ற கூச்சலுடன் சிறை வார்டர்கள் வெறித்தனமாகச் சீறிக்கொண்டே அனைவரையும் ஓட ஓடத் துரத்தி லத்தி சார்ஜ் செய்தார்கள். அப்போது அங்கே ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் இருந்தார்கள். எல்லோரும் பயத்தில் தலை தெறிக்க ஓடி அவரவர் பிளாக்குகளுக்குள் புகுந்தார்கள். ஹௌ துரை கையில் பிரம்புடன் ஒரு ராட்சசன் போல் காட்சி அளித்தான். வார்டர்களைப் பார்த்து 'அடி, நொறுக்கு' என்று கீச்சுக் குரலில் உத்தரவிட்டுக் கொண்டிருந்தான்.

அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. காங்கிரஸ் கைதிகள் அடித்து நொறுக்கப்பட்டனர். சிறைச்சாலையே ரத்தக்களறி ரணக்களறி ஆகிக்கொண்டிருந்தது. சாவி ஓடிக் கொண்டிருந்த போது, ஒரு வார்டர் அவரைத் துரத்தி வந்து ஓங்கி ஓர் அடி

போட்டான். அவர் தோள் பட்டையில் அந்த பலமான அடி மிக வேகமாக வந்திறங்கியது. 'அம்மாடி' என்று சுருண்டு விழுந்தார். அதே சமயம் அடி வாங்கிக் கொண்டே பல பேர் தடுமாறி அவர் மீது வந்து விழுந்தார்கள். அதனால் மேற்கொண்டு அடி விழாமல் சாவி தப்பிக்க முடிந்தது.

ஒரு வாரத்துக்குப் பிறகுதான் சிறைச்சாலையில் மாமூல் நிலை திரும்பியது. அப்புறம்தான் 'எப்படி இருக்கீங்க?' என்று ஒருவருக்கொருவர் மெதுவாக முனகல் குரலில் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.

சாவி மீது விழுந்த அடி வலது தோளுக்குக் கீழ் முதுகுப் பக்கம் கொழுக்கட்டை போலப் பெரிதாக வீங்கிப் போயிருந்தது. அதைச் சுட்டிக் காட்டி தன் சிறைச்சாலைத் தோழர்களிடம் அவர் சொன்னார்:

''பாருங்கய்யா...! என் ஆசை நிறைவேறிப் போச்சு, பிள்ளையார் சதுர்த்திக்கு வாயிலே கொழுக்கட்டைக்கு ஆசைப் பட்டேன். ஹௌ துரை முதுகிலே கொடுத்துட்டான்!''

# 7. ஆதித்தனாரின் பெருந்தன்மை

எட்டு மாதங்களுக்குப் பின் (ஒரு மாதம் நன்னடத்தை தள்ளுபடி) விடுதலை பெற்ற சாவிக்கு என்ன செய்வதென்று புரியாமல் ஒரு குழப்பம். மகாத்மாவும், நேருஜியும், படேலும் மற்றும் நூற்றுக்கணக்கான அரசியல் தலைவர்களும் லட்சோப லட்சம் விடுதலைப் போராட்ட வீரர்களும் சிறைச்சாலைகளில் வாடிக் கொண்டிருந்தார்கள். தேசம் விடுதலை அடைந்த பாடில்லை. எப்போது அடையும் என்றும் தெரியவில்லை. வங்காளத்தில் தலைவிரித்தாடிய பயங்கரப் பஞ்சம் காரணமாக நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினியால் மாண்டு மடிந்து கொண்டிருந்தார்கள்.

எதிர்காலத்தின் ஒளி புலப்படாமல் தேசம் இருளில் ஆழ்ந்து கிடந்தது. எந்த வேலையும் இல்லாமல், என்ன செய்வதென்றும் புரியாமல் வாழ்நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தார் சாவி. அப்போது அவர் குடும்பம் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்ததால் லிங்கி செட்டித் தெருவில் ஐந்து ரூபாய் வாடகைக்கு ஒரு சின்ன அறையில் வசித்துக் கொண்டிருந்தார்.

சிறையில் அவருடன் மிக்க நட்போடு பழகிய நண்பர் எஸ்.ஏ.ரஹீம் சாவிக்கு முன்பாகவே விடுதலையாகி விட்டார். 'ரயில் சிநேகம்', 'ஜெயில் சிநேகம்' என்பதெல்லாம் நிரந்தரமாகத் தொடர்வதில்லை என்பது அனுபவப்பூர்வமான உண்மை என்றாலும் ரஹீம் மட்டும் சாவியை மறக்கவில்லை. ஒருநாள் திடீரென்று அவரைத் தேடி லிங்கி செட்டித் தெரு விலாசம் கண்டுபிடித்து வந்து விட்டார்.

வந்தவர், ''அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று சாவியைக் கேட்டார்.

''சக்தி பத்திரிகை ஆசிரியர் தி.ஜ.ர. அடுத்த தெருவில் ஒரு ஓட்டல் மாடியில் தங்கியிருக்கிறார். அவர் அவ்வப்போது என்னை ஓட்டலுக்கு அழைத்துச் சென்று சாப்பிடச் சொல்கிறார். சக்தியில் ஏதாவது எழுதச் சொல்லி ஐந்து பத்து தருகிறார். அவர் ஆதரவில்தான் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது'' என்றார் சாவி.

அச்சமயம் செட்டி நாட்டு இளைஞர் சின்ன அண்ணாமலை என்பவர் 'தற்காலப் பிரச்னைச் சுடர்' என்ற பெயரில் மாதம் ஒரு புத்தகம் வெளியிட்டுக் கொண்டிருப்பதாகவும் அடுத்த மாத வெளியீடாக சாவி ஒரு புத்தகம் எழுதித் தர வேண்டும் என்றும் ரஹீம் கேட்டுக் கொண்டார். ''இப்போது வங்காளத்தில் பஞ்சம் தோன்றி மக்கள் மாய்ந்து கொண்டிருக்கிறார்கள். அதன் பின்னணி விவரங்களுடன் 'வங்காளப் பஞ்சம்' என்ற தலைப்பில் நீங்கள் எழுதலாமே'' என்றும் யோசனை சொன்னார். அத்துடன் அந்தப் புத்தகம் எழுதுவதற்கு உதவியாக 'FORUM' போன்ற பத்திரிகை களையும் வேறு சில வெளியீடுகளையும் வாங்கித் தந்தார். ரஹீம் விருப்பப்படி சாவி 'வங்காளப் பஞ்சம்' என்ற தலைப்பில் உடனே ஒரு புத்தகம் எழுதிக் கொடுத்தார். அதற்காக ஐம்பது ரூபாய் சன்மானத் தொகையை மறுநாளே ரஹீம் சின்ன அண்ணா மலையிடமிருந்து வாங்கி வந்து தந்தபோது சாவி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அப்போது அந்த ஐம்பது ரூபாய் ஏதோ ஐம்பது லட்சம் போல இருந்தது சாவிக்கு. நாளடைவில் தமிழ்ப்பண்ணை சின்ன அண்ணாமலையும் சாவியும் நெருங்கிய சிநேகிதரானார்கள். மாம்பலத்தில் நல்லி கடைக்குப் பக்கத்தில் கார் ஷெட் போன்ற ஒரு சின்ன இடத்தில் தமிழ்ப்பண்ணை நடந்து கொண்டிருந்தது. நாமக்கல் கவிஞர், ராஜாஜி, திரிகூட சுந்தரம் பிள்ளை, வெ. சாமிநாத சர்மா போன்ற அறிஞர்களின் நூல்கள் அங்கே இடம் பெற்றிருந்தன. அந்தப் புகழ்மிக்க இலக்கியவாதிகளுடன் சாவியின் பெயரையும் சேர்த்துக் கொண்டு

அவரது புகைப்படத்தையும் தமிழ்ப்பண்ணைக் கூடத்தில் மாட்டி வைத்திருந்தார் சின்ன அண்ணாமலை. சாவிக்கு இது கூச்சத்தை அளித்ததால் சின்ன அண்ணாமலையிடம் சொல்லி அந்தப் படத்தைச் சில நாட்களுக்குள்ளாகவே அங்கிருந்து அகற்றிவிட்டார்.

இந்தச் சமயத்தில் தி.ஜ.ரங்கநாதன் (தி.ஜ.ர.) ஒருநாள் சாவியிடம், 'சிங்கப்பூரிலிருந்து ஆதித்தன் என்பவர் சென்னைக்கு வந்திருக்கிறார். இப்போது லிங்கிச் செட்டித் தெருவில்தான் இருக்கிறார். அவர் ஏதோ பத்திரிகை தொடங்கப் போவதாகக் கேள்வி. உம்மை அவரிடம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன், வாரும்' என்று அழைத்துப் போனார்.

அறிமுகப்படலம் முடிந்ததும் , சாவி அவர்களின் நகைச் சுவை உணர்வு, பத்திரிகை அனுபவம் போன்ற விவரங்களைக் கேட்டறிந்த ஆதித்தனார் சாவியிடம் பிரியமாகப் பழகத் தொடங்கினார். ''நான் இன்னும் இரண்டொரு மாதங்களில் 'தமிழன்' என்றொரு வார இதழ் தொடங்கப் போகிறேன். அதுவரை நீங்கள் அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருங்கள்'' என்றார். அவர் 'அவ்வப்போது' என்று சொன்னதை சாவி 'தினமும்' என்று மாற்றிக் கொண்டு நாள் தவறாமல் மாலை நாலு மணிக்கெல்லாம் ஆதித்தனார் முன் போய் நிற்பார். அந்த நேரம்தான் டிபன் சாப்பிட தெருக்கோடியில் உள்ள ஓட்டலுக்கு அவர் செல்வது வழக்கம். போகும்போது சாவியையும் கூடவே அழைத்துப் போவார்.

அப்போதெல்லாம் ஆதித்தனார் எது சாப்பிட்டாலும் இரண்டு இரண்டாகத்தான் சாப்பிடுவார். 'ரெண்டு ஸ்வீட்... ரெண்டு தோசை...' என்றுதான் ஆர்டர் கொடுப்பார். கூடவே சாவிக்கும் சேர்த்து மூன்று செட்டாகச் சொல்வார். இப்படி தினமும் சாவி பழகி வந்தபோது ஆதித்தனாரின் சிந்தனை, ரசனை, செயல்திறமை மூன்றும் புரிந்து கொள்ள முடிந்தது. அது சாவிக்குப் பின்னாளில் பயனுள்ள பாடமாக அமைந்தது. வியாபார நோக்கில்

ஆதித்தனார் எதையும் நுணுக்கமாகக் கவனித்து அணுகும் முறையைத் தம் மனதில் பதிய வைத்துக் கொண்டதற்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியை சாவி சொல்கிறார்:

''நாங்கள் ஒட்டலுக்குப் போனபோது ஒருநாள் வழக்கம் போல் 'என்ன இருக்கிறது?' என்று சர்வரைக் கேட்டார் ஆதித்தனார். சர்வரும் வழக்கம் போல் பட்டியலை ஒப்புவித்தார். சட்டென்று ஆதித்தனார் பார்வை அங்கே எதிரில் மர அலமாரியில் கண்ணாடி கதவுக்குப் பின்னால் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஜாங்கிரி மேல் போனது. ''பார்த்தீங்களா? அந்த சர்வர் ஜாங்கிரி இருப்பதைச் சொல்லாமலே விட்டுவிட்டார். சொல்லியிருந்தால் நான் ஆர்டர் பண்ணியிருப்பேன், இல்லையா? இப்போது என்ன ஆச்சு? ஒட்டல் முதலாளிக்குத்தானே நஷ்டம்! வியாபாரம் என்று வரும்போது நம்மிடம் என்னென்ன இருக்கிறது என்பதை சாப்பிட வருகிறவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லையெனில் நஷ்டம் வியாபாரிக்குத்தான்.

அந்த சர்வர் நம்மிடம் 'ஸார்! இன்று ஸ்பெஷலாக ஜாங்கிரி போட்டிருக்கிறோம். ரொம்ப நன்றாயிருக்கிறது. ரோஸ் மாதிரி இருக்கு பாருங்க. சுடச் சுட வந்திருக்கிறது' என்று சொல்லியிருந்தால் நாம், நாக்கில் ஜலம் ஊறி, ஆளுக்கு இரண்டு வாங்கிச் சாப்பிட்டிருப்போம் அல்லவா?'' என்றார். ஆதித்தனார் சொன்னதில் எவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்பதை நான் எண்ணிப் பார்த்து வியந்து போனேன். இன்றும் கூட 'தினத் தந்தி'யில் அவ்வப்போது அதன் சிறப்பம்சங்கள் குறித்து அவர்களே விளம்பரப்படுத்திக் கொள்வதைப் பார்க்கும் போது எனக்கு ஆதித்தனார் ஞாபகம் வரத் தவறுவதில்லை.''

கையால் தயாரித்த காகிதத்தில்தான் ஆதித்தனார் 'தமிழன்' பத்திரிகையைத் தொடங்கினார். திரு. கோ.த.சண்முகசுந்தரம் என்ற எழுத்தாளரை ஆசிரியராகக் கொண்டு 'தினத் தந்தி'யை ஆரம்பித்தார். தலையங்கம் முதல் பல்வேறு செய்திகளை எளிய

நடையில் சண்முகசுந்தரம் எழுதி வந்தார். சாவியை ஒருநாள் ஆதித்தனார் கோ.த.ச.வுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். ஆனால், 'தமிழன்' பத்திரிகையில்தான் சாவியை உதவி ஆசிரியராகச் சேர்த்துக் கொண்டார். சம்பளம் ஐம்பது ரூபாய்.

அப்போது, எழுத்தாளர் பி.ஸ்ரீ.ஆசார்யா அவர்களின் மகன் நாராயணன் 'தினத் தந்தி'யில் செய்தி ஆசிரியராக வேலைக்குச் சேர்ந்திருந்தார்.

சாவி தமிழனில் வேலை செய்தாலும் சின்னச் சின்ன செய்திகளை அவ்வப்போது 'தினத் தந்தி'க்காகத் தமிழில் மொழி பெயர்த்துத் தருவதும் உண்டு.

ஆனாலும் 'தமிழனி'லோ, 'தினத் தந்தி'யிலோ தனக்கு ஒரு பெரிய திருப்புமுனை ஏற்படும் என்ற நம்பிக்கை சாவிக்கு ஏற்படவில்லை.

சாவி எப்போதுமே கல்கியின் தீவிர ரசிகர். சிறையிலிருந்து விடுதலை பெற்று சென்னை திரும்பியதும் ஆசிரியர் கல்கியை போய்ப் பார்த்து வேலை கேட்டபோது, 'இப்போதுதான் பத்திரிகை ஆரம்பித்திருக்கிறோம். கொஞ்ச நாள் கழித்துப் பார்க்கலாம்' என்று சொல்லி அனுப்பி விட்டார் கல்கி.

திரைப்படங்களின் நீளம் குறித்து கல்கி தமது பத்திரிகையில் காரசாரமாகக் கட்டுரைகள் எழுதினார். 'எத்தனை அடி வேண்டும்?' என்று அவர் எழுதிய கட்டுரை சாவியை வெகுவாகக் கவர்ந்தது.

'ஒரு திரைப்படம் பதினெட்டாயிரம் அடி நீளம் என்பது ரொம்ப அதிகம். ரசிகர்களுக்குப் போர் அடித்துப்போகும்' என்பதை 'நாலு பேர் அபிப்ராயம்' என்ற தலைப்பில் நகைச் சுவையுடன் ஒரு கட்டுரை எழுதித் தமிழனில் பிரசுரித்தார் சாவி. திரைப்படங்களின் நீளம் எவ்வளவு இருக்க வேண்டும் என்று ஒரு ரிக்ஷாக்காரர், ஒரு சினிமா தியேட்டர் ஆபரேட்டர், ஒரு மூட்டைப்பூச்சி இப்படி நாலுபேர் கருத்துச் சொல்வது

போன்ற ஒரு கற்பனை! தமிழனில் வெளியான அந்தக் கட்டுரையை ஆசிரியர் கல்கி படித்து ரொம்பவும் ரசித்திருக்கிறார் என்று நண்பர் நாராயணன் மூலம் தெரிந்து கொண்டார்.

அந்த ஆண்டு தீபாவளியன்று கல்கி அவர்களை மரியாதை நிமித்தம் போய்ப் பார்த்த திரு. பி.ஸ்ரீயின் மகன் நாராயணனிடம், 'சாவி கட்டுரை படித்தேன். ரொம்ப நன்றாக இருக்கிறது. அவரை நான் பாராட்டியதாகச் சொல்லுங்கள்' என்று சொல்லி அனுப்பியிருந்தார்.

சாவிக்கு இதைக் கேட்டதும் மகிழ்ச்சி தாங்கவில்லை. உடனே கல்கியைப் பார்க்கப் போய் விட்டார். அவர் போன சமயம், 'கல்கி உள்ளே எழுதிக் கொண்டிருக்கிறார்' என்று சொல்லி அவரை பக்கத்து அறையில் காத்திருக்கச் சொன்னார்கள்.

அந்த நேரத்தில் ஒரு காகிதத்தை எடுத்து அப்போது மனதில் தோன்றிய ஒரு கற்பனையை 'பகிரங்கக் கடிதம்' (நீலன் சிலை பற்றியது) என்ற தலைப்பில் ஒரு கடிதம் போல் நகைச் சுவையோடு எழுதி உள்ளே அனுப்பினார். கல்கி ஆசிரியர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு சாவியை உள்ளே வரச் சொன்னார்.

'பேஷ்! பேஷ்! உனக்கு ஹ்யூமர் நன்றாக வருகிறது' என்று கூறிப் பாராட்டியதுடன் அப்போதே சாவியை வேலையில் சேர்ந்து கொள்ளலாம் என்றும் சொல்லி விட்டார். அதைக் கேட்டதும் சாவிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. 'ஜிவ்'வென்று வானத்தில் பறந்தார்.

கல்கி அவர்கள் மீது தனக்கிருந்த மரியாதை, ஆதித்தனார் பத்திரிகையில் பெரிய வாய்ப்பு இருக்காது என்று ஏற்கனவே தன்னுள் வளர்ந்திருந்த எண்ணம் எல்லாமாகச் சேர்ந்து கொள்ளவே 'சரி' என்று கல்கியில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து விட்டார் சாவி. சம்பளம் எழுபத்தைந்து ரூபாய்!

ஆனால், கல்கியில் சேர்ந்து விட்ட விஷயத்தை ஆதித்தனார்

அவர்களிடம் சாவி சொல்லவே இல்லை. நேரில் அவர் முகம் பார்த்துச் சொல்லும் தீரம் அவருக்கு வரவில்லை.

''எத்தனை நாள் அவரோடு சென்று ஓட்டலில் சாப்பிட்டிருப்பேன்? அந்த உப்பு என் நெஞ்சுக்குள் உறுத்தியது. அப்படிச் சொல்லாமல் போனது மிகப் பெரிய தவறு என்ற குற்ற உணர்வு என்னை இன்னமும் வாட்டிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் ஆதித்தனார் அவர்களை நீண்ட நாட்களுக்குப் பிறகு நான் மதுரை விமானக் கூடத்தில் சந்தித்தபோது இதுபற்றி அந்தப் பெருந்தகையாளர் எதுவுமே பேசவில்லை.

''உங்க கட்டுரைகளைப் படிக்கிறேன். ரொம்ப நன்றாக எழுதுகிறீர்கள்'' என்று மட்டும் பாராட்டினார். அவருடைய பெருந்தன்மையான பேச்சு என்னை மேலும் வாட்டியது'' என்று சாவி அந்தப் பழைய நினைவில் நனைந்து வருத்தப்படுகிறார்.

# 8. நவகாளி யாத்திரை

'கல்கி'யில் உதவி ஆசிரியர் வேலை கிடைத்ததும் சாவி தமது கனவுகள் ஒவ்வொன்றாக நிறைவேறி வருவதை எண்ணிப் பூரிப்படைந்தார்.

நாடோடி, வசந்தன் போன்ற எழுத்தாளர்கள் அப்போது 'கல்கி'யில் துணை ஆசிரியர்களாக இருந்தார்கள். அனுபவம் மிக்க அந்த எழுத்தாளர்களுக்கிடையில் சாவி தனது அயராத உழைப்பினாலும், எழுத்துத் திறமையாலும் மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறி தமக்கென ஒரு தனியிடத்தைப் பற்றிக் கொண்டார்.

தான் எழுதிய சிறுகதை ஒன்றை ஒரு வெள்ளிக்கிழமை காலை கல்கியின் பார்வைக்காக மேஜை மீது வைத்து விட்டு வந்தார் சாவி. வியாழக்கிழமை தலையங்கம் எழுதும் நாளாதலால் வெள்ளிக்கிழமைகளில்தான் மற்றவர்கள் எழுதி வைக்கும் கதை, கட்டுரைகளைப் படித்து கல்கி 'டிக்' போடுவது வழக்கம். சாவியின் கதையைப் படித்துவிட்டு, 'இதோ பார்! நமக்குப் பல எழுத்தாளர்கள் கதை எழுதி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நீயும் அதையே செய்யாதே. உதவி ஆசிரியர்களாக இருப்பவர்கள் கதையைத் தவிர மற்ற அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் கட்டுரை, பயணக் கட்டுரை, பேட்டிக் கட்டுரை, சினிமா விமர்சனம் இப்படி எத்தனையோ விஷயங்கள் உண்டே, அதெல்லாம் எழுதப் பழகிக் கொள்,'' என்று கல்கி கூறிய

அறிவுரையை சாவி வேதவாக்காக ஏற்று கடைப்பிடிக்கத் தொடங்கினார்.

நாடு விடுதலை பெற்றிருந்த காலகட்டம் அது. நவகாளியைச் சுடுகாடாக்கிக் கொண்டிருந்த இந்து முஸ்லிம் கலவரம் தீவிரம் அடைந்து கட்டுக்கடங்காத பயங்கரச் சூழ்நிலை. அங்கே இந்து - முஸ்லிம்களுக்கிடையே நிலவிய குரோதத்தையும், விரோதத்தையும் போக்கி அமைதியை நிலைநாட்ட காந்தி மகாத்மா நவகாளி யாத்திரை மேற்கொண்ட நேரம். காந்தி மகாத்மா என்ற சொல் ஒரு மந்திரச் சொல்லாகவே உச்சரிக்கப்பட்டு வந்த நாட்கள் அவை.

ஆசிரியர் கல்கி அவர்கள் ஒரு நாள் சாவியை அழைத்து ''காந்தியோடு சுற்றுப்பயணம் செய்து அவரது நவகாளி யாத்திரை பற்றி எழுதுகிறாயா?'' என்று கேட்டார். இப்படி ஒரு வாய்ப்பை சாவி சற்றும் எதிர்பார்க்கவில்லை. கரும்பு தின்னக் கூலியா? அதுவும் எப்பேர்ப்பட்ட கரும்பு! நவகாளி பயங்கரத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், ஒரு கணமும் சிந்திக்காமல் சரி என்று ஒப்புக்கொண்டு மறுதினமே புறப்பட்டு விட்டார்.

நவகாளி போய்ச் சேருவது அப்படியொன்றும் எளிதான காரியமாக இல்லை. பல இன்னல்களுக்கிடையே அங்கே போனதும், மகாத்மாவைச் சந்திப்பது மேலும் சிரமமாக இருந்தது. ஏகமாய்க் கட்டுப்பாடுகள். ராஜாஜியின் பெயரைச் சொல்லி, கல்கி பத்திரிகையின் சார்பாக வந்திருப்பதையும் சொன்ன பிறகுதான் கொஞ்சம் பிடி கொடுத்துப் பேசினார்கள். கல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர் நிர்மல்குமார் போஸ் என்பவர்தான் காந்திஜிக்கு முன்னால் நின்ற நந்தி பகவான்.

அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாக பதில் சொன்ன பிறகுதான் சாவியை காந்திஜியின் குடிலுக்குள் அழைத்துப் போனார். மகாத்மாவை நேரில் பார்த்த அந்த அனுபவத்தை சாவி சொல்கிறார்:

''அப்போது, குடிலுக்குள் காந்திஜி நூல் நூற்றுக்

கொண்டிருந்தார். நான் பவ்யமாகப் போய் வணங்கி நின்றேன். 'இங்கே பத்திரிகை நிருபர்கள் யாரையும் அனுமதிப்பதில்லை என்று உனக்குத் தெரியாதா?' என்று காந்திஜி கேட்டார். நான் பதில் ஏதும் பேசாமல் பிரமிப்பில் ஆழ்ந்து கிடந்தேன். பேசுவதற்கு நா எழவில்லை. இந்தியா முழுவதும் தெய்வமாய் வழிபடும் மகாத்மாவின் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன் என்ற உணர்வே என்னுள் ஒரு பரவசமாக வியாபித்திருந்தது.

''இங்கே வருவதற்கு எவ்வளவு பணம் செலவு செய்தாய்?'' – மகாத்மா கேட்டார்.

''நானூறு ரூபாய்'' – என்றேன்.

''கிரிமினல் வேஸ்ட்'' என்று சொல்லிவிட்டு ''இரண்டு நாட்கள் மட்டுமே நீ என்னுடன் தங்கலாம். அப்புறம் ஊருக்குத் திரும்பி விட வேண்டும்'' என்று ஒரு உத்தரவு போல் ஆள் காட்டி விரல் அசைப்போடு கூறினார். இரண்டாம் நாள் மாலை பிரார்த்தனை முடிந்தவுடன் என்னை அருகில் அழைத்து, ''நீ இன்னும் புறப்படவில்லையா? இங்கு கூட்டம் சேர்வது நல்லதல்ல. நிருபர்கள் என்னைப் பின் தொடர்ந்து வருவதை நான் விரும்பவில்லை. You have to quit immediately'' என்றார். காந்திஜி என்னைப் பார்த்து Quit என்று சொன்னதும் எனக்குப் பெருமை தாங்கவில்லை. காந்திஜியுடன் உரையாடியது கிடைத்தற்கரிய பேறு என்பது ஒன்று. 1942–ல் ஆகஸ்ட்டில் வெள்ளைக்காரர்களைப் பார்த்து Quit என்று சொன்ன காந்திஜி அடுத்தபடியாக அந்த வரலாற்றுப் புகழ்மிக்க சொல்லை உபயோகித்தது என்னைப் பார்த்துதான்! இது எனக்குக் கிட்டிய இரண்டாவது பெருமை! அந்த நவகாளி யாத்திரை பற்றி எழுத எனக்கு இரண்டு நாள் அனுபவம் போதவில்லை. எனவே, கல்கத்தா நகருக்கு வந்து அங்கு சில முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து மேலும் சில தகவல்களைச் சேகரித்துக் கொண்டு சென்னை வந்து சேர்ந்தேன்.''

கல்கியில் வெளியான 'நவகாளி யாத்திரை'த் தொடர் வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. சாவி என்ற புனைபெயருக்கு வாசகர்களிடம் ஓர் அங்கீகாரம் கிடைத்ததும் அப்போதுதான்.

''இனிமேல்தான் நீ அதிகப் பொறுப்புடனும், அடக்க மாகவும் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்'' என்று கல்கி அவர்கள் சாவிக்கு அறிவுரை கூறினார். அதுமட்டுமல்ல; சில முக்கிய பொறுப்புகளையும் சாவியிடம் தந்து கவனிக்கச் சொன்னார்.

'மீரா' திரைப்படத்தின் இந்திப் பதிப்புக்காக கல்கி அவர்கள், திரு. சதாசிவம், திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி மூவரும் பம்பாயில் முகாமிட்டபோது கல்கி இதழ்களை வாரா வாரம் வெளிக்கொண்டு வரும் பொறுப்பு சாவியிடம் ஒப்படைக்கப் பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையில் திருமதி விஜயலட்சுமி பண்டிட் உரையாற்றியது பற்றி சாவி ஒரு கட்டுரை எழுதி பம்பாயிலிருந்த கல்கி அவர்களுக்கு அதைத் தொலைபேசியில் படித்துக் காட்டினார். ''பேஷ்... பேஷ்...'' என்று பாராட்டி உற்சாகப் படுத்தியதுடன் 'இதையே அடுத்த வாரம் தலையங்கமாகப் போட்டு விடு' என்றார். பின்னர் பம்பாயிலிருந்து திரும்பி வந்ததும் ரசிகமணி டி.கே.சி. அவர்களைப் பார்க்க குற்றாலம் போய் விட்டார். கூடவே சின்ன அண்ணாமலையும் போயிருந்தார்.

அப்போது, திருவனந்தபுரத்தில் நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையின் நாடகக்குழு 'சாமியே சரணம் ஐயப்பா' என்ற ஒரு புதிய நாடகத்தை அரங்கேற்றியிருந்தது. அந்த நாடகத்தைப் பார்ப்பதற்காகவே டி.கே.சி., சின்ன அண்ணாமலை இருவருடன் கல்கி அவர்கள் திருவனந்தபுரம் போயிருந்தார். சின்ன அண்ணா மலையை அந்த நாடகத்துக்கு ஒரு விமர்சனம் எழுதும்படி கல்கி பணிக்கவும் சின்ன அண்ணாமலை தன் விமர்சனத்தை

ஒரு மினி தொடர் கட்டுரையாகவே எழுதிச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். அந்த நீண்ட கட்டுரையைக் கண்டதும் சாவி சற்று குழம்பிப் போனார். காரணம், அப்போது கல்கியில் ஏற்கெனவே டி.கே.சி. அவர்களின் 'கம்பர் தரும் காட்சி', ராஜாஜி எழுதும் தொடர், கல்கியின் சரித்திரக் கதை, 'நவகாளி யாத்திரை' என்று ஏகத் தொடர்கள் வெளிவந்து கொண்டிருந்தன. இவ்வளவு தொடர்களுடன் இன்னொரு தொடரா என்பதுதான் சாவியின் குழப்பத்துக்குக் காரணம். கல்கி அவர்களோ, அதை உடனே தொடராக வெளியிடும்படி உத்தரவிட்டிருந்ததால் சாவி தர்மசங்கடத்துக்குள்ளானார்.

இன்னொரு தொடர் 'ஓவர்டோஸ்' ஆக இருக்கும் என்று கருதியதால், அதை கல்கி அவர்களுக்கு ஒரு தந்தி மூலம் சாவி தெரியப்படுத்தினார். இது சற்று அதிகப்பிரசங்கித்தனமாக இருக்குமோ, கல்கி கோபித்துக் கொள்வாரோ என்று அவர் பயந்தது போலவே ஆகிவிட்டது. சற்றும் எதிர்பாராத ஒரு பதில் கல்கியிடமிருந்து வந்தது. ''தொடர்கள் அதிகம் என்றால் உன் தொடரை உடனே நிறுத்திக் கொள்.''

தன் தொடரை மேலும் பல வாரங்களுக்கு எழுதத் திட்டமிருந்த போதிலும் ஆசிரியரின் ஆணையை மீற முடியாத நிலையில், நவகாளி கட்டுரையை அந்த வாரமே அரைகுறையாக முடித்து விடவும் முடியாமல் மேலும் ஒரு வாரம் தொடர்ந்து எழுதிய பிறகே 'முற்றும்' போட்டார்.

சில நாட்களுக்குப் பின் குற்றாலத்திலிருந்து சென்னை திரும்பிய கல்கி அவர்கள் சாவியைப் பார்த்தபோது பேசாமல் முகம் திருப்பிக் கொண்டார். தன் மீது அவர் கோபமாக இருப்பதை சாவியால் உணர முடிந்தது. அந்த உதாசீனத்தை, அந்த அதிர்ச்சியை சாவியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அப்படிப்பட்ட இறுக்கமான சூழலில் தொடர்ந்து கல்கியில் எத்தனை நாள் பணியாற்ற முடியும்? கல்கியிலிருந்து

விலகத் தீர்மானித்து விட்டார் சாவி. அன்று கல்கி அவர்கள் தலையங்கம் எழுதும் நாள். தலையங்கம் எழுதி முடிக்கும் வரை காத்திருந்து சாவி தம் ராஜினாமாக் கடிதத்தைக் கொண்டு போய் நேரிலேயே கொடுத்தார். அதில் புதுப் பத்திரிகை தொடங்கப் போவதாகவும் அதனால் விலகிச் செல்வதாகவும் குறிப்பிட்டிருந்தார். கல்கி அதைப் படித்து விட்டு ''இது நான் எதிர்பார்த்ததுதான்'' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டு அந்த ராஜினாமாக் கடிதத்தின் ஒரு மூலையிலேயே 'சாவியின் புதுப் பத்திரிகை முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்' என்றது எழுதியதோடு 'சாவியின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்கிறேன். அவருக்குச் சேர வேண்டிய தொகையை கணக்குப் பார்த்துக் கொடுத்து விடலாம்'' என்று நிர்வாகத்துக்கு ஒரு குறிப்பும் எழுதி அதை சாவியிடமே கொடுத்து அனுப்பி விட்டார். அடுத்த சில மணி நேரங்களில் சாவி கனத்த மனதுடன் கல்கியை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

---

# 9. ராஜாஜியின் அறிவுரைகள்

ராஜாஜி கீழ்ப்பாக்கத்திலுள்ள கல்கி அலுவலகத்துக்கு அடிக்கடி வந்து போவதுண்டு. மாலையில் அவர் தம்முடைய தியாகராயநகர் பஸ்லுல்லா சாலை வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் போது சில நாட்களில் அவர் போகும் காரிலேயே சாவியும் போவதுண்டு. அப்போதெல்லாம் ராஜாஜியுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஒரு சமயம் சாவி எழுதிய கட்டுரை ஒன்றைப் பாராட்டி ''கிருஷ்ணமூர்த்தி மாதிரியே எழுதறீங்களே!'' என்றார் ராஜாஜி. கல்கியை ராஜாஜி கிருஷ்ணமூர்த்தி என்றுதான் குறிப்பிடுவார்.

அப்போதெல்லாம் கல்கி அவர்களின் எழுத்தில் இருந்த மோகம் காரணமாக அவர் மாதிரியே எழுதிக் கொண்டிருந்தார் சாவி. ராஜாஜியின் பரம பக்தனாகவும் சாவி இருந்தார். அவருடைய செயல்திறமை, புத்தி கூர்மை, பேச்சு, எழுத்து எல்லாவற்றையும் மிகுந்த ஆர்வத்தோடு கவனித்து வியப்பார்.

''ராஜாஜியின் இயல்பான நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தாலே வாழ்க்கையில் முன்னேறத் தேவையான பல பாடங்கள் நமக்குத் தானாகவே கிடைத்துவிடும்'' என்று சொல்லும் சாவி, அதற்கு ஒரு உதாரணத்தையும் இங்கே விவரிக்கிறார்:

''ராஜாஜிக்கு எதையும் துல்லியமாகச் செய்ய வேண்டும். நாம் எல்லோரும்தான் சாத்துக்குடி பழம் சாப்பிடுகிறோம். ஆனால், அவர் சாப்பிடுவது ஒரு கவிதையாக இருக்கும். சாத்துக்குடியை

எடுத்து, சரியாக நடுப்பகுதியில் நகத்தாலோ அல்லது கத்தியாலோ கீறி இரு கிண்ணங்களாகச் செய்து கொள்வார். பிறகு, சுளைகளைப் பந்து போல் பிரித்து எடுத்து வைத்துக் கொள்வார். பின்னர் அந்தச் சுளைகளின் மீது படர்ந்துள்ள தோல்களையும், நார்களையும் கவனமாகப் பிரித்தெடுத்து அந்தக் கிண்ணங்களில் போட்டுக் கொண்டு ஒவ்வொரு சுளையாக எடுத்துச் சாப்பிடும்போது அதிலுள்ள விதைகளை நீக்கி அந்தக் கிண்ணத்தில் வைப்பார். சாப்பிட்டு முடித்ததும் அந்த இரண்டு கிண்ணங்களையும் சேர்த்து பழையபடி ஒரு முழு சாத்துக்குடி வடிவில் கொண்டு வருவார். அப்புறம் தம்முடைய வேட்டியிலிருந்து ஒரு நூலை உருவி அந்தச் சாத்துக்குடியின் மீது பக்கோடா பொட்டலம் சுற்றுவது போல சுற்றி, பந்து போலாக்கி, அதை அப்படியே தமது ஜிப்பா பையில் பத்திரப்படுத்திக் கொள்வார். மாலையில் வீடு திரும்பும்போது ஏதாவது ஒரு குப்பைத்தொட்டி அருகில் காரை நிறுத்தச் சொல்லி, டிரைவரிடம் கொடுத்து அதில் போட்டுவிடச் சொல்வார். இப்படி எதுவானாலும் படு துல்லியமாகச் செய்வதுதான் ராஜாஜியின் வழக்கம்.''

கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் எழுதுவது எவ்வளவு முக்கியம் என்பதைப் பல சமயங்களில் ராஜாஜி தனக்கு உணர்த்தியிருப்பதாக சாவி சொல்கிறார்.

கோகலே ஹாலில் ஒரு கூட்டம். அதில் ராஜாஜி பேசுகிறார். கல்கி அவர்களும் அதில் கலந்து கொள்ளச் சம்மதம் கொடுத்திருந்தார். அன்று கல்கியுடன் சாவியும் போயிருந்தார். போகும்போது மாம்பலத்திலுள்ள ராஜாஜியின் வீட்டில் இறங்கி அவரையும் அழைத்துச் செல்வதாகத் திட்டம். கல்கி போன சமயம், ராஜாஜி தமக்கு வந்த கடிதங்களுக்கு எந்தப் பரபரப்புமில்லாமல் சர்வ நிதானமாக பதில் எழுதிக் கொண்டிருந்தார். ராஜாஜியிடம் எப்போதுமே உரிமையோடுதான் பேசுவார் கல்கி. அவர்கள் உறவில் மரியாதை கலந்த தனிப்பாசம் இருக்கும். அன்று கூட்டத்துக்குப்

போக சிறிது அவகாசமே இருந்தது. குறித்த நேரத்தில் போய்ச் சேர வேண்டுமே என்ற கவலை கல்கி அவர்களுக்கு. ''கூட்டத்துக்கு நேரமாயிடுத்தே! கடிதங்களை நாளைக்கு எழுதக்கூடாதா? இப்போது என்ன அவசரம்?'' என்று ராஜாஜியை அவசரப்படுத்தினார் கல்கி.

ராஜாஜி சொன்னார்:

''கிருஷ்ணமூர்த்தி! நாளைக்கு எழுதினாப் போச்சு என்பதில் எனக்கு உடன்பாடில்லை. இந்தக் கடிதத்தை எனக்கு எழுதியவர், இதே விஷயத்தை டெலிபோனில் என்னிடம் பேசியிருந்தால், 'இதுக்கு நாளைக்கு பதில் சொல்கிறேன். இப்போது போனை வையுங்க' என்றா சொல்லியிருப்பேன்? அப்போதே பதில் சொல்லித்தானே அனுப்பி இருப்பேன். போனில் பேசவோ, நேரில் வந்து பேசவோ முடியாததால்தானே கடிதம் எழுதியிருக்கிறார்கள்? லெட்டருக்கு பதில் எழுதறதை மட்டும் நான் ஏன் தள்ளிப் போடணும்?''

எவ்வளவு முக்கியமான அறிவுரை இது!

இன்னொரு உதாரணம்:

ராஜாஜி அவர்கள் சுதந்திரா கட்சியைத் தொடங்கியிருந்த காலம். கட்சிப் பணி தொடர்பாக கல்கி அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவரை பம்பாய்க்கு அனுப்பி முக்கிய தகவல் ஒன்றைத் தெரிந்து வரும்படி சொல்லியிருந்தார். 'போனவுடன் இதுபற்றி விசாரித்து உடனே பதில் தெரியப்படுத்து' என்று ஒரு கட்டளை போல் சொல்லியிருந்தார். ஆனால், பம்பாய்க்குப் போனவரோ மூன்று நாட்களாகியும் எந்தத் தகவலும் அனுப்ப வில்லை. நான்கு நாட்களுக்குப் பிறகு திரும்பி வந்தார். வந்தவர் அப்போதும் ராஜாஜியிடம் போன காரியம் என்ன ஆச்சு என்று சொல்லாமல் குளிக்கப் போய்விட்டார். அப்புறம் ஒரு மணி நேரத்துக்குப் பிறகே ராஜாஜியைப் போய்ப் பார்த்தார். தனக்கு பம்பாய் போனதிலிருந்து வேலை சரியாக இருந்ததென்றும்,

*கடிதம் எழுதக் கூட நேரம் இல்லை என்றும், மழை வேறு இடையூறாக இருந்தது என்றும் கதை அளந்தார். ராஜாஜி அவரிடம் சற்றும் கோபப்படாமல் நிதானமாகக் கேட்டார்:*

*'ராத்திரி எத்தனை மணிக்கு படுக்கப் போனீங்க?'*

*'பத்து, பத்தரை, பதினோரு மணி ஆயிடும்.'*

*''போஸ்ட் கார்டில் நாலு வரி எழுத அஞ்சு நிமிஷம் போதுமே! அதை எழுதி விட்டு 11.05–க்குப் படுக்கப் போய் இருக்கலாமே...''*

*ராஜாஜியின் இந்த அறிவுரை சாவியின் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து விட்டது.*

*இன்றும் தமக்கு வரும் கடிதங்களுக்கு முடிந்த வரை அன்றன்றே பதிலெழுத சாவி பழகிக் கொண்டிருப்பது ராஜாஜியின் இந்த அறிவுரையைக் கேட்டுத்தான்.*

*சூயஸ் கால்வாயில் கட்டப்பட்ட அஸ்வான் அணை பற்றிய பின்னணி விவரங்களைச் சேகரித்து சாவி கல்கியில் 'சூயஸ் கால்வாயின் கதை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். அந்த அணை பற்றிப் பிரச்னை எழுந்திருந்த நேரம் அது.*

*கல்கி இதழில் அந்தக் கட்டுரை வெளியான அன்று மாலை கோபாலபுரம் 'யங்மென் அசோசியேஷ'னில் ராஜாஜி சூயஸ் கால்வாய் பிரச்னை பற்றிப் பேச ஏற்பாடாகி இருந்தது. அந்தக் கூட்டத்துக்கு சாவியும் போயிருந்தார். சாவியின் கட்டுரையில் குறிப்பிட்டிருந்த சில விவரங்களை ராஜாஜி தம் உரையில் பயன்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், மறுநாள் சாவியைப் பார்த்தபோது; ''உங்க கட்டுரை எனக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருந்தது'' என்று கூறிய அவரது பெருந்தன்மையைப் பற்றிச் சொல்லிச் சொல்லி சாவி மகிழ்ந்து போகிறார்.*

*யார் எழுதியது என்பதைப் பார்க்காமல், என்ன*

எழுதப்பட்டிருக்கிறது என்பதை மட்டுமே பார்ப்பது, நல்ல எழுத்துக்களை யார் எழுதியிருந்தாலும் உடனே மனம் திறந்து பாராட்டுவது என்று தாம் கடைபிடித்து வரும் பழக்கத்துக்கு ராஜாஜி அவர்கள் அன்று போட்ட அஸ்திவாரமும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று சாவி கருதுகிறார்..

ராஜாஜி – காமராஜருக்கிடையே கருத்து வேற்றுமை இருந்த காலம். 'ராஜாஜி வேண்டும்' என்றும், 'வேண்டாம்' என்றும் காங்கிரஸ்காரர்கள் இரு கோஷ்டிகளாகப் பிளவுபட்டிருந்த நேரம். அந்தக் கசப்பு மாறாத நிலையில் காமராஜரைக் கேலி செய்து, 'மாறுவேஷத்தில் மந்திரி' என்ற நகைச்சுவைக் கட்டுரை ஒன்றை சாவி கல்கியில் எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்த ராஜாஜி சாவியிடம் சொன்னார்: ''உங்க கட்டுரை படிச்சேன். இப்ப இருக்கிற நிலையில் இதைப் படிக்கிறவங்க மனசில ஏதோ நான்தான் உங்களை இதுமாதிரி எழுதச் சொல்லியிருப்பேன்னு ஒரு தப்பபிப்ராயம் ஏற்படலாம். இனிமேல் காமராஜரைக் கேலி செய்து எழுதாதீங்க.''

அரசியல் பண்புக்கு இதைவிடச் சிறந்த உதாரணம் வேறு இருக்க முடியுமா?

அரசியல் தியாகிகளுக்கு ஐந்து ஏக்கர் நிலம் தரப்படுவது அறிந்த சாவி தமிழக அரசுக்கு நிலம் கேட்டு விண்ணப்பம் போட்டிருந்தார். திரு. பக்தவத்சலம் உட்பட பல தியாகிகளுக்கு நிலம் வழங்கப்பட்டு வருவதைத் தொடர்ந்து தமக்கும் நிலம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் சாவி. நீண்ட இடைவெளிக்குப் பிறகு ராஜாஜி அவர்களிடமிருந்து சாவிக்கு ஒரு 'போஸ்ட் கார்ட்' வந்தது.

முதலமைச்சர் ராஜாஜி அவர்கள் தம் கைப்பட எழுதிய கடிதம் அது :

'தியாகத்துக்கு விலை கேட்க வேண்டியது அவசியம்தானா?'

இதுதான் ராஜாஜி எழுதியிருந்த வாசகம்!

அன்று மறந்ததுதான். தியாகி நிலம் பற்றி அப்புறம் எதுவுமே கேட்கவில்லை சாவி.

இவ்வாறு மூதறிஞர் ராஜாஜி அவர்களிடமிருந்து சாவி கற்றுக் கொண்ட வாழ்க்கைக்கு அவசியமான சின்னச் சின்ன விஷயங்கள் ஏராளம்.

# 10. வெள்ளிமணி ஓசை

எழுத்தாளனுக்கே உரிய ரோஷத்துடன் கல்கியை விட்டு வெளியே வந்துவிட்டாரே தவிர, அடுத்து என்ன செய்வது என்று திசை தெரியாமல் சாவி தடுமாறிப் போனது உண்மை. எழுத்தாளனாகி விட்ட பிறகு வேறு என்ன தொழில் தெரியும்? நண்பர் சின்ன அண்ணாமலையுடன் சேர்ந்து 'வெள்ளி மணி' என்ற பெயரில் வார இதழ் ஒன்று நடத்துவதென்று ஏற்கனவே ஒரு திட்டம் இருந்தது. ஆனால், இப்போது அது நடக்காதோ என்பது போல ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

மறுநாள் வியாழக்கிழமை கல்கியிலிருந்து விலகுவது என்று முடிவு செய்ததுமே முதல் நாள் மாலை சின்ன அண்ணாமலையுடன் பனகல் பார்க்கில் அமர்ந்து தம் முடிவு பற்றி அவரிடம் கலந்தாலோசித்தார்.

''வெள்ளி மணி தொடங்கி நடத்தலாமா?'' என்று சாவி கேட்டதும் சின்ன அண்ணாமலை சற்றும் தயங்காமல் எப்போதும் போன்ற உற்சாகத்துடன் ''நடத்தலாம்; நாளைக்கே போய் டிக்ளரேஷன் வாங்கி வந்து விடலாம்'' என்று பதில் கூறினார்.

''உங்களோடு சேர்ந்து நான் பத்திரிகை ஆரம்பிப்பேன் என்று கல்கி நிச்சயம் எதிர்பார்ப்பார். உங்களை நாளைக்குள் அழைத்துப் பேசினாலும் பேசுவார். நீங்கள் என்னோடு சேர்ந்து பத்திரிகை நடத்துவதை அவர் விரும்ப மாட்டார் என்றே

நினைக்கிறேன். ஆனாலும் அதை உங்களிடம் வெளிப்படையாகச் சொல்லவும் மாட்டார். ஒருவேளை அப்படிச் சொன்னால் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்னைக் கைவிட்டு விடுவீர்களா?'' என்று சின்ன அண்ணாமலையிடம் கேட்டார் சாவி.

''உங்களுக்கு வாக்கு கொடுத்து விட்டதாகவும் பேச்சு மாறுவதற்கில்லை என்றும் சொல்லி விடுகிறேன். அதற்கு மேல் அவர் வற்புறுத்த மாட்டார்'' என்றார் சின்ன அண்ணாமலை.

சாவி எதிர்பார்த்தது போலவே நடந்தது. மறுநாள் காலை பதினோரு மணிக்கு சின்ன அண்ணாமலையைத் தம் வீட்டுக்கு அழைத்து ''சாவி கல்கியிலிருந்து விலகி விட்டார் தெரியுமோ, சொன்னாரா?'' என்று விசாரித்திருக்கிறார் கல்கி.

''ஆமாம், சொன்னார்'' என்று பதில் சொல்லியிருக்கிறார் சின்ன அண்ணாமலை.

''ரொம்ப நாளாக உங்ககிட்டே சொல்லணும்னு இருந்தேன். 'தீபம்' என்ற பெயரில் மாதப் பத்திரிகை ஒன்று ஆரம்பித்து நடத்துங்கள். நான் அதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறேன்'' என்று கல்கி தீபத்துக்கு தூபம் போட்டு அனுப்பி இருக்கிறார்.

கல்கியிடம் பேசி விட்டு வந்தபின் சின்ன அண்ணா மலையின் பேச்சில் ஸ்வரம் இறங்கியிருந்தது. வெள்ளி மணி ஆரம்பிப்பதில் சுவாரசியம் குறைந்திருந்தது.

''நாம் முதலிலேயே போட்ட பிளான் என்ன? வெள்ளி மணிதானே? அதைத் தொடங்கியே ஆக வேண்டும்'' என்று சின்ன அண்ணாமலையிடம் கண்டிப்பான குரலில் அடித்துப் பேசினார் சாவி. சின்ன அண்ணாமலை அதற்கு மேல் எதுவும் பேசாமல் வெள்ளி மணி தொடங்கச் சித்தமாகி விட்டார்.

'வெள்ளி மணி' முதல் இதழ் விரைவிலேயே வெளி வந்தது. ரசிகமணி டி.கே.சி. அவர்களின் படத்தை முதல்

இதழிலும், தொடர்ந்து வந்த இதழ்களில் ராஜாஜி, கல்கி, எம்.எஸ்.சுப்புலட்சுமி ஆகியோரின் புகைப்படங்களையும் அட்டைப் படமாக வெளியிட்டார்கள்.

அது மட்டுமல்ல; "வெள்ளி மணி 'கல்கி'யின் துணைப் பத்திரிகை போலவே வெளிவரும்" என்றும் முதல் இதழில் சாவி குறிப்பிட்டிருந்தார்.

ஒரு பத்திரிகையிலிருந்து விலகும் எழுத்தாளர்கள் அந்தப் பத்திரிகை பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும் தரக்குறை வாகவும், அவதூறாகவும் அறிக்கைகள் விடும் அற்பத்தனமான செயலை வெறுப்பவர் சாவி. (சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கூட ஒரு சமயம் சாவியின் இந்த உயர்ந்த பண்பு பற்றி மேடையில் பாராட்டிப் பேசியிருக்கிறார்.) ஆகவே, கல்கியிலிருந்து விலகிய போதும் சாவி யாரைப் பற்றியும் எந்த நிந்தனையும் செய்யவில்லை. அது மட்டுமல்ல; குருநாதர் கல்கியிடம் அவர் கொண்டிருந்த பக்தியும் விசுவாசமும் குந்துமணி அளவும் குன்றவில்லை.

சாவியின் இந்தப் பண்பு குறித்து கல்கி கி.ராஜேந்திரன் சொல்கிறார்:

"அவர் ஒரு பத்திரிகையிலிருந்து பதவி துறந்து வெளியேறி இருக்கலாம். ஆனால் வேறு சிலரைப் போல உப்பிட்டவருக்குத் துரோகம் நினைத்ததில்லை. தான் பணியாற்றிய பத்திரிகைகளையோ அவற்றின் அதிபர்களையோ தூற்றியதில்லை. மாறாக அப்பத்திரிகை யிடமும், அதன் அதிபரிடமும் நட்புரிமை பாராட்டிப் பழகி வருவார். சாவியின் அந்த நட்பு அடுத்த தலைமுறைக்கும் நீடித்து வருகிறது. உதாரணம்: வாசன் – பாலசுப்ரமணியன்; 'கல்கி' – ராஜேந்திரன். வன்மம் வளர்த்துக் கொள்வது சாவி அவர்களுக்குத் தெரியாத ஒன்று."

வெள்ளி மணி எடுத்த எடுப்பிலேயே பன்னிரண்டாயிரம் பிரதிகள் விற்பனையாயிற்று. அந்தக் காலத்தில் தொடக்கத்திலேயே

பன்னிரண்டாயிரம் பிரதிகள் என்பது மிகப் பெரிய சாதனை. இந்த வெற்றிப் பெருமிதத்தில் சாவியும் சின்ன அண்ணா மலையும் கனவுக் கோட்டைகள் கட்ட ஆரம்பித்தார்கள்.

இந்தக் கால கட்டத்தில்தான் கல்கி அவர்களுக்கும் நிர்வாகி திரு. சதாசிவம் அவர்களுக்கும் இடையே லேசாக முளை விட்டிருந்த கருத்து வேற்றுமை துளிர் விட்டுப் பெரிதாக வளர்ந்து கொண்டிருந்தது.

'வெள்ளி மணி'யின் லே—அவுட், உள்ளடக்கம் எல்லாமே கல்கி அவர்களை வெகுவாகக் கவர்ந்தன. தனது மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவிக்கும் வகையில் சாவியையும், சின்ன அண்ணாமலையையும் ஒருநாள் தமது வீட்டுக்கு உணவருந்த அழைத்து வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்.

''வெள்ளி மணி ரொம்ப நன்றாக உள்ளது. பேஷ், பேஷ்!' என்று பாராட்டினார். அப்போது ஐயங்கார் ஒருவர் கல்கி இதழின் சர்க்குலேஷன் இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்தார். கல்கி, அவரிடமிருந்து சந்தாதாரர்களின் முகவரிகளை வாங்கி சின்ன அண்ணாமலையிடம் தந்து ''இவர்களுக்கெல்லாம் வெள்ளி மணியை இலவசமாக அனுப்பி வையுங்கள். நல்ல பலன் கிடைக்கும்'' என்று சொல்லி அனுப்பினார். அவர் கொடுத்தனுப்பிய ஆறாயிரம் சந்தாதாரர்களுக்கும் வெள்ளி மணியை இலவசமாக அனுப்பி வைத்தார் சின்ன அண்ணாமலை. சந்தாதாரர்களின் முகவரிகளைக் கொடுத்த செய்தி திரு. சதாசிவம் அவர்களுக்கு எட்டி, அதுவே அவர்கள் இருவருக்கும் இடையே முளைத்திருந்த மனக்கசப்பை மேலும் வலுப்படுத்திவிட்டது. இதன் விளைவாக கல்கி அவர்கள் தொடர்ந்து அங்கே பணிபுரிய முடியாத இறுக்கமான சூழ்நிலை தோன்றியது.

அதே சமயம் வெள்ளி மணியை மேலும் பலம்

பொருந்திய பத்திரிகையாக ஆக்க வேண்டுமென்ற எண்ணம் கல்கிக்கு உண்டாயிற்று. ஆனால், இதையெல்லாம் அவர் யாரிடமும் வெளிப்படையாகச் சொல்லவில்லை.

ஒருநாள் சாவியையும் சின்ன அண்ணாமலையையும் தம் வீட்டுக்கு அழைத்து ''பெரிய பணக்காரர்கள் பட்டியல் ஒன்றை எழுதிக் கொண்டு வாருங்கள். அவர்களில் ஒருவரிடம் பேசி வெள்ளி மணிக்குத் தேவையான பொருளாதார பலத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

அடுத்த நாளே பத்து பணக்காரர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இவர்கள் கல்கியிடம் கொடுத்தார்கள்.

அவர்களில் திரு. ஏ.வி.எம். மெய்யப்ப செட்டியாரைத் தெரிவு செய்தார் கல்கி. மறுநாளே ஏ.வி.எம். அவர்களிடம் பேசி வெள்ளி மணிக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதே சமயம் சாவியைப் பற்றியும் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்.

நவகாளி யாத்திரை பற்றிச் செய்தி சேகரிக்கப் போன போது சாவி, கல்கி அலுவலகத்திலிருந்து வாங்கிக் கொண்டு போன ஆயிரம் ரூபாய் பணத்தில் செலவு போக மீதிப் பணத்தையும், செலவுக்கான ரசீதுகளையும் சென்னை திரும்பியதும் முதல் வேலையாக அலுவலகத்தில் ஒப்படைத்த நேர்மை பற்றி செட்டியாரிடம் புகழ்ந்து சொல்லி, ''சாவியை ஊக்குவிக்க வேண்டும். வெள்ளி மணிக்கு உதவி செய்யுங்கள்'' என்று கல்கி சொன்னதாக செட்டியார் அவர்களே பின்னொரு சமயம் சாவியிடம் சொல்லியிருக்கிறார். விரைவில் தானும் கல்கியை விட்டு விலகி வெள்ளி மணியில் சேரக்கூடும் என்பதையும் கல்கி சூசகமாக செட்டியாரிடம் தெரிவித்திருக்கிறார்.

ஏ.வி.எம். அவர்களுக்கு மட்டற்ற சந்தோஷம். கல்கியே வெள்ளி மணிக்கு ஆசிரியராகப் போகிறார் என்று அறிந்ததும் வெள்ளி மணிக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்யத் தயாராகி விட்டார்.

இந்தச் சமயத்தில்தான் செட்டியார் மகள் லட்சுமிக்கு, தேவகோட்டையில் இயங்கி வந்த ஏ.வி.எம். ஸ்டுடியோவில் தடபுடலாக திருமணம் நடத்த ஏற்பாடாகி இருந்தது. கல்கியின் யோசனையின் பேரில் சாவி, சின்ன அண்ணாமலை இருவருக்கும் திருமண அழைப்பு அனுப்பியிருந்த ஏ.எவி.எம். அவர்கள் கல்கி, முசிறி சுப்பிரமணிய ஐயர் ஆகியோருடன் இவர்களுக்கும் சேர்த்து ரயிலில் முதல் வகுப்பில் இடம் ரிசர்வ் செய்திருந்தார்.

காலை பத்து மணிக்குள் திருமணம் முடிந்து விடும். பதினோரு மணிக்கு விருந்து. அந்த இடைவெளியில், தேவ கோட்டையில் செட்டியாருக்குச் சொந்தமான ராஜாஜி பிரஸ்ஸைப் போய்ப் பார்த்து எந்த மெஷின் தேவையோ அதை வெள்ளி மணிக்கு அனுப்பி வைப்பதாகச் செட்டியார் சொல்லியிருந்தார்.

அதன்படியே முகூர்த்தம் முடிந்ததும் கல்கி, சாவி, சின்ன அண்ணாமலை மூவரும் ராஜாஜி பிரஸ்ஸுக்குப் போய் மெஷின்களைச் சுற்றிப் பார்வையிட்டார்கள்.

அப்போது கூடத்தின் சுவருக்கும், அதன் பக்கத்தில் இருந்த மெஷினுக்கும் இடையே உள்ள இடைவெளியில் மூவரும் மெஷினைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தார்கள். அப்போது சட்டென்று பின்னால் திரும்பிய கல்கி அவர்கள் ''இன்னும் பத்தே நாளில் வெள்ளி மணிக்கு வந்து விடுவேன்'' என்று சொன்ன போது சாவி மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார். சற்றும் எதிர் பாராத இந்தச் செய்தி சாவியை அன்று இரவு தூங்க விடவில்லை.

அச்சுக் கூடத்தில் இருந்த இயந்திரம் ஒன்றை அடையாளம் சொல்லி 'இதைச் சென்னைக்கு அனுப்பி விடலாம்' என்று செட்டியாரிடம் சொல்லிவிட்டு வந்ததுதான் தாமதம். ஒரே வாரத்தில் மெஷின் சென்னை வந்து அப்போதைய ஹிண்டு ஆபீஸுக்குப் பின்புறம் உள்ள தாயார் சாகிப் தெருவில் ஒரு கட்டடத்தில் தயாராக நின்றது.

அதுவரை, அரண்மனைக்காரன் தெருவில் இருந்த ராஜா

சர் முத்தையா செட்டியாருக்குச் சொந்தமான கமர்ஷியல் பிரஸ்ஸில் வெள்ளி மணி அச்சாகி வந்தது.

அந்த ஆண்டு தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்த நேரம்.

''இந்த வருஷம் கல்கி பத்திரிகை தீபாவளி மலர் போடப் போவதில்லை. நீங்கள் போடுங்கள். ஏ.வி.எம்மிடம் அதற்கு வேண்டிய பணம் தரச் சொல்கிறேன்'' என்றார் கல்கி.

சாவியும் சின்ன அண்ணாமலையும் உடனே சுறுசுறுப்பானார்கள். வியாபார அனுபவம் இல்லாததால் தீபாவளி மலர் ஐயாயிரம் பிரதிகள் அச்சிட்டு விட்டார்கள். அவற்றில் பாதிக்கு மேல் விற்பனையாகாமல் தேங்கிப் போயிற்று. ஏக நஷ்டம்.

கமர்ஷியல் பிரஸ்ஸுக்குத் தர வேண்டிய பாக்கித் தொகை ஏறிக் கொண்டே போனது.

வெள்ளி மணிக்கு ஏ.வி.எம். பெரிய அளவில் உதவி செய்து கொண்டிருப்பதாக ஒரு செய்தி ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் காதுக்கு எட்டியது. வெள்ளி மணியை ஏ.வி.எம். செட்டியார் விலைக்கே வாங்கி விட்டார் என்று கமர்ஷியல் பிரஸ்காரர்கள் நம்பி, ''உங்கள் வெள்ளி மணி தர வேண்டிய பதினேழாயிரம் ரூபாய் பாக்கியை தயவு செய்து உடனே அனுப்பி உதவுவீர்கள் என்று நம்புகிறோம்'' என்று செட்டியாருக்கு ஒரு கடிதம் எழுதி விட்டார்கள்.

கடிதத்தைக் கண்டதும், ஆரம்பமே சரியில்லையே என்று ஏ.வி.எம். அவர்கள் சங்கடப்பட்டார். உடனே ''அது என் வெள்ளி மணி அல்ல. யார் சொன்னது அப்படி?'' என்று ஒரு கேள்வியுடன் பதில் எழுதி அனுப்பி விட்டார்.

அதே நேரத்தில் இன்னொரு பக்கம் கல்கி – சதாசிவம் இருவருக்குள் புகைந்து கொண்டிருந்த பகை முற்றிப் போகவே உறவு முறிந்து விடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த ராஜாஜி, அவர்கள் இருவரையும் பழையபடி

சேர்த்து வைப்பதில் தீவிர அக்கறை காட்டி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

கல்கி அவர்களின் மகன் கி.ராஜேந்திரனுக்கும் சதாசிவம் அவர்களின் மகள் விஜயாவுக்கும் நடைபெற்ற திருமணம் ராஜாஜி மேற்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் என்பது நாடறிந்த ரகசியம். இந்தத் திருமண உறவுக்குப்பின் கல்கி – சதாசிவம் உறவிலிருந்த விரிசல் நீங்கிப் பழைய நிலைக்குத் திரும்பி சுபமாக முடிந்துவிட்டது.

இந்நிலையில் கல்கி அவர்கள் வெள்ளி மணியில் சேருவார் என்ற எதிர்பார்ப்பும், ஏ.வி.எம். செட்டியார் உதவி செய்வார் என்ற நம்பிக்கையும் பொய்த்துப் போயிற்று.

விளைவாக – வெள்ளி மணியின் ஓசை ஓய்ந்து போனது.

வெள்ளி மணியை ஒரு போட்டிப் பத்திரிகையாகக் கருதாமல் பேராசிரியர் கல்கி அவர்கள் அதன் வளர்ச்சியில் காட்டிய அக்கறையை நினைவு கூர்ந்து, ''அப்போதுதான் முதன் முதலாக 'சாவி'யை 'கல்கி' அவர்கள் எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். சுறுசுறுப்பும் ஆர்வமும் மிக்க திரு. சாவியை நான் பரிச்சயம் செய்து கொண்ட போதே, திறமையான பத்திரிகை ஆசிரியருக்கு இருக்க வேண்டிய சகல அம்சங்களும் அவரிடம் இருப்பதாக உணர்ந்தேன். எதிர்பார்த்தபடி 'வெள்ளி மணி' தொடர்ந்து நடைபெறாவிட்டாலும் கூட, 'சாவி'க்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டு என்று எனக்குத் தோன்றியது'' என்று ஏ.வி.எம். அவர்கள், சாவி மணி விழா மலரில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

# 11. மல்யுத்தப் போட்டி

'வெள்ளி மணி' வார இதழ் நின்று போனதும் என்ன செய்வது, வாழ்க்கையை எப்படி வகுத்துக் கொள்வது' என்ற கவலையில் ஆழ்ந்தார் சாவி. வெள்ளி மணி நின்று போனாலும், அவ்வப்போது ஏஜெண்டுகள் அனுப்பிய பழைய பாக்கிப் பணம், விளம்பரப் பணம் என்று சிறுகச் சிறுக மணி ஆர்டராகவும், செக்குகளாகவும் வந்து கொண்டிருந்தன. ஆனாலும் அந்தப் பண வசூலில் இன்னும் எத்தனை நாள் காலத்தை ஓட்ட முடியும்?

இந்தச் சோதனையான நேரத்தில், ஒருநாள் வேடந்தாங்கலில் இருந்து சரோஜினி என்பவர் சாவியைப் பார்க்க வந்திருந்தார்.

அவர் வசதியான ரெட்டியார் குடும்பத்தில் பிறந்தவர். பத்திரிகைகள் படிப்பதில் ஆர்வம் மிக்கவர். சாவியின் எழுத்தைப் படித்து அவரது விசிறியாக மாறியவர்.

வந்தவர், சாவியின் குடும்பம் சிரமதசையில் இருப்பதைக் கண்டு விட்டு, ''அண்ணா, நீங்க கஷ்டப்படத் தேவையில்லை. சீக்கிரமே நாம் ஒரு பத்திரிகை ஆரம்பித்து நடத்தலாம். பத்திரிகைக்கு ஒரு நல்ல பெயர் மட்டும் யோசிச்சு வையுங்க. நான் ஊருக்குப் போய்ப் பணம் கொண்டு வருகிறேன்'' என்று ஆதரவாகவும் அதே சமயம் உறுதியாகவும் சொல்லிவிட்டுக் கொஞ்சம் பணமும் கொடுத்துவிட்டுப் போனார்.

சரோஜினி விருப்பப்படி 'வாடாமலர்' என்ற மாத இதழ் தொடங்கப்பட்டது. மாதா மாதம் பணம் போய்க்கொண்டே

இருந்ததால் நஷ்டம் தாங்க முடியாமல் அதையும் சில மாதங்களுக்குள்ளாகவே நிறுத்தும்படி ஆயிற்று.

கல்கியில் மறுபடியும் வேலைக்கு முயன்றார் சாவி. ஒரு நாள் சதாசிவம் அவர்களை நேரில் போய்ப் பார்த்தார். முன்பு கல்கியிலிருந்து ராஜினாமா செய்ததை நினைவுபடுத்தி ''அவசரப்படாதேன்னு நான் அப்பவே சொன்னேன். நீதான் கேட்கலை. இப்ப என்னாலே ஒன்றும் செய்வதிற்கில்லை'' என்று பக்குவமாகவும் அன்போடும் பேசி அனுப்பி விட்டார் சதாசிவம்.

அடுத்த சில தினங்களுக்குப் பின் கல்கி அவர்களையே பார்த்து வேலை கேட்டபோது, ''கல்கியில் இப்போது வாய்ப் பில்லை. நான் ஒரு லெட்டர் தருகிறேன். சுதேசமித்திரன் ஆசிரியர் சி.ஆர்.சீனிவாசனைப் போய்ப் பார்'' என்று சாவி மீதிருந்த அன்பையும், அக்கறையையும் வேறுவிதமாக வெளிப் படுத்தினார் கல்கி.

அப்போது பத்திரிகை உலகில் மூன்று சீனிவாசன்கள் பிரபலம். ஹிந்து பத்திரிகை – சீனிவாசன், ஆனந்த விகடன் – சீனிவாசன் (எஸ்.எஸ்.வாசன்), சுதேசமித்திரன் – சீனிவாசன். 'தி டிரினிடி ஆஃப் மவுண்ட் ரோட்' என்று இந்த மூவரையும் சொல்வார்கள்.

சுதேசமித்திரன் ஆசிரியர் சீனிவாசனிடம் சாவி தம் நிலைமையைச் சொல்லி வேலை கேட்டபோது, அவர் பதிலுக்கு தம்முடைய குறையை இவரிடம் கொட்டித் தீர்த்திருக்கிறார்.

''பத்திரிகை நடத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. தினம் ஒரு கண்டமாயிருக்கிறது. தினமும் இரவு படுக்கப் போகுமுன் நாளைக்கு பேப்பர் வெளிவருமா என்ற கேள்விக் குறியோடுதான் போகிறேன். இருந்தாலும் கல்கி லெட்டர் கொடுத்திருக்கிறார். உன் திறமை பற்றி நிறைய எழுதி

இருக்கிறார். அவர் சொல்வதால் உனக்கு வேலை தருகிறேன். ஆனால், சம்பளம் அதிகம் எதிர்பார்த்தால் முடியாது. நூறு ரூபாய்தான் தர முடியும். யோசித்துச் சொல்'' என்றார்.

''யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. நூறு ரூபாய் போதாது. உங்கள் சிரமம் எனக்குப் புரிகிறது. நன்றி. நான் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பி விட்டார் சாவி.

இதற்குப் பிறகு துமிலன் ஒருநாள் சாவியின் வீடு தேடி வந்து, ''தினமணி கதிரில் உதவி ஆசிரியர் வேலை காலி இருக்கிறது. 125 ரூபாய்தான் சம்பளம் தருவார்கள். நாளைக்கே வந்து சேர்ந்து கொள்'' என்றார். வேறு வழியின்றி தினமணி கதிரில் சேர்ந்தார். அப்போது துமிலன் அதன் ஆசிரியர். ஒரு வருடம் ஆனதும் 'இங்க்ரிமெண்ட்' கேட்டார் சாவி. 'தருவதற்கில்லை' என்றது நிர்வாகம். மறுநாளே ஆஃபீஸுக்குப் போகாமல் நின்று விட்டார். மறுநாளே துமிலன் சாவியின் வீடு தேடி வந்து ''ஏன் வரவில்லை?'' என்று கேட்டார். 'சம்பளம் போதாது' என்றார் சாவி. ''உனக்குத் தெரியாதா? கோயங்கா இதற்கு மேல் தரமாட்டார்'' என்றார் துமிலன். ''இந்தக் குறைந்த சம்பளத்தில் என்னால் குடும்பம் நடத்த முடியவில்லை. சி.சு.செல்லப்பாவுக்கு அதிகச் சம்பளம் தருகிறீர்களே, அதே சம்பளம் எனக்கும் கொடுக்கலாமே'' என்று சாவி கேட்க, ''அது சாத்தியமில்லை'' என்றார் துமிலன். ''அப்படியானால் என்னாலும் சாத்தியமில்லை'' என்று சாவி கூறி விட்டார். துமிலனுக்கு இதில் வருத்தம்தான் என்றாலும் அவரால் அதிகச் சம்பளம் தர இயலாத நிலைமையைச் சாவி அவர்கள் நன்கு புரிந்து கொண்டிருந்த காரணத்தால் 'நீங்கள் வருத்தப்பட வேண்டாம். எனக்கு இதில் வருத்தமில்லை. போய் வாருங்கள்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

அச்சமயம் சாவி அவர்களின் தந்தை கிராமத்திலிருந்த நிலத்தை விற்று அதில் கொஞ்சம் பணம் கொண்டு வந்து

மகனிடம் கொடுத்தார். அந்தக் 'கொஞ்சம்' ரொம்ப நாள் கைகொடுக்கவில்லை.

இந்தக் காலகட்டத்தில்தான் ஒரு நாள் சின்ன அண்ணா மலை சாவியின் வீடு தேடி வந்தார். வெள்ளி மணி நடத்தியதில் இருவருக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டு பேச்சுவார்த்தை இல்லாமலிருந்த நேரம் அது. திடுதிப்பென்று அவர் தன் வீடு தேடி வந்து நின்றதைப் பார்த்தபோது சாவிக்கு ஒன்றும் புரிய வில்லை. சின்ன அண்ணாமலை அவர்கள் முழுசாக ஒரு நூறு ரூபாய் நோட்டை சாவியின் கையில் திணித்து ''இந்தாங்க, பிடியுங்க அட்வான்ஸ்! கிளம்புங்க; நாம் ரெண்டு பேரும் குஸ்தி நடத்தப் போகிறோம்'' என்று ஒரு புதிரைப் போட்டார். 'ஏற்கெனவே ஒருவருக்கொருவர் குஸ்தி போட்டுக் கொண்டு பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்து வருகிறோம். இப்போது மீண்டும் ஒரு குஸ்தியா? அதுவும் நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்து சண்டைக்குக் கூப்பிடுகிறாரே!' என்று சாவி குழம்பிப் போனார்.

''குஸ்தியா? நீங்களும் நானுமா? என்ன புதிர் போடறீங்க?''

சின்ன அண்ணாமலை சிரித்துக் கொண்டே விளக்கமாகச் சொன்னர்ர்.

''செட்டி நாட்டைச் சேர்ந்த நாராயணன், சண்முகம், தியாகராஜன் என்ற மூன்று செல்வந்தர்கள் கிங்காங் – தாராசிங் மல்யுத்தப் போட்டியைத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நடத்தப் போகிறார்கள். அவர்களுக்கு ஒத்தாசையாக நாம் இரண்டு பேரும் சேர்ந்து வேலை செய்யப் போகிறோம். பப்ளிசிடி பொறுப்பு நம்முடையது. அடுத்த வாரமே மதுரைக்குப் புறப்படணும். அங்கேதான் முதல் மல்யுத்தப் போட்டி நடக்கப் போகிறது'' என்றார்.

மதுரை புறப்படுமுன், போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய சின்ன 'புக்லெட்' ஒன்றை

அழகிய முறையில் ஒரு லட்சம் பிரதிகள் அச்சிட்டு அதைப் போட்டி நடைபெறும் இடங்களில் விற்பனை செய்வது என்று கிங்காங்கோடு பேசி ஒரு ஒப்பந்தம் முடிவானது. அப்போது கிங்காங் பம்பாயில் இருந்தார். அங்கே குஸ்தி நடத்தியவர்கள் பம்பாய் மலபார் ஹில்ஸில் உள்ள 'நாஸ்' ஓட்டல் முதலாளிகள். முதல் கட்டமாக ஒரு லட்சம் பிரதிகளையும் பம்பாயிலேயே விற்பனை செய்வதென்று முடிவாயிற்று. புக்லெட் தயாரிக்கும் பொறுப்புடன் மல்யுத்தப் போட்டிகள் நடக்கும்போது நகைச் சுவையோடு நேர்முக வர்ணனை செய்வது, ரசிகர்களின் ஆவலைத் தூண்டும் வகையில் புதுப்புது உத்திகளைச் செயல்படுத்துவது இவையெல்லாமே இவர்கள் இரண்டு பேரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டன.

பத்திரிகை நடத்துகிற புத்தி அங்கேயும் விடவில்லை. எங்கெல்லாம் மல்யுத்தம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் 'மல்யுத்த மலர்' என்று ஒரு பத்திரிகை தயாரித்து விற்பனை செய்வதென்று ஒரு திட்டம் போட்டார்கள். மலர் தயாரிக்கும் பொறுப்பு சாவியினுடையது. வாரத்தில் மூன்று நாட்கள் குஸ்தி என்றால் அந்த மூன்று நாட்கள் மட்டுமே அந்த மலர் வெளிவரும். அச்சிடும் பதினைந்தாயிரம் பிரதிகளும் ஸ்டேடியத்துக்குள்ளேயே விற்றுத் தீர்ந்து போகும். இந்த மலரில் மல்யுத்தம் பற்றின விவரங்களும், வீரர்களைப் பற்றிய வர்ணனை களும் படங்களுடன் அடங்கியிருக்கும். படிப்பதற்கு சுவாரசியமான கற்பனைகள், நகைச்சுவைத் துணுக்குகள் எல்லாம் இருக்கும். விலை நாலணாதான். இந்த பப்ளிசிடி புதுமை, ரசிகர்களுக்குப் பிடித்துப் போனது. அதனால் தினசரி வசூல் முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்று ஏறிக்கொண்டே போயிற்று. சின்ன அண்ணா மலைதான் வர்ணனையாளர். சமயோசிதமாக எதையாவது சொல்லிக் கூட்டத்தினரை குஷிப்படுத்துவார்.

நண்டுப்பிடி, தேள் கொட்டு என்றெல்லாம் குஸ்தியில் பல மாதிரியான உத்திகள் உண்டு. நண்டுப் பிடியில் தாராசிங் சூரர்.

சண்டையின்போது எதிரியின் தலைமுடியைப் பிடித்து இழுக்கக் கூடாது என்பது விதிமுறை. ஆனால் மாமிச மலை கிங்காங் இதைப் பற்றிக் கவலைப்படாமல் தாராசிங்கின் முடியைப் பிடித்து இழுப்பார். அப்படி இழுக்கும்போது 'தாராசிங் போடுவதோ நண்டுப்பிடி... கிங்காங் போடுவதோ சிண்டுப்பிடி' என்று பளிச் சென்று வர்ணனையில் நகைச்சுவை மின்னப் பேசுவார் சின்ன அண்ணாமலை.

ஒருநாள் கிங்காங்கை சாவியும் சின்ன அண்ணாமலையும் சென்னை மவுண்ட் ரோட் அம்பாஸிடர் ஹோட்டலில் - இப்போது இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி உள்ள இடம் - சந்தித்தார்கள். அன்று மாலை சென்னையில் நடக்க இருந்த நிகழ்ச்சி பற்றி விவாதித்து ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள்.

அதன்படி, ஐந்தாவது ரவுண்டில் தாராசிங்கை கிங்காங் வலுச்சண்டைக்கு இழுத்து மேடையிலிருந்து கீழே தள்ளிவிட வேண்டும். தாராசிங் ஆவேசமாக மீண்டும் மேடை ஏறி மாமிச மலை போன்ற கிங்காங்கைத் தன் இரு கைகளாலும் தலைக்கு மேலே தூக்கி மூன்று முறை தட்டாமாலை சுற்றிக் கீழே போட வேண்டும். கிங்காங் ஒன்றும் இயலாதவராக மல்லாந்து கிடப்பார். அவர் மீது தாராசிங், கம்சன் மீது கிருஷ்ணன் போலப் பாய்ந்து அமர்ந்து அவர் நெற்றியில் ரத்தம் கசியும் அளவுக்கு ஓங்கி அடிக்க வேண்டும்.

கிங்காங் நெற்றியில் இயற்கையிலேயே மூன்று மடிப்புகள் உண்டு. அந்த மடிப்புகளுக்கிடையே வரிவரியாக ஆழமான மூன்று கோடுகள். அந்தக் கோடுகளை முன்கூட்டியே ரேஸர் பிளேடால் லேசாக ரத்தம் கசியும் அளவுக்குக் கீறி, பவுடர் போட்டுத் துணியால் ஒற்றி விட்டுவிடுவார் கிங்காங். சண்டை நடக்கும்போது தாராசிங், கிங்காங் நெற்றியில் பட்பட் என்று ஓங்கி அடிக்க, அந்த இடத்தில் ரத்தம் பீறிட்டு வெளியாகும்.

அந்த ரத்தத்தை தாராசிங் தன் வலது உள்ளங்கையில்

ஒற்றி எடுத்து குறுக்கே வரும் ரெஃபரியின் – அவர் பெயர் வாங்பக்லி – பனியன் மீது அப்பிவிடுவார். ரெஃபரியின் அந்த வெள்ளை வெளேர் பனியன் மீது படிகின்ற ரத்தம் சூரிய ஒளி போன்ற இரவைப் பகலாக்கும் 'ஃப்ளட் லைட்' வெளிச்சத்தில் பளிச்செனத் தெரிய, இரண்டு பேரும் உண்மை யிலேயே கடும் ஆவேசத்தில் சண்டை போட்டுக் கொள்வ தாகவே ரசிகப்பெருமக்கள் நம்பி விடுவார்கள்.

திட்டமிட்டபடியே அன்று மாலை ரெஃபரி பனியனில் ரத்தம் அப்பப்பட்டபோது ரசிகர்கள் நரம்புகள் முறுக்கேற கூச்சலிட்டார்கள். கிங்காங் தன் பங்கிற்கு ரெஃபரி மீது பாய்ந்து அவரது பனியனைப் பிடித்திழுத்து சுக்கு நூறாகக் கிழித்துப் போட்டார். அவ்வளவுதான். ஸ்டேடியமே அமளி துமளிப் பட்டது. 'கிங்காங், பனியனையே கிழித்து விட்டார். உண்மையாகவே இது அசல் சண்டைதான்' என்று ரசிகர்கள் பேசிக்கொண்டு போனார்கள்.

பனியன் விலை வெறும் எட்டு ரூபாய்தான். ஆனால் அன்று ஆன வசூலோ முப்பத்திரண்டாயிரம் ரூபாய்! கிங்காங் அத்துடன் விட்டுவிடவில்லை. தாராசிங்கைப் பார்த்து 'நாளை உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்' என்று சவால் சண்டைக்கு அழைத்தார். தாராசிங்கும் சவாலுக்கு ஒப்புக் கொள்ள மறுநாள் வசூல் இரண்டு மடங்கு!

இப்படி நாளொரு வண்ணமும் பொழுதொரு தினுசுமாய் 'புதுப் புது உத்தி'களைக் கையாண்டு மக்களைப் பைத்தியமாய் அலைய வைத்தார்கள். நாளடைவில் 'கிங்காங் – தாராசிங் சண்டை பொய்யானது; போலியானது; என்று தெரிந்தும்கூட மக்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அசல் சண்டை போல் சுவாரசியமாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு மேலும் மேலும் குஸ்தி பார்க்கக் குவிந்தார்கள்.

தமிழ்நாட்டில் முதல் ரவுண்ட் சண்டை முடிந்தது.

பின்னர் சின்ன அண்ணாமலையும் சாவியும் கிங்காங்குடன் தனி ஒப்பந்தம் செய்து கொண்டு மீண்டும் சென்னையிலும், திருச்சி, வேலூர் ஆகிய நகரங்களிலும் இரண்டாவது ரவுண்ட் போட்டிகளை நடத்தினார்கள். திருச்சியில் மழை வந்து வசூலைக் கெடுத்த போதிலும் மொத்தத்தில் நல்ல லாபம் கிடைத்தது.

ஒரு வழியாக, குஸ்தி சீசன் முடிந்தது. கையிலிருந்த பணத்தை என்ன செய்வது? எப்படி உபயோகமாகச் செலவு செய்வது? பணம் செலவாகிவிடும் முன்பாக ஒரு வீடு வாங்குவது என்று சாவி முடிவு செய்தார். அப்போதெல்லாம் இருபதாயிரம் ரூபாய் இருந்தால் சிறிய வீடு ஒன்றை வாங்கிவிட முடியும். இருந்தாலும் தேடிப் பார்த்த வீடுகள் எதுவும் சரிப்பட்டு வரவில்லை. கையிலிருந்த பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருந்தது. கையிலிருந்த பணம் தீர்ந்து போவதற்குள் ஏதாவது பிஸினஸ் தொடங்கி விடவேண்டும் என்ற அவசரத்தில் மாம்பலத்தில் ஒரு ரெஸ்டாரெண்ட் ஆரம்பித்தார்.

பெயர் : காஃபி பேலஸ்!

# 12. காஃபி பேலஸ்

சுவையான சாப்பாடு, மணக்கும் காஃபி இரண்டுமே சாவிக்கு ரொம்பவும் பிடித்தவை. 'நான் சாப்பாட்டு ரசிகன்; சாப்பாட்டு ராமன் அல்ல' என்று சொல்வார் அவர். ரொம்பவும் குறைவாகத்தான் சாப்பிடுவார். சாப்பாடு சுவையாக இருக்க வேண்டும். ருசியாகச் சமைக்கவும் தெரியும் அவருக்கு. ரவா உப்புமா பற்றி 'வாஷிங்டனில் திருமணத்'தில் ஒரு வர்ணனை வரும். அதைப் படிக்கும்போது நாக்கில் நீர் ஊறும். அவ்வளவு ரசனையோடு எழுதியிருப்பார். ரவா உப்புமா என்றால் அதற்கு என்னென்ன போடவேண்டும், எவ்வளவு போட வேண்டும் என்பதை அவர் மிக நேர்த்தியாகச் சொல்வார். அவரோடு நான் ஜப்பான், ஹாங்காங் மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்குப் போயிருந்த போது சமையல் பற்றிய அவரது நுணுக்கமான அறிவைக் கண்டு வியந்து போயிருக்கிறேன்.

ஹாங்காங்கில் நண்பர் பாலன் சச்சித் அவர்களின் வீட்டிலும், சிங்கப்பூரில் நண்பர் யாகப் அவர்களின் வீட்டிலும் 'இப்படிச் செய்... அப்படிச் செய்...' என்று அவர் சொல்லச் சொல்ல நான் சாம்பார், உருளைக் கிழங்கு வறுவல் எல்லாம் செய்திருக்கிறேன். மணக்க மணக்க கிச்சடியும் ரவா உப்புமாவும் கிண்டிய நாட்கள் மறக்க முடியாதவை.

சரி, காஃபி பேலஸுக்கு வருவோம்.

ஆரம்பத்தில் அங்கே காஃபி மட்டுமே தருவது என்று

திட்டமிட்டார் சாவி. 'காஃபி என்றால் இதுதான் காஃபி!' என்று அத்தனை பேரும் பாராட்டவேண்டும். மணமும் ருசியும் நாக்கில் சுழல வேண்டும் என்பதுதான் அவருடைய லட்சியமாக இருந்தது.

தி.நகர் மங்கேஷ் தெருவில் ஒரு சின்ன இடம் பிடித்து அந்த இடத்தைத் தம்முடைய ரசனைக்கேற்றபடி மாற்றி வடிவமைத்தார். முன்வாசலில் தஞ்சாவூர் ஸ்டைலில் கலை அழகோடு கீற்றுக்கொட்டகை போட்டு, 'காஃபி பேலஸ்' என்று பெயர் வைத்தார்.

தொடங்கிய முதல் நாளே களை கட்டிவிட்டது. வந்த பெரும் கூட்டம் அந்த காஃபியில் மயங்கி நின்றது. வி.ஐ.பி.க்கள் பலர் வரத் தொடங்கினார்கள்.

முக்கியமாக – மணியன், சாண்டில்யன், தமிழ்வாணன் போன்ற எழுத்தாளர்களும், ம.பொ.சி. போன்ற அரசியல் வாதிகளும் 'காஃபி பேலஸ்' நோக்கிப் படையெடுத்தார்கள். மற்றும் சிலர் 'நம்ப சாவிதானே' என்று காஃபி குடித்து விட்டுப் பணம் கொடுக்காமலே கணக்கு சொல்லிவிட்டுப் போனார்கள். சாவி அவர்களால் கண்டிப்பு காட்ட முடியவில்லை. கறாராக இருக்கவும் முடியவில்லை. எல்லோருமே நன்கு பழகிவிட்ட நண்பர்கள். ஆதலால் தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டார்.

தினமும் தவறாமல் வந்து சாப்பிட்டு ஒழுங்காகப் பணம் கொடுத்தவர்கள் பிரபல எழுத்தாளர் சாண்டில்யனும் இன்னும் சிலருமே. சாண்டில்யனும் சாவியைப் போல ரசனை மிக்கவர். நகைச்சுவை உணர்வு மிக்கவர்.

காஃபியோடு சாப்பிட சில அயிட்டங்களும் முக்கியம் என்று நண்பர்கள் வற்புறுத்தவே இட்லி, வடை என்று வழக்கமான அயிட்டங்களையும் கொடுக்கத் தொடங்கினார்.

பலரும் வருவார்கள். சாப்பிடுவார்கள். கடன் சொல்லி

விட்டுப் போவார்கள். போகும்போது 'நீங்கள் ஒரு கௌரவமான எழுத்தாளர். எழுதுவதை விட்டு உமக்கு ஏன் இந்தத் தொழில்?' என்று அனுதாபத்தோடு சாவிக்கு அட்வைஸ் வேறு!

கடன் சொன்னவர்கள் சொன்னவர்கள்தான். பணம் வரும் என்ற நம்பிக்கையில்லை. சாப்பிட்டு சப்புக் கொட்டி 'பேஷ்' என்றார்களே தவிர 'கேஷ்' தரவில்லை.

எத்தனை நாள்தான் நஷ்டத்தைத் தாங்க முடியும்? ஒரு வருடத்துக்கு மேல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. வேறு வழியின்றி கடையைக் கட்ட வேண்டியதாயிற்று.

''அந்த ஒரு வருடத்தில் எனக்குக் கிடைத்த ஒரே லாபம் என் வீட்டுக்குத் தேவையான மளிகைச் சாமான்கள், பால், தயிர் ஆகியவற்றை 'காஃபி பேலஸு'க்கு வாங்கியதிலேயே அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டதுதான்'' என்கிறார் சாவி.

'காஃபி பேலஸ்' கதவை இழுத்து மூடிய பிறகு 'வாழ்க்கையின் கதவே மூடப்பட்டு விட்டதோ?' என்ற கவலையில் ஆழ்ந்தார்.

'ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும்' என்பார்களே, அது பொய்த்துப் போகவில்லை. 'கல்கி'யின் கதவு 'சாவி'க்காகத் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

# 13. மீண்டும் விகடனில்...

காஃபி பேலஸ் மூடப்பட்டதும் குடும்பத்தை அழைத்துக் கொண்டு சொந்த ஊர் மாம்பாக்கத்துக்கே போய்ச் சில நாட்கள் தங்கி இருந்தார். கிராம வாழ்க்கை சரிப்பட்டு வரவில்லை. அப்பாவும் தமது பெண்களின் திருமணத்துக்காக வாங்கிய கடனை வட்டியும் முதலுமாய்த் தீர்க்க நிலபுலன்களை விற்று விட்டு சிரம தசையில் இருந்தார். அந்த நிலையில், அப்பாவுக்கு பாரமாக எத்தனை நாள் இருப்பது?

கிராமத்தில் இருந்தபடியே கல்கி இதழில் சாவி அவ்வப் போது ஏதாவது எழுதி வந்தார். 'விடாக்கண்டர்' என்ற பெயரில் அரசியல் கட்டுரைகள் எழுதினார். அதற்கு முப்பது, நாற்பது என்று சன்மானம் வரும். சாவியின் நிலைமையைப் புரிந்து கொண்டிருந்த கல்கி அவர்கள் சன்மானத் தொகையைத் தாமதப்படுத்தாமல் உதவி ஆசிரியர் 'ஸோமாஸ்' மூலம் தபால் கவரிலேயே வைத்து அனுப்ப ஏற்பாடு செய்திருந்தார்.

இதற்கிடையில் அப்போது சென்னையில் அமெரிக்கத் தகவல் நிலையத்தில் (யு.எஸ்.ஐ.எஸ்.) பணிபுரிந்து கொண்டிருந்த வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்களின் (ஆம், கப்பலோட்டிய தமிழனின் மகன்தான்) உதவியால் சாவிக்கு ஒரு சின்ன வாய்ப்பு கிடைத்தது.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட கட்டுரைகளைச் சரி பார்க்கும் வாய்ப்பு. அந்தக் கட்டுரைகளை வாங்கிக் கொண்டு கிராமத்துக்குப் போய் அங்கே சரி பார்த்து மீண்டும்

சென்னைக்குத் திரும்பி வந்து அதற்குரிய சன்மானத்தைப் பெற்றுச் செல்வார்.

இச்சமயத்தில் தொழிலதிபர், எச்.டி.ராஜா என்பவர் வாரப் பத்திரிகை ஒன்று தொடங்கப் போவதாகவும், எழுத்தாளர் கே.அருணாசலம் (அருண்) அதன் ஆசிரியர் என்றும் ஒரு செய்தி கிடைத்தது. அருணைப் போய்ப் பார்க்கலாமா என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் அவரே வந்து சாவியைப் பார்த்து உதவி ஆசிரியர் வேலைக்கு அழைத்தார்.

அவர் சாவியின் நீண்ட கால நண்பர். எனவே சாவியின் நிலைமையை அறிந்து அவராகவே ஐம்பது ரூபாய் அட்வான்ஸ் வேறு கொடுத்துவிட்டுப் போனார். அப்போது ஆசிரியர் கல்கி அவர்கள் மறைந்து சில மாதங்கள் ஆகியிருந்தன. சாவிக்கு 'கல்கி'யில் சேர்ந்து வேலை செய்ய வேண்டும் என்ற ஆசை. கல்கி மானேஜர் திரு. வைத்தியநாதனை அவருடைய இல்லத்தில் போய்ப் பார்த்து தம் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார். சாவியிடம் வைத்தியநாதன் அன்பும் அக்கறையும் கொண்டவராக இருந்த போதிலும் பிடி கொடுத்துப் பேசாமல் ''பார்க்கலாம்'' என்று மட்டும் சொல்லி அனுப்பினார். ஆனாலும் மறுநாளே கல்கி உரிமையாளர் சதாசிவத்திடம் நல்ல 'மூட்' பார்த்து சாவியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். திரு. சதாசிவம் அவர்களுக்கு சாவியிடம் எப்போதுமே அன்பு உண்டு. வைத்தியநாதனிடம் 'சரி, வரச் சொல்' என்று சொல்லி அனுப்பி இருக்கிறார். இரண்டொரு நாளிலேயே சாவி கல்கியில் சேர்ந்து விட்டார். வைத்தியநாதன் செய்த இந்தப் பேருதவியை சாவி என்றுமே மறந்ததில்லை. அவரைக் காணும்போதெல்லாம் நன்றி கூறத் தவறியதுமில்லை.

''கல்கியில் வேலை கிடைத்துவிட்டது. நான் அங்கே சேர்ந்து விட்டேன்'' என்று கூறி, நண்பர் அருணாசலத்திடம் அவர் கொடுத்த அட்வான்ஸையும் திருப்பித் தந்தபோது,

"என்னய்யா, இப்படி செஞ்சுட்டீங்களே! நான் ரொம்ப நம்பிக்கையோடு இருந்தேனே!" என்று மிகுந்த ஏமாற்றத்துடன் வருத்தப் பட்டார் அருண்.

இரண்டாவது முறை கல்கி கார்டனுக்குள் காலடி வைத்த போது சாவியின் மனதில் ஒரு குதூகலத் துள்ளல் இருந்தது. அவரைக் கண்டதும், சதாசிவம் சிரித்துக் கொண்டே "இங்கே எல்லோருமே உங்கள் பழைய நண்பர்கள். நீங்கள் வருவதில் அவர்கள் எல்லோருக்குமே ரொம்ப சந்தோஷம்" என்று கூறி வரவேற்றார். மீண்டும் கல்கியில் சேர்ந்துவிட்ட உற்சாகத்தில் பல தலைப்புகளில் ஸீரியஸ் கட்டுரைகளும், நகைச்சுவைக் கட்டுரைகளும் எழுதித் தள்ளினார் சாவி. 'மாறு வேஷத்தில் மந்திரி', 'சூயஸ் கால்வாயின் கதை' – போன்ற கட்டுரைகள் நல்ல வரவேற்பைப் பெற்றன. கொத்தமங்கலம் சுப்பு சாவியைச் சந்திக்கும்போதெல்லாம் சாவியின் எழுத்தைப் பாராட்டிக் கொண்டிருந்தார்.

கல்கியில் வெளியான சாவியின் கட்டுரைகளை விகடன் ஆசிரியர் வாசன் அவர்களும் படித்து ரசித்திருக்கிறார் என்பதை, கல்கியில் அப்போது பணிபுரிந்து கொண்டிருந்த நண்பர் சாமா மூலம் சாவி அறிந்து கொண்டார்.

இந்த இடத்தில் சாவிக்கும் சாமாவுக்கும் இடையே இருந்த நட்பு பற்றிக் குறிப்பிட வேண்டும். சாவி அவர்களின் பேருள்ளம் பற்றி ஒரு சம்பவத்தைத் தன்னிடம் சாமா நினைவு கூர்ந்ததை, புதுவை மத்தியப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும், சிறந்த கல்வியாளரும், தற்போது மத்திய திட்டக்குழு உறுப்பினரும், அமரர் சாமாவின் உறவினருமான டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியம் அவர்கள் சொல்கிறார்:

"ஒரு முறை சாவி அவர்களுக்கு எழுத்தாளப் பெருமக்கள் நடத்திய விழா ஒன்றில் அருமையான சால்வை ஒன்று போர்த்தப் பட்டது. அப்போது சாமா அவர்கள் உடல் நலிந்திருந்த நேரம்.

எனவே அந்த விழாவுக்கு அவரால் போக முடியவில்லை. விழா முடிந்ததும் சாவி அவர்கள் நேராக சாமாவின் வீட்டுக்கே வந்து அந்த அருமையான பட்டாடையை அவருக்குப் போர்த்தி மகிழ்ந்தாராம். இச்சம்பவத்தை சாமா என்னிடம் சொல்லிச் சொல்லி உள்ளம் நெகிழ்ந்தார்.''

சாமா – சாவி நட்பு அத்தகைய பாசம் மிக்க நட்பாக இருந்தது.

ஓவியர் சாமா திருமண விழா ஒன்றில் விகடன் ஆசிரியர் வாசன் அவர்களைச் சந்தித்திருக்கிறார். மறுநாள் சாவியிடம் ''உன் கட்டுரையை வாசன் ரொம்பப் பாராட்டினார். இது ஒரு நல்ல வாய்ப்பு உனக்கு. உடனே வாசன் அவர்களைப் போய்ப் பார்! உன்னை அவர் விகடனுக்கு அழைத்தாலும் அழைப்பார்'' என்று சொல்லியிருக்கிறார்.

'வாசனே பாராட்டினார்' என்ற செய்தி சாவியைத் தூங்க விடவில்லை. மறுநாளே திரு. வாசன் அவர்களைப் பார்க்க ஜெமினி ஹவுஸுக்குப் போய் விட்டார். மாடியிலிருந்து இறங்கி வந்த வாசன் அவர்கள் சாவியை உட்காரச் சொல்லி நீண்ட நேரம் பத்திரிகை சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

''உன்னை நான் ஒன்று கேட்கிறேன். நாங்க இவ்வளவு பண்ணியும் விகடன் சர்க்குலேஷன், கல்கியைவிடக் குறைவாகவே இருக்கிறதே, இதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார் வாசன்.

அப்போது விகடன் சர்க்குலேஷன் ஒரு லட்சம் பிரதிகளுக்குக் குறைவாகவே இருந்தது. கல்கியோ ஒரு லட்சத்தைத் தாண்டியிருந்தது.

சாவி தம்முடைய கருத்தைத் தயங்காமல் எடுத்துச் சொன்னார் : ''விகடன் பிராமண பாஷையையே அதிகம்

உபயோகிக்கிறது. 'கல்கி'யில் அப்படியில்லை. தமிழ் பற்றி, தமிழர்கள் பற்றி நிறைய எழுதுகிறார்கள். பிராமண பாஷைக்கு அவர்கள் விகடன் மாதிரி முக்கியத்துவம் தருவதில்லை. பூப் பிரதட்சணம், உபய குசலோபரி, சமர்ப்பணம் – போன்ற தலைப்புகளே விகடனில் திரும்பத் திரும்ப வருகின்றன. இதனால் பிராமணர் அல்லாதார் அதிருப்தியைச் சம்பாதிக்கிறீர்கள். அதுதான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.''

தொடர்ந்து, ''கதைகளில் கூட பிராமின் காரக்டர்ஸ்தான் அதிகம் வருகின்றன. நீங்க வெறும் கர்நாடக இசை பற்றித்தான் விமரிசனம் எழுதுகிறீர்கள். கல்கியில் தமிழிசை இயக்கம் பற்றி எழுதுகிறார்கள். 'பொன்னியின் செல்வன்' போன்ற வரலாற்றுக் கதைகளின் மூலம் தமிழர்களின் சரித்திர காலப் பெருமைகளைச் சொல்கிறார்கள்'' என்றார் சாவி.

'யூ ஆர் ரைட்' என்று கூறிய வாசன் அவர்கள் சில வினாடிகள் ஆழ்ந்த சிந்தனையுடன் இருந்து விட்டு, ''சரி; நான் ஒரு சரியான உதவி ஆசிரியரை விகடனுக்குத் தேடிக் கொண்டிருக்கிறேன். இப்போது உனக்கு விகடனில் சேர விருப்பம் இருந்தால் சொல்'' என்றார்.

சாவி மௌனமானார்.

''நீ நகைச்சுவையாக எழுதுகிறாய். விகடன் ஹ்யூமரஸ் மாகஸின். ஆகவே உன் எழுத்து விகடனுக்குத்தான் பொருத்தம். யோசித்துச் சொல்'' என்றார் விகடன் அதிபர். சாவி அப்போதும் பதில் சொல்லவில்லை. வாசன் அவர்கள் அப்போது ஆங்கிலத்தில் சொன்ன வார்த்தைகளை சாவி இன்றளவும் மறக்கவில்லை.

"See, I am on the lookout for a good Journalist. You are on the lookout for a suitable employer. Then why not you think of joining Vikatan?"

வாசன் அவர்கள் இப்படிச் சொன்னதுமே சாவி விகடனில் சேர்ந்துவிட முடிவெடுத்து விட்டார்.

ஆனால், தாம் விகடனில் சேரப் போவதை 'கல்கி' அலுவலகத்தில் சில நாட்கள் வரை சொல்லாமலே இருந்தார். வாசன் அவர்கள் சாவிக்கு ஓர் அறிவுரை சொல்லியிருந்தார். ''இப்போது நீ உடனே கல்கியை விட்டு இங்கே வந்து சேர்ந்தால் அது நன்றாக இருக்காது. ஆகவே வேலையை விட்டு விட்டு இரண்டு மூன்று மாதங்கள் சும்மா இரு. அந்தக் காலத்துக்கான சம்பளத்தை நான் கொடுத்து விடுகிறேன். அப்புறம் சேர்ந்து கொள்ளலாம்.''

தான் வேலையை ராஜினாமா செய்யப் போவதை கல்கி அலுவலகத்தில் தெரிவிக்காமல் இருப்பது குற்றம் என்பதை உணர்ந்து, சாவி வைத்தியநாதனிடம் தன் மனநிலையையும், முடிவையும் வெளிப்படுத்தினார். கல்கியில் சாவியை வேலைக்குச் சேர்த்து விட்டவர் வைத்தியநாதன் அவர்கள்தான். அவருக்கு சாவியின் இந்த முடிவு மகிழ்ச்சி தரவில்லை.

'உங்களுக்காக நான் எவ்வளவு முயற்சி செய்து இந்த வேலை வாங்கியிருப்பேன்? சேர்ந்து பதினொரு மாதங்கள் கூட ஆகவில்லை. இதற்குள் போகிறேன் என்கிறீர்களே?'' என்றார்.

''சம்பளம் போதவில்லை. மேலும் நான் அடிப்படையில் ஒரு ஹ்யூமரஸ் ரைட்டர். கல்கி சற்று சீரியஸ் மெகஸின். என் எழுத்துக்கு கல்கியை விட விகடன் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றார் சாவி.

திரு. சதாசிவம் அவர்கள் அப்போது வெளியூரில் இருந்தார். 'திரும்பி வர பத்துப் பதினைந்து நாட்கள் ஆகலாம். வந்தவுடன் அவரைப் பார்த்துச் சொல்லி விட்டுப் போங்கள்' என்றார் வைத்தியநாதன்.

சதாசிவம் அவர்கள் சென்னை திரும்பியதும் சாவி அவரைப் போய்ப் பார்த்தார். இதற்குள்ளாகவே திரு. சதாசிவம் அவர்களுக்கு விஷயம் எட்டியிருந்தது.

''உனக்கு இங்கே என்ன குறைச்சல்? சரி, நீ விகடனுக்குப் போவதாக முடிவு பண்ணி விட்ட பிறகு நான் என்ன செய்ய முடியும்?'' என்று சதாசிவம் வருத்தத்தோடு விடை கொடுத்து அனுப்பினார்.

'நான் ஆபீஸில் லோன் வாங்கியிருக்கிற பணத்தில் இன்னும் அறுநூற்று ஐம்பது ரூபாய் திருப்பித் தரவேண்டி இருக்கிறது' என்று இழுத்தார் சாவி.

''சிவ... சிவா! நான் அதை அப்போதே மறந்தாச்சு'' என்றார் சதாசிவம்.

''எவ்வளவு பெரிய மனசு சதாசிவம் அவர்களுக்கு!'' என்று சாவி நெகிழ்ந்து போகிறார்.

ஒரு மாதம் ஆயிற்று. விகடனிலிருந்து எந்தத் தகவலையும் காணோம். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட கதையாக விகடனை நம்பி கல்கியையும் விட்டாயிற்று. சாவிக்கு பயம் வந்து விட்டது. தன் நிலையை விளக்கி 'நான் இப்போது திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறேன்' என்று வாசன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டார் சாவி.

அந்தக் கடிதம் சேர்ந்த மறுநாளே 'உடனே ஜே.எம்.டி. (ஜாயின்ட் மேனேஜிங் டைரக்டர்) பாலசுப்ரமணியனைப் பார்க்கவும்' என்று வாசன் அவர்களிடமிருந்து செய்தி வந்தது.

மறுதினமே வாசன் அவர்களின் புதல்வர் திரு. பாலசுப்ர மணியன் அவர்களை விகடன் அலுவலகத்தில் சந்தித்து வேலையை ஒப்புக் கொண்டார் சாவி. அன்றே விகடனில் சாவி அவர்களின் இரண்டாவது இன்னிங்ஸ் ஆரம்பமாயிற்று.

---

# 14. முத்திரைக் கதை

'எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களின் வருமானத்தை உயர்த்தி, அவர்களின் சமூக அந்தஸ்தை பெருமைக்குரியதாக்க வேண்டும்' என்ற ஆசை சாவி அவர்களுக்குள் எப்போதுமே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அப்போதெல்லாம் பத்திரிகைகள் சினிமா நடிகர்களை மட்டுமே பெரிதாகப் படம் போட்டு அவர்களைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் தந்து வெளியிட்டு வந்தன. சாவி தினமணி கதிர் ஆசிரியராகப் பதவி ஏற்றதும் தமக்கிருந்த முழு சுதந்திரத்தைப் பயன்படுத்தி எழுத்தாளர்களை மிகப் பெரிய அளவில் விளம்பரப்படுத்தினார். சினிமா ஸ்டார்களைப் போலவே எழுத்தாளர்களின் புகைப் படங்களைப் பிரசுரித்தார். அவர்கள் எழுதும் கதைகளுக்கு முழுப் பக்க அளவில் வண்ணச் சித்திரங்கள் போடுவது, பொது மேடைகளில் அவர்களை கௌரவிப்பது, கலந்துரையாடல்கள், நேருக்கு நேர் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்வது அவற்றைப் பற்றிய புகைப்படக் கட்டுரைகளைப் பிரசுரிப்பது போன்ற புதுமையான விளம்பரங்களைச் செய்தார்.

இன்று எழுத்தாளர்கள் பொது வாழ்வில் ஒரு நட்சத்திர அந்தஸ்து கிடைத்துப் பெரிதும் மதிக்கப்படுகிறார்கள், பாராட்டப் படுகிறார்கள் என்றால் அதற்கு வித்திட்டவர் சாவி அவர்கள்தான் என்று என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியும்.

ஜெயகாந்தன், சோ, சிவசங்கரி, சுஜாதா, கண்ணதாசன் போன்ற பல எழுத்தாளர்களைப் பிரபலமாக்கிய பெருமை

சாவிக்குத்தான் உண்டு என்றால் அது எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய உண்மை. தினமணி கதிரில் இவ்வளவையும் செய்வதற்கு முன்பாகவே, ஆனந்த விகடனில் எழுத்தாளர்களை உயர்த்துவதற்கு தம்மால் இயன்ற அளவுக்குப் பாடுபட்டார்.

ஒவ்வொரு வாரமும் சிறந்த கதைகளாகத் தேர்ந்தெடுத்துப் பிரசுரிப்பதில் விகடன் என்றுமே முன்னணியில் நின்று வருகிறது. அப்படிப்பட்ட சிறந்த கதைகளில் மிகச் சிறந்த கதை ஒன்றை 'முத்திரைக் கதை'யாகத் தேர்ந்தெடுத்து அதற்கு ஓர் இலக்கிய அந்தஸ்து தரும் வழக்கத்துக்கு அடிக்கல் நாட்டியவர் சாவி. முத்திரைக் கதை என்று போடுவதன் மூலம் நல்ல சிறுகதையை அடையாளம் காட்டலாம் என்ற எண்ணம் ஒருபுறம். அப்படி ஒரு சிறப்பு அந்தஸ்து கொடுத்தால் மற்றக் கதைகளுக்குத் தருவதை விட அந்தக் கதைக்குச் சன்மானம் அதிகம் தரவேண்டிய நிலை ஏற்படும் என்ற ஆசை ஒரு புறம். இதன் விளைவாகத் தோன்றியதே முத்திரைக் கதை முயற்சி. சாவி தம்முடைய இந்த நோக்கத்தை வெளிப்படையாக யாரிடமும் சொல்லாமலே வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறார்.

அப்போதெல்லாம் சாதாரணமாக ஒரு கதைக்கு அதிக பட்சம் ஐம்பது அல்லது அறுபது ரூபாய்தான் சன்மானம் தருவார்கள். முத்திரைக் கதைக்குக் குறைந்தபட்சம் நூறு ரூபாயாவது தர வேண்டும் என்று நிர்வாகப் பொறுப்பிலிருந்த பாலசுப்ரமணியன் அவர்களிடம் சாவி எடுத்துச் சொன்னபோது, அந்த யோசனையை மகிழ்ச்சியுடன் அவர் ஏற்றுக் கொண்டார்.

ஆனந்த விகடனில் அதுவரை சன்மானத்தை நிர்ணயிக்க ஒரு வேடிக்கையான முறையைக் கையாண்டு வந்தார்கள். கதையோ கட்டுரையோ எது பிரசுரமானாலும் அவற்றை 'ஸ்கேல்' வைத்து அளந்து அங்குலம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்று கணக்கிட்டு அதன்படி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். தேவன் பொறுப்பாசிரியராக இருந்தபோது தொடங்கப்பட்ட இந்த

வழக்கம் வெகுகாலம் தொடர்ந்து கொண்டிருந்தது. இலக்கியத்தை இப்படி ஸ்கேல் வைத்து அளக்கும் முறை சாவிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இந்த வழக்கத்தை மாற்றியாக வேண்டும் என்று பாலசுப்ரமணியன் (பாலு) அவர்களோடு வாதிட்டார். 'ஒரு நல்ல படைப்பை அதன் தரத்தைக் கொண்டுதான் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, அதன் நீள அகலத்தைக் கொண்டா மதிப்பிடுவது?' என்று விவாதித்தார்.

அதற்கு பாலு அவர்கள் 'இதில் ஒரு பொதுவான நியாயம் இருப்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கதையின் நீளத்துக்கு ஏற்றபடி இவ்வளவு ரூபாய் என்று நிர்ணயித்து விட்டால் வேண்டியவர், வேண்டாதவர் என்ற பிரச்னைக்கே இடமில்லை பாருங்கள். எழுத்தாளர்களை வித்தியாசப்படுத்தாமல் அனைத்து எழுத்தாளர்களுக்கும் ஒரே மாதிரி மதிப்புக் கொடுத்து எல்லோரையும் சமமாகப் பாவிக்க இதைவிடச் சிறந்த வழி வேறென்ன இருக்க முடியும்?' என்று சாவியிடம் திருப்பிக் கேட்டார்.

சாவி சட்டென்று சொன்னார்: "அப்படியானால் இப்போது திருவள்ளுவர் உயிரோடு இருந்து விகடனில் குறள் எழுதினால் அவருக்கு ஒரு குறளுக்கு இரண்டு ரூபாய்தான் தருவீர்களோ, அப்படித்தானே?"

அந்த வாதத்தைக் கேட்டதும் பாலு கண்களை மூடியபடி ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினார்.

சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராக, 'நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் சரியென்றே படுகிறது. இலக்கியத்தை ஸ்கேல் வைத்து அளக்கும் பழக்கத்தை இன்றோடு நிறுத்தி விடலாம். இனிமேல் தரத்துக்கேற்ப சன்மானம் வழங்கும் வழக்கத்தை மேற்கொள்வோம். இது பற்றி 'வணக்கம்' என்று தலைப்பிட்டு நீங்களே அடுத்த இதழில் ஒரு விளக்கம்

எழுதி விடுங்கள்' என்று கூறிவிட்டு அடுத்த வேலையை கவனிக்கப் போய்விட்டார்.

ஏதாவது முக்கியமான சேதியை வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமானால் 'வணக்கம்' என்ற தலைப்பில் அதை விவரிப்பது விகடனின் வழக்கம்.

சன்மானம் நிர்ணயிக்கும் திட்டம் மாற்றி அமைக்கப்பட்ட விவரத்தை 'வணக்கம்' பகுதியில் எழுதி அதை ஒரு பக்கத்துக்குள் அடக்கியிருந்தார் சாவி. அதைப் படித்துப் பார்த்த பாலு அவர்கள் ஒரு சில திருத்தங்களுடன் அதை வெளியிட்டார்.

பாலு அவர்களிடம் சிற்சில சமயங்களில் உரிமை எடுத்துக் கொண்டு சாவி வேடிக்கையாகப் பேசுவது உண்டு. வயதில் மூத்தவர் என்பதனாலும், சாவியிடமுள்ள நகைச்சுவை உணர்வு காரணமாகவும் அந்த உரிமையை சாவிக்கு வழங்கியிருந்தார் திரு. பாலு அவர்கள்.

''இந்த 'வணக்கம்' பகுதியைத் தங்களால் அப்படியே ஒப்புவிக்க முடியுமா?'' என்று பாலு அவர்களிடம் வேடிக்கை யாகக் கேட்டு வைத்தார் சாவி. உடனே அவர் மானசீகமாக அந்த வரிகளை ஒரு முறை கண்ணோட்டம் விட்டார். 'சரி, ஒப்புவிக்கிறேன்' என்று கூறியவர் ஒரு வரி விடாமல் ஒரு சிறு தவறு கூட இல்லாமல் அப்படியே நேரில் பார்த்துப் படிப்பது போல் ஒப்புவித்தார்!

பாலு அவர்களின் நினைவாற்றல் கண்டு சாவி பிரமித்துப் போனார். அந்த ஆச்சரியத்திலிருந்து அவர் இன்னும் விடுபட வில்லை. அண்மையில் பாலு அவர்களைச் சாவி சந்தித்தபோது இதை அவரிடம் நினைவு கூர்ந்தாராம். பதில், ஒரு சின்ன புன்சிரிப்பு!

சாவிக்கு எப்போதுமே இந்த மேசை, நாற்காலி என்ற

மெக்காலே காலத்து முறை கட்டோடு பிடிப்பதில்லை. இப்போது கூட அவரது வீட்டில் மேசை என்று எதுவும் கிடையாது. 'எழுத்தாளன் என்றால் மேசை நாற்காலி என்பது என்ன சூத்திரம்?' என்று கேட்பார்.

அந்த நாட்களில் உதவி ஆசிரியர்கள் எல்லோரும் ஒரு பெரிய அறையில் ஒன்றுகூடி பாலு அவர்களோடு விவாதிப்பார்கள். இதற்காகவே காங்கிரஸ் மாநாட்டு மேடை போல மெத்தை விரித்து திண்டுகள் போடப்பட்டிருக்கும். அந்தச் சூழல் சாவிக்கு மிகவும் பிடிக்கும். ஆசிரியர் குழுவுக்கு நேரம் காலம் என்று எந்த வரைமுறையும் கிடையாது. காலை ஏழரை மணிக்கெல்லாம் ஆபீஸ் போய் விடுவார்கள். அவர்களுக்கெல்லாம் முன்பாகவே பாலு அங்கே ஆஜராகியிருப்பார்.

அந்த 'மாநாட்டு' அறையில் உட்கார்ந்து விட்டால் நேரம் போவதே தெரியாமல் 'டிஸ்கஷன்' நடைபெறும். அடுத்த வாரத்துக்கான மேட்டர் பற்றிய ஆலோசனைதான். மேட்டர் எழுதிக் கொடுக்க வேண்டியவர்கள் இடையிடையே எழுந்து போய் தங்கள் மரத் தடுப்பு அறைகளில் உட்கார்ந்து, எழுத வேண்டியதை எழுதிக் கொடுத்து விட்டு, மீண்டும் வந்து விவாதத்தில் கலந்து கொள்வார்கள். அப்படி விவாதித்து தீர்மானிக்கப்படும் 'ஐடியா'க்களை உதவி ஆசிரியர் மணியன் ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிப்பெடுத்துக் கொள்வார்.

இரவிலும் நெடுநேரம் கண்விழித்து அந்த வாரத்து வேலைகளைச் செய்து முடிப்பார்கள். பத்திரிகை அலுவல கங்களில் 'இரவு – பகல்' என்றெல்லாம் பார்க்க முடியாது. பெரும்பாலும் இரவு நேரங்களில்தான் வேலை முடியும். ஒரு நாள் சாவி பாலு அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

''சில நாட்களில் வேலை முடிந்து படுப்பதற்கு இரவு ஒரு மணி, இரண்டு மணி ஆகிவிடுகிறது. அப்புறம் வீட்டுக்குப்

போக வாகன வசதி இருப்பதில்லை. ஆகையால் உதவி ஆசிரியர்கள் சற்று நேரம் கண்ணயர ஒரு சின்ன மெத்தையும், தலையணையும் இருந்தால் வசதியாக இருக்கும். அவரவர் அறையிலேயே படுத்துத் தூங்கிவிட்டுப் பிறகு மெத்தையைச் சுருட்டி கப்போர்டில் வைத்து மூடிவிடலாம்'' என்றார் சாவி. இதற்கு எந்த பதிலும் சொல்லாமல் மௌனமாய்ப் போய் விட்டார் பாலு. தன் யோசனை அவருக்குப் பிடிக்கவில்லையோ என்று சாவிக்குச் சற்று அச்சம்.

ஆனால், இரண்டே நாட்களில் ஒவ்வொருவர் அறையிலும் ஒரு 'க்வில்ட்'டும், தலையணையும் புத்தம் புதிதாய்க் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தன.

அப்போது விகடன் அலுவலக வளாகத்தின் முகப்புப் பகுதியில் பாட்மின்ட்டன் கோர்ட் இருந்தது. தினமும் காலையில் பாலு அவர்கள் அங்கு வந்து பாட்மின்ட்டன் விளையாடுவார். ஆடி முடித்ததும் அவரது பனியனும் கால்சட்டையும் ஏதோ மழையில் நின்று ஆடியது போல் நனைந்திருக்கும். சிற்சில சமயம் அதே கோலத்தில் அலுவலகத்துக்குள் வந்து உதவி ஆசிரியர்களின் அறைகளை எட்டிப் பார்த்து ஏதாவது வேடிக்கையாகச் சொல்லிவிட்டுப் போவார்.

ஒரு நாள் காலை சாவி தமது அறையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்.

''சாவி ஸார்! இன்னுமா தூக்கம்? மணி ஏழுக்கு மேல் ஆகிறதே!'' என்ற குரல் கேட்டு விழித்துப் பார்த்தால் எதிரில் பாலு!

சாவி லேசாகச் சிரித்தார்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டார் பாலு.

''ஆமாம் ஸார்! இருபது ஆண்டுகளுக்கு முன் இதே ஆபீஸில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது, ஆபீஸ் நேரத்தில் தூங்கியதற்காகத் தங்கள் தந்தையார் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டார். இப்போது, அதே அலுவலகத்தில் நீங்கள் மெத்தை தைத்துப் போட்டுத் தூங்க வைத்திருக்கிறீர்கள். அதை நினைத்துத்தான் சிரிப்பு'' என்றேன்.

சாவி சொன்னதைக் கேட்டு பாலு அவர்களும் சிரித்து விட்டார்.

# 15. வாஷிங்டனில் திருமணம்

எழுத்தாளர் சாவிக்கு எப்போதுமே ஒரு பழக்கம் உண்டு. எந்தத் திருமண நிகழ்ச்சிக்குப் போனாலும் அங்கே சுற்றிலும் நடப்பதைக் கூர்ந்து கவனிப்பார். சாஸ்திரிகள், நாதஸ்வரக்காரர்கள், பாட்டிமார்கள், சிறுவர்கள் எல்லோரும் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று கூர்ந்து கவனிப்பார். திருமணத்தை – அதன் சடங்குகளை, அதை ஒட்டிய சம்பவங்களை மையமாக வைத்து நகைச்சுவையாக ஏதேனும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் நீண்ட காலமாகவே சாவியின் அடிமனதில் ஊறிக்கொண்டிருந்தது. ஆனால் அது கதையா, நாவலா, கட்டுரையா, நகைச்சுவைத் தொடரா என்பது பற்றியெல்லாம் எந்த முடிவுக்கும் வரவில்லை. ஒரு பத்து வருட காலம் இதே சிந்தனைதான். 'தினமும் சாமி கும்பிடும் போது கூட இந்த என் ஆசையை நான் ஒரு பிரார்த்தனையாக வெளியிடுவேன்' என்கிறார் சாவி.

'ஆப்ஸெண்ட் மைண்டட் புரொஃபஸர்' என்றொரு ஆங்கில நகைச்சுவைப் படம் சென்னையில் சக்கைப்போடு போட்டது. 'ஃப்ளப்பர்' என்ற பறக்கும் ரப்பரைத் தம் அறிவியல் திறமையால் கண்டுபிடிக்கிறார் பேராசிரியர் ஒருவர். அதை வைத்துப் பின்னிப் பின்னி, பல சம்பவங்களைப் பொருத்தமாய்ப் புகுத்தி, நடக்கமுடியாத விஷயங்களை அதீத கற்பனையுடன் மிகைப்படுத்தி, பார்ப்பவர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த அந்தப் படத்தை சாவி ஒரு முறைக்கு இரண்டு முறை பார்த்து ரசித்தார்.

காவிரி நதி தீரத்தில் நடைபெறும் தியாகராஜ ஆராதனை உற்சவத்தைக் கண்டுகளிக்க பரணிதரன், பாப்ஜி, சாவி மூவரும் திருவையாறு போயிருந்தனர்.

காவிரிக் கரையோரம், படித்துறை, தியாகராஜர் சமாதி, இசை நிகழ்ச்சி, உஞ்சவிருத்தி பஜனை – இப்படி அந்தப் புனிதமான திருவையாறு சாவியின் மனதில் ஒருவித பரவசத்தை உண்டாக்கியது. திடீரென உள்ளுக்குள் கற்பனை ஊற்று பொங்கி வருவது போல ஓர் உணர்வு. ஒரு மாலைப் பொழுதில் அந்தப் படித்துறையில் ரசிகர்களும் இசைக் கலைஞர்களும் கை, கால் அலம்பி, நெற்றியிலும் உடம்பிலும் பட்டை பட்டையாக விபூதியைக் குழைத்து இடுவதைப் பார்த்து, சுற்றியிருந்த வெளிநாட்டுக்காரர்களும் கை, கால் அலம்பி திருநீறு பூசிக் கொண்டிருந்தது ஒரு வேடிக்கையான அபூர்வக் காட்சியாக இருந்தது. அதிலிருந்து சாவியின் கற்பனைக்கு ஒரு பொறி தட்டியது. அந்தக் கற்பனை நூலிழை அறுந்து விடாமல் தொடர்ந்த சிந்தனை மூலம் கதைக்கு வடிவம் கொடுத்துக் கொண்டே இருந்தார்.

'திருவையாறு உற்சவத்தை தேம்ஸ் நதிக்கரையில் நடத்தினால் என்ன' என்பதே அந்தக் கற்பனை. அவ்வளவுதான்– அதற்குமேல் ஒரு நிமிடம் கூட அங்கே தங்கியிருக்கப் பிடிக்க வில்லை. அவசரமாக சென்னை திரும்பி விட்டார். வரும் வழியில் கற்பனை வேறு டிராக்கில் திரும்பியது. திருவையாறு உற்சவம் என்பதற்குப் பதிலாக அதுவே 'வாஷிங்டனில் திருமணம்' என்ற நகைச்சுவைத் தொடராக மாறியது.

சென்னை வந்ததும், விகடன் பொறுப்பாசிரியர் பாலு அவர்களிடம் தம் கற்பனை பற்றிச் சாதாரணமாகத்தான் இரண்டொரு வரிகளில் சொன்னார். முதலில் அவரிடமிருந்து எந்த விதமான ரியாக்‌ஷனும் இல்லை. 'என்ன கதை? எப்படி எழுதப் போகிறீர்கள்? எத்தனை வாரம்?' என்று அவர் எதுவுமே

கேட்கவில்லை. சாவியின், உணர்ச்சிபூர்வமான உற்சாகத்திலிருந்து பாலு அவர்களுக்கு எல்லாம் புரிந்து போயிருக்க வேண்டும். சாவியின் எழுத்தில் நம்பிக்கை வைத்து 'அடுத்த வாரமே ஆரம்பித்து விடலாம்' என்று பச்சைக் கொடி காட்டி விட்டார். அத்துடன் 'அமெரிக்க கோடீசுவரர் ஒருவர் இக்கல்யாணத்தை 'ஸ்பான்ஸர்' செய்வது போல் இருந்தால் நன்றாக இருக்கும்' என்ற யோசனையையும் வெளியிட்டார்.

அப்புறமென்ன? நாள் முழுவதும் இதே சிந்தனைதான். மாப்பிள்ளை அழைப்பு, சாஸ்திரிகள் தமாஷ், அம்மாமிகள் அப்பளம் இடுவது, சம்பந்திச் சண்டை என்று மாறி மாறி திருமணக் காட்சிகள் சாவியின் மனக்கண் முன் பவனி வந்து கொண்டே இருந்தன. அப்போது ஆனந்த விகடன் அலுவலகத்துக்கு அடுத்த கட்டடத்திலேயே அமெரிக்கன் லைப்ரரி இருந்ததால் அடிக்கடி அங்கே போய் வாஷிங்டன் நகரம் பற்றிய புத்தகங்களை வாங்கிப் படித்தார். அந்த நகரத்தின் முக்கிய வீதிகள், கட்டடங்களின் விவரங்கள் அடங்கிய புத்தகங்கள் அத்தனையும் வாங்கி வந்து கரைத்துக் குடித்தார். பொடாமாக் ரிவர், டைடல் பேஸின், ஜெஃபர்ஸன் மண்டபம், ஜார்ஜ் டவுன், சம்மர் ஹவுஸ், ஆர்ட் காலரி, வாஷிங்டன் ஸ்தூபி, லிங்கன் மண்டபம், செர்ரி ப்ளாஸ்ஸம், பென்ஸில்வேனியா அவென்யூ அத்தனையும் அத்துபடி!

ஒருவேளை நகைச்சுவையாக எழுத முடியாமல் போய் விட்டால் என்ன செய்வது என்ற கவலையும் கூடவே அவரை ஆட்கொண்டது. எனவே, யார் எழுதுகிறார் என்பதை வெளியிடாமல் ரகசியமாக வைத்திருந்து கதை வெற்றிகரமாக அமைந்து விட்டால் அப்போது 'சாவி' என்று போட்டுக் கொள்ளலாம் என்று திரு.பாலு அவர்களிடம் சொன்னார். கதை போகும் சுவாரசியத்தோடு யார் எழுதுகிறார்கள் என்ற சஸ்பென்ஸூம் சேர்ந்தால் வாசகர்களின் ஆர்வமும் அதிகரிக்குமே என்ற எண்ணத்தில் அவரும் அதைச் சரியென்று ஒப்புக்

கொண்டார். அடுத்த வார விகடனில் 'வாஷிங்டனில் திருமணம்' என்று மட்டுமே விளம்பரப்படுத்தப்பட்டது.

மொத்தம் பதினோரு அத்தியாயங்கள் மட்டுமே எழுதினார். அதற்கேற்ப 'வாஷிங்டனில் திருமணம்' என்பதில் பதினோரு எழுத்துக்கள் பொருத்தமாக அமைந்தன.

புத்தகமாக வெளியான போது, முதல் அத்தியாயத்திற்கு 'வா' என்றும், அடுத்து 'ஷி' என்றும் இப்படியே 'ம்' என்ற எழுத்துடன் கடைசி அத்தியாயத்தை முடித்திருந்தார்.

அந்தக் கதையை எழுதிக் கொண்டிருந்தபோது வாரா வாரம் கதையின் போக்கு குறித்து தன் இனிய நண்பர் ஸ்ரீதர் அவர்களோடு சாவி நுணுக்கமாக விவாதிப்பது உண்டு. சாவிக்கு அந்த விவாதங்கள் பெரிதும் பயன் உள்ளதாக அமைந்தன. அந்த நாட்களை ஸ்ரீதர் நினைவு கூர்கிறார்:

''வாரா வாரம் வாசகர்களிடையே அந்தக் கதை சரித்திரம் படைத்துக் கொண்டிருந்தது. நகைச்சுவைக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது. எதிர்பார்ப்பு அதிகம் ஆகஆக, சாவியின் பொறுப்பு பன்மடங்காயிற்று. 'கீப்பிங் அப் தி டெம்ப்போ' என்பது எளிதான காரியமல்ல. அடுத்த வாரத்துக்கான ஐடியாக்களுக்கான கவலை அதிகமாயிற்று. தினமும் டிரைவ் – இன் – ஹோட்டலில் கூடிப் பேசுவோம்.''

இந்த நகைச்சுவை நவீனத்துக்கு வாய்த்த இன்னொரு பலம் திரு.கோபுலு அவர்களின் சித்திரங்கள்.

''உயிருள்ள அவருடைய சித்திரங்கள் வாசகர்களை வாஷிங்டன் நகருக்கே அழைத்துச் சென்று என் கற்பனைக்கெல்லாம் நிஜ உருவம் தந்து நேருக்கு நேர் காண்பது போன்ற பிரமையை ஏற்படுத்தித் தந்தன'' என்கிறார் சாவி.

முப்பது நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுகூட

அந்தக் கதையை நினைவில் வைத்துக் கொண்டு சாவியைச் சந்திக்கும் பழைய தலைமுறை நண்பர்கள் பாராட்டத் தவறுவ தில்லை. அதுமட்டுமல்ல. வாஷிங்டன் செல்லும் தமிழர்கள் அங்கே சாஸ்திரிகள் குளித்த பொடாமாக் நதியையும், பாலிகை விடப்பட்ட டைடல் பேஸினையும் அதைச் சுற்றியுள்ள செர்ரி மரங்களையும் பார்க்கும் போது சாவியின் 'வாஷிங்டனில் திருமணம்' ஞாபகத்துக்கு வந்து அதுபற்றி ஒருவருக்கொருவர் பேசி மகிழத் தவறுவதில்லை.

தொடரின் இறுதிக் கட்டத்தில் ராஜகோபாலன் – ருக்மிணி கல்யாணம் அடுத்த அத்தியாயத்தில் நடக்கப் போகிறது என விகடனில் ஒரு திருமண அழைப்பிதழ் போலவே அச்சிட்டிருந்தார்கள். முகூர்த்தம் நடக்கப்போகும் தேதி அறிவிக்கப்பட்டிருந்ததால் திருமண தம்பதியரை வாழ்த்தி நூற்றுக்கணக்கான கடிதங்களும் தந்திகளும் விகடன் அலுவலகத்துக்கு வந்து குவிந்தன. சிலர் 'மொய்ப் பணம்' கூட மணியார்டரில் அனுப்பி வைத்தார்கள்! இப்படி, தன் நகைச்சுவையால் வாசகர்க ளைப் பைத்தியமாக அடித்தார் சாவி என்றே சொல்லவேண்டும். இத்தனைக்கும் யார் இதை எழுதுகிறார்கள் என்று கடைசி அத்தியாயம் வரை சொல்லாமல், சஸ்பென்ஸிலேயே வைத்திருந்தார்.

கடைசி அத்தியாயத்தில்தான் 'சாவி' என்று மிகவும் சிறிய எழுத்துகளில் தன் பெயரைப் போட்டு அனுப்பி இருந்தார் சாவி. அதைப் பார்த்த விகடன் ஆசிரியர் பாலு அவர்கள் 'இருந்தாலும் இவ்வளவு தன்னடக்கம் கூடாது' என்று சொல்லிப் பெயரைப் பெரிதாகப் போட வேண்டும் என்று கூறி சாவிக்குத் தெரியாமலே அந்தப் பெயரைப் பெரிதாக அச்சிட ஆணையிட்டிருந்தார்.

அப்புறம் பத்து ஆண்டுகள் கழித்துதான் அமெரிக்கா செல்லும் வாய்ப்பு சாவிக்கு வாய்த்தது. தன் மகள் ஜெயா, நீலகிரி நடராஜன், அவர் மனைவி ஆகியோருடன் சாவி

அமெரிக்கா போனபோதுதான் தம்முடைய கதையில் எந்தெந்த இடங்களைச் சொல்லி இருந்தாரோ அந்த இடங்களையெல்லாம் பார்த்து விட்டு வந்தார்.

டம்பார்ட்டன் ஒக்ஸ், ராக் க்ரீக் பார்க், அம்மாமிகள் அப்பளம் உலர்த்திய ஆர்ட் காலரி மொட்டை மாடி, ஜானவாசம் சென்ற பென்ஸில்வேனியா அவென்யூ, பாலிகை விட்ட டைடல் பேஸின், சாஸ்திரிகள் துணி துவைத்த பொடாமாக் நதி, வாஷிங்டன் ஸ்தூபி, ஆப்ரகாம் லிங்கன் மண்டபம், செர்ரி ப்ளாஸம் இவ்வளவையும் கண்டு வியப்படைந்து போனார். அந்த இடங்கள் தாம் எழுதியபடியே தத்ரூபமாக இருப்பது கண்டு ஏதோ பூர்வ ஜன்மத்தை எட்டிப் பார்ப்பது போல் உணர்ச்சி வசப்பட்டார்.

அந்தப் பயணத்தின்போது 'பாரூஸ் ரெஸ்டாரண்ட்' உரிமையாளர் திரு. நடராஜன் – வி.ஜி.பன்னீர்தாஸ் அவர்களால் சாவிக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்ட நண்பர்– வாஷிங்டனில் யூனியன் ரெயில்வே ஸ்டேஷனில் சாவியை வரவேற்கக் காத்திருந்தார்.

"என் கதையில் வரும் சில வி.ஐ.பி. விருந்தினர்கள் வாஷிங்டன் யூனியன் ஸ்டேஷனில்தான் வந்திறங்குவது போல் எழுதியுள்ளேன். அதனால் அந்த இடத்தை நேரில் பார்க்க ஆசை. எனவே, பிலடல்ஃபியாவிலிருந்து ரெயிலில் வருகிறேன்" என்று முன்கூட்டியே நடராஜனுக்கு தெரியப்படுத்தி இருந்தார். சாவி யூனியன் ஸ்டேஷனில் இறங்கிய போது நடராஜன் அவரை வரவேற்று காரில் தம்முடைய 'பாரூஸ் ரெஸ்டாரண்ட்'டுக்கு அழைத்துப் போனார். அது 'என்.ஸ்ட்ரீட்' (N. STREET) டில் இருந்தது. ஸ்டேஷனிலிருந்து கார் என்.ஸ்ட்ரீட் நோக்கிப் போய்க் கொண்டிருந்த போது சாவி கேட்டார்: "நடராஜன், என்.ஸ்ட்ரீட்டுக்கு வலது பக்கம்தானே போகணும், நீங்க ஏன் லெஃப்ட்ல போறீங்க?"

அசந்துபோன நடராஜன் காரின் வேகத்தைக் குறைத்து 'உண்மையைச் சொல்லுங்க. நீங்க இதுக்கு முன்னே வாஷிங்டன் வந்திருக்கீங்க. இதுதான் முதல் தடவைன்னு பொய்தானே சொல்றீங்க?'' என்றார்.

'இல்லை... இதுதான் முதல் தடவை' என்று சாவி திரும்பத் திரும்பச் சொல்லியும் நடராஜன் நம்பவில்லை. ''ரைட்லதான் போகணும். அது 'ஒன் வே' என்பதால் லெஃப்ட்ல போறேன்'' என்று விளக்கம் சொல்லிவிட்டு 'உண்மையைச் சொல்லுங்க; நிஜமாகவே நீங்க இதற்கு முன் வந்ததில்லையா?' என்று கேட்டார். ''சத்தியமாக இல்லை. வாஷிங்டன் ரோட் மேப்பைத் துருவிப் பார்த்து மனதில் பதித்துக் கொண்டிருக்கிறேன். பரீட்சைக்குப் படித்ததுபோல் இந்நகரம் பற்றிப் பல புத்தகங்கள் வேறு படித்திருக்கிறேன். அதனால் எல்லாமே ஞாபகம் இருக்கிறது'' என்றார் சாவி.

'பாரூஸ் ரெஸ்டாரண்ட்'டில் சாவிக்கு அன்று வாழை இலை போட்டு ஜானவாச சாப்பாடு தடபுடலாகத் தயாரித்திருந்தார் நடராஜன். காரில் போகும்போதே திருவாவடுதுறை நாதஸ்வரம் டேப்பில் தோடி ஒலித்தது.

அதன்பின் பலமுறை சாவி அவர்கள் வாஷிங்டன் போய் வந்தபோதிலும் அந்த முதல் பயணம் அவரால் மறக்க முடியாத பயணமாக அமைந்து போனது.

இந்தக் கதை நாடக மேடையிலும் வெற்றிகரமாக வலம் வந்தது. பல்வேறு குழுக்கள் இந்த நாடகத்தை மேடையேற்றி இருக்கின்றன. சாவியின் எழுத்தை ரசித்துப் படிக்கும் நடிகர் பூர்ணம் விசுவநாதன் அவர்கள் தம் நினைவுப் பாதையில் பின்னோக்கிப் பயணம் செய்கிறார்:

''ஒருநாள் திருவல்லிக்கேணி ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பின்

அறிவிப்பு ஒன்றைப் பத்திரிகையில் பார்த்தேன். ‘வாஷிங்டனில் திருமணம்’ கதையை அவர்கள் நாடகமாகப் போடப் போகிறார்கள் என்று தெரிந்தபோது நான் சற்றே வியப்புற்றேன். சாவியின் அந்த அரிய கற்பனையைப் படித்து ரசிக்க முடியுமே தவிர, யாரும் அதை மேடையேற்றத் துணிய முடியாது என்றுதான் ஒரு பொது அபிப்பிராயம் நிலவி வந்தது. அந்த நாளில், திருவல்லிக்கேணி ஃபைன் ஆர்ட்ஸ் க்ளப் துணிச்சலுடன் இப்படி ஒரு முயற்சியில் இறங்குவது பற்றி நான் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே இல்லை. அன்று மாலை முழுவதும் நான் என் மனைவியுடன் இதுபற்றியே பேசிக் கொண்டிருந்தேன். ஆழ்ந்து படித்து ரசித்து இருந்ததால் கதையின் உரையாடல் பகுதிகள் பலவற்றை மனப் பாடமாக ஒப்புவித்துக் கொண்டிருந்தேன். மனைவிக்கும் கதை முழுவதும் அத்துபடி என்பதால் அவளும் நன்கு ரசித்துக் கொண்டிருந்தாள். அப்போது வாசல் மணி அடித்தது. திருவல்லிக்கேணி ‘ஃபைன் ஆர்ட்ஸ்’ கிளப் உறுப்பினர்கள் இருவர் உள்ளே வந்தார்கள்.

‘‘‘வாஷிங்டனில் திருமணம்’ பற்றிய அறிவிப்பைப் பார்த்திருப்பீர்கள். நீங்கள் தில்லியில் இருந்து இங்கே மாற்றலாகி வந்துவிட்டதால், நாடகத்தில் நீங்களும் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அது பற்றிப் பேசத்தான் வந்தோம்’’ என்று அவர்கள் சொல்லி முடிப்பதற்குள் நான் முந்திக் கொண்டு என் சம்மதத்தைத் தெரிவித்தேன். ‘‘நானும் என் மனைவியும் இப்போதுதான் பேசிக் கொண்டிருந்தோம். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள், இது என் பாக்கியம்’’ என்றேன்.

மணப்பெண்ணின் தந்தை வேடம் எனக்கு. நடிக நடிகையர் எல்லோரும் மிகப் பொருத்தமாக அமைந்து விட்டதால் ஒத்திகை ஏகப்பட்ட விறுவிறுப்புடன் நடந்தது. எல்லோரும் ஆர்வத்தோடு ஈடுபட்டு நடித்து அரங்கேற்றத்தையே அமர்க்கள மாக்கி விட்டோம். நடிகர் கோபி தமது அமெரிக்க நண்பர்கள் சிலரை அவர்களது குடும்பங்களுடன் அழைத்து வந்து நாடகத்தில்

சேர்த்து விட்டதால் நாடகத்துக்கு ஒரு தனிச்சிறப்பு ஏற்பட்டு விட்டது. இந்த அமெரிக்கர்களின் ஒத்துழைப்பு பல மாதங்கள் நீடித்ததால் நாடகம் கோலாகலமாக நடந்தது. சாவியின் உற்சாகத்துக்கு அளவேயில்லை. அரங்கேற்றமே ராசியாக அமைந்தது. அடுத்தடுத்து எத்தனை நாட்கள்! எங்கு பார்த்தாலும் 'வாஷிங்டனில் திருமணம்' பற்றிய பேச்சுதான். ஊரின் மூலை முடுக்குகளிலெல்லாம் அதன் போஸ்டர்கள்தான்.

அப்போது 'ஆனந்த விகடன்' ஆசிரியரிடமிருந்து ஒரு சேதி வந்தது. "'வாஷிங்டனில் திருமணம்' விகடனில்தான் பிரசுரமாயிற்று. அதனால் அதை நாடகமாக்கி மேடையேற்றுவதற்கு விகடனின் அனுமதியை நீங்கள் பெற்றிருக்க வேண்டும். ஆகவே எங்கள் அனுமதி பெற்றாக வேண்டும்."

இதைப் பார்த்து நாங்கள் சாவியிடம் ஓடினோம். அவர், "கதை என்னுடையது; எந்தச் சட்டத்தின்படி பார்த்தாலும் அதன் மீதான உரிமை முழுவதும் என்னுடையதுதான். இதை அப்படியே விகடன் ஆசிரியரிடம் சொல்லுங்கள்" என்றார் சாவி.

விகடன் ஆசிரியர் திரு. எஸ்.எஸ்.வாசனைப் போய்ப் பார்த்தோம். சாவி சாரின் வாதத்தை அவரிடம் சொன்னோம். இரண்டு நிமிடம் அமைதி. அதன் முடிவில் வாசன் அவர்கள் சொன்னார்கள்: "இரண்டு நாள் கழித்து என் மகன் பாலுவை விகடன் ஆபீஸில் போய்ப் பாருங்கள்."

அதேபோல் நாங்கள் விகடன் ஆபீஸுக்குச் சென்ற போது பாலு அவர்கள் எங்களை வாசலிலேயே வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று காப்பி கொடுத்து உபசரித்தார். அப்புறம் விஷயத்தைச் சொன்னார்: "நாங்கள் வக்கீலைக் கலந்து பேசி விட்டோம். சாவி இஷ்டப்படியே நாடகத்தை நடத்திக் கொண்டு போங்கள்; பெயருக்கு விகடனுக்கு ராயல்டியாக ஏதாவது ஒரு சிறு தொகை கொடுத்தால் போதும். ஒரு நாடகத்துக்கு ஐந்து ரூபாய் கொடுங்கள்" என்று அவர் சொன்ன போது எங்களால் நம்பவே முடியவில்லை...

இப்படியாக, ஒரு பிரமாண்டப் புயலாக வெடிக்குமோ என்று நாங்கள் பயந்த விஷயம், வெல்வெட் போன்ற மிருதுத்தன்மையுடன் எங்கள் மீது அமர்ந்து எங்களுக்கு ஒப்பற்ற சுகத்தைக் கொடுத்தது.''

இது தொடர்பான இன்னொரு முக்கிய செய்தியையும் சொல்ல வேண்டும். இந்த நகைச்சுவைப் புதினம் இன்று மிகப்பிரபலமாக இயங்கி வரும் ஒரு தன்னார்வத் தொண்டு அமைப்பின் நிறுவனரையும் அவரது செயல்பாடுகளில் முடுக்கி விட்டிருக்கிறது.

''வாஷிங்டனில் திருமணம் நம் உள்ளத்திலே செதுக்கப்பட்ட கல்வெட்டாகும். இந்தக் கருத்தினைப் பின்பற்றி நான் பெண் உறுப்பினர்களைக் கொண்டு சர்வதேச நவராத்திரி கொலு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தேன். அதில் சென்னையில் வசிக்கும் அமெரிக்கர்கள், ரஷ்யர்கள், ஆஸ்திரேலியர்கள் போன்ற வெளிநாட்டவர் பெருமளவில் பங்கு கொண்டார்கள். வாஷிங்டன் கொலு இங்கு வைக்கப்பட்டது. வந்திருந்த வெளிநாட்டவர் அனைவரும் அந்தக் கொலுவை ரசித்து, 'அயல்நாடுகளில் வெற்றி கண்ட யோசனைகளைப் பெற்று ஏன் அவற்றுக்கு இந்தியாவில் செயல்வடிவம் தரக்கூடாது?' என்று ஒரே குரலில் கேட்டார்கள். நம் திருமணத்தை சாவி அமெரிக்காவில் நடத்தியது போல் அயல்நாடுகளில் நான் பார்த்த நல்ல அம்சங்களுக்குத் தரப்பட்ட செயல் வடிவம்தான் எக்ஸ்னோரா'' என்கிறார் எக்ஸ்னோரா அமைப்பின் நிறுவனரும் தலைவருமான நண்பர் எம்.பி. நிர்மல்.

இப்படி மிக மிகப் பரவலான முறையில் மக்களைச் சென்றடைந்து, நகைச்சுவைப் படைப்புலகில் தனக்கென தனியொரு முத்திரையைப் பதித்துவிட்ட அற்புதமான கற்பனை சாவி அவர்களின் 'வாஷிங்டனில் திருமணம்.'

---

# 16. பெருந்தலைவர் காமராஜ்

'ஒரு பத்திரிகையாளனாக நீங்கள் என்ன சம்பாதித்தீர்கள்?' என்று சாவியிடம் கேட்டால், 'தமிழகத்தின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பு கிட்டியதே – அவர்களில் சிலரோடு நட்பு கொள்ளும் பேறு கிட்டியதே, அதுதான் நான் சம்பாதித்த பெரும் சொத்து' என்கிறார்.

காமராஜர், பக்தவத்சலம், ஒ.வி.அளகேசன், சி.சுப்பிரமணியம், ஆர்.வெங்கட்ராமன், பொள்ளாச்சி மகாலிங்கம், பெரியார், வாரியார், ஜி.டி.நாயுடு, சர்க்கரை மன்றாடியார், ஜி.ஆர்.கோவிந்தராஜுலு, திருமதி சந்திரகாந்தி அம்மையார், ஜி.ஆர்.தாமோதரன் என்று சாவி அவர்களின் வி.ஐ.பி. நண்பர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இவர்களை ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் பார்த்துப் பேசி பேட்டி கண்டதுடன் முதல் சந்திப்பு முடிந்து போனாலும், பின்னர் பத்திரிகையாளர் என்ற எல்லையைத் தாண்டி அவர்களது நட்பைப் பெறும் வகையில் சாவிக்கு அவர்கள் மதிப்பும் மரியாதையும் தந்து அவருடன் பழகினார்கள்.

குறிப்பாக பெருந்தலைவர் காமராஜ் அவர்களோடு சாவிக்குக் கிட்டிய நட்பு ஒரு சகோதர வாஞ்சையுடன் அமைந்தது.

ஒருமுறை சாவி விருதுநகர் சென்று காமராஜரின்

தாயாரை பேட்டி கண்டு விகடனில் எழுதினார். பின்னர் காமராஜரும், ஒ.வி.அளகேசனும் செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டங்களில் காரில் சுற்றுப் பயணம் போன போது அவர்களுடன் சாவியும் போயிருந்தார். அந்த வாரம்தான் காமராஜின் தாயாரைச் சந்தித்து சாவி எழுதிய கட்டுரை விகடனில் வெளியாகியிருந்தது. அந்தக் கட்டுரையைப் பாராட்டி திரு. அளகேசன் பேசிக் கொண்டு வந்தார். காமராஜர் புன் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

பின்னர் ''விருதுநகர் போயிருந்தீங்களா? அம்மாவைப் பார்த்தீங்களா? என்ன சொன்னாங்க?'' என்று சாவியிடம் விசாரித்தார்.

''நீங்க அனுப்பற பணம் போதலையாம். 'அறுபது ரூபாய் பத்துமாய்யா? சொல்லுங்கய்யா' என்று என்னைத் திரும்பத் திரும்பக் கேட்டாங்க'' என்றார் சாவி.

''அது போதும்ணேன். அதுக்கு மேல என்ன செலவு?'' என்று சாவியையே திருப்பிக் கேட்டார் காமராஜ்.

அதன் பின்னர் ஒருநாள் காமராஜர் அச்சிறுப்பாக்கம் பயணிகள் விடுதியில் தங்க நேரிட்டபோது அவருடன் சாவியும் அங்கே தங்க வேண்டியதாயிற்று. காமராஜர் எப்போதும் இரவில் தனியாகத்தான் படுத்துறங்குவார். அவருடைய அறையில் வேறு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. அன்று இரண்டு இட்லியும் ஒரு தோசையும் சாப்பிட்டதுடன் இரவு ஆகாரத்தை முடித்துக் கொண்டார். பிறகு ''கதவை வெளியே தாழ்ப்பாள் போட்டுக்குங்க. காலைல ஆறு மணிக்கு திறந்தாப் போதும்'' என்று அரசு அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு உள்ளே போய் உறங்கத் தொடங்கி விட்டார். 'இப்படி ஒரு எளிய வாழ்க்கையா?' என்று சாவி வியந்து போகிறார்.

காமராஜரின் புகழ் மாநில எல்லைகளைத் தாண்டி

தேசிய அளவில் விசுவரூபம் எடுத்திருந்த நாட்களில் ஒருநாள் அவரை அவரது இல்லத்தில் சாவி சென்று பார்த்தபோது பேச்சுவாக்கில் ''நான் நாளை காலை டெல்லிக்குப் போக இருக்கிறேன்'' என்று காமராஜர் சொன்னார். சட்டென்று ''நானும் வரட்டுமா?'' என்று சாவி கேட்டு வைத்தார். கொஞ்சம் கூடப் பந்தா இல்லாமல் ''வாங்க, வாங்க; நீங்க என் கூடவே தங்கலாம்'' என்றார் காமராஜ். 'ஏன்? எதற்காக வரீங்க?' என்று ஒரு வார்த்தை கூட அவர் கேட்காதது சாவிக்குப் பெரும் வியப்பு.

விகடன் பொறுப்பாசிரியர் திரு. பாலு அவர்களிடம் போய் இதைச் சொன்னபோது 'இந்த நல்ல வாய்ப்பை விட்டு விடக்கூடாது' என்பதால் சாவியின் விமானப் பயணத்துக்கு அன்றே ஏற்பாடு செய்தார். அப்போதுதான் 'காமராஜருடன் ஒரு நாள்' என்ற தலைப்பில் விகடன் தீபாவளி மலரில் கட்டுரை எழுதினார் சாவி.

''டெல்லியில் அந்தப் பெருந்தலைவரோடு நான் தங்கிய சில நாட்கள் மறக்க முடியாதவை. கிங் மேக்கர் என்று காமராஜர் அழைக்கப்பட்ட காலம் அது. 'காமராஜ் பிளான்' என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, அதைச் செயல் வடிவமாக்கும் பொருட்டு முதல்வர் பதவியிலிருந்து விலகி கட்சிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம் அது. காமராஜரின் கடைக்கண் பார்வை நம் மீது விழாதா என்று தலைவர்கள் பலர் ஏங்கிக் காத்துக் கொண்டிருந்தனர். அதையெல்லாம் அவர் கூடவே இருந்து கவனிக்கும் அபூர்வ வாய்ப்பு பெற்ற ஒரே அதிர்ஷ்டசாலி நான். அதுல்யா கோஷ் போன்ற படா படா அரசியல்வாதிகள் எல்லாம் அவர் முன்பாக உட்காரவே அச்சப்பட்டார்கள். அவர் மீது அப்படியொரு மரியாதை கொண்டிருந்தார்கள். இந்திய அரசியலின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் தகுதி அப்போது காமராஜருக்கு இருந்தது.

இந்திராகாந்தி அம்மையார், காமராஜர் தங்கியிருந்த தமிழ்நாடு விருந்தினர் மாளிகைக்கு வந்து அவரைச் சந்தித்து விட்டுப்போன காட்சி இன்றும் என் மனத்திரையில் நிழலாடுகிறது. அப்போது அடுத்த பிரதமர் யார் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு காமராஜர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மொரார்ஜி தேசாய், பிரதமர் பதவி தனக்கு வேண்டும் என்று முரண்டு பிடித்துக் கொண்டிருந்தார். இந்திரா காந்திக்கும் அந்த ஆசை மனதுக்குள் இருந்தது.

தமிழ்நாடு கெஸ்ட்ஹவுஸில் அத்தனை காங்கிரஸ் தலைவர்களும் பிரமுகர்களும் காமராஜரைப் பார்த்துப் பேசி விட்டுப் போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது இந்திராகாந்தி அம்மையாரும் காமராஜரின் மனதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு அவரைச் சும்மா பார்க்க வருவது போல் வந்திருந்தார். காமராஜர் அறைக்குள் சென்றவர் ஐந்தே நிமிடத்தில் வெளியே வந்து காரில் ஏறிப் போய் விட்டார். அன்றிரவு காமராஜருடன் சேர்ந்து டைனிங் ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது நான் "அம்மா எங்க வந்தாங்க? என்ன சொன்னாங்க?" என்று கேட்டேன். "அந்தம்மாவுக்கு பிரதம மந்திரி ஆவணும்னு ஆசை. நீங்க வீட்ல போய் உக்காருங்க... எனக்கு எல்லாம் தெரியும்னு சொல்லி அனுப்பிச்சேன்" என்றார்.

பஞ்சாப் மாநிலத்திலிருந்து தர்பாரா சிங் வந்து காமராஜரைப் பார்த்துவிட்டுப் போனார். லால் பகதூர் சாஸ்திரி வந்தார். இன்னும் எத்தனை எத்தனையோ வி.ஐ.பி.க்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள்.

முறையான கல்வி ஏதும் இல்லாத – அரசியல் ஆடம்பரங்கள் ஏதும் இல்லாத – ஒரு எளிய தமிழரைக் காண இந்தியாவின் மிகப் பெரிய மனிதர்கள் காத்திருப்பதைக் கண்ட போது இப்படிப்பட்ட ஒரு பெருந்தலைவருடன் சகஜமாகப்

பழகும் வாய்ப்பு கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் நான் திளைத்துப் போயிருந்தேன்!

காமராஜரோடு டெல்லியில் சுற்றி அலைந்த களைப்பு மேலீட்டால் ஒரு நாள் இரவு தமிழ்நாடு ஹவுஸில் அவரது அறையிலேயே படுத்துத் தூங்கிப் போனேன். நான் பலமான குறட்டை விட்டிருக்க வேண்டும். யாரோ என்னைத் தட்டி எழுப்பினார்கள். திடுக்கிட்டு எழுந்து பார்த்தால் காமராஜர்!

''சரியாப் போச்சு. நான்தான் குறட்டை விடுகிறவன்னா, நீங்க எனக்கு மேல சத்தமா விடறீங்களே! எழுந்து போய்ப் பக்கத்து ரூம்ல படுத்துக்குங்க... அப்பதான் நானும் நிம்மதியாத் தூங்கலாம். நீங்களும் நல்லாத் தூங்க முடியும்'' என்று சொல்லிச் சிரித்தார் என்று சாவி தமது 'பழைய கணக்கு' என்ற புத்தகத்தில் எழுதி இருக்கிறார்.

டெல்லியில் ஒருநாள் சாவியிடம், 'வாஷிங்டனில் திருமணம்' கதை ரொம்ப நல்லா இருக்குன்னு எல்லாம் பேசிக்கிறாங்களே! நான் இன்னும் படிக்கலே. புக் இருக்கா?'' என்று கேட்டிருக்கிறார். உடனே சாவி தம்மிடமிருந்த அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்திருக்கிறார். அன்றிரவே அந்த நாவலைப் படித்து முடித்துவிட்டு 'நல்லா இருக்கு' என்று ஒரே வார்த்தையில் காமராஜர் பாராட்டியிருக்கிறார்.

திரு. பக்தவத்சலம் அப்போது தமிழக முதல்வராக இருந்தார். 'காமராஜர் திட்ட'த்தின் கீழ் முதல்வர் பதவியில் இருந்து காமராஜர் விலகிய பின்னர் திரு. பக்தவத்சலம் பொறுப்பேற்றார். 'தமிழ் நாட்டு மக்களிடையே நல்ல பண்புகளும், பழக்க வழக்கங்களும் வளர வேண்டுமானால் நமது புராண இதிகாசக் கதைகளைக் கதாகாலட்சேபம், நாடகம் வாயிலாகப் பட்டித் தொட்டியெங்கும் பரப்பும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்' என்ற யோசனையை முதல்வர் பக்தவத்சலம் திருவையாற்றில் வெளியிட்டார்.

டெல்லியில் காமராஜருடன் தங்கியிருந்த போது பக்தவத்சலம் அவர்களின் இந்த யோசனை பற்றி சாவி குறிப்பிட்டதுடன் இதற்கு நீங்கள்தான் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ''என்ன பண்ணலாங்கறீங்க?'' என்று கேட்டார் காமராஜர்.

'நீங்க அனுமதி கொடுத்தால் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் வாரியார் சுவாமிகளைக் கொண்டு ராமாயணக் கதை சொல்லச் சொல்லலாம். எஸ்.வி.சகஸ்ர நாமம் அவர்களை அரிச்சந்திரா நாடகம் போடச் சொல்லலாம். அப்புறமா இதைத் தமிழ்நாடு முழுவதும் கொண்டு போகலாம்' என்று சாவி சொன்ன யோசனை காமராஜருக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று.

''சரி, நீங்களே செய்யுங்க; ஒரு கமிட்டி போட்டுக்குங்க'' என்று கணமும் தாமதியாமல் அனுமதி வழங்கி விட்டார் காமராஜ்.

சென்னை வந்ததும் சாவி இதற்கென ஒரு கமிட்டியை அமைத்தார். 'சத்திய சபா' என்று பெயர் சூட்டப்பட்டது. காமராஜர் அதன் தலைவராக இருக்கச் சம்மதித்தார். சாவி செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திருமதி வாசன் உப தலைவராகவும், ரத்னம் ஐயர், லிப்கோ சர்மா போன்ற பிரமுகர்கள் கமிட்டி அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டு அடுத்த நாளே வேலை வேகமாக ஆரம்பிக்கப்பட்டது. சத்திய சபா கமிட்டிக் கூட்டம் தேனாம்பேட்டை அரங்கில் அடிக்கடி கூட்டப்பட்டது.

திட்டமிட்டபடி வாரியார் ராமாயணக் கதை காங்கிரஸ் மைதானத்தில் கலகலப்பாகத் தொடங்கியது. தொடர்ந்து நாற்பது நாட்கள். இடையிடையே சகஸ்ரநாமத்தின் நாடகங்கள். மைதானம் மேடு பள்ளங்கள் திருத்தப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு விழாக் கோலம் பூண்டது. ஏ.வி.எம். செட்டியார் அவர்கள் முகப்பு வாயிலை பிரபல ஓவியர் சேகர் அவர்களைக்

கொண்டு அலங்கரித்துக் கொடுத்தார். 'ஒளவையார்' படத்துக்காக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய பிள்ளையார் சிலையை திரு. வாசன் அவர்கள் ராமாயணக் கதை நடக்கும் இடத்தில் வைத்துக் கொள்ள அனுமதி வழங்கினார். திரு. பக்தவத்சலம் கொடியேற்றி வைக்க, மைசூர் மகாராஜா (அப்போது சென்னை கவர்னர்) அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார். தினம் தினம் கூட்டம் அதிகமாகிக் கொண்டே போய் மைதானம் நிரம்பி வழிந்தது. எவ்வளவு பேர் வந்தும் என்ன? கதை கேட்க காமராஜர் வராமலிருக்கிறாரே என்ற குறை சாவிக்கும், வாரியாருக்கும் மற்ற கமிட்டி அங்கத்தினர்களுக்கும் இருந்தது.

தலைவரைப் போய் அழைத்த போது 'என்னைக் கூப்பிடணுமா என்ன? மெட்ராஸ்ல இருக்கச்சே டைம் கிடைக்கிறப்ப வந்துடறேன்' என்று காமராஜர் உறுதியளித்தார்.

ஒருநாள் திடீரென 'இன்று கதை கேட்க காமராஜர் வருகிறார்' என்று டெலிபோனில் தகவல் வந்தது.

இதை வாரியாரிடம் சாவி சொல்ல, வாரியாருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அன்று அனுமன் ஆற்றல் பற்றி வாரியார் விஸ்தாரமாகப் பேசினார்.

'தன்னிடம் எந்தக் காரியத்தை ஒப்படைத்தாலும் அதை வெற்றிகரமாகச் சாதிக்கக் கூடியவர் அனுமர். காரணம்? அவர் ஒரு பிரம்மசாரி. பிரம்மசாரிகள் எப்போதுமே தங்களிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புகளை வெற்றியாகச் செய்யக் கூடிய ஆற்றலும் வல்லமையும் பெற்றவர்கள்' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த தருணத்தில் காமராஜர் அரங்கத்துக்குள் நுழைந்தார். கூட்டத்தினர் காமராஜர் வரும் திக்கு நோக்கி ஆவலோடு திரும்பிப் பார்த்து ஆரவாரித்தனர். 'நான் அனுமனைச் சொல்கிறேன், நீங்கள் யாரை எண்ணி மகிழ்கிறீர்களோ?' என்று வாரியார் தமக்கே உரிய 'டைமிங்'கில் ஒரு போடு போடவும்

கூட்டத்தினர் செய்த ஆரவாரமும், எழுப்பிய கரவொலியும் அடங்க நெடுநேரமாயிற்று.

காமராஜர் அவர்களோடு சாவிக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஏராளம். அவற்றில் இவை ஒரு சில துளிகளே. ஒரு தனிப் புத்தகமே எழுதும் அளவுக்கு சாவி – காமராஜர் நட்பு வளர்ந்தது.

காமராஜர் என்ற பெயரைச் சொன்னால் இன்றும் சாவி அவர்கள் பழைய நினைவுகளில் மூழ்கி முகம் மலர்வதை நான் பார்த்திருக்கிறேன்.

# 17. 'விசிறி வாழை'க்குப் பிறகு...

'வாஷிங்டனில் திருமணம்' தொடர் 'சாவி அடுத்து என்ன எழுதப் போகிறார்' என்று வாசகர்களை எதிர்பார்க்க வைத்தது.

ஒருநாள் திரு. பாலு அவர்கள் சாவியிடம் 'வயதான தொழிலதிபருக்கும் சமூகத்தில் மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் பெண்மணிக்கும் இடையே காதல்' என்று ஒரு 'ஒன் லைன் ஸ்டோரி'யைச் சொல்லி விட்டு 'இதை விரிவாக்கித் தொடர்கதையாக எழுத முடியுமா பாருங்க. இது ஒரு புதுமையான சப்ஜெக்ட். ஜெயகாந்தனோ அல்லது நீங்களோ தான் இதை வெற்றிகரமாகச் செய்ய முடியும்'' என்றார்.

கதையே இல்லாமல் ஒரு கதை – அதுவும் வயதானவர்கள் காதல் கதை – தன்னால் முடியுமா என்று சற்று யோசித்தார் சாவி. பின்னர், தமக்கே உரித்தான துணிச்சலுடன் ''சரி; எழுதுகிறேன். 'விசிறி வாழை' என்பது கதையின் தலைப்பு'' எனப் பளிச்சென்று ஒரு தலைப்பும் சொல்லிவிட்டார்.

சாவிக்கு இது ஒரு சவாலாக அமைந்து விட்டது. தம்மால் நகைச்சுவை மட்டுமல்ல, சீரியஸாகவும் எழுத முடியும் என்பதை நிரூபிக்க இது ஒரு வாய்ப்பு என்றெண்ணி அந்தச் சவாலை அவர் ஏற்றுக் கொண்டு விட்டார். தம் மனதில் பதிவாகி இருந்த சில கேரக்டர்களை அந்தக் கதையில் உருவகப்படுத்தினார். வெள்ளம் போல் கற்பனை புரண்டது.

'விசிறி வாழை' என்றதொரு அற்புதமான நாவல் விகடனில் தொடர்கதையாக வெளியானது. இந்தக் கதையின் சிறப்பு அம்சம் கதாபாத்திரங்கள் எல்லோரும் நீண்ட காலம் வாசகர்கள் மனதில் நிலைத்து நிற்கக் கூடிய கேரக்டர்களாக அமைந்து விட்டதுதான்.

''விசிறி வாழை என்று ஏன் பெயர் வைத்தீர்கள்?'' என்று கேட்டதற்கு ''என் கதையில் கதாநாயகியின் வாழ்க்கை யாருக்கும் உபயோகமாகாமல் வீணாய்ப் போகிறது. விசிறி வாழை பார்த்திருப்பீர்கள். பார்க்க அழகாக இருக்கும். ஆனால் அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்காது. பார்வதியின் சொந்த வாழ்க்கை அத்தகையது என்பதை மனதில் கொண்டுதான் அதையே கதையின் தலைப்பாக வைத்தேன்'' என்கிறார் சாவி.

'விசிறி வாழை' சாவியின் எழுத்துத் திறமையின் இன்னொரு பரிமாணத்தை வாசகர்களுக்குக் காட்டியது. இந்தத் தொடர்கதை பின்னர் புத்தகமாக வெளிவந்தபோது 'இந்தக் கதையை நான் எழுத ஆரம்பித்தபோது என் கதாநாயகிக்காக கதை முடிவில் யாரேனும் ஒருவர் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டாலே போதும். எனக்குக் கிடைத்த வெற்றியாக அதை நான் கருதுவேன்' என்று எழுதியிருந்தேன். கதை முடிந்த போது ஒரு சொட்டு அல்ல; ஒரு குடம் கண்ணீரே கிடைத்து விட்டது'' என்று அப்புத்தகத்தின் முன்னுரையில் சாவி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க அதிபர் ஜான் எஃப்.கென்னடி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார். உலகம் முழுவதும் சோக அலையை எழுப்பிய மரணமாக அது அமைந்தது. உலக மக்களை அவர் மாதிரி கவர்ந்த அமெரிக்க அதிபர் வேறு யாரும் இதுவரை தோன்றவில்லை. கென்னடி கொலையுண்டதும், அவரைப் பற்றி சின்னதாக ஒரு தொடர் எழுதினால் என்ன என்று சாவிக்குத்

தோன்றியது. உடனே அமெரிக்கன் நூல் நிலையத்துக்குப் போய் கென்னடியின் வாழ்க்கையை விவரிக்கும் நாலைந்து புத்தகங்களை வாங்கி வந்து வேகம் வேகமாய்ப் படித்து முடித்தார்.

உதவி ஆசிரியர் மணியன் சாவியைப் பார்க்க அவர் அறைக்கு வந்தார். சாவியின் மேசை மேல் இருந்த அந்தப் புத்தகங்களைப் பார்த்து விட்டு, ''இதென்ன சாவி! கென்னடியைப் பற்றி எழுதப் போகிறீர்களா?'' என்று கேட்டார்.

''அப்படித்தான் நினைத்தேன். வெளிநாட்டுத் தலைவரைப் பற்றிப் படிப்பதற்கு வாசகர்களிடம் அவ்வளவு ஆர்வம் இருக்குமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகவே புத்தகங்களைத் திருப்பிவிட எண்ணியுள்ளேன்'' என்றார் சாவி.

''நீங்கள் இவற்றைத் திருப்பிக் கொடுத்து விடாதீர்கள். நான் ஒரு தரம் படித்து விட்டுத் தருகிறேன்'' என்று அத்தனைப் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு தன் அறைக்குப் போய் விட்டார் மணியன்.

அந்தச் சமயம்தான் புவனேசுவரத்தில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற இருந்தது. காமராஜ் அவர்கள் தான் அந்த ஆண்டு மாநாட்டின் தலைவர். தலைமை உரையைத் தமிழிலேயே எழுதிப் படித்த வரலாறு அங்கே நிகழ்ந்தது. பெருந்தலைவர்கள் பலர் கலந்து கொள்ளும் மிக முக்கியமான மாநாடு அது என்பதால் விகடன் நிருபராக யாரையாவது அங்கே அனுப்ப வேண்டும் என்று ஆசிரியர் முடிவு செய்தார்.

''சாவிதான் அந்த மாநாட்டுக்குப் போய் கட்டுரை எழுதத் தகுதியானவர். அவருக்குத்தான் காமராஜரை பர்ஸனலாகத் தெரியும்'' என்று மணியன் திரு. பாலசுப்ரமணியன் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்.

அடுத்த நாளே சாவி புவனேசுவர் காங்கிரஸ் மாநாட்டுக்குப் புறப்பட்டு விட்டார். சாவியிடமிருந்து எடுத்துச் சென்ற கென்னடி பற்றிய புத்தகங்களைப் படித்துப் பார்த்த மணியன் 'கென்னடியின் கதை' என்ற தலைப்பில் சில வாரங்கள் தொடர் கட்டுரையாக எழுதுவதற்கு ஆசிரியரிடம் அனுமதி பெற்று அடுத்த வாரமே எழுதவும் தொடங்கி விட்டார்.

விகடன் வாசகர்கள் மிகுந்த ஆவலுடன் அதைப் படித்தார்கள். வாசகர்களிடம் அந்தத் தொடர் எடுபடுமா என்று சந்தேகப்பட்டது சரியல்ல என்பது நிரூபணமாயிற்று.

" 'கென்னடியின் கதை'யை மணியன் எழுதி முடித்த பின்னர் அமெரிக்கத் தூதரகத்திலிருந்து 'உங்கள் நிறுவனத்தில் இருந்து ஒரு உதவி ஆசிரியரை அமெரிக்காவுக்கு எங்கள் விருந்தினராக அனுப்பி வையுங்கள்' என்று விகடன் ஆசிரியருக்கு ஒரு அழைப்பு வந்தது. அந்த அழைப்பிலிருந்த உண்மையான வாசகம் இதுதான் என்று என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. 'வாஷிங்டனில் திருமணம்' எழுதியதால் எனக்குக் கிடைத்திருக்க வேண்டிய வாய்ப்பு அது என்று மட்டும் என்னால் கூற முடியும். 'கென்னடியின் கதை'யை தான் எழுதி இருப்பதை மணியன் தூதரகத்துக்குத் தெரியப்படுத்தி, அந்த அழைப்புக்குத் தன்னை உரியவராக்கிக் கொண்டாரோ என்பதே என் சந்தேகம்.

அதுதான் மணியனின் முதல் வெளிநாட்டுப் பயணம். பிறகு அவர் தொடர்ந்து எழுதிய பயணக் கதைகளுக்கு இந்தப் பயணமே வழி வகுத்தது. மணியன் அமெரிக்கா போனது பற்றி எனக்குப் பொறாமை எதுவும் இல்லை. ஆனால் எனக்குக் கிடைத்திருக்க வேண்டிய அந்த வாய்ப்பை மணியன் சுவீகரித்து விட்டாரோ என்ற ஆதங்கம் என் நெஞ்சில் ஒரு மூலையில் அரித்துக் கொண்டே இருந்தது.

பின்னர் பல வருடங்கள் கழித்து நான் 'குங்குமம்' ஆசிரியராகி விட்டதால் விகடன் நடத்திய சிறுகதைப் போட்டி ஒன்றுக்கு என்னையும் ஒரு நடுவராக பாலு அழைத்திருந்தார். அப்போது 'இதயம் பேசுகிறது' ஆசிரியர் என்ற முறையில் மணியனும் நடுவராக அழைக்கப்பட்டிருந்தார். குமுதம் எஸ்.ஏ.பி., கலைமகள் கி.வா.ஜ., மக்கள் குரல் டி.ஆர்.ஆர். என்று தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள் அத்தனை பேரும் நடுவர்களாக வந்திருந்தனர். இறுதி முடிவுகளைத் தீர்மானிக்க விகடன் அலுவலகத்தில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார் பாலு. போட்டியில் வெற்றி பெற்றவர்கள் யார் யார் என்பது முடிவானதும் எல்லா நடுவர்களும் புறப்பட்டு விட்டனர்.

'சரி... அப்ப நானும் கிளம்பறேன்' என்று நான் எழுந்ததும் பாலு அவர்கள் சாவியைப் பார்த்து, ''போகலாம் இருங்க ஸார். ரொம்ப நாளாச்சு, உங்களோடு சிரித்துப் பேசி'' என்று சாவியைத் தம் அறைக்கு அழைத்துச் சென்று நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். ''ஏறத்தாழ ஒரு மணிநேரம் மனம் விட்டுப் பழைய சம்பவங்களையெல்லாம் அசை போட்டோம். அப்போது அந்த அமெரிக்கப் பயண விவகாரம் சம்பந்தமான என் மனக்குறையை திரு. பாலு அவர்களிடம் விவரித்தேன்.

பாலு அவர்கள் ''அதெல்லாம் நடந்து போன விஷயம். அதை விடுங்க'' என்று முத்தாய்ப்பு வைத்தது போல் முடித்து விட்டார்.

பாலுவிடம் என் மனக்குறையை மனம் திறந்து சொல்லி விட்ட பிறகு என் மனம் இலேசாகி விட்டது. அப்புறம் அந்தச் சம்பவம் பற்றி நான் நினைப்பதே இல்லை' என்கிறார் சாவி.

# 18. முதல் தரிசனம்

கோபாலபுரம் கான்ரான்ஸ்மித் ரோடில் காஞ்சி மாமுனிவர் முகாமிட்டிருந்தார். சாவி அப்போது கோபாலபுரத்தில் வசித்து வந்தார்.

விகடனில் உதவி ஆசிரியராக இருந்த ஸ்ரீதரும் சாவியும் நெருங்கிய நண்பர்கள். அன்று மகா பெரியவர் ஒரு பங்களாவின் காம்பவுண்டுக்குள் மேனா என்கிற இருக்கையில் படுத்திருந்தார். சுவாமிகள் கண் விழித்து எழும்போது அந்த விசுவரூப தரிசனத்துக்காக சாவியும் ஸ்ரீதரும் காத்திருந்தனர். மங்கலான வெளிச்சம். வேறு மனித சஞ்சாரமே இல்லை. சுவாமிகள் துயிலெழுந்ததும் இவர்களைப் பார்த்து 'யாரு?' என்பதைப் போல சைகையால் வினவ நண்பர்கள் இருவரும் தரையில் வீழ்ந்து வணங்கினார்கள். அடுத்த கணமே ''இவர் ஸ்ரீதர். ஆனந்த விகடனில் உதவி ஆசிரியராக இருக்கிறார்'' என்று அறிமுகம் செய்து வைத்தார் சாவி.

''நீ யாரு?'' என்று கேட்டார் பரமாச்சார்யாள்.

''நானும் விகடனில் உதவி ஆசிரியராக இருக்கிறேன். என் பெயர் சாவன்னா விசுவநாதன். சாமா சுப்பிரமணிய சாஸ்திரிகளின் புத்திரன். சாவி என்ற பெயரில் எழுதிக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

மகாபெரியவரின் முகத்தில் எந்த ரியாக்ஷனும் இல்லை.

ஆசீர்வாதமும் பண்ணவில்லை. மௌனமாகவே எழுந்து போய் அந்த வீட்டுக்குள் மறைந்து விட்டார். இரண்டு பேருக்கும் ஒன்றுமே புரியவில்லை.

'என்ன தவறு செய்தோம்? சுவாமிகள் ஏன் இப்படி நம்மைக் கண்டு கொள்ளவே இல்லை' என்று இரண்டு பேரும் கேள்வி கேட்டுக் கொண்டார்களே தவிர விடை கிடைக்கவில்லை.

''பரவாயில்லை; நாளைக்கு மறுபடியும் வந்து தரிசனம் செய்யலாம்'' என்றார் ஸ்ரீதர்.

மறுநாளும் அதேபோலத்தான்.

'நீ யார்?' என்று மகாபெரியவர் சாவியைக் கேட்க தான் முதல் நாள் சொன்ன விவரங்களை மறுபடியும் சாவி சொன்னார். 'சாமா சுப்பிரமணிய சாஸ்திரிகள் மகன். சாவன்னா விசுவநாதன்' என்று மட்டும் சாவி சொன்னாரே தவிர, வேறு விவரம் ஏதும் சொல்லவில்லை. சுவாமிகள் மறுநாளும் எதுவும் பேசாமல் எழுந்து போய் விட்டார். மீண்டும் இருவருக்கும் ஏமாற்றம்.

இப்படி தொடர்ந்து பல நாட்கள் வரை இவர்கள் போவதும், 'நீ யார்?' என்று சுவாமிகள் கேட்பதும் என்று காலம் போய்க் கொண்டிருந்தது. அப்புறம் சில நாட்களுக்குள் மகா பெரியவர் தமது முகாமை கோபாலபுரத்தில் இருந்து நுங்கம் பாக்கத்துக்கு மாற்றி விட்டார்.

''விடக்கூடாது, பெரியவர் மனசில என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்? நாம் என்ன தப்பு செய்தோம்? ஏன் பேசாமல், ஆசீர்வாதமும் பண்ணாமல், மௌனம் சாதிக்கிறார்? இதைத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்று இரண்டு பேரும் சங்கடப்பட்டார்கள். நுங்கம்பாக்கத்திலும் சில நாட்கள் பழையபடியே இந்த கேள்வி – பதில் உரையாடல் தொடர்ந்தது.

கடைசியாக சாவி மிகவும் சலித்துப் போய் ''ஸ்ரீதர், இன்னிக்கு நான் வரலை. நீங்க வேண்டுமானால் போய்ப் பாருங்கள்'' என்றார். அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த தருணத்தில் மடத்தைச் சேர்ந்த ஒருவர் ஸ்ரீதர் வீடு தேடி வந்தார். காபி அருந்திக் கொண்டிருந்த சாவியும் ஸ்ரீதரும் ஒரு கேள்விக்குறியோடு அவரைப் பார்த்தார்கள்.

''பெரியவா சாவியை அழைச்சிண்டு வரச் சொன்னா'' என்றார் வந்தவர்.

இரண்டு பேருக்கும் வியப்பு தாங்கவில்லை. சோதித்தது போதும் என்று தெய்வம் மனம் இறங்கிவிட்டதோ! 'வாங்க வாங்க, உடனே போவோம்' என்று சொல்லிக் கொண்டே இருவரும் கிளம்பிப் போனார்கள்.

இவர்கள் சுவாமிகளைத் தேடிச் சென்ற போது மகா பெரியவர் மேனாவில் திருவீதி உலா போய்க் கொண்டிருந்தார். இவர்களும் கூட்டத்துடன் சேர்ந்து மேனாவைத் தொடர்ந்து போனார்கள்.

''சாவியும் ஸ்ரீதரும் வந்திருக்கா'' என்று மடத்து பிராமணர் சுவாமிகளிடம் வாய் பொத்திச் சொன்னதை பெரியவர் கவனிக்காதது போல் இருந்து விட்டார். இவர்களை அவர் கண்டு கொண்டதற்கான எந்தவித அடையாளமும் இல்லை. காலை பதினொன்றரை மணி. வெயில் சுளீர் என்று கொளுத்திக் கொண்டிருந்தது. திருவீதி உலா முடிந்து மகா பெரியவர் தங்கி இருந்த முகாமுக்குத் திரும்பியபோது அங்கே பக்தர்கள் கூட்டம் அலை மோதிக் கொண்டிருந்தது. அவ்வளவு பேரும் ஒவ்வொரு வராக வந்து அவரை வந்தனம் செய்து கொண்டு பிரசாதம் பெற்றுச் சென்றார்கள். அவர்கள் எல்லோரும் போன பின்பு கடைசியாக சாவியும் ஸ்ரீதரும் பெரியவாளின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்காரம் செய்தார்கள். பெரியவர் முகத்தில் லேசான

புன்னகை! ''சாவன்னா விசுவநாதன். சாமா சுப்பிரமணிய சாஸ்திரிகளோட புத்ரன். ம்...'' என்று சொல்லி விட்டு, முதன் முதலாகக் கை உயர்த்தி இருவரையும் ஆசீர்வதித்ததோடு இருவருக்கும் குங்குமப் பிரசாதம் வழங்கினார்.

சாவிக்கு அந்த ஆசீர்வாதம் தந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஆனால் 'ஏன் இப்படி இத்தனை நாட்கள் இழுத்தடிக்க வேண்டும்?' என்ற கேள்விக்கு மட்டும் பதில் கிடைக்கவில்லை. அப்புறம் அதைப் பற்றிப் பெரியவரும் எதுவும் பேசவில்லை.

''இன்று வரை மகாபெரியவர் ஏன் உங்களை அப்படிச் சோதித்தார் என்று நீங்கள் தெரிந்து கொள்ளவே இல்லையா?'' என்று நான் சாவியைக் கேட்டபோது, ''தெரிந்து கொண்டேன். ஆனால் மகாபெரியவரைக் கேட்டு அல்ல. இந்தச் சம்பவத்தை, கற்றறிந்த பண்டிதர்கள் சிலரிடம் விவரித்துச் சொல்லி 'காரணம் என்னவாக இருக்கும்?' என்று கேட்டபோது அவர்கள் சொன்ன பதில் இதுதான்:

'ஒரு பிராமணன் மூத்தவர்களை வணங்கும் போது 'அபிவாதயே' சொல்ல வேண்டும் என்பது சாஸ்திரம். அந்த அபிவாதயே'வில் வணங்குபவரின் பூர்வோத்தரமே அடங்கி இருக்கும். தான் யார், தன் கோத்திரம் என்ன, பூர்வீகம் என்ன என்கிற அத்தனை விவரங்களும் அதில் அடங்கி இருக்கும். முதலில் நான் யார் என்பதைச் சொல்லாமல் ஸ்ரீதரைப் பற்றிச் சொன்னது அதிகப்பிரசங்கித்தனம்' என்பதை உணர்த்தவே சுவாமிகள் அப்படி அலைக்கழித்திருக்கிறார்.

''நான் மகா பெரியவரைப் பார்த்தவுடன் முதலில் என்னைப் பற்றிய விவரங்களைச் சொல்லாமல் ஏதோ மிகப் பெரிய மேதாவி போல ஸ்ரீதரை அறிமுகப்படுத்தியது முறையற்ற செயல், அதிகப்பிரசங்கித்தனம் என்பதை உணர்த்தவே பெரியவாள் 'நீ யார்?' என்று என்னைக் கேட்டிருக்கிறார். சுவாமிகளை

வணங்கும் போது 'அபிவாதயே' சொல்லத் தேவையில்லை யென்றாலும் என்னை நான் முதலில் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் தவறியதைச் சுட்டிக் காட்டவே அந்த மாதிரி இழுத்தடித்துச் சோதித்தார் என்ற முடிவுக்குத்தான் என்னால் வர முடிந்தது.''

அதே மகாபெரியவர் பின்னாளில் சாவியிடம் அன்பு காட்டியதும், 'வேத வித்து' கதை எழுத ஆசி வழங்கியதையும், குங்குமம் பத்திரிகை தொடங்கிய போது கை நிறையக் குங்குமப் பிரசாதத்தை வாரி வழங்கி அரக்கோணம் பரசுராமன் மீனாட்சி தம்பதியர் மூலம் அனுப்பி வைத்ததையும் பற்றி சாவி சொல்லும் போது அவர் ஆனந்தக் கண்ணீர் பெருக்குவதைக் கண்டிருக்கிறேன்.

# 19. இளையாத்தங்குடியில்...

காஞ்சி மாமுனிவர் அப்போது இளையாத்தங்குடியில் தங்கியிருந்தார்.

சாவியும், மணியனும் திராவிடத் தந்தை பெரியார் அவர்களை பேட்டி கண்டு விகடனில் எழுதுவதற்காக திருச்சிக்குப் போயிருந்தார்கள். அங்கே பெரியார் மாளிகையில் பேட்டியை முடித்துக் கொண்டு அங்கிருந்து இளையாத்தங்குடிக்குப் போனார்கள். இவர்கள் போனபோது சுவாமிகள் ஒரு மரத்தடியில் அமர்ந்து பக்தர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

சாவியைக் கண்டதும் ''நேரா மெட்ராஸ்லேர்ந்து வறயா? இல்லே, வழியில எங்கயாவது தங்கிட்டு வறயா?'' என்று கேட்டார்.

''திருச்சியில் பெரியாரைச் சந்தித்துவிட்டு வருகிறோம்'' என்ற உண்மையைச் சொல்ல அப்போது சாவிக்குத் தைரியம் வரவில்லை. அதனால் 'மெட்ராஸ்லேர்ந்து வறோம்' என்று பொய்யும் சொல்லாமல் மெய்யும் சொல்லாமல் பொதுவாகச் சொல்லி விட்டார்.

சுவாமிகள் அமர்ந்திருந்த அந்தச் சூழ்நிலையே வித்தியாசமாக இருந்தது. சற்று தூரத்தில் யாரோ ஒரு வயதான வெள்ளைக் காரப் பெண்மணி ஒருத்தி உட்கார்ந்திருந்தார். அந்த அம்மையார் அங்கிருந்தபடியே மகா பெரியவரைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நீ என்ன சொன்னாலும் வாசன் கேப்பாராமே'' என்று திடீரென சுவாமிகள் பேச்சை ஆரம்பித்தார்.

''பெரியவா நினைக்கிற மாதிரி அப்படியெல்லாம் இல்லை. பெரியவா ஏதாவது சொல்லச் சொன்னா அதை அப்படியே போய் வாசன் அவர்களிடம் சொல்லத் தயாராக இருக்கிறேன்'' என்றார் சாவி.

''உங்க விகடன்ல கிறிஸ்துவ மதத்துல சேரச் சொல்லி வாரா வாரம் ஒரு விளம்பரம் வறதே, நீ அதை பாத்திருக்கியோ?''

''பாத்திருக்கேன்.''

''அந்த விளம்பரத்தை நிறுத்திடணும்னு ஆனந்த விகடன்லேர்ந்து வரவா கிட்டேயெல்லாம் சொல்லிப் பார்த்துட்டேன். அவா எல்லாரும் உன் பேரைச் சொல்லி சாவி சொன்னா வாசன் கேட்பார்னு சொல்றா. அதனால நீ அதை வாசன் கிட்டச் சொல்லி உடனே நிறுத்திடு,'' என்றார்.

''சரி... சொல்கிறேன்'' என்று சாவி உடனே பதில் சொல்லி விடவில்லை. பெரியவரிடம் கொஞ்சம் வாதாடிப் பார்த்தார்.

''இந்து மதம் கடல் போன்றது. பெரும் சிறப்புகளை உள்ளடக்கியது, அது அவ்வளவு எளிதில் அழிந்து விடக் கூடியதல்ல. ஒருவேளை அப்படியே இந்த விளம்பரத்தைப் பார்த்துக் கொஞ்சம் பேர் கிறிஸ்துவ மதத்துக்குப் போய் விடுகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம். அதனால் ஹிந்து மதத்துக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடப்போவதில்லை. அது அத்தனை பலகீனமான மதமும் அல்ல'' என்று ஒரு துணிச்சலோடு சொல்லி விட்டார் சாவி.

சாவி இப்படிப் பேசுவதைக் கேட்டு பெரியவர் கோபம் அடையவில்லை.

'அப்படியா சொல்கிறாய் நீ? இத பார், 1920லிருந்து எவ்வளவு பேர் இந்து மதத்திலிருந்து மற்ற மதங்களுக்கு மாறி இருக்கிறார்கள்' என்ற புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லி, ''வர வர இந்து மதத்திலிருந்து வேறு மதம் மாறுகிறவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே போகிறது. இப்படியே போனால் 'எறும்பு ஊறக் கல்லும் தேயும்' என்கிற மாதிரி ஆயிடும்'' என்றார் மகாபெரியவர்.

சிறிது நேரம் மௌனம்.

பிறகு பெரியவர் தொடர்ந்தார்.

''ஆர்தர் கொய்ஸ்ட்லர்னு ஒரு கம்யூனிஸ்ட் ரைட்டர் என்னை வந்து சந்திச்சான். பல கேள்விகள் கேட்டான். கிறித்துவர்கள் பிரார்த்தனை செய்யும் சர்ச்சுகளில் எப்பவும் அமைதி நிலவுகிறது. ஆனா உங்க கோயில்களில் எப்பவும் வாத்தியங்களின் சத்தம், குழந்தைகளின் கூச்சல், மக்களின் இரைச்சல் என்று ஒரே சத்தமாயிருக்கிறதே. பிரார்த்தனை செய்யும் இடம் அமைதியா இருக்க வேண்டாமா?'' என்று என்னைக் கேட்டான்.

''சர்ச்சுகள் நீங்க பிரார்த்தனை செய்கிற இடமாக இருப்பதால் அங்கே அமைதி காக்கப்படுகிறது. இந்துக்கள் பிரார்த்தனை செய்வது கோயில்களில் அல்ல. ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிற இடமாகத்தான் கோயில்கள் உள்ளன. ஒவ்வொரு வீட்டிலும் பூஜை அறை என்று ஓர் அறை இருக்கும். அங்கேதான் பிரார்த்தனை பண்ணுவோம். அதை விட்டால் நதிக்கரையில் பிரார்த்தனை செய்வோம். கோயிலுக்குப் போய் நைவேத்தியங்கள் வைத்து ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவோம். விவசாயிகள் அறுவடை முடிந்ததும் பொங்கல் படைத்து ஆண்டவனுக்கு 'நன்றி' செலுத்துவதற்காகவே பொங்கல் பண்டிகை கொண்டாடுகிறோம். ராஜாக்களுக்குக் கப்பம் கட்டி

நன்றி செலுத்துவது போல ஆண்டவனுக்கு நன்றி செலுத்து கிறோம். அதனால் இந்துக்கள் நன்றி செலுத்துகிற இடம் சப்தமாகத்தான் இருக்கும். மேள தாளங்களுடன் மகிழ்ச்சி பொங்கும்'' என்று நான் சொன்ன பதிலில் அவன் ரொம்பவும் 'கன்வின்ஸ்' ஆயிட்டான்.

''என்னைப் பார்க்கும் போது ஏசுநாதரைக் காண்பது போல் இருப்பதாக (I saw Christ in him) அவன் எழுதியுள்ள 'Lotus and Wheel' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளான். உனக்கு டாக்டர் ராகவன் தெரியுமோல்லியோ, மியூசிக் அகாடமி செக்ரட்டரி, அவனிடம் அந்தப் புத்தகத்தோட காப்பி இருக்கு. நீ மெட்ராஸ் போனதும் அதை வாங்கிப் படி'' என்று கூறிய பெரியவர் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. அதோ அங்கே உட்கார்ந்திருக்கிறாளே அந்தப் பெண்மணி, அந்த ரைட்டர் - அவர்கள் இரண்டு பேருமே கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தவர்கள். அந்தப் பெண்மணியும் என்னிடம் ஏசுநாதரைக் காண்பதாகச் சொல்கிறாள். ஆனா இந்து மதத்தைச் சேர்ந்த நாம் இந்துக்களை கிறிஸ்து மதத்தில் சேரச் சொல்லி விளம்பரப்படுத்தறோம். இது சரியா?'' என்று கேட்டார்.

இதையெல்லாம் கேட்கக் கேட்க சாவிக்குப் பெரியவர் பேச்சில் இருந்த நியாயம் விளங்கியது. அவரை வணங்கி ஆசி பெற்று, ''நான் வாசன் அவர்களிடம் உங்க விருப்பத்தைத் தெரிவிக்கிறேன்' என்று மட்டும் சொல்லி விட்டு விடை பெற்றுக் கொண்டார்.

சாவி சென்னை திரும்பியதும் முதலில் இது பற்றி வாசன் அவர்களைப் பார்த்துப் பேசத்தான் எண்ணியிருந்தார். ஆனாலும் பாலு அவர்களிடமே முதலில் தெரிவித்து அவர் அபிப்ராயம் அறிந்து கொள்வதுதான் முறை என்று தீர்மானித்து பாலு அவர்களிடம் விஷயத்தை எடுத்துச் சொன்னார்.

''இது ஒரு விளம்பரம்தான். நம்ம கருத்து இல்லையே... இதெல்லாம் வியாபாரம்... இது காஞ்சிப் பெரியவருக்கு நன்றாக விளங்குமே!'' என்றார் பாலு.

''அதென்னவோ, எப்படியானாலும் விளம்பரத்தை நிறுத்தி விடுங்கள். பெரியவர் வார்த்தைக்கு, நாம் மதிப்புத் தர வேண்டியது அவசியம்'' என்றார் சாவி.

சாவி நீண்ட நேரம் விவாதித்துப் பார்த்தார். பாலு அவர்கள் சம்மதிக்கவில்லை.

சாவியும் விடாக் கண்டனாயிருந்து மேலும் மேலும் வாதாடிக் கொண்டிருந்தார். கடைசியில் பாலு சற்று நேரம் யோசித்து விட்டு விளம்பரத்துறை மேலாளரை அழைத்து அந்த விளம்பரம் பற்றிய விவரங்களைத் தெளிவாக விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

'ஒரு வருட ஒப்பந்தம். இன்னும் ஆறு வாரம் பாக்கி இருக்கிறது' என்றார் மேலாளர்.

''பரவாயில்லை. இந்த வாரமே அதை நிறுத்தி விடுங்கள். அந்த விளம்பரம் தந்தவர்களுக்கு கன்வின்சிங்கா ஒரு லெட்டர் எழுதி விடுங்கள்'' என்று சொல்லி அனுப்பி விட்டார். சாவி நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

''இப்போது திருப்திதானே?'' என்று கேட்டார் பாலு.

''ரொம்ப ரொம்ப...'' என்று சாவி நன்றி உணர்வோடு அவரைப் பார்த்தார்.

# 20. மாமனிதர் வாசன்

ஆனந்த விகடன் அதிபர் திரு. எஸ்.எஸ்.வாசன் அவர்களை அருகே இருந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றவர்கள் வெகு சிலரே. அவர்களில் சாவியும் ஒருவர். இது போன்ற பெரிய மனிதர்களோடு நெருங்கிப் பழகுவது என்பது அதே நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் அத்தனை பேருக்கும் கிட்டி விடுவதில்லை. நான்கு சுவர்களுக்குள் இருந்து கொண்டு அரும்பெரும் சாதனைகள் படைத்தவர் வாசன். அவர் போட்டோவைப் பார்ப்பது கூட அத்தனை எளிதல்ல. சந்திரலேகா, ஔவையார், அபூர்வ சகோதரர்கள், வஞ்சிக் கோட்டை வாலிபன், மோட்டார் சுந்தரம் பிள்ளை போன்ற மகத்தான படங்களைத் தயாரித்து வட நாட்டுப் பட முதலாளிகளையே பிரமிக்க வைத்தவர்.

'வாசன் அவர்களுக்கு ஜெமினி ஸ்டுடியோ தவிர இன்னும் சில நிறுவனங்களும் சொந்தமாக இருந்தாலும் ஆனந்த விகடன் தான் அவர் உயிர்' என்கிறார் சாவி.

''இதை அவரே பலமுறை எங்களிடம் சொல்லியிருக்கிறார். எனினும் வாசன் அவர்களைப் பெரும் தனவந்தராக்கியது ஜெமினி ஸ்தாபனம்தான். ஆனால் அவருடைய புகழ், சமூகத்தில் உயர்ந்த இடம் இவ்விரண்டையும் பெற்றுத் தந்தது ஆனந்த விகடன்தான். ஜெமினி ஸ்தாபனம் பணத்தை வாரிக் குவித்தது. விகடன் லாபமில்லாத ஒரு தொழிலாக இருந்தது. ஆனாலும் அவருடைய காதல் எல்லாம் விகடன் பேரில்தான். அவரே தம்முடைய

ஆசிரியர் குழுவினரிடம் வேடிக்கையாகச் சொல்வதுண்டாம், 'ஜெமினி பேயிங் பிஸினஸ், விகடன் பேயாத பிஸினஸ்' என்று!

1950 – களில் விகடனின் விற்பனை எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விடவே, வாசன் பரபரப்பாகி ஜெமினியில் இருந்து விகடன் அலுவலகத்துக்கு வந்து உட்கார்ந்து கொண்டு ''விகடன் விற்பனை ஏன் குறைந்து விட்டது. என்ன காரணம்?'' என்று சர்க்குலேஷன் பிரிவை உலுக்கி எடுத்து விட்டாராம். அவர்கள் எதையெதையோ காரணம் காட்டி 'நம்ம சர்க்குலேஷன் ஒரு 'சாச்சுரேஷன்' பாயிண்ட்டுக்கு வந்தாயிற்று. இதை அப்படியே நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான்' என்று சொன்ன காரணத்தை வாசன் அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கோபமாக ''வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங்' குமுதம், கல்கியெல்லாம் எப்படி அதிகமாக விற்பனை ஆகின்றன? முயற்சி செய்தால் நிச்சயம் எட்டு லட்சம் வரை நம்மால் எட்ட முடியும்' என்று கடிந்து கொண்டாராம். அது மட்டுமல்ல. அந்த நேரத்தில் வாசன் அவர்கள் சிலிர்த்துக் கொண்டு ஸர்க்குலேஷனை உயர்த்தியே தீருவது என்று ஒரு வேகத்துடன் இரவு பகலாய் செயல்படத் தொடங்கிய சாகசத்தை ஆச்சரியத்தோடு விவரிக்கிறார் சாவி.

'''இவர்கள் சந்தித்தால்' என்ற தலைப்பில் கட்டுரைகள்; முனுசாமி – மாணிக்கம் என்ற கற்பனைப் பாத்திரங்கள் மூலம் சினிமா விமரிசனம், தில்லானா மோகனாம்பாள் தொடர்கதை; இப்படிப் பலப் பல புதுமைகளை அறிமுகப்படுத்தி விகடன் புகழை வானளாவ உயர்த்தி சாதனை படைத்தார். இதையெல்லாம் வாசன் அவர்கள் அவ்வளவு எளிதாகச் செய்து விடவில்லை. தினசரி 'எடிட்டோரியல் மீட்டிங்' போட்டு ஆசிரியர் குழுவினருடன் மணிக்கணக்கில் விவாதித்து ஆலோசனை நடத்திய பிறகே வெற்றி கண்டார்'' என்று சொல்லும் சாவி அந்தக் கூட்டங்களில் தம்முடைய பங்களிப்பும் சிறிதளவு உண்டு என்று அடக்கத்தோடு சொல்லிக் கொள்கிறார்.

''எடிட்டோரியல் மீட்டிங்கில் அமர்ந்து விட்டால் வாசன் அவர்களுக்கு உலகமே மறந்து போகும். நேரம், காலம் போவதே தெரியாமல் தம் தொழிலில் லயித்துப் போவார். இடை இடையே ஜெகதீசன் கொடுக்கும் மணம் வீசும் காப்பி மட்டும் இருந்து விட்டால் போதும்.

கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் 'கலைமணி' என்ற புனை பெயரில் தமது சிரஞ்சீவி இலக்கியமான 'தில்லானா மோகனாம்பாளை' படைத்ததும் இந்தக் காலக் கட்டத்தில்தான். இந்தக் கதை எப்படி உருவாயிற்று, எப்படி கண், மூக்கு, காது பெற்றது, எப்படியெல்லாம் கதைப் போக்கு தலைகீழாக மாறியது, கதையில் வரும் கேரக்டர்கள் எப்படி ஜீவனுள்ள பாத்திரங்களானார்கள் என்பதைச் சொல்லப் போனாலே அது ஒரு பெரிய கதையாகி விடும்.

கொத்தமங்கலம் சுப்புதான் கதையை எழுதியவர் என்றாலும், அந்தப் புகழ் மிக்க கதைக்கு உயிரும் உருவமும் கொடுத்த முழுப் பெருமையும் வாசன் அவர்களையேச் சேரும்.'' என்கிறார் சாவி.

இரண்டு சம்பவங்கள் சாவியின் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டிருக்கின்றன.

''வழக்கம் போல ஒரு நாள் எடிட்டோரியல் மீட்டிங் நடை பெற்றுக் கொண்டிருந்தது. அன்று ஜெமினியின் படம் ஒன்றின் வெளிப்புறப் படப்பிடிப்பு பரங்கிமலையில் நடந்து கொண்டிருந்தது. அன்று படப்பிடிப்பில் குதிரை பூட்டிய சாரட் வண்டியை வைத்து ஏதோ ஒரு காட்சி. நாங்களெல்லாம் விகடன் அலுவலகத்தில் டிஸ்கஷனில் தீவிரமாக மூழ்கியிருந்தோம். திடீரென்று வாசன் அவர்களின் செக்ரடரி நம்பியாரிடமிருந்து வாசனுக்கு ஒரு போன் செய்தி:

படப்பிடிப்பில் ஒரு விபத்து. சாரட் வண்டியில் பூட்டப் பட்டிருந்த குதிரை – அது மைசூர் மகாராஜாவின் குதிரை, படப்

பிடிப்புக்காகக் கேட்டு வாங்கி வந்திருந்தார்கள் – வேகமாக ஓடிய போது மலைச் சரிவில் புரண்டு கிழே விழுந்து விபத்துக்குள்ளாகி இறந்து விட்டது. அந்தச் செய்தியைத்தான் நம்பியார் வாசன் அவர்களுக்குப் போனில் சொல்கிறார்.

விலை உயர்ந்த குதிரை. மகாராஜாவுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். எவ்வளவு பண நஷ்டம்? பதறிப்போன நம்பியாருக்கு வாசன் என்ன சொன்னார் தெரியுமா?

''நம்பியார்! நான் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறேன், எவ்வளவு முக்கியமான டிஸ்கஷனில் ஈடுபட்டிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாதா? குதிரை செத்துப் போனால் என்ன குடியா முழுகிப் போய் விடும்? இதற்காக என்னை டிஸ்டர்ப் பண்ணணுமா? நீங்களே இதை டீல் பண்ணக் கூடாதா?'' என்று கோபமாகச் சீறிவிட்டார்.

நாங்கள் எல்லாம் ஆடிப் போய் விட்டோம். ஒரு விலை உயர்ந்த குதிரையின் இழப்பை, பொருள் நஷ்டத்தைக் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாமல், விகடன் பத்திரிகைக்கு, அதுவும் பேயாத ஒரு பிஸினஸுக்கு, அவர் தந்த முக்கியத்துவம் கண்டு வியப்பில் ஆழ்ந்தோம்.

''உழைப்பால் உயர்ந்த மாமேதை அவர்'' என்று அந்தரங்க சுத்தியோடு பேசும் சாவி அவர்கள் வாசன் என்று பேச்சைத் தொடங்கினாலே உணர்ச்சி வசப்பட்டுப் போகிறார். வாசன் அவர்கள் போலி கௌரவத்தை அடியோடு வெறுத்து ஒதுக்கியவர். அவரிடத்தில் சாவி நேசித்த பல குணங்களில் இதுவும் ஒன்று.

'' 'சத்ய சபா' என்ற அரசியல் கலப்பில்லாத ஆன்மீக அமைப்பு தொடங்கப்பட்டிருந்த சமயம். தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் கிருபானந்த வாரியாரின் கம்பராமாயணச் சொற்பொழிவு.

அப்போது தமிழ்நாடு ஆளுநரான மைசூர் மகாராஜா அந்த

விழாவைத் தொடங்கி வைக்க வருகை தந்திருக்கிறார். நாதஸ்வர முழக்கத்துடன் விழா களை கட்டியிருக்கிறது. பக்தவத்சலம் அவர்கள் கொடியேற்றி வைக்க, வாரியார் சுவாமிகளின் நாற்பது நாள் ராமாயண விரிவுரை ஆரம்பம். சென்னை நகரத்தின் முக்கிய வி.ஐ.பி.க்கள் சபையில் வீற்றிருக்கிறார்கள். விழா நிகழ்ச்சி முடிந்ததும் கதை கேட்பதற்காக மைசூர் மகாராஜாவை மேடைக்குக் கீழே போடப்பட்டிருந்த பிரத்யேக நாற்காலியில் அமர வைக்கிறோம். ஆனால் மகாராஜா பக்கத்தில் சரிசமமாக அமர்ந்து உரையாடக் கூடிய தகுதி பெற்றவர்கள் யாருமே முன்வராமல் தயக்கம் காட்டுகிறார்கள். மகாராஜா மட்டும் தனியாக உட்கார்ந்திருப்பது என்னவோ போலிருந்தது. வேறொரு பக்கத்தில் சற்றுத் தள்ளி வாசன் அமர்ந்திருக்கிறார். நான் வாசன் அவர்களை நெருங்கிக் காதோடு விஷயத்தைச் சொல்லி 'நீங்கதான் மகாராஜா பக்கத்தில் உட்கார்ந்து அவருக்கு 'கம்பெனி' கொடுக்க வேண்டும்' என்று விநயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

''எனக்கு அவரைத் தெரியாதேப்பா...'' என்று முதலில் மறுத்து விட்டவர், சற்று யோசித்து, என்னுடைய சங்கடத்தைப் புரிந்து கொண்டு ''சரி... உனக்காகப் போய் உட்காருகிறேன்'' என்று சம்மதிக்கிறார்.

நான் வாசன் அவர்கள் பெயரை மகாராஜாவிடம் சொன்னதும் ''ஓ! எனக்குத் தெரியுமே! தங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்று தம் பக்கத்திலிருந்த நாற்காலியைக் காட்டி அமரச் சொல்கிறார் மகாராஜா. வாசன் அவர் பக்கத்தில் உட்கார்ந்ததும் பளிச்பளிச்சென்று காமிரா பிளாஷ்கள் மின்னுகின்றன.

மகாராஜாவுடன் வாசன் அமர்ந்திருக்கும் போது எடுக்கப் பட்ட அந்த அபூர்வமான போட்டோவை பெரிதாக என்லார்ஜ் செய்து, ஃப்ரேம் போட்டு வாசன் அவர்களிடம் கொண்டு போய்க் காட்டினேன். வாசன் சந்தோஷப்படுவார் என்று நான்

எண்ணியதற்கு நேர் மாறாக நடந்து விட்டது.

படத்தைக் காட்டியதும் மகா கோபம் வந்து விட்டது வாசனுக்கு.

''முதல்ல இதை நீ வெளியில் எடுத்துக் கொண்டு போ...'' என்றார் கண்டிப்பான குரலில். நான் சங்கடப்பட்டுப் போனேன்.

''படத்தை இங்கே மாட்டி வைக்கச் சொல்கிறாயா? அதற்குத்தானே கொண்டு வந்திருக்கிறாய்? என் வீட்டுக்கு வருகிறவர்கள் இந்தப் போட்டோவைப் பார்த்து விட்டு 'ஓகோ! மகாராஜாவும் வாசனும் ரொம்ப நாள் சிநேகிதர்கள் போல் இருக்கிறது' என்று நினைத்துக் கொள்ள வேண்டுமா? அந்தப் போலியான கௌரவம் எனக்குத் தேவை இல்லை. ஏதோ நீ கேட்டுக் கொண்டதற்காக உன் சங்கடத்தைப் புரிந்து கொண்டு நான் சற்று நேரம் அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். அந்த விஷயம் அதோடு முடிந்தது. வேண்டுமானால் இதைக் கொண்டு போய் உன் வீட்டில் மாட்டிக் கொள்'' என்று கூறி என்னைப் படத்தோடு திருப்பி அனுப்பி விட்டார்.''

---

# 21. நடுக்கடலில் ஒரு பயணம்

விகடனில் ஏதாவது புதுமை செய்ய வேண்டும் என்பதில் சாவி எப்போதும் கண்ணும் கருத்துமாக இருப்பார். 'பளிச்'சென்று ஏதேனும் ஐடியா தோன்றினால் உடனே அதை பொறுப்பாசிரியர் பாலு அவர்களிடம் சொல்லி அதை எழுதலாமா என்று கேட்டு அனுமதி பெறுவார்.

'இங்கே போயிருக்கிறீர்களா?' என்று வாரா வாரம் சாவி எழுதிய கட்டுரைகள் அந்தப் புதுமைகளில் ஒன்று. நம்மில் பலபேர் சில இடங்களுக்குப் போயிருப்போம். அப்படிப் போன இடங்களில் பார்த்ததையும் கேட்டதையும் ரசித்திருப்போம். ஆனால் சாவி அங்கே போய் வந்து எழுதியதைப் படித்த பிறகுதான் 'அட, நாம் பார்த்த இடத்தில் இவ்வளவு இருக்கிறதா?' என்று வியப்போம். ஓர் இடத்தைப் பார்க்கையில் நாம் கண்ணால் காண்பதும், காதால் கேட்பதும்தான் நம்முள் பதியும். ஆனால் தான் போய்ப் பார்த்த இடங்களை சாவி அவர்கள் சுவாசத்தாலும் உணர்ந்து நாம் அதை நேரில் காண்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தும் அளவுக்குத் தம் எழுத்துத் திறமையைப் பயன்படுத்தினார். பலாப்பழம் விற்பதை அவர் எழுதினால் படிப்பவர்களின் மூக்கில் பலாப்பழ வாசனை வீசும்! கண், காது, மூக்கு மூன்றாலும் தாம் அனுபவித்த, ரசித்த, கேட்டு மகிழ்ந்த இடங்களை வாசகர்களோடு பகிர்ந்து கொண்ட சாவியின் 'இங்கே போயிருக்கிறீர்களா?' என்ற முக்கோணப் பார்வைக் கட்டுரைகள் தமிழுக்கு ஒரு புதுமை என்றே சொல்ல

வேண்டும். எனவே, அக்கட்டுரைகள் வெற்றி பெற்றதில் வியப்பில்லை.

'முதுமலைக் காட்டில் யானையின் மீது அமர்ந்து விடியற்காலை அரை இருட்டு வேளையில் அப்படியும் இப்படியும் அசைந்தாடிக் கொண்டே வனப்பிரதேசங்களைச் சுற்றி வந்து மான் கூட்டங்களையும், பைஸன்களையும் தொடு தூரத்தில் பார்த்தது என்ன மாதிரி அனுபவம் தெரியுமா?' என்று இப்போதும் குழந்தை போல் குதூகலிக்கிறார்.

காட்டுக்குப் போய் வந்து அது பற்றி விகடனில் கட்டுரை எழுதி முடித்ததும், சாவிக்கு திடீரென ஒரு ஐடியா உதயமாயிற்று. 'மீனவர் படகு ஒன்றில் கடலுக்குள் போய் அந்த அனுபவத்தையும் எழுதினால் என்ன?' என்பதே அந்த ஐடியா.

சாவி இப்படி ஒரு ஐடியாவை பாலு அவர்களிடம் சொன்னதும், பாலு உற்சாகத்தோடு ஆமோதித்து "அடுத்த ஞாயிற்றுக் கிழமை காலை நாம் எல்லோரும் படகுப் பயணம் செய்து விட்டு வரலாம்" என்று கூறியதுடன் அந்தப் பயணத்துக்கு வேண்டிய அத்தனை ஏற்பாடுகளையும் செய்து விட்டார்.

தயிர் சாதம், புளியோதரை, சாம்பார் சாதம், அப்பளம் என்று பெரிய பாத்திரங்களில் சாப்பாட்டு அயிட்டங்கள் படகில் ஏற்றப்பட்டன. போதாக்குறைக்கு குளிர்பான பாட்டில்களும், பிஸ்கட் டின்களும் வேறு. சுமார் இருபது பேர் இருக்கலாம். காலை பத்து மணி அளவில், மெரீனா பீச் காந்தி சிலைக்கு அருகில் எல்லோரும் கூடி படகுப் பின்னணியில் ஒரு குரூப் போட்டோ எடுத்துக் கொண்டனர். மீனவர்கள் நாலு பேரை துணைக்குச் சேர்த்துக் கொண்டு ஐலசா கோஷத்துடன் கடலில் ஜமாவாகப் புறப்பட்டனர்.

படகு இரண்டு மைல் தூரம் கூடப் போயிருக்காது. அனைவரையும் 'ஸீ ஸிக்னெஸ்' என்ற 'கடல் பயண ஒவ்வாமை' தொற்றிக் கொண்டது. வயிற்றைப் புரட்டி வாயில் எடுக்க

ஆரம்பித்தார்கள். சாவி அவர்கள் தண்ணீரைக் கண்டால் மீனாக மாறி விடுவார். தண்ணீரில் நீச்சல், வாழ்க்கையில் எதிர் நீச்சல் இரண்டிலும் வல்லவர் அவர். யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் திடீரென கடலுக்குள் குதித்து விட்டார். நீச்சல் தெரியும் என்றாலும் தண்ணீரில் போனதும்தான் அவருக்குச் 'சொரேல்' என்றது. இது சுறா மீன்கள் நடமாடும் பகுதி என்று படகுக்காரர் எச்சரித்திருந்தது நினைவுக்கு வந்தது. சட்டென்று படகைப் பிடித்து ஏறவும் முடியவில்லை. தண்ணீர் மட்டத்துக்கும் படகின் விளிம்புக்கும் இடையே ஒரு ஆள் உயரம் இருந்தது. எதைப் பிடித்துக் கொண்டு எப்படித் தொத்துவது? கொஞ்சம் பயந்து போனார் சாவி. சிறிது நேரப் போராட்டத்துக்குப் பின்னரே படகுக்காரர்கள் அவரைப் படகுக்குள் இழுத்துக் கொள்ள முடிந்தது.

''எந்த தைரியத்தில் இப்படி திடீரென கடலில் குதித்தீர்கள்?'' என்று கேட்டால் ''அசட்டுத் துணிச்சல்தான். இது போன்ற பைத்தியக்காரத்தனமாக நான் எதையாவது செய்து விட்டு விழிப்பதும் கடைசியில் ஒரு விதமாகச் சமாளித்து மீள்வதும் எனக்கு சகஜம்தான்'' என்கிறார்.

படகில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலோர் கடல் ஸிக்னெஸ் காரணமாகக் களைத்துப் போய் விட்டதால் ஐலசா கூச்சலும், எக்களிப்பான உற்சாகக் குரல்களும் அடங்கிப் போயிற்று. எனவே கடல் பயணத்தைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டு படகைத் திருப்பிக் கரை நோக்கிப் பயணம் செய்ய வேண்டியதாயிற்று.

கொண்டு போன சாப்பாடு வகையறாக்கள் கூல்ட்ரிங்ஸ் எல்லாம் அப்படியே திரும்பி வந்து சேர்ந்தன. அந்த அயிட்டங்களைப் பார்ப்பதற்கே வெறுப்பாக இருந்ததுடன், பயணத்தை அனுபவிக்க முடியவில்லையே என்ற குறையும் அனைவருக்கும் இருந்தது.

''ஒரு விதமாகப் படகு கரை சேர்ந்ததும் அடுத்து என்ன செய்வது என்ற கேள்வி அனைவர் உள்ளத்திலும் எழுந்தது.

யாருக்கும் வீட்டுக்குத் திரும்ப மனமில்லை. நேராக எண்ணூர் கடற்கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்த பயணிகள் விடுதி ஒன்றில் சற்று நேரம் ஓய்வெடுத்தோம்.

தூக்கம் கலைந்து எழுந்தபோது மணி நாலு. திரு. பாலு அவர்கள் தயாரித்துத் தந்த காப்பியை சுடச்சுட சாப்பிட்ட பிறகே அனைவரும் பழைய நிலைக்குத் திரும்பினர். அடுத்து 'எடிட்டோரியல் டிஸ்கஷன் ஆரம்பமாயிற்று. விகடன் ஆசிரியர் குழுவுக்கு ''அடுத்த வாரம் என்ன?'' என்பது எப்போதும் ஒரு ஆதார சுருதியாக உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கும். அங்கே மணலில் சற்று கிழிந்து போன ஒரு கடிதம் யார் கண்ணிலோ பட்டது. எடுத்துப் பார்த்தால் அது ஒரு காதல் கடிதம். மணியன் அதை சிரமப்பட்டு உரக்கப் படித்தார். அவர் படித்தபோது கிழிந்து போன பகுதிகளை மற்றவர்கள் தங்கள் கற்பனையில் பூர்த்தி செய்து கொண்டனர். 'இதையே கருப்பொருளாகக் கொண்டு ஒரு சிறுகதை எழுதினால் என்ன?' என்று ஒரு யோசனை எழுந்தது. அவ்வளவுதான்! அத்தனை பேரும் சேர்ந்து ஆளுக்கு ஒன்று சொல்ல ஒரு முழுக்கதையே உருவாகிவிட்டது. இப்படியாக அந்தக் கடல் பயணம் எப்படியோ ஆரம்பித்து எங்கேயோ போய் முடிந்தது. அது மட்டுமல்லாமல், 'நடுக் கடலில் ஒரு நாள்' என்ற தலைப்பில் நகைச்சுவைக் கட்டுரை ஒன்றை நான் எழுதுவதற்கு அந்தப் பயணம் பெரிதும் பயன் பட்டது'' என்கிறார் சாவி.

'சிறப்புக் கட்டுரைகள் (Feature Writing) எழுதுவதற்கு சாவிதான் முன்னோடி. அதற்கு முன்னால் இம்மாதிரிக் கட்டுரைகள் தமிழில் கிடையாது. எழுதுவார்கள், புள்ளி விவரங்களைக் கொட்டித் திணறடிப்பார்கள். இதற்கு மாறாக 'இங்கே போயிருக்கிறீர்களா?' என்ற பகுதியைத் தொடங்கி கொத்தவால் சாவடி முதல் சென்ட்ரல் ஸ்டேஷன் வரை நேர்முக வர்ணனை போல் நகைச்சுவை மிளிர, பாத்திரங்கள் தத்ரூபமாகக் காட்சி

அளிக்கச் சித்திரித்தவர் சாவிதான்'' என்று விமரிசகர் சுப்புடு மனம் திறந்து பாராட்டியுள்ளார், சாவி மணிவிழா மலரில்.

இதற்கெல்லாம் பாலு அவர்கள் சாவியின் எழுத்துத் திறமையில் கொண்டிருந்த நம்பிக்கைதான் காரணம். ஆபீஸ் நேரங்களில் தவிர, முதலாளி தொழிலாளி என்ற பேதமின்றி அவர்களிருவரும் ஒரு குறிப்பிட்ட எல்லையோடு நண்பர்கள் போல் பழகி வந்த முறையை சாவி குறிப்பிடும்போது அவர் முகத்தில் பெருமையும் மகிழ்ச்சியும் பளிச்சிடுகின்றன.

விகடன் ஆசிரியர் குழுவில் வேறு யாருக்குமே கிடைக்காத ஓர் அபூர்வ உறவு இது. முதலாளியே நண்பர். நண்பரே முதலாளி! பாலு அவர்கள் சாவியின் நெஞ்சில் நிரந்தரமாக இனித்துக் கொண்டிருப்பவர்.

''அவர் ஒரு முதலாளி என்ற மரியாதை எனக்கு எப்போதுமே உண்டு. ஆனால் அவரிடம் பணியாற்றிய போது அவரைக் கண்டு நான் பயந்ததில்லை. அப்படி ஒரு வியத்தகு நட்பு காட்டியவர் அவர். என் நகைச்சுவை உணர்வு அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அவரது அந்த ரசனை எனக்குப் பிடிக்கும். என் எழுத்துத் திறமை வளர்ந்ததற்கு அவர் ரசனையே முக்கிய காரணம்'' என்று நன்றிப் பெருக்குடன் கூறுகிறார் சாவி.

# 22. மணியன் திருமணம்

''விகடன் ஆசிரியர் குழாமில், ஒரு கால கட்டத்தில், மற்ற அனைவரையும் விட மணியனுக்கு செல்வாக்கு அதிகம் இருந்தது உண்மை. அப்படி இருந்ததில் தவறு ஏதும் இல்லை'' என்கிறார் சாவி.

''ஏனென்றால் எங்களில் வயது குறைந்தவர் அவர்தான். எப்போதும் துறுதுறுவென்று இருப்பார். பம்பரமாய்ச் சுழன்று வேலை செய்வார். பாலு அவர்களிடம் பவ்யமாக நடந்து கொண்டு அவர் இட்ட வேலைகளைச் செவ்வனே செய்து முடிப்பார். இப்படிப்பட்ட ஒருவரை நன்றாக 'ஷேப்' செய்து வந்தால் பின்னாளில் அவர் விகடனுக்குச் சிறப்பாகப் பயன்படுவார் என்று நிர்வாகம் எண்ணியதில் தவறில்லை தானே? எனக்கும் மணியனுக்கும் இடையே நல்ல நட்பும் உறவும் இருந்தது. அலுவலக விவகாரங்கள் தவிர தனிப்பட்ட வாழ்க்கையிலும் எங்களுக்குள் நல்லுறவு இருந்தது. நிர்வாகம் அதைப் புரிந்து கொண்டு எங்கள் இருவரையும் ஜோடி சேர்த்து இரட்டை நாதஸ்வரக்காரர்கள் போல் ஒருமித்துப் பணியாற்றும்படி வழிவகுத்துக் கொடுத்தது.

மணியன் முகத்தில் இளமைக் களை குறைந்து முதிர்ச்சி தெரிவதை கவனித்த பாலு அவர்கள் ஒரு நாள் என்னிடம், 'மணியனுக்கு வயதாகிக் கொண்டே போகிறது. நீங்கள்தான் ஒரு நல்ல இடமாகப் பார்த்து அவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும்' என்று சொன்னார்.

பாலுவின் விருப்பத்துக்கிணங்க சாவி மணியனுக்குப் பெண் பார்க்கத் தொடங்கினார். இதற்கிடையில் மணியனே 'ஹிந்து' நாளிதழில் ஒரு விளம்பரம் கொடுத்திருந்தார். அதற்கு வந்த ஜாதகங்கள், புகைப்படங்களைக் கொண்டு வந்து சாவியிடம் தந்து ''நீங்கதான் இவ்வளவையும் பரிசீலித்துப் பொருத்தமான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று சொன்னார்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர் மேகநாதன் என்பவர் சாவியின் நீண்ட நாளைய நண்பர். 'வெள்ளி மணி' காலம் தொட்டே சாவிக்குப் பரிச்சயமானவர். அவர் ஒருநாள் சாவியை சத்திய மூர்த்தி பவனில் சந்தித்து 'குளத்து ஐயர் என்று எனக்கொரு நண்பர் இருக்கிறார். திருநெல்வேலிக்காரர். அவருக்கு லலிதா என்றொரு மகள். மயிலாப்பூர் லஸ் பகுதியில் வசிக்கிறார்கள். நல்ல குடும்பம். மணியனுக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கலாமே. நீங்கள் மனது வைத்தால் திருமணம் நடந்துவிடும்'' என்றார்.

'' 'ஹிந்து'விலிருந்து வந்திருந்த ஜாதகங்களையெல்லாம் கட்டி ஓரமாக வைத்துவிட்டு மறுநாளே குளத்து ஐயர் மகளை நான் மணியனுக்காகப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். பின்னர் மணியனும் பெண்ணைப் பார்க்க விரும்பினார். குளத்து ஐயர், குடும்பத்தாருடன் தம் மகளையும் அழைத்துக் கொண்டு என் வீட்டுக்கு வருவது என்றும், அங்கே மணியன் பெண்ணைப் பார்ப்பது என்றும் ஏற்பாடு. அதன்படியே பஜ்ஜி, சொஜ்ஜியுடன் பெண் பார்க்கும் படலம் முடிந்தது. மணியனுக்கும் பெண் பிடித்து திருமண நாளும் முடிவு செய்யப்பட்டது.'' என்கிறார் சாவி.

ஆனால் சாவியின் பணி அத்துடன் முடிந்து விடவில்லை.

திரு. ஏ.வி.மெய்யப்ப செட்டியாரிடம் பேசி ராஜேஸ்வரி திருமண மண்டபத்தை வாடகையின்றி (மின் கட்டணம்

மட்டும் செலுத்தினால் போதும்) வாங்கித் தந்ததும் சாவிதான்.

திரு. ஏ.வி.எம். அவர்களிடம் மணியன் திருமணத்துக்கு மண்டபம் கேட்கப் போன போது வரவேற்பு நிகழ்ச்சியில் மாப்பிள்ளையும் பெண்ணும் உட்காருவதற்கு ஏற்றதாக இரண்டு நாற்காலிகள் தேர்வு செய்து தரும்படி திரு. ஏ.வி.எம். அவர்கள் சாவியிடம் சொன்னார்.

ஏ.வி.எம். ஸ்டூடியோ 'ப்ராபர்ட்டி' அறையில் குவிந்து கிடந்த நாற்காலிகளில் ராஜா ராணி நாற்காலிகள் இரண்டைத் தேர்வு செய்தார் சாவி.

'சே, சே! இதெல்லாம் சரிப்பட்டு வராது. நான் வேறு நாற்காலிகள் அனுப்புகிறேன்' என்று பொருத்தமான வேறு இரண்டு நாற்காலிகளை ஏ.வி.எம். அவர்களே தேர்ந்தெடுத்து அனுப்பி 'இந்த நாற்காலிகள் எப்படி?' என்று கேட்க 'பிரமாதம்' என்றார் சாவி. அதுவே மணியன் வரவேற்பின்போது மணமக்கள் அமரும் நாற்காலிகளாகி பின்னர் அந்த மண்டபத்தில் நிரந்தரமாக இடம் பெற்றன.

# 23. காமராஜரின் மதிநுட்பம்

'வடக்கு வளர்கிறது – தெற்கு தேய்கிறது' என்பது தி.மு.க.வின் முழக்கமாக இருந்த நாட்கள் அவை. தெற்கும் வளர்ந்து கொண்டுதான் வருகிறது என்பதை வெளிப்படுத்துவதற்காக தமிழக மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து அங்குள்ள தொழிற்சாலைகள் பற்றியும், வளங்கள், முன்னேற்றம் பற்றியும் 'தெற்கு வளர்கிறது' என்ற தலைப்பில் சாவி விகடனில் எழுதிய கட்டுரைகள் அவரது எழுத்தின் இன்னொரு பரிமாணத்தை வெளிக்கொண்டு வந்தன. அதன் மூலம் பொள்ளாச்சி மகாலிங்கம், கோவை ஜி.டி.நாயுடு போன்ற பிரமுகர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் சாவிக்குக் கிடைத்தது. இந்தப் பயணங்களின் போது சாவியும் ஓவியர் கோபுலுவும் ஒரு முறை ஊட்டிக்குப் போயிருந்தார்கள். அங்கே அப்போது காமராஜர் அவர்களும் முகாமிட்டிருந்தார். சாவி கோபுலு இருவரையும் கண்டதும் காமராஜ் ''எங்க வந்திங்க?'' என்று கேட்டார்.

'' 'இங்கே போயிருக்கிறீர்களா?' என்ற தலைப்பில் சில இடங்களைப் பார்த்து கட்டுரை எழுதி வருகிறோம். ஊட்டியைப் பற்றி எழுத வந்திருக்கிறோம்'' என்றார் சாவி.

ஊட்டியில், 'தமிழ்நாடு இல்லம்' கட்டுவதற்கு அப்போதுதான் காமராஜ் அவர்கள் இடம் தேர்வு செய்து கொண்டிருந்தார். புறப்படும் போது சாவி, கோபுலு இருவரையும் 'நீங்களும் வாங்க, பார்க்கலாம்' என்று கூறித் தம்முடன் அழைத்துச்

சென்றார். ஊட்டி ஏரியில் அன்று காமராஜ் அவர்களின் படகுச் சவாரிக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அரசு அதிகாரிகள் கூட்டமும் ஜீப்புகளும் கரையில் காத்திருக்க, சாவியும் கோபுலுவும் காமராஜருடன் படகில் ஏறி ஏரியை ஒரு சுற்றுச் சுற்றி வந்தார்கள்.

அப்போது காமராஜரின் மதிநுட்பத்தை அறிந்து கொள்ளும் வாய்ப்பு சாவிக்குக் கிடைத்தது.

அவர் சொல்கிறார் :

''ஒருமுறை மகாத்மா காந்தி அவர்கள் தமிழகம் வந்திருந்த போது பழனிக்கு விஜயம் செய்தார். அப்போது ராஜாஜியும் போயிருந்தார். காமராஜருடன் நானும் போயிருந்தேன். படிகளில் நான் நெட்டுக்குத்தலாக ஏறிக் கொண்டிருந்ததைப் பார்த்த காமராஜர் 'இப்படிப் படியேறக் கூடாது. மேலே போய்ச் சேருவதற்குள் கால் வலிக்கும். குறுக்கும் நெடுக்குமாக – ஸிக் ஸாக்காக – ஏறுங்க. அப்பத்தான் படி ஏறும் சிரமம் தெரியாது'' என்று அவர் எனக்குச் சொல்லிக் கொடுத்தார். அவர் அப்படி ஏறியதைப் பார்த்து அதைப் போலவே நானும் பின் தொடர்ந்து சென்றேன். வேகமாகவும் ஏற முடிந்தது. கால் வலியும் இல்லை.''

காமராஜருக்கு இருந்த அனுபவ அறிவு காரணமாக படிப்பறிவு மிகுந்தவர்கள்கூட அவரது அந்த அனுபவத்தின் முன்னே திக்குமுக்காடிப் போயிருக்கிறார்கள். அவரிடம் சிலர் ஏதேனும் ஒரு பிரச்னையைக் கொண்டு போவார்கள். அது சம்பந்தமாக காமராஜர் கேட்கும் ஒரு கேள்விக்குக்கூட பதிலளிக்க முடியாமல் திணறிப் போவார்கள். இதைப் பல முறை சாவி உடனிருந்து கவனித்திருக்கிறார்.

''ஒரு சமயம் பஸ் முதலாளிகள் ஏழெட்டு பேர் காமராஜரைப் பார்க்க வந்தார்கள். 'எங்களுக்கு இந்தத் தொழிலில் லாபமே இல்லை. அதனால் வரியைக் குறைக்க வேண்டும்'

என்று காமராஜரிடம் முறையிட்டார்கள். அவர்கள் சொன்னதை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த காமராஜர் அவர்களிடம் ஆணித்தரமாக ஒரு கேள்வி கேட்டார். ''பஸ் விடறதுல லாபமில்லேன்னு சொல்றீங்க. ஆனால் தினம் தினம் புதுப் புது ரூட் கேட்டு அப்ளிகேஷன் வந்து குவியுதே. அது எப்படீன்னேன்?'' வந்தவர்களால் எந்த பதிலும் சொல்ல முடியவில்லை. பேசாமல் திரும்பிப் போய் விட்டார்கள்.

காமராஜருடன் படகில் போய்க் கொண்டிருந்தபோது ஏரியைச் சுற்றிலும் அமைந்துள்ள அந்த அழகிய இடத்தை நவீன வசதிகளோடு மாற்றி சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கேற்ப வீடுகள் வீடுகள் கட்டிக் கொடுத்தால் என்ன என்று பேச்சு வாக்கில் ஒரு யோசனை சொன்னார் சாவி.


அதற்கு காமராஜர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

''பணக்காரங்க மட்டும் இங்கே வந்தாப் போதுமா? அவங்களுக்கு என்ன? பெரிய ஹோட்டல்ல தங்கிட்டுப் போவாங்க. ஏழை எளிய மக்கள் இங்க வரணும்னேன். அவங்களுக்குத்தான் வசதி பண்ணித் தரணும்.

ஏரிக்கரையைச் சுட்டிக் காட்டி, 'அதோ பாருங்க. அந்த இடங்கள்ல ஏழைங்க வந்து தங்கற மாதிரி காட்டேஜ் கட்டணும். அங்கேயே சமையல் செய்து சாப்பிட பாத்திரங்கள் கிடைக்கற மாதிரி வசதி செய்து தரணும். அஞ்சு ரூபாய்க்கு மேல வாடகை வாங்கக் கூடாது. அப்பதான் ஏழைங்களாலே இங்கு வந்து தங்க முடியும்' என்றார்.

காமராஜரின் வித்தியாசமான அணுகுமுறையை, மதி நுட்பத்தை, எப்போதும் ஏழை மக்களைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கும் மனப்போக்கை நினைத்துப் பார்த்து சாவி 'ஆகா, எப்பேர்ப்பட்ட தலைவர்!' என்று ஆச்சரியப்படுகிறார்.

''மரங்களையெல்லாம் இப்படிக் கண்டபடி வெட்டிப்



முன்னாள் இலங்கைப் பிரதமர் திரு. பிரேமதாசாவுடன்...

அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களுடன்...




கலைஞரின் மனைவி திருமதி தயாளு அம்மாள் சாவியின் இல்லத்துக்கு
வந்திருந்தபோது திருமதி ஜானகி மாலை அணிவித்து மகிழ்கிறார்...






கலைஞருடன்...



மகீந்திரா அண்ட் மகீந்திரா அதிபர் ஆனந்த் மகீந்திரா அவர்களுடன்...




திரு.சதாசிவம் – திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி... சாவி எண்பதாவது பிறந்த நாளன்று வந்து வாழ்த்தியபோது...



மலேசியா முன்னாள் அமைச்சர் துங் சம்பந்தம் அவர்களுடன்...


திரு.காமராஜ் அவர்களுடன்...





நியூஜெர்ஸி பார்க்கில் மனைவி ஜானகியுடன்..


புதல்வன் மணியுடன்...






புதல்வன் பாச்சா, புதல்வி வைஜயந்தி...
பின்னால் சீதா, கௌதம் (பேரன்).

மகீந்திரா அண்ட் மகீந்திரா சென்னைக் கிளையின் இப்போதைய ஜெனரல் மானேஜர்
மாப்பிள்ளை கர்னல் பிரசாத், மாப்பிள்ளை விஸ்வநாதன், சாவி, ஜானகி,
மாப்பிள்ளை அர்த்தநாரி, ராமமூர்த்தி...






↑ சாவி – மகாராஜபுரம்
விசுவநாதய்யர்




↑
ஆனந்த விகடனுக்காக,
பெரியார் அவர்களைப் பேட்டி
காண்கிறார் சாவி. உடன்
குறிப்பெடுத்துக்
கொண்டிருப்பவர் மணியன்.

தொழில்மேதை
ஜி.டி. நாயுடுவுடன் சாவி,
↓ சாவியின் மகள் வைஜயந்தி.




இயக்குனர் கே. பாலசந்தர் தம்பதியருடன் சாவி தம்பதியர்.





நியூஜெர்ஸியில், பத்மினி இல்லத்தில்...



டெல்லியில், சி. சுப்பிரமணியம் அவர்களுடன்...

போட்டிருக்காங்களே, மரங்களை அழிச்சுட்டு அந்த இடத்திலே என்ன செய்வாங்க?'' என்று கேட்டார் சாவி.

''என்ன செய்வாங்க, உருளைக்கிழங்கு போட்டு லாபம் சம்பாதிப்பாங்க. மரத்தை வெட்டக் கூடாதுன்னு சட்டம் இருக்கு. அதிகாரிகளைக் கூப்பிட்டு ஒரு நாளைக்கு விருந்து சாப்பாடு போட்டா மரத்தை வெட்டிக்கோங்கறாங்க'' என்றாராம் காமராஜர். அப்படிச் சொன்னபோது கோபமும் விரக்தியும் அவர் முகத்தில் சிரிப்பாக வெடித்த அந்தக் காட்சியைப் பற்றி சாவி உணர்ச்சிபூர்வமாகச் சொல்லி வியப்பதுண்டு.

# 24. பெரியாருடன் ஒரு நாள்

பிராமணீயத்துக்கு எதிராக மிகத் தீவிரமாக போர்க்கொடி தூக்கிய பெரியார் (கடவுளை அறவே மறுத்த தந்தை பெரியார்) சாவி அவர்களைப் பெரிதும் கவர்ந்த தலைவர்களில் ஒருவர் என்பது வியப்புக்குரிய உண்மை.

'பெரியார் அவர்களின் கொள்கைகள் எதனோடும் ஒத்துப் போகாத உங்களுக்கு எப்படி அவர் மீது இவ்வளவு மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டது?' என்று கேட்டேன்.

பெரியார் மீது தாம் ஈர்க்கப்பட்ட விதத்தை விவரிக்கிறார் சாவி.

''நான் அப்போது நாச்சியப்ப செட்டித் தெருவில் வசித்து வந்தேன். பெரியார் அப்போது ஒருநாள் எங்கள் தெரு முனையில் ஒரு கூட்டத்தில் பேசினார். அவர் பேசி நான் கேட்ட முதல் கூட்டம் அதுதான். தம்முடைய கொள்கைகளை அவர் எடுத்து வைத்து மட்டைக்கு இரண்டு கீற்றாக விளக்கிய விதம்தான் என்னைப் பெரிதும் கவர்ந்தது. எளிமையான சக்தி வாய்ந்த சொற்கள், அழுத்தம் திருத்தமான உச்சரிப்பு ஏழை எளிய மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்து விடக்கூடிய விதத்தில் வார்த்தைகளைப் பெரியார் கையாண்ட முறை எல்லாமே என்னைக் கவர்ந்தது. பிராமணீயத்தின் மீது எனக்கே வெறுப்பு தோன்றும் அளவுக்கு சக்தி வாய்ந்த சொற்பொழிவாக அவருடைய அன்றைய பேச்சு இருந்தது.

இந்தி எதிர்ப்பைக் காட்டும் விதத்தில் இந்தியில் இருந்த ஸ்டேஷன் பெயர்களை அழிக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்த காலம் அது. தி.க. தோழர்கள் தார் வைத்து அழித்து விட்டுப் போவார்கள். அடுத்த சில மணி நேரத்துக்குள், ரெயில்வே நிர்வாகம் அந்தத் தார் மீது மண்ணெண்ணெய் வீசி சுத்தப்படுத்தி விட்டுப் போகும். இது பற்றிப் பெரியார் தமக்கே உரிய பாணியில் ''இந்த இந்தி எதிர்ப்பு போராட்டத்தால் யாருக்கு லாபம்னு உனக்குத் (கூட்டத்தினரை) தெரியுதா? லாபம் பாப்பானுக்குத்தான். ஏன்னு கேளு. தார் காண்ட்ராக்ட் எடுத்தவன் யாரு? அவன் ஒரு பாப்பான். கெரசின் காண்ட்ராக்ட் எடுத்தவன் யாரு? அவனும் ஒரு பாப்பான். ஆக, தார், கெரசின் இரண்டும் காண்ட்ராக்ட் எடுத்து லாபம் சம்பாதிச்சவன் பாப்பான்'' என்றார்.

பெரியார் அவர்கள் தமது சொந்த வாழ்க்கையில் பல பிராமணர்களை நண்பர்களாகப் பெற்றிருந்தார் என்ற உண்மை பலருக்குத் தெரியாது. பார்ப்பனீயம், பிராமண ஆதிக்கம் ஆகியவற்றைத்தான் அவர் தம் வாழ்நாள் முழுதும் எதிர்த்துப் போராடினாரே தவிர, பிராமணர்களை அல்ல. இந்த உண்மை தெரியாமல் அவர் மீது கோபப்பட்ட பிராமணர்கள் உண்டு. பெரியாரின் சொற்பொழிவைக் கேட்டதிலிருந்து அவர் மீது எனக்கு ஒரு பாசமே வந்துவிட்டது. பிராமணீயத்துக்கு எதிராக அவர் எடுத்து வைக்கும் ஆதாரங்களும் உண்மைகளும் கோர்ட்டில் நீதிபதி முன்பாக ஒரு வழக்கறிஞர் பாயிண்ட் பாயிண்ட்டாகச் சொல்லி வாதாடுவது போலிருக்கும். பெரியாரின் பேச்சுத் திறனில் மயங்கிப் போன நான் பின்னர் அவர் எங்கே பேசினாலும் அங்கெல்லாம் போய் அவரது பேச்சைக் கேட்டு விட்டு வருவேன்'' என்கிறார் சாவி.

அது மட்டுமல்ல; தந்தை பெரியாரை என்றாவது ஒரு நாள் சந்தித்துப் பேச வேண்டுமென்ற கட்டுக்கடங்காத ஆவல்

சாவியின் உள்ளத்தில் இருந்து வந்தது. விகடனில் பணியாற்றிய போது அதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

சாவியும் மணியனும் திருச்சிக்குப் போய் அவரைச் சந்தித்தார்கள். ''நாங்கள் போன சமயம் பெரியார் ஊஞ்சலில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தார். ''விகடனிலிருந்து இரண்டு பேர் வந்திருக்கிறார்கள்'' என்று அவரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டதும் ''அப்படியா! வரச் சொல்லு'' என்று சொல்லி அனுப்பினார். நாங்கள் உள்ளே போனதும் ''வாங்கய்யா!'' என்று அன்போடு எங்களை வரவேற்றார் பெரியார். இரண்டு மணி நேரம் பல விஷயங்கள் குறித்து நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விவரமாகவும், விஸ்தார மாகவும் பதிலளித்தார். வாசன் அவர்கள் பற்றி அக்கறையோடு விசாரித்தார்.

'ஐயா! ஜாதி விகிதாசாரப்படி அரசு உத்தியோகம் என்றெல்லாம் நீங்க சொல்றது சரியில்லைன்னு நான் நினைக்கிறேன். தகுதி அடிப்படையில் கொடுத்தால் என்ன தப்பு?' என்று கேட்டேன் நான்.

பெரியார் சொன்னார்:

''எங்கே ஐயா ஜாதி இல்லை? ஜெயில்ல போய்ப் பாரு. முதலியார், கவுண்டர், வன்னியர் இப்படிப் பல ஜாதிக் காரன் இருக்கான். கணக்கு போட்டுப் பார்த்தா ஒரு ஜாதிக் காரன் வெளியிலே எத்தனை பேர் இருக்கானோ அதே விகிதாசாரப்படிதான் ஜெயிலுக்குள்ளேயும் இருக்கான். என்ன, பிராமணன் மட்டும் கொஞ்சம் குறைவா இருப்பான். ஏன்னா அவனுக்குக் கொலை, கொள்ளைன்னா பயம். ஜெயில்லே விகிதாசாரப்படி இருக்கிற மாதிரி அரசு உத்தியோகம், கல்லூரி அட்மிஷன் விஷயத்திலும் இருக்க வேண்டியதுதானே? அதை விட்டுட்டு தகுதி அடிப்படை என்ன வேண்டியிருக்குது? வெங்காயம்!''

பெரியாரின் இந்த லாஜிக் என்னை மிகவும் கவர்ந்தது.

அதோடு நான் விடவில்லை. மேலும் ஒரு கேள்வியைப் போட்டேன்.

''சரி, இப்ப நாங்க பிராமணர்கள் மாறி வருகிறோம். முற்போக்கா சிந்திக்கிறோம். உதாரணத்துக்கு இங்கே இப்போ நீங்க கொடுத்த காபியை நான் சாப்பிட்டேன். இதுவே சில வருஷங்களுக்கு முன் இந்த மாதிரி ஒரு பிராமணன், வேறு ஜாதிக்காரர் வீட்ல காபி சாப்பிடறதைப் பார்க்க முடியுமா?''

பெரியார் கொஞ்சம் கூட யோசிக்கவில்லை.

''இப்ப நீங்க காப்பி சாப்பிட்டீங்க இல்லையா? முப்பது வருஷமா நான் பட்டபாடுதானே நீங்க இப்ப சாப்பிட முன் வந்திருக்கீங்க. நான் பேசிப் பேசித்தானே நீங்களெல்லாம் இப்ப மாறிகிட்டு வர்றீங்க?'' என்று ஒரே போடாகப் போட்டு என்னை அடுத்து பேச முடியாமல் செய்து விட்டார்.''

பெரியாரிடம் சாவிக்குப் பிடித்தது அவர் பேச்சும் கொள்கைப்பிடிப்பும் மட்டுமல்ல. அவரது அயரா உழைப்பும் சலியா ஊக்கமும் கூடத்தான்.

பெரியார் அவர்களிடம் சாவி பேசிக் கொண்டிருந்தபோது கரூரிலிருந்து நாலைந்து பேர் வந்து ஒரு கூட்டத்துக்காக ஐயாவை அழைக்கக் காத்திருந்தார்களாம்.

பெரியார் கேட்கிறார்:

''எப்பய்யா கூட்டம் ஆரம்பிப்பீங்க?''

''ஆறு மணிக்கு.''

''ஆறு மணிக்கு வேண்டாம். யாரும் வரமாட்டாங்க. எட்டு மணிக்கு ஆரம்பியுங்க. என்னால ரொம்ப நேரம் பேச முடியாது. ஒரு மணி நேரம் பேசுவேன். சரியா?''

அவர்கள் போன பிறகு சாவி பெரியாரிடம் ஒரு கேள்வி கேட்கிறார் :

''ஐயா, உங்கள் வாழ்நாளில் இதுவரை ஆயிரக்கணக்கான கூட்டத்தில் பேசி இருப்பீர்கள். இந்தத் தள்ளாத வயதில் இன்னமும் கூட்டம் கூட்டம் என்று ஒப்புக் கொள்கிறீர்களே! கூட்டங்களில் பேச உங்களுக்கு அலுப்பாக இல்லையா? சலிப்பு வருவதில்லையா?''

''ஒரு இயக்கத்தைத் தொடங்கிட்டா அதில் கடைசி வரைக்கும் உறுதியா இருந்து பார்த்துடணும். அலுப்பாவது, சலிப்பாவது! ஒண்ணு தெரியுமா? சின்ன வயசில நான் முதமுதல்ல மீட்டிங் பேசப் போனப்போ எவ்வளவு உற்சாகத்தோடு போனேனோ அதே உற்சாகத்துடன் இன்னைக்கும் போறேன்.''

''பெரியாரின் இந்த பதிலைக் கேட்டதும் எனக்கு அவர் மீது இருந்த மதிப்பு மேலும் பல மடங்காக உயர்ந்து விட்டது. அன்று முதல் பெரியார் கடைப்பிடிக்கும் அதே உற்சாகத்தை நானும் இன்று வரை கடைப்பிடித்து வருகிறேன்.''

சமூக சீர்திருத்த எழுத்தாளரான திரு. வ.ரா. அவர்களைப் போலவே சாவி அவர்களும் பூணூல் அணிவதில்லை என்பது வியப்புக்குரிய செய்தி.

''எனக்குக் கடவுள் பக்தி, மதப்பற்று எல்லாம் உண்டு. ஆனால் அர்த்தம் புரியாத வைதிகச் சடங்குகளில் சம்மதம் இல்லை. மந்திரம், ஜபதபம் இவற்றில் முழு நம்பிக்கை உண்டு. ஆனால் அவற்றைச் சரியாகச் செய்ய முடியாத போது பூணூல் மட்டும் எதற்கு? பூணூலை ஒருநாள் கழற்றி எறிந்து விட்டேன். ஏதோ பிராமணீயத்துக்கு எதிரான செய்கையாக அதை நான் கருதவில்லை. பூணூல் தொடர்பான ஆவணி அவிட்டம் போன்ற

மற்ற வைதிகச் சடங்குகளிலும் நான் ஈடுபடுவதில்லை'' என்கிறார் சாவி.

அக்ரகாரத்து அதிசய மனிதர் என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்ட திரு. வ.ரா. அவர்களின் வாதங்களும், அவருடைய நட்பும் கூட சாவி அவர்களின் இத்தகைய மாற்றங்களுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

---

# 25. புது மனை புகுவிழா

சாவிக்கு, காமராஜ் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பல சந்தர்ப்பங்களில் கிடைத்தபோதிலும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமக்கென எந்த உதவியையும் ஒரு தரம் கூடப் பெற்றதில்லை. அதே சமயம், மற்றவர்களுக்காக காமராஜரிடம் போய் உதவி கேட்க அவர் தயங்கியதுமில்லை.

ஒரு சமயம் காமராஜருடன் சாவியும் டெல்லிக்கு விமானத்தில் பயணம் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது, ''ஆனந்த விகடனுக்கு கலர் பிரிண்ட்டிங் மெஷின் ஒன்று தேவைப்படுகிறது. அதற்கு நீங்கதான் உதவி செய்யணும். இந்த இறக்குமதி கட்டுப்பாடுகள் குறுக்கிடாமல் சட்ட பூர்வமாக என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து தர வேண்டும். ஃபைனான்ஸ் மினிஸ்டர் டி.டி.கே.யிடம் நீங்க ஒரு வார்த்தை சொன்னால் போதும், காரியம் உடனே நடந்துடும். ஆனந்த விகடனில் நீண்ட காலமாக காங்கிரஸை ஆதரித்துப் பக்கம் பக்கமாகத் தலையங்கம் எழுதி வருவது உங்களுக்கே தெரிந்ததுதான்'' என்றார் சாவி.

'இவ்வளவுதானே... நாளைக்கே டி.டி.கே. கிட்ட சொல்லிடறேன். இது சம்பந்தமா ஏதாவது பேப்பர் வெச்சிருக்கீங்களா, கைவசம் இருக்கா?'' என்று கேட்டார் காமராஜர்.

''வைத்திருக்கிறேன்'' என்று சொல்லி அது சம்பந்தப்பட்ட கடிதங்களை எடுத்துக் கொடுத்தார் சாவி.

அவற்றை வாங்கிக் கொண்ட காமராஜர் ''இது இருக்கட்டும், நீங்க சொந்தமா வீடு கீடு ஏதாவது வாங்கியிருக்கீங்களா?'' என்று விசாரித்தார்.

''இல்லை.... சொந்தமா வீடு வாங்கற அளவுக்கு எனக்கு வசதியெல்லாம் இல்லை.''

''அப்படியா? நான் சென்னைக்குத் திரும்பியதும் மினிஸ்டர் வெங்கட்ராமன் கிட்ட சொல்றேன். நீங்க அவரைப் போய்ப் பாருங்க'' என்றார்.

திரு. வெங்கட்ராமன் அவர்கள் அப்போது தமிழக வீட்டு வசதி அமைச்சராக இருந்தார். அப்போது 'ஹவுஸிங் போர்ட்' கிடையாது. நந்தனத்தில் 'சி.ஐ.டி.' என்ற பெயரில் இயங்கி வந்தது. அங்கே பல பேருக்கு வீட்டு மனைகள் 'அலாட்' செய்து கொண்டிருந்தார்கள்.

ஆர்.வி. அவர்களைப் பார்க்கப் போயிருந்தார் சாவி. தனக்கு வீட்டு மனை கேட்பதற்காக அல்ல. சாவி முன்னின்று தொடங்கிய சத்ய சபா நிகழ்ச்சிகள் நடைபெறப் போகும் சமயம் அது. தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானம் ரொம்பவும் மேடு பள்ளமாக இருந்தது. சிட்டி இம்ப்ருவ் மெண்ட் ட்ரஸ்ட் (சி.ஐ.டி.) வசம் ஒரு டிராக்டர் இருந்தது. 'சி.ஐ.டி. சேர்மனிடம் ஒரு வார்த்தை சொல்லி மைதானத்தை நிரப்பச் சொல்லுங்க. அதற்குரிய வாடகையைக் கொடுத்து விடுகிறோம்' என்று கேட்பதற்காகவே ஆர்.வி. அவர்களைப் போய்ப் பார்த்தார்.

திரு. வெங்கட்ராமன் அவர்களோ சாவியைப் பார்த்தவுடன் மேசை டிராயரைத் திறந்து ஒரு விண்ணப்பத் தாளை எடுத்து நீட்டி, 'முதல்ல இந்த அப்ளிகேஷன் பாரத்தைப் பூர்த்தி செய்து கொடுங்க. தலைவர் சொல்லியிருக்கார்' என்றார். சாவி அப்ளிகேஷனைப் பூர்த்தி செய்து ஆர்.வி.யிடமே

கொடுத்து விட்டு வந்தார். அதற்கடுத்த சில தினங்களுக்குள் சாவிக்கு வீட்டு மனை அலாட் செய்திருப்பதாகக் கடிதம் வந்து விட்டது. முதல் தவணையாகக் கட்ட வேண்டிய பணம் சாவியிடம் இல்லை. தெரிந்தவர்களிடம் கடன் வாங்கித்தான் கட்ட வேண்டியதாயிற்று. அப்புறம்தான் அண்ணாநகர் ஏ.ஐ. பிளாக்கில் காலி மனை ஒன்று சாவியின் பெயருக்கு ஒதுக்கப் பட்டது.

நீண்ட காலத் தவணை முறையில் பணம் கட்டி முடித்து நிலம் சொந்தமாகி விட்ட போதிலும் அதில் வீடு கட்டிக் கொள்ளும் அளவுக்குப் பண வசதி இல்லாததால் அது அப்படியே காலி மனையாகவே கிடந்தது.

பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் காங்கிரஸ் ஆட்சி போய் தி.மு.க. ஆட்சி வந்தது. திரு. ராசாராம் வீட்டு வசதி அமைச்சரானார்.

ராசாராம் சாவிக்கு ஏற்கனவே நெருங்கிய நண்பர். ஆனாலும் ராசாராமிடம் வீட்டு சமாசாரம் பற்றி சாவி எதுவும் பேசவில்லை. காமராஜர் மூலம் சாவிக்கு நிலம் தரப்பட்டதைத் தமிழ்வாணன் மூலம் கேள்விப்பட்ட ராசாராம் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டித் தர அவராகவே முன் வந்தார். ஆனால் முன்பணமாக வீட்டின் கிரயத்தில் நான்கில் ஒரு பாகத்தைக் கட்ட வேண்டும் என்ற ஹவுஸிங் போர்ட் விதியைச் சுட்டிக்காட்டி 'என்னால் இயலாதே' என்றார் சாவி.

''ஏன், உங்க நிலத்தையே அந்தப் பணத்துக்கு ஈடாக வச்சுக்கலாமே, கவலைப்படாதீங்க; அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறிய ராசாராம் தாம் சொன்னபடியே ஏற்பாடு செய்தார்.

'காமராஜ் அவர்கள் தயவால் மனை கிடைத்தது. கலைஞர் ஆட்சியில் வீடு கட்ட முடிந்தது' என்று இன்றும் நன்றியோடு நினைவு கூர்கிறார் சாவி.

இதற்கிடையில் சாவிக்கு ரஷ்யா செல்ல அழைப்பு வந்தது. அந்த நேரம் பார்த்து மழை சீசனும் தொடங்கி விட்டதால் வீடு கட்டும் வேலை தாமதப்பட்டது. அப்புறம் ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் கட்டிட வேலை முடிந்து, புதுமனை புகுவிழா நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாதஸ்வர இசையுடனும், கிருபானந்த வாரியாரின் மீனாட்சி கல்யாண கதாகாலட்சேபத்துடனும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காமராஜ், ராசாராம், சின்ன அண்ணாமலை, ஜி.உமாபதி, பகவான்தாஸ் கோயங்கா, ஏ.நடராஜன், சதாசிவம், திருமதி எம்.எஸ்., பின்னாளில் சென்னை ஷெரீஃபாகப் பதவி வகித்த சாவியின் நண்பர் ஆர்.ராமகிருஷ்ணன், கல்கி வைத்தியநாதன் என்று பல்துறை பெருமக்களும் விழாவுக்கு வந்து சாவியை வாழ்த்தி விட்டுப் போனார்கள். அன்று மாலை வாரியார் சுவாமிகள் மீனாட்சி கல்யாணம் கதை கேட்க காமராஜர் வந்தது மட்டுமின்றி இரண்டு மணி நேரம் உட்கார்ந்து கதை முழுக்கக் கேட்டு விட்டுப் போனார்.

காலையில், வீனஸ் ரத்னம் ஐயர் அவர்கள் தம் மனைவியுடன் வந்து குத்து விளக்கேற்றி வைத்து வாழ்த்தினார்.

அந்தப் புதுமனை புகுவிழாவின் போது சாவி தனக்கு ஏற்படுத்திக் கொடுத்த மிகப் பெரிய வாய்ப்பை சென்னை தொலைக்காட்சியின் முன்னாள் இயக்குனரும், சாவியின் குடும்ப நண்பருமான ஏ.நடராஜன் அவர்கள் விவரிக்கிறார்:

''அன்று பெருந்தலைவர் காமராஜரிடம் சாவி அவர்கள் என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். நான் தலைவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது 1952ல் நான் முசிறியில் பள்ளி மாணவனாக இருந்த சமயம் ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் முன்னிலையில் பேசி அவர் கரங்களினால் பரிசு பெற்ற சம்பவத்தை நினைவு கூர்ந்தேன். உடனே சற்றும்

யோசிக்காமல், 'ஆமாமாம். எம்.பி. கிருஷ்ணசாமி அப்போ அந்தத் தொகுதியில் போட்டியிட்டார்' என்று அவர் சொன்ன போது அவரது நினைவாற்றல் என்னை வியக்க வைத்தது. காமராஜருடன் அவ்வளவு நேரம் பேசுகின்ற அந்த அரிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர் சாவி அவர்கள்தான். வாழ்க்கையில் நான் மறக்க முடியாத வாய்ப்பு அது.''

# 26. காமராஜருக்கு வந்த கோபம்

ஒரு நாள் முழுவதும் காமராஜருடனேயே இருந்து 'எ டே வித் காமராஜ்' பாணியில் ஆனந்த விகடனில் ஒரு கட்டுரை எழுதினார் சாவி.

அப்போது அவர் டில்லி தமிழ்நாடு இல்லத்தில் காமராஜருடன் தங்குவதற்கு ஏற்பாடாயிற்று. ஒரு நாள் திரு. ஜி.ராஜகோபாலன் எம்.பி., காமராஜரையும், சாவியையும், புகைப்படக் கலைஞர் நடராஜனையும் தம் இல்லத்துக்கு காலைச் சிற்றுண்டிக்கு அழைத்திருந்தார். சாவியும் ராஜகோபாலனும் ஏற்கனவே அலிபுரம் சிறையில் நண்பர்கள் ஆனவர்கள். மாயவரம் நடராஜன் என்பவர் காமராஜரின் நண்பர். சிறந்த புகைப்படக் கலைஞர். நடராஜன் நவகாளி யாத்திரையின்போது சாவியுடன் சென்று புகைப்படம் எடுத்தவர்.

சாப்பிடத் தொடங்கிய சில நிமிடங்களில் ராஜகோபாலனுக்கு ஒரு ஃபோன் கால் வந்தது.

"இன்றைக்குப் பிரதமர் நேருவுடன் தீன்மூர்த்தி பவனில் ஒன்பது மணிக்கு ஒரு மீட்டிங். லால் பகதூர் சாஸ்திரி, ஜகஜீவன்ராம் எல்லோரும் வந்து விட்டார்கள். காமராஜ் அங்கே இருக்கிறாரா? எல்லோரும் அவருக்காகக் காத்திருக்கிறோம். காமராஜர் அங்கே இருந்தால் உடனே வரச் சொல்லுங்கள்" என்று திருமதி இந்திரா காந்தி ஜி.ராஜகோபாலனிடம் பேசினார்.

''அடடே! அந்த மீட்டிங் இன்னிக்கா? நாளைக்கின்னு தானே சொன்னாங்க'' என்று பதறிப்போன காமராஜ் பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதே சட்டென்று எழுந்து கையைக் கழுவிக் கொண்டு பறந்து போய்க் காரில் ஏறிக் கொண்டார்.

இந்தச் சமயம் பார்த்து வெளியே பேய் மழை கொட்டிக் கொண்டிருந்தது. மழையின் புகைச்சலான கனத்தில் எதிரே நிற்பவர் யார் என்று கூடத் தெரியவில்லை. நிழல் உருவங்களாக மனிதர்கள்.

அந்த மழையில் 'காரை எடு' என்று காமராஜ் அவசரப் படுத்தியதும் சாவி எதுவும் புரியாமல் திகைத்து நடராஜனோடு ஓடிப் போய் காரில் ஏறிக் கொண்டார்.

நடராஜனும், சாவியும் காரில் ஏறியதைக் கண்டதும் காமராஜரின் முகம் மாறியது. இவர்கள் ஏன் காரில் ஏறினார்கள் என்பது போல் இருவரையும் கோபமாகப் பார்த்தார்.

கார் சற்று தூரம் போனதும் நடராஜன் பக்கம் திரும்பிப் பார்த்து, ''ஏய்! புத்தியிருக்கா உனக்கு, புத்தி! நான் இப்ப எங்கே போயிட்டிருக்கேன் தெரியுமில்லே. நேரு வீட்டில் முக்கியமான மீட்டிங். நீ என் கூட காமிராவுடன் வந்தா, ஏதோ 'காமராஜ் போட்டோகிராபரை ஏற்பாடு செய்துகிட்டு சாவகாசமா வரார் போல இருக்கு'ன்னு நினைக்க மாட்டாங்களா? இது உனக்குத் தெரிய வேணாம்? புத்தி இருக்கா புத்தி!'' என்று பொரிந்து தள்ளவும் சாவிக்கு 'ஏன்தான் காரில் ஏறினோமோ?' என்று தர்ம சங்கடமாய்ப் போய் விட்டது. காமராஜருக்கு இப்படி ஒரு சங்கடத்தைக் கொடுத்து விட்டோமே என்று தவித்துப் போன சாவி 'இந்த டோஸ் தனக்கும் சேர்த்துதான்' என்று எண்ணிக் கொண்டார்.

மழையின் வேகம் மேலும் கூடி டெல்லியே வெள்ளக் காட்டில் மிதந்தது. போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய் நின்றது.

காமராஜரின் கார் மட்டும் எதையும் பொருட்படுத்தாமல் 'தீன் மூர்த்தி பவன்' நோக்கி வேகமாய்ப் பறந்து கொண்டிருந்தது. வழியில் சற்று தூரத்தில் ஒரு மரத்தடியில் டாக்ஸி ஒன்று நின்று கொண்டிருந்தது. அதை தூரத்திலிருந்தே கவனித்து விட்ட காமராஜர் காரை அங்கே நிறுத்தும்படி டிரைவருக்கு உத்தர விட்டார்.

நடராஜனைப் பார்த்து, ''இறங்குங்க. அதோ தெரியுதே, அந்த டாக்ஸி பிடிச்சுப் போய்ச் சேருங்க'' என்று கர்ஜித்தார்.

சாவியும், நடராஜனும் ஒரே பாய்ச்சலில் காரை விட்டு குதித்து ஓடியதும் காமராஜர் கார் மீண்டும் பறந்தது. அந்த அடைமழையில் ஓடிப்போய் டாக்ஸி ஏறுவதற்குள் இருவரும் தெப்பலாய் நனைந்து போனார்கள்.

நேருஜியுடனான மீட்டிங் முடிந்ததும் பகல் ஒரு மணிக்கு ஜகஜீவன்ராம், மொரார்ஜி தேசாய், காமராஜர் மூவருக்கும் வேறு ஒரு இடத்தில் 'ஆன்ட்டி கரப்ஷன் மீட்டிங்' ஒன்றுக்கு ஏற்பாடாகி இருந்தது. அது முன்கூட்டியே நடராஜனுக்குத் தெரிந்திருந்ததால் 'எப்படியும் காமராஜர் அங்கே வருவார்' என்று அந்தக் கூட்டம் நடக்கும் இடத்துக்கு சாவியும் நடராஜனும் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே வரவேற்புக் கூடத்தில் போய் தலையைத் துவட்டிக் கொண்டு சமர்த்துப்பிள்ளைகளாக உட்கார்ந்து கொண்டார்கள்.

சரியாக ஒரு மணிக்கு காமராஜர் அங்கே வந்தார். இருவரும் எழுந்து நின்றனர். இரண்டு பேரையும் பார்த்ததும் சிரித்த முகத்துடன் 'இங்கதான் இருக்கீங்களா? இருங்க இருங்க. இதோ மீட்டிங் முடிச்சிட்டு வந்துடறேன். இங்கேயே இருங்க' என்று ரொம்ப ரொம்ப சாந்தமாகச் சொல்லிவிட்டுப் போனார்.

சாவி சொல்கிறார்:

''சற்று நேரத்துக்கு முன்பு காருக்குள் 'புத்தி இருக்கா

புத்தி?' என்று எரிமலையாக வெடித்த அந்தக் காமராஜரா இப்படி பச்சை வாழைப் பட்டையாய் மாறிப் பேசுகிறார்! நம்ப முடிய வில்லையே! காமராஜரின், இந்த இரண்டு உச்ச கட்ட மன நிலைகளையும் – எக்ஸ்ட்ரீம் மூட்ஸ் என்பார்களே – அந்த இரண்டையும் பார்த்தவன் நான்.''

சாவி தினமணி கதிர் ஆசிரியராக இருந்தபோது அசோக் நகரில் குடியிருந்தார். ஒருநாள் காமராஜர் அவர்கள் சாவி வீட்டுக்கு இரவு விருந்துக்கு வந்தார். அன்று பார்த்து பெரம்பூர் ரெயில்வே இன்ஸ்ட்டிட்யூட் அரங்கில் சாவியின் 'வாஷிங்டனில் திருமணம்' நாடகம். அப்போதெல்லாம் அடிக்கடி நடக்கும் நாடகம்தான் அது என்றாலும் அன்றைய தினம் நாடகத்துக்கு எம்.ஜி.ஆர். தலைமை தாங்குவதாக இருந்ததால் அந்நிகழ்ச்சிக்கு சாவியும் வருவதாக ஒப்புக் கொண்டிருந்தார்.

சற்றும் எதிர்பாராமல் காமராஜ் அவர்கள் அன்று பார்த்து சாப்பிட வருவதாகச் சொல்லி விட்டதால் சாவியால் நாடகத்துக்குப் போக முடியவில்லை. தம்முடைய இந்த இயலாமையை விளக்கி சபா செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பினார் சாவி. அக்கடிதத்தை நாடக இடைவேளையின் போது எம்.ஜி.ஆர். முன்னிலையில் 'மைக்'கில் படித்து விட்டார்கள்.

'ஓகோ! என்னைவிட காமராஜர்தான் சாவிக்கு முக்கியமாகிப் போய் விட்டாரோ' என்ற கோபம் எம்.ஜி.ஆருக்கு வந்துவிட்டது. அதை அவர் அப்போது வெளிக்காட்டிக் கொள்ளாவிட்டாலும் பின்னர் சாவியை நேரில் சந்திக்க நேரிட்டபோது, சாவியுடன் பேசாமல், முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டதிலிருந்து சாவி அதைப் புரிந்து கொண்டார். சாவி அதற்காக வருத்தப்படவும் இல்லை.

## 27. ஜெயகாந்தன் அறிமுகம்

ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவின் உதவியாளராக பார்த்தசாரதி என்ற இளைஞர் இருந்தார். ஒருநாள் அவர் அங்கே மர அலமாரிக்கு மேல் கிடந்த புழுதி படிந்த புத்தகம் ஒன்றை எடுத்து தூசி தட்டி சாவியிடம் கொடுத்தார். அது சிறுகதைகள் அடங்கிய ஒரு சின்னப் புத்தகம். அதை வாங்கிப் பார்த்த சாவி ஒரே மூச்சில் படித்து முடித்து விட்டார்.

'சரஸ்வதி' பத்திரிகையில் ஜெயகாந்தன் எழுதி வெளியான சிறுகதைகளின் தொகுப்பு அது. தி.ஜ.ர. அவர்கள் அந்தப் புத்தகத்தில் மிக அழகாக ஒரு முன்னுரை எழுதியிருந்தார்.

அந்தத் தொகுப்பில் 'டிரெடில்' என்ற கதையைப் படித்த போது சாவி மகிழ்ந்து போனார். கருத்து, நடை எல்லாமே புதிதாக இருந்தது. 'யார் இந்த ஜெயகாந்தன்? இவ்வளவு சுவாரசியமாக எழுதியிருக்கிறாரே, இவரை எப்படியாவது விகடனில் எழுத வைத்து விடவேண்டும்' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. விகடன் என்றாலே அது பிராமணர்கள் பத்திரிகை என்று அப்போது பொதுவாக ஒரு கருத்து நிலவி வந்தது. பிராமணர்கள் அல்லாத வர்களைப் பெருமளவில் விகடனில் எழுத வைப்பதன் மூலம் அந்தக் கருத்தை அழித்துவிட வேண்டும் என்றும் சாவி விரும்பினார்.

மேலும் விகடனுக்கு ஒரு புது உத்வேகம் தரும்

முயற்சிகளை அப்போதைய ஆசிரியர் குழு மிகத் தீவிரமாக மேற்கொண்டிருந்தது. குழுவினர் அனைவருமே புதுமை விரும்பிகளாக இருந்தார்கள். திரு. வாசன் அவர்களின் புதல்வர் பாலசுப்ரமணியன் விகடனின் ஒட்டு மொத்த நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்த போதிலும், பெரும்பாலும் ஆசிரியர் இலாகாவிலேயே எந்நேரமும் அமர்ந்து விகடன் பொருளடக்கத்தை மேலும் சிறப்பாக்குவதில் தீவிரம் கொண்டிருந்தார்.

ஜெயகாந்தன் கதைகளைப் பற்றி ஒருநாள் பாலு அவர்களிடம் சாவி உயர்வாகப் பேசி 'நாம் ஏன் அவரை விகடனுக்கு எழுத அழைக்கக் கூடாது?' என்று கேட்டார்.

''நீங்களே கேட்டுப் பாருங்களேன்'' என்றார் திரு. பாலு.

அடுத்த சில நாட்களில் எழுத்தாளர் சங்கத் தேர்தல் நடை பெற்றது. அங்கே ஜெயகாந்தன் வந்திருந்தார். சாவியும் போயிருந்தார். அந்தச் சந்திப்பையே அறிமுகச் சந்திப்பாக சாவி பயன்படுத்திக் கொண்டு ஜெயகாந்தனிடம் வலியச் சென்று ''உங்க 'டிரெடில்' கதையைப் படித்தேன். ரொம்ப நன்றாக இருந்தது'' என்று மனம் திறந்து பாராட்டினார். ஜெயகாந்தன் அவருக்கே உரித்தான மிடுக்குடன் சற்று அலட்சியமாகவே அந்தப் பாராட்டுதலை ஏற்றுக் கொண்டார்.

'ஏன், நீங்கள் விகடனுக்கு எழுதக் கூடாது?' என்று கேட்டார் சாவி.

''நீங்க ஆனந்த விகடனில் இருக்கீங்களா? அவாள்ளாம் என் கதையைப் போடுவாளோ?'' என்று பிராமண பாஷையில் குத்தலாகப் பதில் சொன்னார் ஜெயகாந்தன்.

சாவி சற்றும் கோபப்படாமல், ''நீங்கள் தாராளமாக எழுதலாம். விகடன் சார்பில்தான் நான் உங்களைக் கேட்கிறேன். பிராமண பாஷையைக் குறைத்து வருகிறோம். தேவனுக்குப் பிறகு அதெல்லாம் போன மாதிரிதான்'' என்றார்.

"அப்படியா? சரி, பார்க்கலாம்" என்று கூறி விட்டுச் சென்ற ஜெயகாந்தன், திடீரென ஒருநாள் 'ஓவர் டைம்' என்று ஒரு கதையை விகடனுக்கு அனுப்பி வைத்தார். கதையைப் படிக்கச் சொல்லிக் கேட்ட பாலு அவர்கள் அதை வெகுவாக ரசித்தது மட்டுமின்றி அடுத்த வார விகடனிலேயே பிரசுரித்தும் விட்டார்.

அப்போதெல்லாம் சிறுகதைக்கு உயர்ந்த பட்சம் அறுபது ரூபாய்தான் சன்மானம் அனுப்பி வந்தார்கள். ஜெயகாந்தனுக்கு எழுபத்தைந்து ரூபாயாவது அனுப்ப வேண்டும் என்ற சாவியின் யோசனையை திரு. பாலு அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

ஜெயகாந்தன் விகடனில் எழுதிய முதல் கதை அதுதான். அதன் பின்னர் அவருடைய கதைகள் விகடனில் தொடர்ந்து பிரசுரமாயின.

இதற்கிடையில் ஒவ்வொரு வாரமும் விகடனுக்கு வரும் சிறுகதைகளில் மிகச் சிறந்த கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதை 'நட்சத்திரக் கதை' என்ற தலைப்பில் பிரசுரிக்கலாம் என்று சாவி சொன்ன யோசனையை அங்கீகரித்த பாலு அவர்கள் தலைப்பை மட்டும் 'முத்திரைக் கதை' என்று மாற்றினார். அப்புறம் பெரும்பாலும் ஜெயகாந்தனின் கதைகளே முத்திரைக் கதைகளாகத் தீர்மானிக்கப்பட்டு வெளிவந்தன. முத்திரைக் கதைக்கு நூறு ரூபாய் சன்மானம் என்றாலும் ஜெயகாந்தனுக்கு மட்டும் ஒரு ரூபாய் உயர்த்தி 101/= ரூபாயாக அனுப்பப்பட்டது. காரணம் தனக்கு ஒரு ரூபாயாவது அதிகம் தர வேண்டும் என்று ஜெயகாந்தன் விரும்பினார். மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும் தான் உயர்ந்தவன் என்பதைக் காட்டிக் கொள்ளவே அவர் அவ்வாறு விரும்பினார்.

ஜெயகாந்தனின் கதைகள் விகடனில் தொடர்ந்து வந்த போதிலும் விகடன் அதிபர் எஸ்.எஸ்.வாசன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஜெயகாந்தனுக்குக் கிட்டாமலேயே இருந்தது.

ஒருநாள் 'இரும்புத் திரை' படத்தின் பிரத்தியேகக் காட்சி ஜெமினி ஸ்டூடியோவில் நடைபெற்றது. விகடன் ஆசிரியர் குழுவுடன் ஜெயகாந்தனும் அந்தப் படத்தைப் பார்க்க வந்திருந்தார். காட்சி முடிந்ததும், சாவி வாசன் அவர்களின் அறைக்குச் சென்று 'ஜெயகாந்தன் வந்திருக்கிறார். தாங்கள் அவரைப் பார்க்கிறீர்களா?' என்று கேட்டார். ஜெயகாந்தன் ஒரு சிறந்த எழுத்தாளர் என்று வாசனுக்குத் தெரிந்திருந்த போதிலும் அவரைச் சந்தித்துப் பேசும் அளவுக்கு முக்கியத்துவம் தர இஷ்டப்படவில்லை. சற்றுத் தயங்கினார். ஆனாலும் சாவி அத்துடன் விட்டுவிடவில்லை.

''ஜெயகாந்தன் ஒரு சாதாரண எழுத்தாளர் அல்ல. அவர் எழுத்து மிகச் சக்தி வாய்ந்த எழுத்து. பாரதியார் கவிதைகளில் புரட்சி செய்த அளவுக்கு, ஜெயகாந்தன் வசன நடையில் செய்து வருகிறார்'' என்றார்.

''நீ என்ன அப்படிப் புகழ்கிறாய்? அவ்வளவு பெரிய எழுத்தாளரா? சரி; அவரை அழைத்து வா. நான் பார்த்துப் பேசுகிறேன்'' என்றார் வாசன். அப்படிச் சொன்னதுமே சாவி விரைந்து போய் ஜெயகாந்தனை அழைத்துச் சென்று வாசன் அவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு வெளியே வந்து விட்டார்.

''அப்புறம் அவர்கள் இருவரும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஜெயகாந்தனைக் கேட்டால் சொல்லுவார்'' என்கிறார் சாவி.

# 28. விந்தை மனிதர் ஜி.டி. நாயுடு

'தெற்கு வளர்கிறது' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதுவதற்காக சாவி திருநெல்வேலி, சேலம், கோவை போன்ற பல மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள தொழிற்சாலைகளைப் பார்வையிடவும் . பல தொழிலதிபர்களைச் சந்தித்து உரையாடவும் நல்ல வாய்ப்பாக அது அமைந்தது. அப்படிச் சந்தித்த பல தொழிலதிபர்கள் சாவிக்கு நெருங்கிய நண்பர்களாகவும் ஆனார்கள்.

கோவை மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி பற்றி கட்டுரை எழுதுவதற்காகச் சந்தித்த தொழிலதிபர்களில் ஜி.டி.நாயுடுவும் ஒருவர். ஜி.டி.நாயுடுவுக்குச் சொந்தமான பல்வேறு தொழிற்சாலைகளைப் பார்த்து விகடனில் கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரைகள் வெளி யானபோது நாயுடு கோவையில் இல்லை. லண்டன் போயிருந்தார். லண்டனில் அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்தவர் தம்முடைய கப்பல் பயணத்தின்போது சாவிக்கு நீண்டதொரு கடிதம் எழுதினார். கோவை திரும்பியதும் சாவியைச் சந்திக்க விரும்புவதாகவும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

விகடனில் எழுதிய அந்தக் கட்டுரைதான் சாவிக்கும் நாயுடுவுக்கும் மிக நெருக்கமான நட்பை ஏற்படுத்தியது.

அப்புறம் சாவி எப்போது கோவைக்குப் போனாலும் ஜி.டி.நாயுடுவைச் சந்திக்காமல் திரும்பியதில்லை. 'சாவி கோவை வந்திருக்கிறார்' என்ற செய்தி கிடைத்தாலே நாயுடுவும் மற்ற

வேலைகளைத் தள்ளி வைத்து விட்டு சாவியுடன் உரையாடத் தயாராகி விடுவார்.

சாவியின் மகன் பாலசந்திரன் (பாச்சா) பற்றி ஒருமுறை நாயுடு விசாரித்தார்.

''பையன் என்ன செய்கிறான்?''

''கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டான். இப்போதைக்குச் சும்மாதான் இருக்கிறான்'' என்றார் சாவி.

''ஏன் நம்ம ஆட்டோமொபைல் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படிக்கட்டுமே; தொழிற்கல்வி பின்னால உதவியாக இருக்குமே. சென்னைக்குப் போனதும் முதல் வேலையாக அவனை என்னிடம் அனுப்பி வையுங்கள்'' என்று சொல்லி அனுப்பினார் நாயுடு.

அடுத்த வாரமே புறப்பட்டுச் சென்ற பாச்சா, கோவையில் நாயுடுவின் கண்காணிப்பில் ஏறத்தாழ ஓராண்டு காலம் ஆட்டோமொபைல் பயிற்சி பெற்றார். அந்த ஒரு வருடம் தம் வீட்டிலேயே தங்கிப் படிக்கட்டும் என்று 'அசோகா' கிருஷ்ணா செட்டியார் சாவியிடம் சொன்னார். பாச்சா அப்படியே அசோகா செட்டியார் வீட்டில் தங்கி ஜி.டி.நாயுடுவிடம் தொழிற்கல்வி படித்து முடித்தார். பாச்சா இப்போது தன் மனைவி, மகளுடன் அமெரிக்காவில் 'செட்டில்' ஆகிவிட்ட போதிலும் அப்போது கோவையில் பெற்ற பயிற்சியும், அசோகா செட்டியார் வீட்டில் கற்றுக் கொண்ட ஒழுக்கநெறிகளும் அவன் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாக அமைந்தன.

சாவி அவர்கள் கோவை போனால் பொதுவாக பயனீர் மில்ஸ் அதிபர் ஜி.ஆர்.கோவிந்தராஜுலு அவர்களின் விருந்தினர் இல்லத்தில்தான் தங்குவது வழக்கம். ஜி.ஆர்.ஜியும் அவரது மனைவி கல்வியாளர் திருமதி சந்திரகாந்தி அம்மையாரும் சாவி அவர்களின் மீது மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டவர்கள். அவர்களுடைய வீட்டிலோ, கல்லூரியிலோ நடைபெறும் சிறப்பு

நிகழ்ச்சிகள் எதுவானாலும் சாவி கலந்து கொள்ளத் தவறியதில்லை. அந்த அளவுக்கு அவர்கள் குடும்ப நண்பராக இன்றளவும் பழகி வருகிறார்.

பயனீர் ஹவுஸில் தங்கியிருந்த சாவி அவர்களை ஒருமுறை ஜி.டி.நாயுடு தம் வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தார். இரண்டு பேரும் வெகு நேரம் பல விஷயங்கள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அன்று நாயுடு அவர்கள் சாவியைத் தம் வீட்டில் உணவருந்த வேண்டும் என்று விரும்பினார். எப்போதுமே குறும்புத்தனமாக எதையும் செய்து கொண்டிருப்பதில் நாயுடுவுக்கு ஆர்வம் அதிகம். 'பிராக்டிகல் ஜோக்ஸ்' செய்து நண்பர்களை அழவும் வைப்பார்; சிரிக்கவும் வைப்பார்.

அன்று சாவி போயிருந்தபோது 'கோபால் பாக்' பங்களாவின் வெளிச் சுவரில் 'construction is for destruction' என்று எழுதி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்துவிட்டு 'எதற்காக இப்படி எழுதி வைத்திருக்கிறீர்கள்?' என்று நாயுடுவிடம் கேட்டார்.

''அதுவா? இந்த இன்கம்டாக்ஸ்காரர்கள் அடிக்கடி ரெய்ட், கிய்ட் என்று வராங்க. 'இங்கே ஒண்ணுமில்லை. நீங்க சும்மா வந்து தொல்லை கொடுக்காதீங்கன்னா கேட்கமாட்டாங்க. 'இந்த வீடு முழுதும் சுவர் ஓரங்களில் மின்சார ஒயர்கள் மறைத்து வைத்திருக்கிறேன். இதோ இந்த பட்டனை அழுத்தினாப் போதும் குண்டு வெடித்து வீடே தவிடு பொடியாகி விடும். அதோடு சேர்ந்து நீங்களும் செத்துப் போவீர்கள்' என்பேன். அப்படிச் சொன்னால்தான் பயந்து ஓடி விடுவார்கள். வீடு பற்றி எனக்குக் கவலையில்லை. அதனால்தான் இப்படி ஒரு அறிவிப்பு'' என்றார் நாயுடு.

பின்னர் சாவியின் காதோடு சொன்னார்: ''இங்கே குண்டும் இல்லை. ஒரு மண்ணும் இல்லை. சுவர் ஓரங்களில் ஒயர் மட்டும் போட்டு மூடி வைத்திருக்கிறேன்; சும்மா அவங்களைப் பயமுறுத்த...''

அன்று வேறொரு இடத்தில் முக்கிய பணி ஒன்று சாவிக்கு இருந்தது. அதற்கு நேரமாகிவிட்டதால் சாவி புறப்படத் தயாரானார். ஆனால் நாயுடு விடுவதாயில்லை. 'சாப்பிட்டு விட்டுத்தான் போகணும்' என்று பிடிவாதம் பிடித்தார்.

''இன்று முக்கியமான வேலை இருக்கு... நான் போய் விட்டு இன்னொரு சமயம் வருகிறேன். என்னை விடுங்க...'' என்றார் சாவி.

நாயுடு என்ன சொல்லியும் சாவி கேட்பதாயில்லை. கடைசியில், 'சரி; அப்படின்னா போயிட்டு வாங்க' என்று விடை கொடுத்து அனுப்பி விட்டார்.

அடுத்த நிமிடம் சாவி காரில் ஏறிப் புறப்பட்டபோது, 'கோபால் பாக்' வாயிற்கதவு மூடப்பட்டு உள்பக்கம் பூட்டி இருந்தது. வெளியே போக முடியாமல் சாவி திண்டாடினார். உள்ளே திரும்பிப் போய் நாயுடுவைப் பார்த்து ''வாயிற்கதவு பூட்டியிருக்கிறதே! திறந்து விடச் சொல்லுங்கள்'' என்றார்.

நாயுடு சிரித்துக் கொண்டே, ''அப்படியா! நீங்கதான் சாவி ஆச்சே... திறந்து கொண்டு போக வேண்டியதுதானே'' என்றார்.

சாவியின் மகள் ஜெயந்தியின் திருமணம் சென்னை மயிலாப்பூரில் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடந்தபோது ஜி.டி.நாயுடு அவர்கள் நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தி, பெரிய கோலி குண்டு போன்ற ஒரு கடிகாரத்தைப் பரிசாக அளித்து விட்டுச் சென்றார். பார்த்தால் அது ஒரு வித்தியாசமான கடிகாரம்.

''ஜெர்மனியிலிருந்து பன்னிரண்டு கடிகாரங்கள் வாங்கி வந்தேன். அதில் ஒன்றைத்தான் உங்கள் மகள் ஜெயந்திக்குத் தருகிறேன்'' என்றார் நாயுடு.

கண்ணாடி குண்டுக்குள் சிறைப்பட்டிருக்கும் அந்தக்

கடிகாரத்தை என் மகள் இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறாள். அதுவும் இன்று வரை சீராக ஓடிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கடிகாரத்தின் பின்னணியில் ஒரு கதை உண்டு. அதை சாவி அவர்களே நினைவு கூர்கிறார்:

''நாயுடு அவர்களுக்கு ராமசாமி என்று ஒரு நெருங்கிய நண்பர். அவர் டாக்டரும் கூட. அவர் 'லூகோதர்மா' குறைபாட்டைப் போக்கவல்ல அருமையான ஒரு மருந்து வைத்திருந்தார். ஒருமுறை இருவரும் ஜெர்மனிக்குப் போய் இருந்தார்கள்.

''டாக்டர் ராமசாமி இந்தியாவிலிருந்து வந்துள்ளார். அவரால் 'லூகோதர்மா'வைக் குணப்படுத்த முடியும்' என்று அந்த ஊர் தினப்பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார் நாயுடு. பலபேர் வந்து சிகிச்சை பெற்றார்கள்.

அவர்களில் தொழிலதிபர் ஒருவரின் மகள் இளம் வயதுப் பெண் ஒருத்தியும் வந்திருந்தாள். டாக்டர் ராமசாமி அளித்த சிகிச்சையில் அவளின் குறைபாடு நீங்கி விட்டது. அந்தப் பெண்ணுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. தன் அப்பாவிடம் இந்திய டாக்டரைப் பற்றி 'ஓகோ'வெனப் புகழ்ந்திருக்கிறாள். அப்பா ஒரு கடிகாரத் தொழில் அதிபர். நாயுடுவையும், ராமசாமியையும் தம்முடைய தொழிற்சாலைக்கு அழைத்துப் போய் சுற்றிக் காட்டினார். எல்லாம் பார்த்து முடிந்ததும் 'உங்களுக்கு என்ன வேண்டுமோ, கேளுங்கள்' என்று நாயுடுவிடம் கேட்டார்.

நாயுடுவுக்கு எப்போதுமே தொழில் சம்பந்தப்பட்ட நுட்பங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் அதிகம். 'உங்கள் கடிகாரங்களின் தரத்துக்கு முக்கிய காரணமான அந்த ஸ்பிரிங்கின் சூட்சுமத்தை எனக்குச் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

பொதுவாகத் தொழில் ரகசியத்தை யாரும் வெளியிட மாட்டார்கள். மகளைக் குணப்படுத்திய டாக்டரின் நண்பர்

என்ற மகிழ்ச்சியில் 'சரி'யென்று அந்த ரகசியத்தை மறைக்காமல் சொல்லி அனுப்பினார். அதுமட்டுமல்ல; அந்த நிமிஷத்தில் தயாராகி வெளியே வந்த புத்தம் புது கடிகாரத்தை நாயுடுவுக்கு அன்பளிப்பாகத் தந்தபோது நாயுடு அதை ஏற்க மறுத்து விட்டார்.

'ஏன் வேண்டாம் என்கிறீர்கள்?' என்றார் தொழிலதிபர்.

'என்னைச் சேர்ந்தவர்கள் பத்து பேர் இருக்கிறார்கள். அவர்களை விட்டு நான் மட்டும் கட்டிக் கொள்வது நன்றாக இருக்காது' என்றார் நாயுடு.

'அப்படியா! இதென்ன பிரமாதம். நான் உங்களுக்கு பன்னிரண்டு கடிகாரங்கள் தருகிறேன்' என்றார் அந்த முதலாளி.

அதில் ஒன்றைத்தான் சாவியின் மகள் ஜெயந்தியின் திருமண அன்பளிப்பாகக் கொடுத்தார் நாயுடு.

'ஜி.டி.நாயுடு ஒரு மேதை. அவர் புரிந்த பல்வேறு விந்தை களைப் பற்றித் தனியாகவே ஒரு புத்தகம் எழுத வேண்டுமென்று எண்ணியிருந்தேன். திருமதி சிவசங்கரி மிகச்சிறப்பாக அந்தக் காரியத்தைச் செய்து முடித்திருப்பதால் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டேன். நாயுடு அவர்களைத் 'தாவர விஞ்ஞானி' என்றும் அழைப்பதுண்டு. ஒருமுறை அவர் எனக்குத் தந்த ஒரே ஒரு துவரைச் செடியை என் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வைத்தேன். அது பெரிய மரம் போல வளர்ந்து கிளை விட்டுப் படர்ந்து, கொத்துக் கொத்தாய் காய்களை உதிர்த்தது. சில வருடங்களுக்குப் பிறகு அந்த மரம் பட்டுப்போய் விட்டதால் அந்த இடமே சூனியமாகி விட்டது. ஆயினும் அவர் கொடுத்த கண்ணாடி குண்டு கடிகாரம் மட்டும் இன்னும் ஓடிக்கொண்டிருக்கிறது, அவரது நட்பின் நினைவுகள் போல.''

சாவியின் கண்கள் கலங்குகின்றன.

---

# 29. அறிஞர் அண்ணாவின் பாராட்டு

புதுமைகளைப் புகுத்தி, புதிய வடிவங்களில் கதை கட்டுரைகள் புனைவதில் சாவிக்கு எப்போதுமே ஆர்வம் அதிகம். அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருப்பது அவருக்குக் கட்டோடு பிடிக்காது. புதிய கோணங்களில் அவர் எழுதிய 'இங்கே போயிருக்கிறீர்களா?', 'கேரக்டர்', 'வாஷிங்டனில் திருமணம்' போன்ற படைப்புகள் இதற்கு நல்ல உதாரணங்கள். ஒரு இடத்தை நாம் சென்று பார்த்திருந்தாலும், அதையே சாவி அவர்கள் தம்முடைய 'பார்வை'யில் கண்டு அவருக்கே உரித்தான பாணியில் நகைச் சுவையுடன் சொல்கிறபோது 'அட, நாமும்தான் அங்கே போயிருக் கிறோம், ஆனாலும் நமக்கு இதெல்லாம் கண்ணில் படவில்லையே' என்று அவற்றைப் படிக்கும் போது உணர்கிறோமே, அதுதான் அவரது எழுத்துக்கு வெற்றி.

'இங்கே போயிருக்கிறீர்களா?' போன்ற கட்டுரைகளில் பொதுவாக கண்ணால் கண்ட, காதால் கேட்ட விஷயங்களைத்தான் மற்றவர்கள் எழுதுவார்கள். சாவியோ தம்முடைய மூக்குக்கும் வேலை தந்து அதைத் தம் எழுத்திலே கொண்டு வருவார். ஆங்காங்கே என்னென்ன மணங்கள் வீசுமோ, அவற்றையெல்லாம் தம் எழுத்தில் மணக்கச் செய்வார். பொள்ளாச்சி சந்தையில் வீசிய பலாப்பழ வாசனை, ஊட்டி மலர்க்காட்சியில் முகர்ந்த மலர்களின் மணம் இப்படி வாசனைகளின் மூலமே அந்த இடங்களை வாசகர்களும் கண்டு மகிழும்படிச் செய்தார்.

சாவி சென்ற இடங்களுக்கெல்லாம் ஓவியர் கோபுலு அவர்களும் சென்று வந்தார். அந்தக் காட்சிகளை கோபுலுவின் தூரிகை அப்படியே படம் பிடித்துக் காட்டியதுடன் அவற்றுக்குப் பொருத்தமான ஜோக்குகளையும் இணைத்து இரண்டு பக்கங்களில் தனிக் கச்சேரி செய்திருந்தார்.

'கேரக்டர்' கட்டுரைகளில் வரும் ஆசாமிகள் நாம் நமது அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்கள்தாம். ஆனால் சாவியின் எழுத்து நடையில் அவர்கள் அத்தனை பேரும் நமக்குள் புகுந்து விட்டார்கள் என்றால் மிகையில்லை. விகடனில் அவர் எழுதிய அந்தக் கட்டுரைகளைப் பாராட்டிப் பல இடங்களிலிருந்து கடிதங்கள் வந்துள்ளன. ஆனால் சாவியால் மறக்க முடியாத பாராட்டு ஒன்று உண்டு. அது பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டுதான்.

'வாஷிங்டனில் திருமணம்' கடைசி அத்தியாயம் வரை சாவி என்று பெயர் போடாமல் இருந்தது போலவே 'கேரக்டர்' கட்டுரைகளையும் பெயர் போடாமல்தான் எழுதினார். ஆயினும் சாவியின் முத்திரை அதில் பதிந்திருப்பதைப் பல வாசகர்கள் எளிதில் புரிந்து கொண்டு 'இது சாவிதான்' என்றார்கள்.

'கேரக்டர்' கட்டுரைகளை அறிஞர் அண்ணா அவர்கள் வாரா வாரம் படித்துவிட்டு 'யார் எழுதுகிறார்கள்? என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் தம் நண்பர் டைரக்டர் ப.நீலகண்டன் அவர்களிடம் கேட்டிருக்கிறார். நீலகண்டன் சாவியின் நீண்டகால நண்பர்.

ஒருநாள் சாவி அவர்களை ஃபோனில் அழைத்து, ''நான்தான் நீலகண்டன் பேசுகிறேன். 'கேரக்டர்' எழுதறது நீங்கதானே?'' என்று கேட்டார்.

''ஆமாம், ஏன்?''

''இல்லை. அண்ணா அவர்கள் அந்தக் கட்டுரைகளை மிகவும் ரசித்துப் படிக்கிறார். 'இத்தனை அற்புதமான கட்டுரைகளை யார்

எழுதுகிறார்கள்?' என்று என்னிடம் கேட்டார். அந்த எழுத்து நடை, நகைச்சுவை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது அது நீங்களாகத் தான் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அண்ணா அவர் களிடமும் சொன்னேன். இருந்தாலும் என் யூகம் சரிதானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் ஃபோன் செய்தேன். 'கேரக்டர் போன்ற கட்டுரைகளை எனக்குத் தெரிந்து வேறு எந்த மொழியிலும் நான் கண்டதில்லை' என்று அண்ணா அவர்கள் பாராட்டினார்'' என்றார் நீலகண்டன்.

சாவி அவர்களுக்கு இதைக் காட்டிலும் வேறு என்ன பெரிய 'விருது' கிடைக்க வேண்டும்!

---

# 30. அருட்செல்வர் மகாலிங்கம்

'அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் ஆழமான நட்புதான் என் வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பெரும்பேறு' என்று சாவி அவர்கள் மிகப்பெருமையுடன் சொல்லிக் கொள்வதுண்டு.

சாவி அவர்களின் வீட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள் எதுவானாலும் இன்றளவும் அருட்செல்வர் மகாலிங்கம் அவர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்து வருகிறார். அது மட்டுமல்ல; சாவி அவர்களைத் தம் வீட்டுக்கு அடிக்கடி அழைத்து அவரோடு சேர்ந்து சாப்பிடுவதையும் உரையாடி மகிழ்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

சாவியின் எழுபதாவது பிறந்தநாளின் போது மகாலிங்கம் அவர்கள், எழுபதாயிரம் ரூபாய் நிதி சேர்த்து யாரும் எதிர்பாராத வகையில் அந்தப் பண முடிப்பை நேரில் கொண்டு போய்க் கொடுத்தார். ஆனால் அதை அவர் சாவி அவர்களிடம் தராமல், திருமதி சாவி (ஜானகி அம்மாள்) அவர்களிடம் தந்து, 'அம்மா... இதை நீங்க பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். அவரிடம் தந்தால் ஏதாவது செலவு செஞ்சிடுவார்'' என்றார் சிரித்துக் கொண்டே.

ஆனால், அந்த அம்மாள் மகாலிங்கம் அவர்கள் சொன்னபடி செய்யவில்லை. அந்தப் பணத்தை அப்போதே சாவி

அவர்களிடம் தந்து விட்டார். சாவியும் அந்தப் பணத்தை மகாலிங்கம் அவர்கள் நினைத்தபடியே தம்மிடம் வைத்துக் கொள்ளவில்லை. கிருஷ்ண கான சபா, மியூசிக் அகாடமி, நாரத கான சபா, வீனஸ் காலனி ஆஸ்திக சமாஜம், கோவையில் கிரிதாரி பிரசாத் அவர்களின் கீதா டிரஸ்ட் போன்ற அமைப்புகளுக்குச் சமமாகப் பங்கிட்டுத் தந்து விட்டார். கர்நாடக இசையிலும் ஆன்மீகத்திலும் சாவி அவர்களுக்கு உள்ள அதீத ஈடுபாடே இதற்குக் காரணம்.

சாவி – மகாலிங்கம் நட்பு இறுகிய பிறகு மகாலிங்கம் அவர்கள் நீண்ட காலமாக நடத்தி வரும் ராமலிங்கர் பணி மன்ற விழாக்களிலும் பாரதியார் பிறந்த தின விழாக்களிலும் சாவிக்கு முக்கிய பொறுப்பை அளித்துப் பங்கேற்கச் செய்து வருகிறார்.

சாவி அவர்களைப் பற்றி மகாலிங்கம் அவர்கள் சொல்கிறார்:

''ஆசிரியர் சாவியிடம் அகராதி ஒன்று இருந்தால் அதில் 'அசாத்தியம்' என்ற வார்த்தை நிச்சயமாக இருக்காது. பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கும் விஷயத்தில் அசாத்தியமானது ஒன்றுமில்லை என்று பலமுறை நிரூபித்துக் காட்டியவர்.

இன்றைய தமிழ் நாட்டில் இருக்கும் எழுத்தாளர்களில் சாவிக்கு இணையாக நகைச்சுவையுடன் பிறர் மனம் நோகாமல் எழுதக்கூடிய எழுத்தாளர்கள் விரல் விட்டு எண்ணும் அளவுக்குக்கூட இருப்பார்களா என்பது சந்தேகம்தான்.

இன்றைய தினம் தேசம் முழுவதும் உள்ள எழுத்தாளர் களின் நகைச்சுவைப் படைப்புகளை வரிசைப்படுத்தினால் அதில் ஆசிரியர் சாவியின் 'வாஷிங்டனில் திருமணம்', 'இங்கே போயிருக்கிறீர்களா?' போன்ற கதை கட்டுரைகளுக்கு ஈடாக வேறு ஒன்றையும் சொல்லிவிட முடியாது.

இளமைக் காலத்தில் அவரிடம் இயற்கையாக அமைந்திருந்த நகைச்சுவை உணர்வு எப்படி இருந்ததோ, அது மேலும் மேலும் வளர்ந்து முதிர்ச்சி பெற்றது. அவருடைய துன்பங்களையும், துயரங்களையும், கஷ்டநஷ்டங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஓங்கி வளர்ந்து உயர்ந்தது.

நான் சென்னையில் இருக்கும்போது சாவியுடன் தொடர்பு கொள்ள நினைப்பேன். 'சாவி இருக்கிறாரா? இருந்தால் இன்று சாப்பிட வரச் சொல்' என்று என் செயலாளர் ரவியிடம் சொல்வேன்.

'சாவி அமெரிக்கா போயிருக்கிறார். ஹாங்காங் போயிருக்கிறார்' என்பார் ரவி.

என் வீட்டிற்குச் சாப்பிட வரும்போதெல்லாம் உணவை ரசித்துச் சாப்பிடுவார். என்னையும், சமையல்காரர்களையும் பாராட்டத் தவற மாட்டார்.

பாரதியார் சங்கத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சிக்குப் பின்னால் சாவி சில ஆண்டுகள் வரை பொருளாளராக இருந்தார். இப்போது இணைப் புரவலராக இருந்து வருகிறார்.

என் அழைப்புக்கிணங்க 1986ஆம் ஆண்டு சிலம்புச் செல்வர் ம.பொ.சி., சாவி, பகீரதன் மூவரும் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் அமெரிக்காவில் நிறுவியுள்ள தாமரைக் கோயில் திறப்பு விழாவுக்கு வந்திருந்தனர். அந்த நாட்கள் மறக்க முடியாத இனிய நாட்கள்.

அப்போது நான் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டு சச்சிதானந்த சுவாமிகளின் ஆசிரமத்தில் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தேன். சாவி அவர்களையும் என்னுடன் தங்கச் செய்து, நானும் அவரும் நாள்தோறும் காலையில் அரை மணி நேரமும், மாலையில் அரை மணி நேரமும் மரங்கள் அடர்ந்த ஆசிரமத்துச்

சாலையில் நடப்போம். சாவியும் இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்டவராதலால் காலையிலும் மாலையிலும் என்னுடன் வாக்கிங் போவது அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

சாவி சிறந்த தேச பக்தர், நல்ல ரசிகர், பழகுதற்கினிய நண்பர். நகைச்சுவையோடு பேசுவார். அவர் என் நண்பர் குழாமில் ஒருவராக இருப்பது எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.''

---

# 31. 'அன்பே வா' அனுபவம்

'இங்கே போயிருக்கிறீர்களா?' தொடர் கட்டுரைகளை எழுதத் தொடங்குவதற்கு முன்பாகவே எந்தெந்த இடங்களுக்குப் போய் எழுத வேண்டும் என்பதைப் பட்டியலிட்டு அதை ஆனந்த விகடன் பொறுப்பாசிரியர் திரு. பாலசுப்ரமணியன் அவர்களிடம் காட்டி ஒப்புதல் பெற்றிருந்தார் சாவி. ஏதாவது ஒரு வெளிப்புறப் படப்பிடிப்பு பற்றி எழுதப்போவதாகவும் அந்தப் பட்டியலில் குறிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறிப்புக்கு எதிரில் 'அப்படி எழுதுவதாக இருந்தால் ஏ.வி.எம். நிறுவனத்தின் படப்பிடிப்புக்குப் போய் எழுதலாம்' என்று பாலு அவர்கள் எழுதியிருந்தார்.

இதை அடுத்து, ஏ.வி.எம். அவர்களோடு தொடர்பு கொண்டு இது பற்றி விவரித்து அவுட்டோர் போகும்போது தகவல் தந்தால் தானும் அவர்களோடு சென்று கட்டுரை எழுத வசதியாக இருக்கும் என்று சொல்லி வைத்திருந்தார்.

'ஏ.வி.எம்.' மெய்யப்பன் அவர்களிடமிருந்து ஒரு நாள் தகவல் வந்தது. ''அன்பே வா படப்பிடிப்புக்காக எம்.ஜி.ஆருடன் சிம்லா செல்ல திட்டமிட்டுள்ளோம். தங்களால் வர முடியுமா?''

உடனே கிளம்ப வேண்டிய அவசரம்.

பாலு அவர்கள் அப்போது தமக்குச் சொந்தமான படப்பை கிராமத்துக்கருகில் உள்ள பண்ணையில் இருந்தார்.

அவரைச் சந்தித்து, ஏ.வி.எம். அவுட்டோர் படப்பிடிப்புக்குப்

போகும் செய்தியைச் சொல்லிக் கொள்ளப் போதிய அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

அச்சமயம் மணியன்தான் எடிட்டோரியல் சம்பந்தப்பட்ட எல்லா பொறுப்புகளையும் கவனித்துக் கொண்டிருந்தார். அவரிடம் தன் சிம்லாப் பயணம் பற்றிக் குறிப்பிட்டு, பாலு அவர்களிடம் தகவல் சொல்லி விடும்படி கேட்டுக் கொண்டார்.

"பரவாயில்லை; நான் சொல்லிக் கொள்கிறேன். அவர்தான் 'ஏ.வி.எம். அவுட்டோர் இருந்தால் போகலாம்' என்று சொல்லி இருக்கிறாரே, பிறகென்ன? நீங்கள் கவலைப்படாமல் போய் வாருங்கள்" என்று கூறி சாவியை அனுப்பி வைத்தார் மணியன்.

ஏ.வி.எம். நிறுவனம் சாவி அவர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்தியது. சிம்லாவில் குளிர் தாங்காது என்று குளிர்கால உடை கூடத் தைத்துக் கொடுத்தது.

ஏ.வி.எம்மின் புதல்வர் எம்.சரவணன், டைரக்டர் திருலோக சந்தர், எஸ்.பி.முத்துராமன், சாவி நால்வரும் டில்லி வரை விமானத்தில் சென்று அங்கிருந்து தனிக் காரில் பயணித்து சிம்லா போய்ச் சேர்ந்தார்கள். எம்.ஜி.ஆருடன் அவரது தனி மருத்துவர் டாக்டர் சுப்பிரமணியன் அவர்களும் போயிருந்தார்.

சிம்லாவில் படப்பிடிப்பின்போது சாவி எதிர்பாராத ஒன்று நடைபெற்றது.

'புதிய வானம் புதிய பூமி' என்ற பாடலுக்கான காட்சி அங்கே படமாக்கப்பட்டபோது திடீரென சாவியையும் டாக்டர் நண்பரையும் தம் பக்கத்தில் அழைத்து அவர்கள் இரண்டு பேர் தோள் மீதும் கை போட்ட வண்ணம் எம்.ஜி.ஆர். வேகமாக நடந்து செல்வது போல எடுக்கப்பட்டது. இப்போது பார்த்தாலும் அந்தப் பாடல் காட்சியில் சாவியும் சில வினாடிகள் திரையில் காணப்படுவார்.

படப்பிடிப்பு முடிந்த பின்பு அந்தப் படக்குழு டெல்லி திரும்பியது. எம்.ஜி.ஆர்., ஜானகி அம்மாள் எல்லோரும் காந்தி சமாதிக்குச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். சாவியிடமும் மலர் வளையம் ஒன்றைத் தந்து காந்தி சமாதி மீது வைக்கச் சொன்னார் எம்.ஜி.ஆர். பிறகு எல்லோரும் சேர்ந்து அங்கே புகைப்படம் எடுத்துக் கொண்ட பின் அசோகா ஓட்டலுக்குத் திரும்பினார்கள்.

வழியில் டெல்லி கன்னாட் பிளேஸில் திருமதி ஜானகியும், எம்.ஜி.ஆரும் ஒரு நகைக் கடைக்குள் சென்று சில நகைகள் வாங்கினார்கள். ஏற்கனவே சாவியின் குடும்பம் பற்றி எம்.ஜி.ஆர். அக்கறையாகக் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தார். நகைக் கடையில் ஒரு தங்கச் சங்கிலியை எடுத்து சாவியிடம் காட்டி 'இதை உங்கள் மகளுக்குப் போடுங்கள்' என்றார். சாவி அதை வாங்க மறுத்து விட்டார்.

'நான் இப்போது விகடன் சார்பாக வந்திருக்கிறேன். இந்த நேரத்தில் இந்த அன்பளிப்பை ஏற்றுக் கொள்வது முறையல்ல. தங்கள் அன்புக்கு நன்றி' என்று 'அன்பே வா' நாயகரிடம் சொல்லி மறுத்து விட்டார்.

சென்னை வந்து சேர்ந்த பின்பு சாவி சற்று வித்தியாசமான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டியதாயிற்று. சிம்லா போகும்போது சாவி தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் போய் விட்டார் என்ற கோபம் பாலு அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். இதனால் சாவியிடம் அவர் சரியாகப் பேசவில்லை. இது சாவிக்குத் தெரிந்த போது மிகுந்த சங்கடத்திற்கு உள்ளானார். இந்தச் சூழ்நிலையில் 'அன்பே வா' அவுட்டோர் ஷூட்டிங் பற்றி கட்டுரை எழுதும் மன நிலையில் சாவி இல்லை. 'என்ன இப்படி ஆகிவிட்டதே' என்று சொல்லொணா வேதனைக்குள்ளானார்.

ஜெமினி ஸ்தாபனத்தில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து

வரும் நண்பர் கிருஷ்ணாஜியிடம் தம் மனநிலையை நட்பு ரீதியில் பகிர்ந்து கொண்டார் சாவி.

சாவியின் சங்கடத்தைப் புரிந்து கொண்ட கிருஷ்ணாஜி ''கவலைப்படாதீர்கள். எல்லாம் நல்லபடியாக முடியும்'' என்று ஆறுதல் கூறிவிட்டு அடுத்த நிமிடமே அங்கிருந்து புறப்பட்டார். அப்புறம் யாரைப் போய்ப் பார்த்தார், என்ன பேசினார் என்பதெல்லாம் அப்போது சாவிக்குத் தெரியாது. ஆனால் இதற்குப் பிறகு செட்டியாரே வாசன் அவர்களை நேரில் சந்தித்து ஷூட்டிங் பற்றி விகடனில் ஒரு கட்டுரை வந்தால் அது மிக்க உதவியாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார். அதை அடுத்து வாசன் அவர்கள் தம் மகன் பாலுவை அழைத்துப் பேசி யிருக்கிறார்.

சாவி இது பற்றிய கவலையைத் தள்ளி வைத்து விட்டு மியூஸிக் அகாடமியில் போய் கச்சேரி கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது யாரோ ஒருவர் அவரைத் தேடி வந்து 'ஜெமினி ஹவுஸிலிருந்து பாலு உங்களைக் கூப்பிடுகிறார். உடனே போங்கள்' என்றார்.

கர்நாடக இசை மீது சாவிக்கு உள்ள ஆர்வமும், இசை விழாவின்போது மாலை நேரங்களில் சாவி அகாடமியில்தான் இருப்பார் என்பதும் ஊர் அறிந்த ரகசியம். எனவே அவரை அங்கே கண்டுபிடிப்பது எளிதாயிற்று. பாலு அழைக்கிறார் என்றதும் அகாடமிக்கு அருகிலேயே இருந்த ஜெமினி ஹவுஸுக்கு நடந்தே போய்விட்டார் சாவி.

பாலு அவர்கள் சாவியிடம் எதைப் பற்றியுமே விசாரிக் காமல், 'அன்பே வா அவுட்டோர் ஷூட்டிங் பற்றிய கட்டுரை விகடனில் இந்த வாரமே வரணும். ராத்திரியே எழுதி கம்போஸிங்குக்கு அனுப்பி விடுங்கள்' என்று மட்டும் ஒரு உத்தரவு போல் சொல்லி அனுப்பி விட்டார்.

சாவி மனதுக்குள் குமுறிக் கொண்டிருந்த வேதனையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் 'சரி'யென்று சொல்லி விட்டு அன்று இரவே 'இமயத்தில் எம்.ஜி.ஆர்.' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அச்சுக்கு அனுப்பி விட்டார். அது அந்த வாரமே விகடனில் வெளியாயிற்று.

ஆனால் இந்தச் சம்பவத்திற்குப் பின்னணியில் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டு செயல் பட்டிருக்கிறார் என்பது பின்னர்தான் சாவிக்குத் தெரிய வந்தது.

அந்தக் கட்டுரை ஆனந்த விகடனில் வெளியாவதற்கு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தாம் மேற்கொண்ட முயற்சி பற்றி விவரிக்கிறார்:

''நண்பர் கிருஷ்ணாஜி அவர்கள் என்னிடம் வந்து விவரங்களைச் சொல்லி 'இந்தக் கட்டுரை எப்படியாவது ஆனந்த விகடனில் வெளிவந்தாக வேண்டும். இதற்கு என்ன வழி என்பதை உங்களிடம் ஆலோசிப்பதற்குத்தான் உங்களைத் தேடி வந்துள்ளேன்' என்றார்.

'எந்தக் காரணத்தினால் இந்தச் சிக்கல் எழுந்திருந்தாலும் பரவாயில்லை. என்னைப் பொறுத்தவரை எனக்கு இது சொந்தப் பிரச்சினை' என்று கிருஷ்ணாஜி அவர்களிடம் தெரிவித்தேன்.

ஏனென்றால் ஏ.வி.எம். நிறுவனத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடிப்பதற்கு ஏ.வி.எம். அவர்கள் விரும்பியபோது அதைப் பேசி முடித்தவன் நான்தான். சரோஜாதேவி அந்தப் படத்தில் நடிக்க வேண்டும் என்று ஏ.வி.எம். அவர்கள் விரும்பிய போது, சரோஜாதேவியோடு பேசி ஒப்பந்தம் செய்யக் காரணமாக இருந்தவனும் நான்தான். மேலும் 'அன்பே வா' திரைப்படம் 1966ஆம் ஆண்டு பொங்கல் நாளிலே திரையிடப்பட வேண்டும் என்பதற்காக எம்.ஜி.ஆர். அவர்களுடைய கால்ஷீட் பற்றாக்குறை ஏற்பட்டபோது என்னுடைய சொந்தப் படமான 'நான்

ஆணையிட்டால்' படத்திற்குக் கொடுக்கப்பட்ட கால்ஷீட்டை ரத்து செய்து 'அன்பே வா' படத்தில் நடிப்பதற்குச் செல்ல மாற்றிக் கொடுத்ததும் நான்தான்.

இவை எல்லாவற்றையும் நான் ஏன் செய்தேன் என்றால், புரட்சித்தலைவருடைய பெருமையையும் புகழையும் வளர்ப்பதற்காக அன்றைக்கும் பாடுபட்டவன் நான். முதல்முதலில் ஏ.வி.எம். நிறுவனத்திலே எம்.ஜி.ஆருடைய படம் வருகிறது. அதுவும் வண்ணப் படமாக வருகிறது. அப்படிப்பட்ட ஒரு படத்திற்கு ஆனந்த விகடனில் ஒரு கட்டுரை வருகிறதென்றால் அது மிகவும் பயன் உள்ளதாக அமையும். ஆகவே இந்தக் கட்டுரை எப்படியாவது வெளிவருவதற்கு வழி செய்தாக வேண்டும் என்று திட்டமிட்டு, 'சரி நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று கிருஷ்ணாஜியிடம் சொல்லி அனுப்பி விட்டேன்.

அதன்பின் இந்தக் கட்டுரையை எப்படி ஆனந்த விகடனில் வெளியிட வைப்பது என்பது பற்றித் தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தேன்.

அடுத்த நாள் காலையிலே திரு. ஏ.வி.எம். அவர்களோடு தொலைபேசியில் பேசினேன். 'சாவி அவர்களால் இப்படி ஒரு கட்டுரை எழுதப்பட்டு, ஆனந்த விகடனில் அது வெளிவருவதற்கு முயற்சி செய்தாக வேண்டும்' என்று சொன்னேன். அதற்கு ஏ.வி.எம். அவர்கள் ''என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்'' என்றார்கள். ''நீங்கள் திரு. எஸ்.எஸ்.வாசன் அவர்களை நேரில் சந்தித்து, 'அன்பே வா' ஏ.வி.எம். நிறுவனத்தினுடைய ஐம்பதாவது படம். எம்.ஜி.ஆர். அவர்கள் ஏ.வி.எம். நிறுவனத்தில் நடிக்கும் முதல் படம். மிகப்பெரிய பொருட்செலவிலே எடுக்கப்படுகிற படம். ஏ.வி.எம்மின் முதல் வண்ணப்படம். அதனால் இதற்கு ஆனந்த விகடனில் ஒரு செய்திக் கட்டுரை வந்தால் சிறப்பாக இருக்கும் என்று திரு. வாசனிடத்திலே எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் நிச்சயம் அதற்கு அனுமதி அளிப்பார்கள். அதற்குப்

பிறகு சாவி அவர்களின் கட்டுரை வெளியாக வழி கிட்டிவிடும்'' என்று சொன்னேன். உடனே ஏ.வி.எம். அவர்கள் வாசன் அவர்களை நேரில் சந்தித்து இந்தச் செய்தியைச் சொன்னவுடன், வாசன் அவர்கள் மிக்க மகிழ்ச்சியோடு, 'நன்றாகச் செய்யலாம்; ஒரு நல்ல திரைப்படத்திற்குக் கட்டுரை வருவதில் தவறில்லை. நான் உடனே ஏற்பாடு செய்கிறேன்' என்று உறுதி தந்து விட்டார்.''

அப்படத்தில் தான் எம்.ஜி.ஆரோடு நடித்தது பற்றி தமக்கே உரிய நகைச்சுவையுடன் சாவி அவர்கள் பல கூட்டங்களில் குறிப்பிட்டுக் கைதட்டல் வாங்கியதுண்டு.

திரு. ஏ.வி.எம்.சரவணன் சொல்கிறார்:

''கூட்டங்களில் சாவி அவர்கள் பேசும்போது நகைச்சுவை இயல்பாக வந்து விழுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்த 'ஒரு ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது' படத்தின் ஐம்பதாவது நாள் விழாவில் சாவி அவர்கள் பேசினார். பேச்சின் நடுவில் 'அன்பே வா' படம் பற்றி அவர் குறிப்பிட்டார். 'அன்பே வா' படம் வெற்றிகரமாக ஓடியதற்கு என்ன காரணம் என்று கேட்டால் நீங்களெல்லாம் எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி என்றெல்லாம் ஆளுக்கொரு காரணம் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் உண்மையான காரணம் அவர்களல்ல. அப்போதுதான் முதன் முதல் அறிமுகமாகி எம்.ஜி.ஆருடன் அப்படத்தில் 'புதிய வானம் புதிய பூமி...' பாடல் காட்சியில் சில வினாடிகளே தோன்றும் ஒரு புதுமுக நடிகரின் மறக்க முடியாத நடிப்புதான் அப்படத்தின் வெற்றிக்குக் காரணம்' என்று சொல்லிவிட்டுச் சில வினாடிகள் இடைவெளி தந்து பிறகு 'அந்தப் புதுமுகம் நான்தான்' என்று 'டைமிங்'கோடு ஒரு போடு போட்டபோது அரங்கமே அதிர்ந்தது.

படப்பிடிப்பு குழுவினரோடு சாவி அவர்கள் ஒரே குடும்பமாகப் பழகியதை என்னால் மறக்கவே முடியாது. 'அன்பே வா' படத்துக்கு சாவி அவர்கள் விமரிசனம் எழுதியபோது படத்தின் நீளம் அதிகம் என்பதை 'மயிலுக்குத் தோகை நீளமாக இருக்கலாம். குரங்கின் வால்தான் நீளமாயிருக்கக் கூடாது. நீளம்தான் மயிலுக்கு அழகு' என்று படத்தை மயிலுக்கு ஒப்பிட்டு அவர் மிக நளினமாக எழுதியிருந்ததை நான் பெரிதும் ரசித்து மகிழ்ந்தேன்.''

# 32. 'கதிர்' காலம் – 1

ஆனந்த விகடனில் பணியாற்றிய அந்தப் பத்தாண்டு காலம் சாவியின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்து விட்ட பசுமையான நாட்கள். அவரது பத்திரிகை வாழ்க்கையில் மிக முக்கிய நாட்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும் அவ்வப்போது நேர்ந்த சில நெருடல்களை அவர் மறக்கவில்லை.

'கென்னடியின் கதை' விவகாரம் சற்று அதிகமாகவே அவரைப் பாதித்து விட்டது. இந்த நேரத்தில்தான் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' நிர்வாகம் தினமணி கதிரை இரண்டாம் முறையாக மீண்டும் கொண்டு வந்தது. அப்போது எக்ஸ்பிரஸ் நிர்வாகப் பொறுப்பில் இருந்த பத்திரிகையாளர் எஸ்.வி.சாமி அவர்கள், ஒருநாள் சாவியைத் தம் வீட்டுக்கு அழைத்து, ஒரு மாம்பழத்தை முழுசாகத் தந்து "முதலில் இதைச் சாப்பிடுங்கள். அப்புறம் பேசுவோம். நான் சொல்லப் போகும் விஷயமும் பழமாகணும்" என்று சிரித்துக் கொண்டே பீடிகை போட்டார்.

சாவி மாம்பழம் சாப்பிட்டு முடித்ததும் மெதுவாகப் பேச்சைத் தொடங்கினார்.

"தினமணி கதிர் மீண்டும் வெளிவருகிறதே, பார்த்தீர்களா? சர்க்குலேஷன் திருப்தியாக இல்லாததால் ஆசிரியரை மாற்றிப் பார்க்கலாமா என்று முதலாளிகள் யோசிக்கிறார்கள். உங்களைப் பற்றியும் 'வாஷிங்டனில் திருமணம்' பற்றியும் பேச்சு வந்தது. 'நான் வேண்டுமானால் சாவியைப் பார்த்துப் பேசட்டுமா?' என்று

பி.டி.கோயங்காவிடம் கேட்டேன். 'சரி, பார்த்துப் பேசு' என்றார் கோயங்கா. அதற்காகத்தான் உங்களை இப்போது அழைத்துள்ளேன். தினமணி கதிர் ஆசிரியர் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா?'' என்று கேட்டார்.

சாவி அவர்களால் இதற்கு சட்டென்று பதில் கூற முடியவில்லை. ஒருபக்கம், விகடன் தனக்குத் தந்த பெருமைகளையும், புகழையும் அவரால் மறுக்க முடியவில்லை. அதே சமயம், 'எத்தனை நாள்தான் இப்படியே ஆசிரியர் குழுவில் ஒருவராகக் காலம் தள்ளுவது?' ஆசிரியர் என்ற அடுத்த படிக்கு உயர்ந்தால்தானே தனக்குள்ள அனுபவத்தையும், திறமையையும் வெளிக்காட்ட முடியும்? அதுவும் எக்ஸ்பிரஸ் நிர்வாகத்தின் கீழ் வெளியாகும் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராகும் அரிய வாய்ப்பு கிட்டும்போது அதை நழுவவிடாமல் பொறுப்பேற்று விற்பனையை உயர்த்திக் காட்டுவதுதானே சவால்!' என்று எண்ணினார்.

அப்போது தினமணி கதிர் அச்சு நேர்த்தி இல்லாமல் கவர்ச்சியற்ற தோற்றத்தில் வெளியாகிக் கொண்டிருந்தது.

அதைப் பார்க்கும்போதெல்லாம் 'இந்தப் பத்திரிகையைத் தம் வசம் ஒப்படைத்தால் மிகச்சிறப்பாகச் செய்து காட்ட முடியுமே' என்று சாவி அவர்கள் நினைத்துப் பார்த்ததுண்டு. இப்போது எஸ்.வி.ஸ்வாமியின் அழைப்பு சாவியின் ஆசையை மேலும் தூண்டுவதாக இருந்தது. ஆயினும் சாவி சட்டென்று முடிவு செய்ய முடியாத நிலையில் 'யோசித்து பதில் சொல்கிறேன்' என்று மட்டும் கூறி விட்டு வந்தார். ஒரு வார காலம் தீர்க்கமாக யோசித்த பிறகே ஸ்வாமியை மறுபடியும் சந்தித்துச் சில நிபந்தனைகளுடன் வேலையில் சேருவதற்குச் சம்மதித்தார். சம்பளம் மாதம் ஆயிரம் ரூபாய் தரவேண்டும், இம்ப்ரிண்ட்டில் 'ஆசிரியர் : சாவி' என்று போட வேண்டும். இந்த இரண்டும் முக்கிய நிபந்தனைகள். ஸ்வாமி இதுபற்றி

கோயங்காவிடம் பேசிவிட்டு மறுபடி சாவியைத் தொடர்பு கொள்வதாகச் சொல்லி அனுப்பினார். அப்புறம் ஒரு வாரம் பேச்சு மூச்சே இல்லை.

காரணம்? அப்போது 'தினமணி' அலுவலகத்தில் வேறுவிதமான சூழ்நிலை.

சாவி அவர்கள் அதை இப்போது நினைத்துப் பார்க்கிறார்:

''நான் கதிரில் சேருவதற்கு அங்கே கொஞ்சம் எதிர்ப்பு இருந்தது. தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமனும், ஜெனரல் மானேஜர் டி.கே.தியாகராஜனும் ஒரு பக்கம். எஸ்.வி.ஸ்வாமி இன்னொரு பக்கம். ஒரு வாரத்துக்குப் பிறகு நான் கோயங்காவைச் சந்தித்துப் பேச ஏற்பாடாயிற்று. என் நிபந்தனைகளை நான் ஒரு காகிதத்தில் துல்லியமாக டைப் செய்து கொண்டு போனேன். திரு. பி.டி.கோயங்கா அதைப் படித்துப் பார்த்து விட்டு 'ஓ.கே. எப்போது வேலைக்குச் சேருகிறாய்?' என்று கேட்டார். ஒரு மாதம் அவகாசம் தேவை என்றேன். ஆனாலும் நான் தினமணி கதிர் ஆசிரியராகப் பொறுப்பேற்பது ஏதோ காரணத்தினால் இழுபறியாகவே இருந்தது.

ஒரு மாதம் சென்ற பிறகு மீண்டும் கோயங்காவைப் பார்த்தேன். 'நான் பொறுப்பேற்பது எப்போது?' என்று கேட்டேன். இன்று, நாளை என்று தள்ளிக் கொண்டே போனார். இந்தத் தாமதம் மேலும் ஒரு மாத காலம் நீடித்தது. நான் பொறுமை இழந்து விட்டேன். ஒருநாள் நானாகவே 'கோயங்கா'வைப் போய்ப் பார்த்தேன்.

'நான் ஆசிரியராக வருவதில் உங்களுக்குள் ஏதேனும் பிரச்னை இருந்தால் இப்போதே சொல்லி விடுங்கள். எனக்கு அதில் எந்த வருத்தமும் இருக்காது' என்றேன்.

'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பொறுப்பேற்பதற்கு முன்

என் அப்பாவை (பெரிய கோயங்கா) நீங்க ஒரு தடவை பார்த்துப் பேசி விட வேண்டும். அதனால்தான் தாமதம்' என்றார்.

பெரியவர் ராமநாத் கோயங்கா அப்போது பம்பாயில் இருந்தார். 'அவர் எப்போது சென்னை வருவது? நான் எப்போது அவரைச் சந்திப்பது?' என்று சலிப்புடன் பதில் சொன்னேன் நான். அதற்கு பி.டி.கோயங்கா சொன்ன உதாரணத்தைக் கேட்டு அசந்து போனேன்.

'இப்ப நாம காஞ்சிபுரம் போறோம். கல்யாணத்துக்குப் புடவை எடுக்கிறோம். அப்படியே வரதராஜப் பெருமாள் கோவிலுக்கும் போய் சாமி தரிசனம் செய்துவிட்டு வருவதில் லையா? அதுபோலத்தான் இதுவும்' என்றார்.

ஆனாலும் வேலையில் சேரும் வரை பெரியவரைப் பார்க்க முடியாமலே போய் விட்டது. அதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காமலேயே, நான் வேலையை ஒப்புக்கொள்ள வேண்டிய தாயிற்று.

கடைசியாக, ஒருநாள் பி.டி.கோயங்கா என்னை அழைத்து வேலையில் சேரும்படி சொன்னார். அப்போது 'நான் கொஞ்சம் ஷார்ட் டெம்பர்ட் (முன் கோபக்காரன்). கோபம் வரும்போது ஷௌட் பண்ணுவேன்' என்றார்.

'நானும்கூட ஷார்ட் டெம்பர்ட்தான். நானும் கத்திடுவேன்' என்று நான் திருப்பிச் சொன்னதைக் கேட்டதும் அவர் வாய்விட்டுச் சிரித்து விட்டார்.'

அப்புறம் ஆறு மாதத்திற்குப் பிறகுதான் ஒருநாள் பெரிய கோயங்காவைப் பார்த்துப் பேசி விட்டு வந்தேன்'' என்கிறார் சாவி.

கதிரில் சேரப் போகும் சேதியை சாவி கடைசி வரை

சொல்லாமல் இருந்தது திரு.பாலு அவர்களுக்கு வருத்தத்தை அளித்திருக்க வேண்டும். ஆயினும் அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

பின்னர் எல்லாம் தீர்மானமாகத் தெரிந்த பிறகே திரு. பாலு அவர்களைப் பார்த்து தன் முடிவைத் தெரிவித்தார் சாவி.

சாவியிடம் பாலு அவர்களுக்கு நிறைந்த அன்பு இருந்த போதிலும், 'ஏன் போகிறீர்கள்?' என்று கேட்கவில்லை. எந்த ரியாக்ஷனையும் வெளிக்காட்டிக் கொள்ளவுமில்லை. 'ரொம்ப மகிழ்ச்சி' என்று மட்டும் வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்.

---

# 33. 'கதிர்' காலம் – 2

ஒரு பத்திரிகையாளராக சாவியின் வாழ்க்கையை உயர்த்தியது ஆனந்த விகடன் என்றால், பொருளாதார ரீதியாக அவரது வாழ்க்கையை மேம்படுத்தியது தினமணி கதிர் என்றுதான் சொல்ல வேண்டும்.

மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது அந்தக் காலத்தில் பெரிய தொகை. அத்துடன் ஆசிரியர் என்ற பதவி வேறு.

கதிரில் பொறுப்பேற்று சில மாதங்கள்கூட ஆகவில்லை. சாவியின் பேரன் – மூத்த மகள் ஜெயந்தியின் மகன் – அருணுக்குப் பெயர் சூட்டும் விழா மாம்பலத்தில் நடைபெற்றது.

கிருஷ்ணசாமி அசோசியேட்ஸ் கிருஷ்ணசாமி அவர்கள் சாவியின் குடும்பத்துக்கு மிகவும் பழக்கமானவர். அவர் மட்டும் அல்ல, அவரது தந்தை டைரக்டர் கே.சுப்ரமணியம் காலத்தில் இருந்தே நல்ல நட்பு உண்டு. கிருஷ்ணசாமி, அவரது சகோதரி பரத நாட்டிய மேதை பத்மா சுப்பிரமணியம் என்று அனைவருமே சாவி குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகி பாசம் கொண்டிருப்பவர்கள். அப்போது கிருஷ்ணசாமி தம்முடைய 'ஹெரால்ட்' காரை விற்று விட முடிவு செய்திருப்பதாக சாவியிடம் சொன்னார். சாவி இதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்.

''தினமணி கதிர் எடிட்டராகி விட்டீர்கள். இன்னமும்

பஸ், ஆட்டோ என்று போய்க் கொண்டிருந்தால் எப்படி? என் காரை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று கார் ஆசையை சாவியின் மனதுக்குள் விதைத்தார் கிருஷ்ணசாமி.

'அதெல்லாம் நம்மால் ஆகாது சாமி! அவ்வளவு பணத்துக்கு நான் எங்கே போவேன்?' என்று தயங்கிய சாவி யிடம், ''அதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான் பணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் மாதா மாதம் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணை முறையில் தந்தால் போதும்'' என்றார் கிருஷ்ணசாமி.

''பார்க்கலாம், யோசிக்கலாம்'' என்று இழுத்தார் சாவி.

பேரனுடைய பெயர் சூட்டு விழாவுக்காக சாவியின் வீடு கலகலப்பாய்க் களை கட்டியிருந்தது. ஹோமம் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் கிருஷ்ணசாமி அங்கே போய் சாவியைப் பார்த்து ''கொஞ்சம் வெளியே வருகிறீர்களா? கார் கொண்டு வந்திருக்கிறேன். ஓட்டிப் பார்த்து விட்டு வரலாம். வாங்க'' என்று அழைத்தார்.

''வீட்டில் விசேஷம் நடந்து கொண்டிருக்கிறது. இப்போது எப்படி வர முடியும்?'' என்றார் சாவி.

இதற்குள் திருமதி சாவி அவர்களின் காதுக்கு விஷயம் எட்டி விட, தன் கணவர் திடீரெனக் கார் வாங்க முடிவு எடுத்திருப்பது திருமதி ஜானகிக்கு மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத்தது.

''காரா? விரலுக்குத் தகுந்த வீக்கமாகத் தோன்றவில்லை. அப்புறம் உங்கள் இஷ்டம்'' என்றார் திருமதி சாவி.

''அட, சும்மா வாங்கிப் போடுவோம். வண்டியைக் கொஞ்ச நாள் யூஸ் பண்ணலாம். சரிப்பட்டு வரவில்லை யென்றால் நல்ல விலைக்கு வித்துடுவோம்'' என்று மனைவியைத்

தம்முடைய சாதுர்யமான பேச்சு மூலம் ஒப்புக் கொள்ளச் செய்து விட்டார்.

அடுத்த சில மணி நேரத்துக்குள்ளாகவே பேரம் முடிந்து கார் சாவியும் 'சாவி'யின் கைக்கு வந்துவிட்டது.

''அன்று கார் வாங்கினேன். ஆண்டவன் கருணையால் இன்று வரை காரில்தான் போய்க் கொண்டிருக்கிறேன். இதற்குள் எத்தனையோ கார்கள் மாற்றியாகி விட்டது. அன்று முதல் இன்று வரை கார் இல்லாத ஒரு நிலையை எனக்கு ஆண்டவன் ஏற்படுத்தவில்லை'' என்கிறார் சாவி.

கதிர் ஆசிரியராகப் பதவி ஏற்ற பின்பு அதுநாள் வரை தன் சிந்தனையில் தேக்கி வைத்திருந்த பல்வேறு எண்ணங்களுக்கும் செயல் வடிவம் தரத் தொடங்கினார்.

லே-அவுட் என்கிற வடிவமைப்பில் சாவி அவர்களுக்கு எப்போதுமே ஆர்வமும் திறமையும் அதிகம். பத்திரிகையின் ஒவ்வொரு பக்கமும் பளபளவென லே-அவுட்டில் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். ஒரு இரண்டு வரி 'ஜோக்'கைக்கூட ஏதாவது லே-அவுட் செய்துதான் வைப்பார். எனவே தினமணி கதிரின் முகமே வேகமாக மாற ஆரம்பித்தது.

''கதிருக்குள் நுழைந்த போது எப்படி உணர்ந்தீர்கள்?'' என்று சாவி அவர்களை நான் கேட்டேன்.

''ரொம்ப நாளா ஒட்டடை அடிக்காமல் பூட்டி வைத்திருந்த வீட்டுக்குள்ளே நுழைந்த மாதிரி உணர்ந்தேன். பத்திரிகையில் விஷயங்கள் இருந்தபோதிலும் பார்வைக்குத் தெளிவு இல்லாமல் பஞ்சாங்கம் போல் தோற்றமளித்தது. என் முழு வேகத்தையும் காட்டி தினமணி கதிரைப் பளிச்சென்று வெளிச்சம் வீசும்படிச் செய்தேன்.''

''இருட்டாக இருந்த அறைக்குள்ளே போய் ஜன்னல்களை

எல்லாம் திறந்து வச்சு ரொம்ப காற்றோட்டமாக்கி இருக்கீங்க'' என்று கல்கி ஆசிரியர் ராஜேந்திரன் சாவியைப் பாராட்டினார்.

ராஜேந்திரன் அவர்களின் பாராட்டு சாவிக்குப் பெரும் உற்சாகத்தை அளித்தது. தோற்றத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமை செய்து அடியோடு மாற்றி அமைத்த போதிலும் அந்த மாற்றத்தை வாசகர்கள் உணர்ந்திருக்கிறார்களா, வரவேற்கிறார்களா என்று அறிந்து கொள்ளும் ஆவலில் சாவி இருந்த போதுதான் திரு. ராஜேந்திரன் பாராட்டு அவரை உற்சாகப்படுத்தியது.

சாவி அவர்களின் லே–அவுட் திறமை பற்றி கல்கி கி. ராஜேந்திரன் சொல்கிறார்:

''இப்போதும் பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் நம் கவனத்தைக் கவருவது சாவி அவர்களின் 'லே–அவுட்'கள். ஒவ்வொரு பக்கத்தையும் நின்று, பார்த்து ரசிக்கும்படி அமைப்பதில் அவர் வல்லவர். இதற்காகப் பல மணி நேரங்கள் செலவிடுவார். வாசகரைக் கவர வேண்டும் என்பதற்காக குத்திக் குதறிக் கிளறியது போல லே–அவுட் செய்து, கொட்டிக் கவிழ்த்தது போல வண்ணங்களை வாரி இறைக்க மாட்டார். சாவியின் லே–அவுட் என்றால் அதில் பளிச்சென்று தெரிகிற மாதிரி ஒரு நளினம் இருக்கும். ஒரு அழகுணர்ச்சி தூக்கலாகத் தென்படும்.''

பதினேழாயிரம் பிரதிகள் மட்டுமே விற்பனையாகிக் கொண்டிருந்த கதிரை ஒரு லட்சம் பிரதிகளுக்கு மேல் உயர்த்தியது சாவி அவர்களின் சாதனை.

திறமைமிக்க எழுத்தாளர்களைத் தேடிப் பிடித்து கதிரில் எழுதக் களம் அமைத்துக் கொடுத்தார்.

எழுத்தாளர்கள் அதுவரை கண்டிராத ஒரு விளம்பர வெளிச்சத்தை அவர்கள் மீது சாவி வீசினார். ஒரு எழுத்தாளரின்

தொடர்கதை வெளிவரப் போகிறது என்றால் அவரது புகைப் படத்தைப் பெரிய அளவில் போட்டு விளம்பரப்படுத்துவதில் சாவி மிகுந்த அக்கறை காட்டினார்.

உண்மைக் கதைகள், சிவப்பு விளக்குப் பகுதியை நேரில் போய்ப் பார்த்து எழுதப்பட்ட கதைகள், சிறைச்சாலைக் கதைகள் என்று புதிது புதிதாக கதிரில் இடம் பெற்றன. எழுத்தாளர்கள்–வாசகர்களிடையே நேருக்கு நேர் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து அவர்களுக்குள் ஒரு நட்புறவை ஏற்படுத்தினார். அதுவரை அப்படிப்பட்ட முயற்சிகள் எதையும் எந்தப் பத்திரிகையும் மேற்கொண்டதில்லை. இதனாலெல்லாம் வாசகர்களிடமிருந்து கதிர் அமோக வரவேற்பைப் பெற்றது.

ஆசிரியர் சாவி எழுத்தாளர்களை எப்படியெல்லாம் பெருமைப்படுத்தினார், ஊக்கப்படுத்தினார் என்பதை திருமதி சிவசங்கரி நினைவு கூர்கிறார்:

''சாவி சாரை முதன் முதலில் சந்தித்த நாள் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது.

ஃபர்ஸ்ட் நேஷனல் ஸிடி பாங்க்கில் நான் வேலை பார்த்து வந்த சமயம், பாங்க்கில் நுழைந்ததும் வலப்பக்கம் முதலில் என் மேஜைதான் இருக்கும். பக்கத்திலேயே வந்தவர்கள் அமர சோபாக்கள். சாவி சார் நண்பர் ஒருவருடன் வங்கிக்கு வந்திருந்தார். என் முதல் நாலைந்து சிறுகதைகள் வெளியாகி இருந்த நாட்கள் அவை என்பதால் வந்தவர் இன்னார் என்று புரிந்துவிட எனக்குள் ஏக பரபரப்பு; எழுத்தாளர் என்ற ரீதியில் அவருடன் பேச ஆசை; எழுந்து சென்று என்னை அறிமுகப் படுத்திக் கொண்டேன்.

''தெரியுமே! ஆடிட்டர் சூரி டாட்டர்தானே நீங்கள்? உங்கள் சித்தப்பா நடேசன், அவர் தம்பி கல்கி சாமா, எனக்கு நெருங்கின நண்பர்கள். கதையெல்லாம் எழுதுகிறீர்கள் போலிருக்கிறது! வெரிகுட்... கதிருக்கும் எழுதுங்கள்.''

ஒரு ஆரம்ப கால எழுத்தாளர்தானே என்று அலட்சியப் படுத்தாமல் பெருந்தன்மையுடன் சாவி சார் அப்படிக் கேட்டதோடு அல்லாமல் அந்த வருஷ தீபாவளி மலரைத் தயாரிக்கையில் ஒரு சிறுகதை எழுதித் தரும்படி கடிதம் மூலம் அழைப்பும் விடுத்தார்.

என்னுடைய தெரியாத்தனமோ, இல்லை ஏதோ ஒரு இக்கட்டோ, இல்லை இரண்டுமேதானோ, அந்த அழைப்பை ஏற்று நான் அந்த வருஷம் கதிருக்குக் கதை எழுதத் தவறி விட்டது நிஜம்.

கிட்டத்தட்ட ஒரு வருஷம் சென்று 'புதுமையான அனுபவங்களை' – என் வெளிநாட்டுப் பயணக் கதையை – கதிரில் தொடராக எழுதி முடித்த பிறகு ஒருநாள் சாவி சார் என்னிடம் வெளிப்படையாகப் பேசினார்.

''அழைப்பு அனுப்பியும் நீங்கள் அதை ஏற்று எழுதாதது மிகப்பெரிய தவறு சிவசங்கரி; கதிரில் நீங்கள் தொடர்ந்து எழுதப்போகும் இந்தத் தருணத்தில் ஒன்று சொல்கிறேன் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்; ஒருவர் அனுப்பும் அழைப்பை மதிக்கத் தவறக்கூடாது; எதிர்காலத்தில் உங்களுக்கு வெளிப்பத்திரிகைகளிலிருந்து அழைப்பு வந்தால், தட்டாமல் நீங்கள் அவற்றில் எழுத வேண்டும். எழுத்தாளர் என்பவர் ஒரு பத்திரிகைக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல; நீங்கள் கதிருக்கு எழுதுங்கள், பிறருக்கும் எழுதுங்கள்...''

ஆரம்ப காலத்திலிருந்தே சாவி சார் என் எழுத்துக்களுக்குக் கொடுத்த ஊக்கம் அலாதியானதுதான்.

''வருகிற தமிழ்ப் புத்தாண்டில் நீங்கள் தொடர்கதை ஒன்று தொடங்குங்கள்; நாலு மாச அவகாசம் இருக்கிறது, யோசித்து கருவைத் தேர்ந்தெடுங்கள்; எழுதுவதை ஷார்ட் அண்ட் ஸ்வீட்டாக எழுதுங்கள்'' என்று சொல்வாரே தவிர, 'என்ன

கதை?; எத்தனை வாரங்கள்? முழுக்க எழுதிக் கொடுக்கிறீர்களா?'' – என்று ஏதாவது கேள்வி? ம்ஹூம் – இதுநாள் வரை இல்லை.

''தலைப்பு என்ன சிவசங்கரி?'' என்று மட்டும் கேட்பார்.

சொல்வேன்.

ஆறு வாரங்கள், எட்டு வாரங்களுக்குத் தடபுடலாய் விளம்பரப்படுத்துவார்.

''கதை என்ன என்று சொல்லட்டுமா சார்?'' என்றால், சிரிப்பார்.

''எதற்கு சிவசங்கரி? உங்கள் பேரில் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கு விளம்பரம் கொடுப்பதுடனும், சுதந்திரம் அளிப்பதுடனும் என் பொறுப்பு தீர்ந்து விடுகிறது. உங்கள் பேர் கெடாத வண்ணம் எழுதுவதும், வாசகர்கள் அபிமானத்தைப் பெறுவதும், உங்கள் பேரில் நான் வைத்திருக்கும் நம்பிக்கையைத் தகர்க்காததும் உங்கள் கையில்தானே இருக்கின்றன! அதெல்லாம் உங்கள் பொறுப்பு அல்லவா?''

இதை நிரூபிக்கும் தினுசில் சாவி அவர்கள் என் எழுத்துக்களைப் படித்துக் கூடப் பார்க்காமல் கம்போஸிங்கிற்கு அனுப்பியது உண்டு.

அது என்ன அசுர நம்பிக்கை!

ஒவ்வொரு முறை பேனாவை எடுத்தபோதும், ஏன், இன்றைக்கு எடுக்கும் போதும், சாவி சார் சொன்ன வார்த்தைகளும், வைத்திருந்த நம்பிக்கையும், அடிவயிற்றில் சில்லிப்பை உண்டாக்கி, பரீட்சைக்கு உட்கார்ந்திருக்கும் மாணவியாய் என்னைப் பொறுப்புடன் செயல்படுத்துகின்றன என்றால், அதுதான் என்னுள் சாவி சார் போட்ட அஸ்திவாரம்.

புதுசு புதுசாய் ஏதாவது செய்வதில் சாவி சாருக்கு நிகர் சாவி சார்தான்.

எழுத்தாளர்கள் இன்றைக்கு ஒருவித. க்ளாமருடன் வாழ்கிறார்கள் என்றால் அத்தகைய வாய்ப்பை உண்டாக்கியவர்களில் சாவி சார் முக்கியமானவர்.

உதாரணத்துக்கு ஒன்றாக, இவர்களைச் சந்தியுங்கள் – என்ற நிகழ்ச்சியைச் சொல்லலாம். சிவசங்கரி, சுஜாதா போன்ற எழுத்தாளர்களையும் ஜெயராஜ் போன்ற ஓவியர்களையும் பல்லாயிரக்கான வாசகர்களையும் பத்து வருடங்களுக்கு முன்பே நேருக்கு நேர் சந்திக்க வைத்து, கேள்விகள் கேட்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளச் செய்தது, ஒரு அலாதி அனுபவம்; திருப்புமுனைதான்.

எழுத்தாளரின் ஆர்வமும், கண்ணோட்டமும் அலை பாய்ந்து கொண்டே இருக்க வேண்டும் என்று ஆணித்தரமாக எடுத்துச் சொல்பவர் சாவி சார்.

அமெரிக்க நாடுகளுக்கு இரண்டாவது முறை சென்று வந்தபின் ''எப்போது பயணக் கதை தொடங்கப் போகிறீர்கள்'' என்று அவர் கேட்க, ''திரும்பவுமா? அதான் ஒரு முறை எழுதியாகி விட்டதே!'' என்று நான் வியந்தேன்.

''எழுத்தாளரின் கண்களுக்குப் புதுப்புதுக் கோணங்கள் தெரிந்து கொண்டே இருக்கும்; சென்ற முறை காணாத அமெரிக்காவை இந்தப் பயணத்தில் கண்டிப்பாய் உணர்ந்திருப் பீர்கள், எழுதிப் பாருங்கள்'' என்று தன்னம்பிக்கையுடன் அவர் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை. என்னையும் அறியாமல் அமெரிக்காவைப் புதிய கண்ணோட்டத்தில் என்னுள் பதித்துக் கொண்டிருந்தது, பேனாவும் கையுமாய் உட்கார்ந்த நிமிஷம் புரிந்தது.''

கதிரின் விற்பனை அதிகரித்துக் கொண்டே போனபோது, சாவி அவர்கள் கதிர் ஆசிரியராக வருவதற்கு ஆரம்பத்தில் முட்டுக் கட்டை போட்டவர்களெல்லாம் மூக்கில் விரல்

வைக்கும் அளவுக்கு அதிரடி மாற்றங்களைப் பத்திரிகையில் புகுத்தினார் சாவி.

'அண்ணாவின் கதை' என்று நவீனன் எழுதிய கட்டுரைத் தொடரை சாவி கதிரில் வெளியிட்டார். தேசிய நீரோட்டத்தில் கலந்திருந்த தினமணி நிர்வாகிகளும் ஆசிரியர் குழுவும் இந்தக் கட்டுரைத் தொடர் வெளியாவதை விரும்பாமல் மென்று விழுங்கிக் கொண்டிருந்தபோதிலும் சாவி அதுபற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

தொடர் முடிந்த பின்பு அதைப் புத்தகமாகக் கொண்டு வந்து வெளியிட சாவி பெருமுயற்சி எடுத்துக் கொண்டதுடன் அப்போது முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடைபெற வேண்டும் என்ற தம் எண்ணத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டார். கலைஞர் அவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் சாவிக்குத் தனி ஆர்வம் இருந்தது.

'அண்ணாவின் கதை' புத்தக வெளியீட்டு விழாவுக்காக எக்ஸ்பிரஸ் காம்பவுண்டுக்குள் தனி மேடை அமைக்கப்பட்டது. திரு. ஏ.என்.சிவராமன், ராமநாத் கோயங்கா, பகவான்தாஸ் கோயங்கா, அப்போதைய தலைமை நீதிபதி வீராசாமி, சாவி ஆகியோர் முதல்வர் கலைஞருடன் அமர்ந்திருந்த காட்சி ஓர் அபூர்வக் காட்சியாக இருந்தது. 'எக்ஸ்பிரஸ் கோட்டைக்குள் தி.மு.க.வா !' என்று பலர் மூக்கில் விரல் வைத்து அதிசயித்தார்கள்.

விழாத் தொடக்கத்தில் திருமதி எம்.எல்.வசந்தகுமாரி இறை வணக்கம் பாட, சாவி எழுந்து வரவேற்புரை நிகழ்த்தினார். பேச்சின் நடுவே, 'நான்கூட D.M.K.தான்' என்று சொல்லிவிட்டுச் சில விநாடிகள் இடைவெளி தந்து ''ஆமாம். தினமணி கதிர் - DINA MANI KADIR - டி.எம்.கே.'' என்று சொன்னதும்

அவையோர் பலத்த கைத்தட்டலுடன் சாவியின் பேச்சை ரசித்தார்கள். கலைஞருடன் சாவிக்கு ஏற்கனவே லேசான பழக்கம் இருந்தபோதிலும் அந்த விழாவுக்குப் பிறகுதான் அது பலப்பட்டது. அதன்பிறகு கலைஞரின் நண்பர்கள் வட்டத்தில் இடம் பிடித்த சாவி இன்று வரை அவரின் மிக நெருங்கிய நண்பராக இருந்து வருகிறார்.

தம்முடைய விடாமுயற்சியாலும், திறமையாலும் தினமணி கதிர் விற்பனையைப் பெருமளவு உயர்த்தியும் கூட ஆசிரியர் பதவி தருவதாக நிர்வாகம் சாவிக்கு அளித்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமலேயே காலம் கடந்து வந்தது. சாவியும் விடாப்பிடியாக நிர்வாகத்துடன் போராடிப் போராடி கடைசியில் வெற்றி கண்டார். ஒரு நாள் அவரே எதிர்பாராத நேரத்தில் பத்திரிகையின் 'இம்ப்ரிண்ட்'டில் 'ஆசிரியர் : சாவி' என்று வெளியாகியிருந்தது கண்டு ஆச்சரியப்பட்டார்.

அடுத்த வாரம் விகடன் ஆசிரியர் திரு. பாலசுப்ரமணியன் அவர்களிடமிருந்து சாவிக்கு ஒரு கடிதம் வந்தது.

''தங்களுடைய நீண்ட கால ஆசை இப்போது வெற்றி கரமாக நிறைவேறியிருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். என் வாழ்த்துக்கள்.''

தம்முடைய ஆசை முழுமையாக நிறைவேறியது ஒரு பக்கம். தம்முடைய பெருமதிப்பிற்குரிய ஆனந்த விகடன் பொறுப்பாசிரியர் பாலு அவர்களிடமிருந்து வந்திருந்த பாராட்டுக் கடிதம் இன்னொரு பக்கம்.

சாவிக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

# 34. காமராஜ் – சோ சந்திப்பு

தினமணி கதிரில் அவர் புகுத்திய புதுமைகள் ஏராளம். என்னென்ன புதுமைகள் செய்வது அவற்றை எப்படிச் செய்வது என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டுமே!

அதற்காக அடிக்கடி எழுத்தாளர்களை வெளியூர்களுக்கு அழைத்துச் சென்று அவர்களோடு ஆலோசனை நடத்தினார். ஒரு 'பிக்னிக்' போலவும் இருக்க வேண்டும், பயனுள்ளதாகவும் இருக்க வேண்டும் என்பது சாவி அவர்களின் நோக்கம்.

ஒருமுறை மாமல்லபுரம் கடற்கரைச் சாலையை ஒட்டியுள்ள டி.வி.எஸ். பண்ணை வீட்டில் ஒரு புதுமையான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். அந்த நிகழ்ச்சியில் பிரபலமான நட்சத்திரங்கள் பலர் கலந்து கொண்டனர். அவர்களில் சிறுவயது கமலஹாசனும் ஒருவர். அவர் நடிப்புத் துறையில் முன்னுக்கு வந்து கொண்டிருந்த நேரம்.

நடிக, நடிகையரை ஓர் இடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கே கலந்துரையாடல், அரட்டை, நேருக்கு நேர் போன்ற – அதுவரையில் எந்தப் பத்திரிகையிலும் முயன்று பார்க்காத – புதுமை நிகழ்ச்சிகளை நடத்தி அதையே ஒரு சுவையான கட்டுரையாகவும் எழுதி புகைப்படங்களுடன் வெளியிட்டார்.

இடைக்கழிநாடு என்ற இடத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மனோரமா, சோ, தேங்காய் சீனிவாசன் போன்ற

கலைஞர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கித் தந்தார்கள். ஒரு நகைச்சுவை சம்பவம் பற்றி சாவி சொல்கிறார்:

''ஒரு மரத்தின் நிழலில் தேங்காய் சீனிவாசன், சோ எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது சூரியன் திசை மாறிவிட அங்கே வெயில் தேங்காய் சீனிவாசன் மீது சூடாக அடிக்கத் தொடங்கியது. 'தேங்கா! தள்ளி உட்கார். இல்லேன்னா வெயில்ல கொப்பரை ஆயிடுவே!' என்று சோ ஜோக்கடிக்க எல்லோரும் சிரித்து விட்டோம்.''

அதேபோல ஸ்ரீப்ரியா, ஏ.சகுந்தலா போன்ற நடிகைகளை அழைத்து எக்ஸ்பிரஸ் எஸ்டேட் ஹாலில் உறியடி விழா ஒன்று நடத்தினார். இப்படி எதைச் செய்தாலும் அதைப் பத்திரிகைக் கோணத்தில் பார்த்துச் செய்வது சாவிக்குக் கைவந்த கலை.

வி.ஜி.பி. தங்கக் கடற்கரை வளாகம் சாவி அவர்களுக்கு மிகவும் பிடித்த இடம். அங்கே பல நிகழ்ச்சிகள் நடத்தி இருக்கிறார். அதுவும் வி.ஜி.பன்னீர்தாஸ் அண்ணாச்சிக்கு சாவி என்றால் மிகவும் பிரியம். திடீர் என்று சாவி குடும்பத்தினரை கோல்டன் பீச்சுக்கு அழைப்பார். 'ஏன்?' என்று கேட்டால் 'அம்மாவின் சாப்பாட்டைச் சாப்பிட்டு ரொம்ப நாள் ஆச்சு' என்பார். திருமதி சாவி அவர்களின் சமையல் வண்ணம் பிரபலமானது. எது செய்தாலும் அதில் சுவை மிளிரும். வி.ஜி.பி. அழைத்ததும் உடனே பல ரக சாத வகைகளைத் (சித்ரான்னம்) தயார் செய்து கொண்டு, தம் குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு கோல்டன் பீச்சுக்குப் போய் விடுவார் சாவி. பன்னீர்தாஸும் தம் மனைவி மக்களுடன் அங்கே வந்து விடுவார். இரு குடும்பத்தினரும் சேர்ந்து விருந்துண்டு மகிழ்வார்கள்.

தங்கள் கதை வெளியாவது கண்டு மகிழ்ச்சி அடையும் எழுத்தாளர்கள் அதே கதை வண்ணச் சித்திரங்களோடு வெளியானால் வாசகர்கள் மட்டுமல்ல, அந்தக் கதாசிரியர்களும்

மகிழ்வார்கள் என்பதை நன்கு புரிந்து வைத்திருந்த சாவி அந்தக் கதைகளுக்கு கோபுலு, ஜெயராஜ் போன்ற ஓவியர்களைக் கொண்டு பெரிய பெரிய வண்ணச் சித்திரங்களாக வரையச் சொல்லி அவற்றை முழுப்பக்க அளவில் வெளியிட்டார். அது மட்டுமல்ல; அந்தச் சித்திரங்கள் மூவண்ணச் சித்திரங்களாக வெளியானபோது எழுத்தாளர்கள் அடைந்த மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? அந்தக் காலத்தில் கதைகளை மூவண்ணச் சித்திரங்களுடன் வெளியிடுவது ஒரு புதுமை.

உயர்ந்த எழுத்தாளர் என்று மதிக்கப்பட்ட தி.ஜானகிராமன் அவர்கள் 'செம்பருத்தி' தொடர்கதையை வாரா வாரம் கதிர் அலுவலகத்துக்கே நேரில் வந்து இரவு பத்து மணி வரை அங்கேயே இருந்து எழுதிக் கொடுத்து விட்டுச் செல்வார்.

சுப்புடு என்ற கலை விமரிசிகரைப் பெரிய அளவில் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது சாவி அவர்கள்தான். டெல்லியிலிருந்து அவரைப் பிரத்யேகமாக வரவழைத்து, 'எக்ஸ்பிரஸ்' காம்பவுண்டுக்குள்ளேயே இருந்த கெஸ்ட் ஹவுஸில் தங்க வைத்தார்.

சுப்புடுவுக்கும் செம்மங்குடி அவர்களுக்கும் விமரிசனத்தைப் பொறுத்தவரை எப்போதும் ஏழாம் பொருத்தம் என்பது இசை ரசிகர்கள் அறிந்த ரகசியம். சிற்சில நேரங்களில் செம்மங்குடியைக் கடுமையாக விமரிசித்துப் பரபரப்பை ஏற்படுத்தியவர் சுப்புடு. இதனால் நீண்டகாலம் இருவருக்குமிடையே எப்போதும் ஒரு மௌனப் போர் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில், அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தும் விதத்தில், சென்னை ஆர்.ஆர். சபாவில் சுப்புடுவுக்கு ஒரு பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்தார் சாவி. முதலில் செம்மங்குடி அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள இஷ்டப்படவில்லை என்றாலும் சாவி அவர் வீட்டுக்குச் சென்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒப்புக் கொண்டார். இந்த நிகழ்ச்சியைக் காணப் பெரும் கூட்டம் கூடி சபா

ஹாலின் உள்ளும் புறமும் நிரம்பி வழிந்தது. அன்று சுப்புடு செம்மங்குடி இருவருமே மனம் விட்டுப் பேசினார்கள்.

சுப்புடுவுக்குச் சிறப்புச் செய்ததோடு நிற்கவில்லை சாவி.

சோ அவர்களை ஒரு நடிகராகவும், நாடக ஆசிரியராகவும் மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோது அவரிடம் இருந்த எழுத்துப் பொறியை சாவி இனம் கண்டு அவரை கதிரில் தொடர்ந்து எழுத வைத்தார்.

தினமணி கதிரில் 'மை டியர் பிரம்மதேவா' என்ற தலைப்பில் சோ தொடர்ந்து எழுதிய கட்டுரைகளை வாசகர்கள் மிக ஆர்வத்தோடு வாங்கிப் படித்தார்கள்.

இப்போது கூட சோ அவர்கள் பல கூட்டங்களில் சாவியை வைத்துக் கொண்டே 'இன்று என் விமர்சனங்கள், கட்டுரைகள் பற்றி யாருக்காவது கோபம் இருந்து திட்ட வேண்டும் போல் ஆத்திரம் வந்தால் தயவு செய்து நீங்கள் உங்கள் கோபத்தைக் காட்ட வேண்டிய இடம் இதோ இங்கேதான்' என்று சாவியைச் சுட்டிக் காட்டுவதுண்டு.

பெருந்தலைவர் காமராஜருக்கும் சாவி அவர்களுக்கும் இருந்த நட்பு பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். தன் வீட்டுக்கு ஒரு முறை விருந்துண்ண வரும்படி ரொம்ப நாட்களாகவே சாவி காமராஜ் அவர்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் காமராஜ் ''ஆகட்டும் பார்க்கலாம்'' என்றே பதில் சொல்லிக் கொண்டிருந்தார். சாவியும் விடாமல் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். 'சும்மா சும்மா கூப்பிட்டுக்கிட்டே இருக்காதீங்க. நேரம் கிடைக்கும்போது நானே வந்துடறேன்' என்று காமராஜ் சொல்லியிருந்தார்.

அதன்படி ஒரு நாள் திடீரென்று தாம் வருவதாக சாவிக்குச் செய்தி அனுப்பி விட்டார். சாவிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. பலமான விருந்துக்கு ஏற்பாடு செய்தார். காமராஜருக்குப் பிடித்த அத்தனை அயிட்டங்களையும் தயாரித்துப்

பரிமாறினார் திருமதி சாவி.

அன்று காமராஜருடன் சேர்ந்து உண்ணவும், பேசிக் கொண்டிருக்கவும் துணையாக யாரை அழைக்கலாம் என்று யோசித்த சாவிக்கு சோ நினைவுக்கு வந்தார். உடனே காமராஜருடன் தொடர்பு கொண்டு 'சோவையும் இன்று இரவு அழைக்கட்டுமா?' என்று கேட்டபோது, 'வரட்டுமே, வரட்டும்' என்றார் காமராஜர்.

அப்போது சாவி அசோக் நகரில் குடியிருந்தார். அந்தச் சின்ன வீட்டில் ஒரே ஒரு அறை மட்டும் ஏ.ஸி. செய்யப்பட்டிருந்தது. சாப்பிட்டு முடித்ததும் காமராஜ், சாவி, சோ மூன்று பேரும் அந்தச் சின்ன அறைக்குள் அமர்ந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அரசியல் தலைவர்கள் பற்றி, மத்திய மாநில அரசு பற்றி, பொருளாதாரம், பண வீக்கம், ரூபாயின் மதிப்பு குறைந்தது பற்றி எல்லாம் வெகு நேரம் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

இரவு மணி ஒன்றைத் தாண்டி விட்டது. மூவருக்குமே தூக்கம் கண்ணைச் சுழற்றியது. 'சரி புறப்படறேன்' என்று சொல்லி காமராஜ் விடை பெற்றுப் புறப்படும்போது 'அம்மா எங்கே?' என்று கேட்டார்.

அம்மா, நடு ஹாலில் தரையிலே படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். சாவி தம் மனைவியை எழுப்ப முற்பட்டபோது 'அவங்களை எழுப்பாதீங்க; வேண்டாம்; நீங்க சொல்லிருங்க' என்று கரிசனத்துடன் கூறி விட்டுக் காரில் போய் ஏறிக் கொண்டார் காமராஜர்.

காமராஜ் தம் வீட்டுக்கு வந்து விட்டுப்போன அந்த நாள் சாவியின் இதயத்தில் கல்வெட்டாய்ப் பதிந்து போன நாள்.

# 35. கருகிய மொட்டு

சத்ய சபாவின் சார்பில் நடத்தப்பட்ட கலை விழாவில் இரு வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. வாரத்தில் ஐந்து நாட்கள் உபந்நியாசம், இரண்டு நாட்கள் எஸ்.வி.சகஸ்ரநாமம் குழுவினரின் சேவா ஸ்டேஜ் நாடகம் என்று நாற்பது நாட்கள் தொடர்ந்து நடந்தன.

அந்த நாற்பது நாட்களுக்கிடையில் ஒரே ஒரு நாள் மட்டும் புரிசை நடேசத் தம்பிரானின் தெருக்கூத்து நடந்தது. புரிசை கிராமம் சாவி அவர்களின் கிராமத்துக்கு ஐந்து மைல் தொலைவில் உள்ளது. நடேசத் தம்பிரான் சிறந்த தெருக்கூத்து கலைஞர் என்பதால் அவரை சென்னை நகரில் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் அந்தக் கூத்துக்கு சத்ய சபா சார்பில் ஏற்பாடு செய்தார். அந்த நிகழ்ச்சிக்கு அன்றைய முதல்வர் எம்.பக்தவத்சலம் அவர்கள் தலைமை தாங்கினார். தெருக்கூத்துக்கு ஒரு ரூபாய் நுழைவுக் கட்டணம் வைத்ததில் அறுநூறு ரூபாய் வசூலாயிற்று.

நடேசத் தம்பிரானுக்கு ஒரு ஆசை. தன்னுடைய தெருக் கூத்து நிகழ்ச்சிக்கு எம்.ஜி.ஆர். தலைமை தாங்க வேண்டும். அவருடைய வாழ்த்தையும் பாராட்டுதலையும் பெற வேண்டும் என்பது தம்பிரானின் ஜன்மசாபல்யமாக இருந்தது. எம்.ஜி.ஆரை அழைத்து வர எப்படியாவது ஏற்பாடு செய்யும்படி சாவியிடம் அவர் மன்றாடிக் கொண்டிருந்தார்.

அந்தப் புகழ் பெற்ற தெருக்கூத்துக் கலைஞரின்

விருப்பத்தை நிறைவேற்றும் முயற்சியாக சாவி எம்.ஜி.ஆரைப் போய்ப் பார்த்தார். படப்பிடிப்பு வேலைகளில் மிகவும் 'பிஸி'யாக இருந்ததால் தன் இயலாமையைச் சொல்லி வருத்தம் தெரிவித்தார் எம்.ஜி.ஆர். அப்போதே தமது நன்கொடையாக முன்னூறு ரூபாய் தந்து அதற்கான டிக்கெட்டுகளும் வாங்கிக் கொண்டார்.

அதன் பின்னர் ஒருமுறை எக்ஸ்பிரஸ் நிறுவன ஊழியர்கள் சங்கக் கூட்டமொன்றில் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டபோது அவரது விருப்பத்திற்கிணங்கி அக்கூட்டத்தில் சாவியும் கலந்து கொண்டு பேசினார். என்றாலும் இரண்டு பேருக்கும் இடையே கனிந்த நட்பு ஏற்பட்டு விடவில்லை.

தினமணி கதிரின் விற்பனையை உயர்த்த என்னவெல்லாம் செய்யலாம் என்ற சிந்தனையில் இருந்த சாவி அவர்களுக்கு எம்.ஜி.ஆருடன் தனக்கிருந்த பரிச்சயத்தின் அடிப்படையில் ஒரு யோசனை உதித்தது. சித்திரத் தொடர்கதை ஒன்றைக் கதிரில் வெளியிட்டு அந்தக் கதையின் கதாநாயகனாக எம்.ஜி.ஆரின் முகத்தைப் பயன்படுத்தினால் கதிர் விற்பனை எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று யோசித்தார். எம்.ஜி.ஆர். அவர்களை நேரில் சந்தித்து அதற்கான அனுமதியைப் பெற விரும்பி சத்யா ஸ்டுடியோவுக்குச் சென்றார்.

கழுத்தில் குண்டு பாய்ந்து உயிருக்கே ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று எம்.ஜி.ஆர். பிழைத்து எழுந்திருந்த நேரம் அது. நீண்ட ஓய்வுக்குப் பின்னர் அப்போதுதான் அவர் நடிக்கத் தொடங்கி இருந்தார். சாவி அவரைப் பார்க்கச் சென்றது அப்போதுதான்.

சாவி சொல்கிறார்:

''எம்.ஜி.ஆர். மருத்துவமனையில் படுத்திருந்தபோது நான் ஆஸ்பத்திரிக்குப் போய் அவரைப் பார்க்கவில்லை. அதை அவரிடம் சொல்வதற்குத் தயக்கமாக இருந்தது. அதனால்,

'மருத்துவமனைக்கு உங்களைப் பார்க்க வந்திருந்தேன். அனுமதி கிடைக்கவில்லை. பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்து மட்டும் போட்டு விட்டு வந்தேன்' என்று துணிந்து ஒரு பொய் சொல்லி விட்டேன். உடனே எம்.ஜி.ஆர்., 'ஆமாம், 'விஸிட்டர்ஸ் புக்'கில் உங்க கையெழுத்தைப் பார்த்தேன்' என்று சொன்னதைக் கேட்டு நான் மனதிற்குள்ளாகவே அவர் சொன்ன பொய்யை நினைத்து சிரித்துக் கொண்டேன்.''

பின்னர், தனது சித்திரக்கதை யோசனையை எம்.ஜி.ஆரிடம் சாவி விளக்கமாக எடுத்துச் சொல்லி அவரது புகைப்படத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சற்று நேரம் யோசித்த எம்.ஜி.ஆர். தமது 'சமநீதி' பத்திரிகையில் வெளியிட அதைப்போலவே ஒரு 'ஐடியா' வைத்திருப்பதாகச் சொல்லி அனுமதி வழங்க மறுத்து விட்டார். அச்சமயம் எம்.ஜி.ஆர். உச்சரிப்பு தெளிவாக இல்லாததால் அவர் என்ன சொன்னார் என்பதை அருகிலிருந்த அவரது உதவியாளர் மூலம் கேட்டுத் தெரிந்து கொண்டார் சாவி.

இந்த உரையாடலுக்கு முன்பாக, சாவியை எம்.ஜி.ஆர். தமது தனி அறைக்கு அழைத்துப் போனார். அங்கே வைக்கப் பட்டிருந்த தமது அன்னை சத்யாவின் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இன்று என் தாயாரின் திதி' என்று கூறிவிட்டு உதவியாளரை அழைத்து அந்தப் படத்துக்கு அருகே வைக்கப்பட்டிருந்த பாயச டம்ளரை எடுத்து சாவியிடம் தரச் சொன்னார்.

''பாயசம் சாப்பிடுங்கள். ஒவ்வொரு வருடமும் இப்படி என் தாயாரின் நினைவு நாளின்போது அம்மாவுக்குப் படைக்கும் பாயசத்தை எனக்கு ரொம்பவும் பிடித்த ஒருவருக்குக் கொடுத்துச் சாப்பிடச் சொல்வது வழக்கம். இன்று, பாயசம் உங்களுக்குத்தான்'' என்றார்.

சாவி அவர்கள் பாயசத்தைச் சாப்பிட்டார். எனினும்

எம்.ஜி.ஆருடன் பேசியபின் தான் வந்த விஷயம் வெற்றியடைய வில்லையே என்ற வருத்தத்துடன் வீடு திரும்பினார்.

அப்புறம் சில நாட்களுக்குப் பின்னர் வித்வான் லட்சுமணன் சாவியைத் தேடி வந்தார்.

''எம்.ஜி.ஆர். உங்களைப் பார்க்க விரும்புகிறார்' என்றார்.

''என்ன விஷயம்?'' சாவி கேட்டார்.

''தெரியவில்லை. ஏதோ முக்கிய விஷயமாகத்தான் இருக்க வேண்டும். உங்களுக்குப் பெரிய அதிர்ஷ்டம் காத்திருக்கிறது என்றுதான் நினைக்கிறேன்'' என்று சாவிக்கு ஏதோ பெரிய அதிருஷ்டம் வந்து விட்டதுபோல் பேசி அவரை உற்சாகப் படுத்தினார்.

மறுநாள் சாவி, எம்.ஜி.ஆரைச் சந்தித்தார்.

''வாங்க; உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. தினமணி கதிரில் நான் வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் எழுதப் போகிறேன். நீங்கள் போஸ்டர்கள் அடித்து பிரமாதமாக விளம்பரப்படுத்துங்கள்'' என்றார் எம்.ஜி.ஆர். சாவி இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

'எம்.ஜி.ஆர். பதில்கள்' என்றால் விற்பனை நிச்சயமாக அதிகரிக்கும் என்று சாவி எண்ணிய போதிலும் ''நீங்கள் எதிர் பார்க்கிற அளவுக்கு விளம்பரம் செய்ய எனக்கு அதிகாரமில்லை. எனினும் கோயங்காவைக் கேட்டுப் பார்க்கிறேன். தினமணி கதிரில் வேண்டுமானால் தொடர்ந்து நாலு வாரங்களுக்கு விளம்பரம் செய்கிறேன்'' என்றார் சாவி. 'சரி, இந்த வாரமே விளம்பரம் போட்டு விடுங்கள்' என்றார் எம்.ஜி.ஆர்.

''ஆகட்டும்; உங்களிடம் ஒரு வேண்டுகோள்'' என்றார் சாவி.

''என்ன? சொல்லுங்கள்.''

''இந்தக் கேள்வி – பதில் பகுதியை நான் சொல்கிறவரை நீங்கள் நிறுத்தக்கூடாது. நானாக எப்போது வேண்டுமானாலும் நிறுத்தி விடுவேன். ஆசிரியருக்கான அந்த உரிமையைத் தாங்கள் மறுக்கக் கூடாது'' என்று சாவி சற்று அழுத்தமாகவே சொன்னார்.

எம்.ஜி.ஆர். அதற்கும் 'சரி' என்று ஒப்புக் கொண்டார்.

'எம்.ஜி.ஆர். பதில்கள்' என்று தினமணி கதிரில் வெளியான விளம்பரத்தைப் பார்த்ததும் வாசகர்கள் எழுதி அனுப்பிய கேள்விகள் குதிர்களாய்க் குவிந்தன. அவை வாரா வாரம் சாக்குப் பைகளில் மூட்டைகளாகக் கட்டப்பட்டு எம்.ஜி.ஆருக்குப் போய்க் கொண்டிருந்தன. எம்.ஜி.ஆரிடமிருந்து பதில்களை வாங்கி வந்து தருகின்ற பொறுப்பை வித்வான் லட்சுமணன் ஏற்றுக் கொண்டார்.

கிட்டத்தட்ட பதினைந்து வாரங்கள் 'எம்.ஜி.ஆர். பதில்கள்' தொடர்ந்து வெளியாயின.

அச்சமயத்தில் சோ அவர்கள் தம்முடைய 'துக்ளக்' இதழில் எம்.ஜி.ஆரைக் கேலி செய்து அவருக்கே உரிய நகைச்சுவையுடன் எழுதிக் கொண்டிருந்தார்.

ஒரு வாரம், எம்.ஜி.ஆர். தான் எழுதியனுப்பிய பதில்களில் 'சோ'வைக் கடுமையாகத் தாக்கியிருந்தார். அதுவும் ஒரே வாரத்தில் ஐந்தாறு பதில்களில் தாக்கியிருந்தார். 'சோ'வைத் தாக்கி எழுதுவதற்கு தினமணி கதிர் 'கேள்வி–பதில்' பகுதியை எம்.ஜி.ஆர். பயன்படுத்திக் கொள்வதை சாவி விரும்பவில்லை. அதனால் அந்தப் பதில்களை அவர் வெளியிடவில்லை. ஆசிரியர் என்ற முறையில் பத்திரிகை தர்மத்தின் அடிப்படையில் அம்மாதிரியான பதில்களை வெளியிட சாவி விரும்பாததே காரணம். இது எம்.ஜி.ஆருக்குக் கோபத்தை உண்டு பண்ணும் என்பதும் சாவிக்குத் தெரியும். வித்வான் லட்சுமணனோ பதறிப் போய் ''என்ன இப்படிப் பண்ணி விட்டீர்களே! சோ பற்றி எம்.ஜி.ஆர். எழுதியிருந்த பதில் களையெல்லாம் போடவில்லையே? தெரிந்தால் எம்.ஜி.ஆர்.

ரொம்பக் கோபப்படுவாரே, இனிமேல் பதில் எழுத மாட்டேன் என்று சொன்னாலும் சொல்லி விடுவாரே'' என்றார்.

''அவர் என்ன சொல்வது? நான் சொல்கிறேன். எம்.ஜி.ஆர். பதில்கள் பகுதியை இதோ இந்த நிமிடமே நிறுத்தியாச்சு! மிச்சமிருக்கும் இந்த மூட்டைகளையெல்லாம் இப்போதே எடுத்துப் போயிடுங்க'' என்று முடிவாகச் சொல்லி அனுப்பி விட்டார் சாவி.

இதன் விளைவாக எம்.ஜி.ஆருக்கும் சாவிக்கும் இடையே மொட்டு விட்டிருந்த நட்பு ஒரே நாளில் கருகிப் போயிற்று என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் நட்பு வேறு–பத்திரிகை வேறு என்பது எப்போதுமே சாவியின் சித்தாந்தம். தம் பத்திரிகையில் எந்த மேட்டரையும் அவர் நட்புக்காகப் பிரசுரித்ததே இல்லை. அதேபோல ஒரு மேட்டர் சுவாரசியமாக இருக்கும் என்று நினைத்தால் அந்த மேட்டரைத் தருபவர் நட்புறவில் இல்லை என்பதற்காக மறுத்ததுமில்லை.

எந்த எம்.ஜி.ஆரைப் பகைத்துக் கொண்டாரோ அதே எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராகப் பதவிக்கு வந்ததும், அவரைப் பேட்டி கண்டு 'சாவி' இதழில் 'தோட்டத்திலிருந்து கோட்டம் வரை' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையே எழுதி வெளியிட்டார் சாவி. எம்.ஜி.ஆரிடம் அவருக்கு இருந்த பகை அதற்குக் குறுக்கே வரவில்லை.

# 36. எழுத்தாளர் துமிலன்

1951–52ல் தினமணி கதிர் இரண்டணா பத்திரிகையாக முதன்முதல் தொடங்கப்பட்டபோது எழுத்தாளர் துமிலன் (என்.ராமசாமி) அதன் ஆசிரியராக அமர்ந்தார். துமிலனின் எழுத்தில் மெலிதான நகைச்சுவை இழையோட்டம் இருக்கும். சாவிக்கு அவரது எழுத்துக்கள் ரொம்பப் பிடிக்கும். ''ஆனந்த விகடனில் 'அப்பளக் கச்சேரி' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைகளில் மெலிதான நகைச்சுவை இழையோடும்'' என்கிறார் சாவி.

துமிலன் ஏற்கனவே ஆனந்த விகடனில் நல்ல அனுபவம் பெற்றவர் என்பதால் அவரை கதிருக்குப் பொறுப்பாசிரியராக நியமித்தார்கள்.

தினமணி கதிர் நின்று போனபிறகு துமிலன் வேலையில்லாமல் இருந்தார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் தினமணி கதிர் மீண்டும் தொடங்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பின் சாவி அதன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

துமிலன் அவர்களின் திறமையையும் – குறிப்பாக நகைச்சுவையையும் – நன்குணர்ந்திருந்த காரணத்தாலும் அவர் வேலை இல்லாமல் சிரமப்படுகிறார் என்பதாலும் அவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று சாவி விரும்பினார்.

அச்சமயம் ஒரு நாள் காமராஜர் அவர்களுடன் சாவி

மைசூருக்குப் பயணமானார். தம்மோடு துமிலனையும் அழைத்துச் சென்றார்.

சமயம் பார்த்து காமராஜரிடம் துமிலனைப் பற்றிச் சொல்லி அறிமுகப்படுத்தி வைத்தால் ஏதேனும் வழி கிடைக்க வாய்ப்புண்டு என்று சாவி திட்டமிட்டார். தகுந்த சமயம் வாய்த்தபோது துமிலனை காமராஜருக்கு அறிமுகப்படுத்தி, இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். விகடனில் அனுபவம் பெற்றவர். இவருக்கு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

'காங்கிரஸ் மாநாடுகள் சிலவற்றில் இவரைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது. இவர் எழுத்தையும் விகடனில் படித்திருக்கிறேன். சின்னச் சின்ன வாக்கியங்களாக எழுதுவார்' என்று காமராஜர் துமிலனைப் பற்றிச் சொன்னார்.

'காங்கிரஸுக்கென்று ஒரு பத்திரிகையைத் தொடங்கி அதற்கு இவரை ஆசிரியராகப் போடலாமே' என்று சாவி யோசனை சொன்னபோது 'ஓ... செய்யலாமே! யோசிப்போம்'' என்றார் காமராஜர்.

அடுத்த சில நாட்களுக்குள்ளாகவே துமிலன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'சுதந்திரச் சங்கு' என்று ஏற்கெனவே பிரபலமாக இருந்த பத்திரிகையின் பெயரில் மீண்டும் தொடங்குவதென்று முடிவாயிற்று. புதுப்புது அம்சங்களுடன் அப்பத்திரிகை சிறப்பாகவே இருந்தது. ஆயினும் சில இதழ்கள் வெளியாவதற்குள்ளாகவே ஏக நஷ்டம் ஏற்பட்டதால் தொடர்ந்து நடத்த முடியாமல் நின்று போனது. துமிலனுக்கு மீண்டும் வேலை இல்லாமல் போயிற்று.

ஒருநாள் தினமணி கதிர் அலுவலகத்திற்கு வந்த துமிலன் சாவியைப் பார்த்து தான் எழுதிக் கொண்டு வந்த கட்டுரைகளைக் கொடுத்தார். துமிலனைப் பார்க்க சாவி அவர்களுக்குச் சங்கடமாக

இருந்தது. ''காரணம், தினமணி கதிர் ஆசிரியர் நாற்காலியில் அவர் என்னைப் பார்க்கும்போது 'ஒரு காலத்தில் நாம் அமர்ந்திருந்த இடம் இது' என்ற எண்ணம் துமிலனை நிச்சயம் சங்கடப்படுத்தும். அந்தச் சங்கடத்தை அவருக்குத் தர வேண்டாமே என்றுதான் நினைத்தேன். ஆனால் என்னைப் பார்க்க அவர் உள்ளே வந்து விட்ட பிறகு என்ன செய்வது?'' என்று சாவி அத்தருணத்தில் வேதனைப்பட்டதாகச் சொல்கிறார்.

'இனிமேல் அவர் வந்தால் என்னைப் பார்க்க உள்ளே அனுப்பாதீர்கள். நீங்களே கட்டுரைகளை வாங்கி வைத்துக் கொண்டு அவரை நைஸாக அனுப்பி விடுங்கள்' என்று உதவி ஆசிரியர்களுக்குச் சொல்லி வைத்திருந்தார் சாவி.

துமிலன் அடுத்த முறை சாவியைப் பார்க்க வந்தபோது உதவி ஆசிரியர்கள் அவரைத் தடுத்து விட்டார்கள். சாவி இப்படி நல்ல எண்ணத்தில் சொல்லியிருந்ததை துமிலன் தவறாகப் புரிந்து கொண்டு தன்னை உள்ளே வரக்கூட அனுமதிக்காமல் சாவி அவமதித்து விட்டதாக எண்ணி வெகுண்டார். வீட்டுக்குப் போனதும் சுமார் நான்கு பக்கங்களில் ஒரு நீளமான கடிதம் எழுதி சாவிக்கு அனுப்பினார். மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்தி மிகவும் காரசாரமாக எழுதப்பட்டிருந்த கடிதம் அது.

'நான் ரொம்பவும் மனம் நொந்து போனேன். என்னை அவர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே என்று நினைத்து நினைத்து வேதனைப் பட்டேன்' என்று அக்கடிதம் பற்றி சாவி இப்போதும் சொல்லி வருத்தப்படுகிறார். இது பற்றித் துமிலனுக்கு விளக்கமாக ஒரு பதில் கடிதம் எழுதி அனுப்பினார் சாவி. ஆனால் துமிலன் அந்த விளக்கத்தைப் பெரிதாக எடுத்துக் கொண்டது மாதிரியோ, ஏற்றுக் கொண்டது மாதிரியோ காட்டிக் கொள்ளவில்லை.

அப்புறம் இரண்டாண்டுகள் கழித்து எழுத்தாளர் பி.வி.ஆர்.

அவர்களின் மகள் திருமண நிகழ்ச்சியின்போது சாவி துமிலனைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது சாவியைக் கண்டதும் துமிலன் ''நான்தான் உன்னைத் தப்பாகப் புரிந்து கொண்டேன். ஸாரி'' என்றாராம்.

நல்ல திறமை இருந்தும் துமிலன் அவர்கள் மிகப்பெரிய உயரத்துக்கு வர முடியாமல் போனது குறித்து சாவிக்கு இன்றும் வருத்தம் உண்டு.

# 37. கதிர் ஸர்க்குலேஷன்

புத்தூர் அருகே உள்ள கார்வேடு கிராமத்தில் காஞ்சி முனிவர் முகாமிட்டிருந்தார். சாவி அப்போது தினமணி கதிர் ஆசிரியர். இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் டி.கே.தியாகராஜன் (டி.கே.டி.), உதவி மேலாளர் எம்.கிருஷ்ணசாமி (எம்.கே.) இருவருடன் சுவாமிகளை தரிசிக்க கார்வேடு புறப்பட்டுச் சென்றார் சாவி.

இவர் போனபோது சுவாமிகள் கார்வேடு நகரில் இல்லை. திருப்பதி போகும் சாலையை ஒட்டிய ஒரு வீட்டில் தங்கியிருந்தார். இவர்கள் போனபோது அங்கே கூட்டம் அதிகமில்லை. சாவியைப் பார்த்ததும் சுவாமிகள் புன்சிரிப்போடு ஆசீர்வதித்து உட்காரச் சொன்னார்.

எடுத்த எடுப்பிலேயே 'நீ க்ஷேமமா இருப்பே... நன்னா இருப்பே...' என்று வாய் நிறைய வாழ்த்தினார் காஞ்சிப் பெரியவர். இப்படி வாழ்த்தியதைக் கேட்டதும் சாவிக்கும் மற்றவர்களுக்கும் பெரும் வியப்பு. ஏனென்றால் அவர் எப்போதும் ஆசீர்வாதம் செய்வாரே தவிர, இவ்வளவு வார்த்தைகளைச் சொல்லி வாழ்த்தியதைக் கண்டதில்லை.

சாவியைப் பார்த்து "'பாலிடி' (Polity) என்றால் என்னன்னு தெரியுமோ, உனக்கு?" என்று பேச்சைத் தொடங்கினார் சுவாமிகள்.

'பாலிடிக்ஸ் தெரியும். பாலிடின்னா தெரியலை' என்று இழுத்தாற்போல் சொன்னார் சாவி.

''மக்களுக்காகப் பொதுவாகச் செய்யப்படும் நல்ல காரியங்களை பாலிடின்னு சொல்வா. பாலிடிங்கற தலைப்பில் வாரா வாரம் கதிர்ல நீ 'ரிலிஜியன்' எழுது'' என்றார்.

தாம் நடத்தும் பத்திரிகைகளில் ரிலிஜியன், ஆன்மிகம் பற்றியெல்லாம் எழுதுவது சாவிக்கு எப்போதுமே உடன்பாடில்லை. எனவே ''நான் என் பத்திரிகையில் 'ரிலிஜியன்' எழுதுவதற்கில்லை'' என்று சற்றும் தயக்கம் காட்டாமல் பளிச்சென்று பதில் கூறி விட்டார் சாவி.

சுவாமிகள் சாந்தமாக ''ஏன் அப்படிச் சொல்றே?'' என்றார்.

''நான் ஆசிரியர் வேலையை ஒப்புக் கொண்டபோது கதிர் பத்திரிகையின் விற்பனையை லட்சம் பிரதிகளாக்கிக் காட்றேன்னு கோயங்காவிடம் சேலஞ்ச் பண்ணியிருக்கேன். அதுக்கு இடைஞ்சலா இருக்கிற எதையும் நான் செய்யப் போவதில்லை.''

''ரிலிஜியன் எழுதினா சர்க்குலேஷன் ஏறாதோ?'' பெரியவர் விடுவதாக இல்லை.

''ஏறாதுன்னு நான் முழுமையா நம்பறேன்.''

''எப்படிச் சொல்றே நீ?''

''இப்ப குமுதம் ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனை யாகிறது. அதில் அவர்கள் ரிலிஜியன் பற்றி எழுதறதில்லே. ரிலிஜியன் பற்றி எழுதற பத்திரிகை எதுக்குமே சர்க்குலேஷன் அதிகம் இல்லை.''

''நான் சொல்றேன். நீ எழுது. நான் பூரணமா ஆசீர்வாதம் பண்றேன். நன்னா வரும், எழுது'' என்றார் பெரியவர்.

சாவி அவர்களுக்கு இக்கட்டான நிலை. தன் கொள்கையை

மீறவும் முடியவில்லை. பெரியவரின் ஆணையைத் தட்டவும் முடியவில்லை.

மறுபடியும் "நான் எழுதுவதற்கில்லை. பெரியவா என்னை மன்னிக்கணும்" என்று சாவி தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

சுவாமிகள் அதற்கு மேல் வற்புறுத்தவில்லை. விபூதி குங்குமம் பிரசாதம் கொடுத்து மூவரையும் ஆசீர்வதித்து வழி அனுப்பினார்.

காரில் திரும்பும்போது சாவி அவர்களை மற்ற இருவரும் ரொம்பவும் கோபித்துக் கொண்டார்கள்.

"அதெப்படி பெரியவா ஆணையை மீறி முடியாதுன்னு சொல்லலாம்?" என்று கடிந்து கொண்டார்கள்.

"அவர்தான் ஆசீர்வாதம் பண்றேன்னு சொன்னார் இல்லையா? அதுக்கு மேல என்ன வேணும்?"

இப்படி சாவியைப் பேசவிடாமல் டி.கே.டியும், எம்.கேயும் பொரிந்துத் தள்ளினார்கள்.

சாவி அமைதியாக இருந்தார். உள்ளுக்குள் ஒரு சஞ்சலம். 'ஒரு வேளை 'முடியாது' என்று சொன்னது தப்புதானோ? அவர் அவ்வளவு சொல்லியும் அவர் கட்டளையை மீறியது சரியா?' என்று சாவி தனக்குத்தானே கேள்விகள் கேட்டுக் கொண்டார். பெரியவாளுடன் தர்க்கம் செய்ததைப் பெரிய குற்றமாகக் கருதினார். அந்தக் குற்ற உணர்வு அவர் மனதில் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது. ஆனாலும் தனக்குச் சரியென்று பட்டதைத்தானே சொன்னோம். அதில் என்ன தவறு என்றும் தோன்றியது.

மூவரும் காரில் புறப்பட்டுச் சிறிது தூரம் போனபோது 'ரியர் வியூ மிர்ரர்' வழியே எதேச்சையாக டி.கே.டி. பார்த்தார்.

பின்னால் காரைத் துரத்திக் கொண்டு வேகமாக ஒரு சைக்கிள் வந்து கொண்டிருந்தது.

அந்த சைக்கிளில் துரத்தி வந்தவர் ''பெரியவா உங்களை அழைச்சிண்டு வரச் சொன்னா?'' என்றார்.

ஏன் ? எதற்கு? என்று ஒன்றும் புரியாமல் மூவரும் திரும்பிப் போய் பெரியவர் முன் நின்றார்கள்.

''ஆமாம்... ரிலிஜியன் எழுதினா பத்திரிகை விற்காதுன்னு சொல்றயே, மாம்பலம் பஸ் டெர்மினஸ் பக்கத்தில பிள்ளையார் சிலை ஒன்று திடீர்னு பூமிக்குள்ளேருந்து கிளம்பி வந்ததே. அதைப் பத்தி தினமணி பேப்பர்ல நியூஸ் போட்டப்போ ஏழாயிரம் காப்பி அதிகமாச்சாமே'' என்றார் சுவாமிகள்.

''அது ரிலிஜியன் இல்லை. சென்ஸேஷன். அடுத்து என்ன ஆகுமோங்கற சஸ்பென்ஸ்! சர்க்குலேஷன் அதிகமானதுக்கு அதுதான் காரணம்'' என்றார் சாவி. சுவாமிகள் அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை.

''ஓகோ, நீ அப்படி நினைக்கிறயோ?'' என்று மட்டும் சொல்லிவிட்டு வந்தவர்களைப் பார்த்து 'சரி, நீங்க போகலாம்' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

தன் மனதுக்கு ஒவ்வாத விஷயங்களைச் செய்யக்கூடாது என்கிற தீவிரம் சாவிக்கு எப்போதுமே உண்டு.

அவர் பெரிதும் மதித்துப் போற்றிப் பூஜித்த காஞ்சி பரமாச்சாரியார் முன்பும் தம் கருத்தை வெளியிடத் தயங்கிய தில்லை.

இதில் அதிசயம் என்னவென்றால், இந்த நிகழ்ச்சிக்குப் பின் கதிர் ஸர்க்குலேஷன் ஏறவே இல்லை!

---

# 38. இரட்டை நாயனம்

இன்று தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் பத்திரிகை ஓவியர்களில் பெரும்பாலோர் சாவி அவர்களுடன் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் இவர் ஊக்கம் தந்திருப்பார். அத்தனை ஓவியர்கள் மத்தியிலும் கோபுலு என்றால் சாவி அவர்களின் முகம் மலரும். காரணம் நட்பு ரீதியாக இவர்கள் இருவரும் கிட்டத்தட்ட நாற்பத்து நான்கு ஆண்டு காலமாக அண்ணன் – தம்பி போல் பாசத்துடன் பழகி வருகிறார்கள்.

'வாஷிங்டனில் திருமணம்', 'விசிறி வாழை', 'கேரக்டர்', 'இங்கே போயிருக்கிறீர்களா?', 'திருக்குறள் கதைகள்', 'வழிப் போக்கன்', 'வேதவித்து', 'கோமகனின் காதல்', 'ஊரார்', 'வடம் பிடிக்க வாங்க', 'உலகம் சுற்றிய மூவர்' என்று சாவியின் படைப்புகள் அனைத்துக்குமே சித்திரம் வரைந்தவர் கோபுலுதான். இருவருமே பத்திரிகைத் துறையில் இரட்டை நாயனக்காரர்கள் போல் சுருதி சுத்தமாக இணைந்து வாழ்ந்தார்கள்.

''கடல் என்றால் அலைகள் நினைவுக்கு வருவதுபோல, கோயில் என்றால் கோபுரம் நினைவுக்கு வருவதுபோல, திருவாவடுதுறை ராஜரத்தினம் என்றால் தோடி ஞாபகத்திற்கு வருவதுபோல, சாவி என்று என் பெயரைச் சொன்னால் கூடவே கோபுலு என்ற பெயரும் நினைவில் வந்து நிற்கும்'' என்கிறார் சாவி.

'கல்கி' அவர்களின் வாரிசு சாவி என்றால் 'மாலி' அவர்களின் வாரிசாக கோபுலுவைச் சொல்ல வேண்டும்.

'இங்கே போயிருக்கிறீர்களா?' என்ற பகுதியை சாவி விகடனில் எழுதியபோது அதற்காக இவ்விருவரும் கோவா, பம்பாய், பெங்களூர், டெல்லி, அஜந்தா, எல்லோரா, மாமல்லபுரம், பொள்ளாச்சி, சென்ட்ரல் ஸ்டேஷன் என்று பல இடங்களுக்குச் சேர்ந்தே போயிருக்கிறார்கள்.

இப்படி ஒரு அருமையான காம்பினேஷனில் அந்தக் கட்டுரைகள் வெளியாயின. கோபுலுவின் படம் வரையும் திறமை மட்டும் அல்லாமல் அவரது சில தனிப்பட்ட பழக்க வழக்கங்களும் சாவியைக் கவர்ந்தன.

''கோபுலு படம் வரையும்போது பிரஷ்ஷை உதறி சுற்றுப்புறத்தைப் பாழடிக்க மாட்டார். கீழே ஒரு சிறு குப்பைகூட இருக்காது. பக்கத்துச் சுவர்களில் பிரஷ்ஷால் உதறப்பட்ட வண்ண அழுக்குகள் இருக்காது. அவர் வந்து உட்காரும்போது அந்த இடம் எப்படி தூய்மையாக இருக்குமோ அவர் வேலை முடித்து எழுந்து போகும்போதும் அப்படியேதான் இருக்கும்'' என்கிறார் சாவி.

சாவியைப் பற்றி கோபுலு என்ன சொல்கிறார் தெரியுமா?

''சிருங்கேரி போய் துங்கா ஆற்றைப் பார்த்தால் அதில் எதிர் நீச்சல் போட்டு முன்னேறும் மீன்களைப் பார்க்கையில் எனக்கு சாவியின் நினைவுதான் வரும்.

ஆற்றின் கரையோரம் வளர்ந்திருக்கும் நாணல்களைப் பார்த்தாலும் சாவியின் நினைவுதான் வரும். எத்தனையெத்தனை சோதனைகள் வந்தாலும், அவற்றை எளிதாக எதிர் கொண்டு வளைந்து கொடுக்க வேண்டிய நேரங்களில் நாணல் போல் வளைந்து கொடுத்து வெற்றி பெறும் சாகசங்களை நான் கண்டிருக்கிறேன்.

நகைச்சுவைக் கதைகள் எழுதுவதில் ரசவாதி அவர். அனுமார் வால் போல் அவர் மேஜைக்கு வரும் 'ப்ரூப்'களை திருத்தித் திருத்தி, மேலும் திருத்தி எழுத்துக்கு மெருகூட்டும் வித்தையில் சாவி ஒரு மன்னர்.

'சாவி'க்குள் ஒரு 'ஆர்ட்டிஸ்ட்' இருக்கிறார். அவர் அவ்வப்போது வெளிப்பட்டு 'பேஜ்' எப்படி இருக்கவேண்டும், 'லே–அவுட்' எப்படி இருக்கவேண்டும் என்று மின்னல் போல் பளிச் பளிச்சென்று ஐடியாக்கள் கொடுத்து எங்கள் வேலையை எளிதாக்கி விடுவார்.

பிறரைத் தூக்கிவிடுவதிலும், கரையேற்றுவதிலும் சாவிக்கு நிகர் அவரே.

இன்று தமிழகத்தின் பல முன்னணி எழுத்தாளர்கள் கங்கையாய்ப் பிரவாகமெடுத்து ஓடுகிறார்கள் என்றால் அவர்கள் எல்லோரும் சாவி என்னும் இமயத்தில் உற்பத்தியானவர்கள்தான்.''

# 39. கலைஞருடன் கனிந்த நட்பு

கலைஞருக்கும் சாவிக்கும் இடையே நிலவி வரும் நீண்ட கால நட்பு அனைவரும் அறிந்த ஒன்று. கலைஞருடன் அறிமுகமாகும் முன்பாகவே அவரது படைப்புகள் சாவிக்கு அறிமுகமாகி இருந்தன. கலைஞரின் அழகுத் தமிழ் சாவியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. முரசொலியின் தீவிர வாசகரான சாவி அடிக்கடி சொல்வதுண்டு: ''முரசொலியைப் படிக்கும்போது கலைஞர் பேசுவதைக் கேட்பது போல இருக்கும். கலைஞரின் சொற்பொழிவைக் கேட்கும்போது முரசொலியைப் படிப்பது போன்று இருக்கும்.''

பல கூட்டங்களிலும் அவர் இதனைச் சொல்லி நான் கேட்டிருக்கிறேன்.

திருச்சி தி.மு.க. பிரமுகர் திரு. நாகசுந்தரம் அவர்கள்தான் சாவியை கலைஞருக்கு முதன் முதல் அறிமுகப்படுத்தி வைத்தவர். அதைத் தொடர்ந்து கலைஞர் அவர்கள் தமிழக சுற்றுப்பயணம் போகும்போதெல்லாம் அநேகமாய் சாவியும் அவரோடு பயணம் செய்துவிட்டு வந்து, தினமணி கதிரில் கட்டுரைகள் எழுதுவது வழக்கம். வயது முதிர்ச்சி காரணமாக சாவியால் அந்தப் பழக்கத்தை இப்போது தொடர முடியவில்லை.

சாவி எப்போதுமே எதையும் ஒரு பக்கச் சார்புடன் செய்து கொண்டிருப்பதை விரும்புவதில்லை. எதையும் சமநோக்கில் பார்த்துச் செய்ய வேண்டும் என்பார். அதிலும் குறிப்பாக ஒரு

பத்திரிகைக்காரன் மீது எந்தவிதமான வர்ணமும் பூசப்பட்டு விடக்கூடாது என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருப்பவர்.

ஆனால் இப்போது 'சாவி என்றால் அவர் கலைஞர் ஆளப்பா' என்கிற மாதிரி ஒரு கருத்து பரவலாக இருப்பது உண்மை. கலைஞரின் தி.மு.க. சார்புடையவர் என்பதைவிட 'கலைஞரின் கனிந்த நட்புக்கு உகந்தவர்' என்பதுதான் உண்மை.

எப்போதும் ஒருவரைப் புகழ்ந்து கொண்டே இருக்கக் கூடாது என்பதற்காக சாவி அவ்வப்போது கொஞ்சம் 'பேலன்ஸ்' செய்து எழுதுவார்.

கலைஞர் அவர்கள் முதல் முதல் ஆட்சிக்கு வந்தபோது வெளிநாடுகளுக்குப் போய் வந்தார். வந்த பின்னர் அந்நாடுகள் பற்றி அவர் சில கருத்துக்களைத் தெரிவித்தார். ஏதோ நீண்ட காலம் அந்நாடுகளில் தங்கி அனுபவம் பெற்றதுபோல் அவர் பேசியதை லேசாகக் குறை கூறி விமரிசித்து சாவி தினமணி கதிரில் ஒரு தலையங்கம் எழுதினார். எப்போதும் பாராட்டியே எழுதிக் கொண்டிருந்தால் 'கலைஞருக்கு ஜால்ரா போடும் பத்திரிகை' என்று பெயரெடுத்து விடும் என்று சாவி எண்ணியதால் சற்று எதிர்மறையாக எழுதினார். மேலும் இரண்டொரு நாட்களில் எந்த நாட்டையுமே யாரும் சரியாகப் பார்த்துத் தெரிந்து கொண்டுவிட முடியாது என்பது சாவியின் அபிப்ராயம்.

அந்தத் தலையங்கத்தில் கலைஞரைப் பற்றி அப்படி ஒன்றும் கடுமையாக விமரிசித்து விடவில்லை. அதுமட்டுமல்ல; 'விமரிசனங்களைத் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு கலைஞர் அவர்கள் இப்போது போல் அப்போது பண்பட்டிருக்கவில்லை' என்கிறார் சாவி. அதனால் சாவி கலைஞரின் கடுங்கோபத்துக்கு ஆளானார். கதிர் தலையங்கத்தைச் சாடி முரசொலியில் ஒரு கட்டுரை எழுதித் தம்முடைய கோபத்துக்கு ஒரு வடிகால் ஏற்படுத்திக் கொண்டார்.

'கூவுகிற கோட்டான் கூவட்டும்; இந்தக் குயிலுக்கு என்ன வந்தது கேடு?' என்று தலைப்பிட்டு முரசொலியில் ஒரு நீண்ட கட்டுரை எழுதி சாவியை விமர்சித்திருந்தார். சாவி இதைச் சற்றும் எதிர்பாராததால் அந்தக் கட்டுரையின் வேகத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தம்முடைய தூயநட்பையும் உண்மையான அபிமானத்தையும் கலைஞர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே என்று ரொம்பவும் வேதனைப்பட்டார்.

முரசொலியைப் படித்துப் பார்த்த சாவி மறுநாளே கலைஞர் அவர்களை அவர் இல்லத்தில் போய்ப் பார்த்து தன் நிலையைத் தெளிவாக விளக்கிக் கூறினார்.

''நான் அவர் வீட்டுக்குப் போனபோது கலைஞர் தம் கோபத்தை சற்றும் வெளிக்காட்டாமல் எப்போதும் போல் சாதாரணமாகத்தான் பேசினார். நான் ஏன் அந்தத் தலையங்கம் எழுதினேன் என்பதையும் அவரிடம் எனக்குள்ள ஆழ்ந்த அன்பையும் மனம் திறந்து பேசினேன். ஆனாலும் அவர் முழுமையாகச் சமாதானம் அடைந்தாரா இல்லையா என்று தெரியவில்லை.

கடைசியில் விடை பெற்றுப் புறப்படும்போது 'உங்கள் முரசொலி கட்டுரையில் என்னைக் கடுமையாக விமரிசனம் செய்திருந்தாலும் என்னைப் பொறுத்தவரை நான் என்றுமே உங்கள் நண்பன்தான். உங்களிடமுள்ள அன்பு என்றுமே மாறாது. உங்கள் இனிக்கும் தமிழில்தான் என்னைக் குட்டி இருக்கிறீர்கள். பரவாயில்லை. மோதிரக் கையால் குட்டுப் பட்டதாகவே எண்ணிக் கொள்கிறேன்' என்று சொல்லிவிட்டுத் திரும்பினார்.

சாவி – கலைஞர் நட்புச் சங்கிலி இதனால் அறுந்து போய்விடவில்லை. நட்பு மேலும் உறுதிப்பட்டது. நாளடைவில்

கலைஞரின் மிக நெருங்கிய, அதே சமயம் மிகச் சுருங்கிய நட்பு வட்டத்துக்குள் சாவியும் ஒருவரானார்.

அப்போதெல்லாம், மாலை வேளைகளில் சென்னை மெரீனா கடற்கரையில் அகில இந்திய வானொலி கட்டிடத்திற்கு எதிரே கலங்கரை விளக்கத்துக்கு அருகில் கலைஞரும் சக அமைச்சர்களும், நண்பர்களும் வட்டமாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது வழக்கம். இரண்டொரு சமயங்களில் சாவியும் அந்த வட்டத்தில் கலந்து கொண்டதுண்டு.

சாவி அவர்களின் மகன் பாச்சாவின் திருமண நாள். ஹேமமாலினி திருமண மண்டபத்தில் அன்று மாலை ரிஸப்ஷன். கலைஞரும், அவரது சக அமைச்சர் பெருமக்களும் சேர்ந்து வந்து மணமக்களை வாழ்த்திவிட்டுச் சென்றனர். கலைஞரின் நகைச்சுவை உணர்வுதான் ஊர் அறிந்த ஒன்றாயிற்றே! மாப்பிள்ளையை வாழ்த்தியபோது 'பாச்சா! இனிமேல் உன் பாச்சா பலிக்காது' என்று கலைஞர் கூறியதை இன்றும் சாவி மறக்காமல் நண்பர்களிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருக்கிறார். மணமக்களை வாழ்த்திய பின் சாவியிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டபோது தன்னை வாசல் வரை வந்து வழியனுப்பிய சாவியிடம், 'அப்ப, நீங்க இன்னிக்குப் பீச்சுக்கு வர மாட்டீங்க' என்றார் கலைஞர்.

கலைஞர் கிளம்பிய பின்பு சாவியின் மனதில் ஒரு உறுத்தல்.

'அப்ப இன்னிக்கு பீச்சுக்கு வரமாட்டீங்க' என்று கலைஞர் தமாஷுக்குத்தான் சொல்லியிருக்கிறார் என்பது புரிந்தாலும் 'இன்று நாம் பீச்சுக்குப் போய் திடீரென அவரை வியப்பில் ஆழ்த்த வேண்டும்' என ஒரு முடிவெடுத்தார் சாவி.

திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் – அதுவும் வி.ஐ.பிக்கள் பலர் வரிசையாக வந்து போய்க் கொண்டிருக்கும் நேரத்தில் – எந்தத் தந்தையும் அந்த இடத்தை

விட்டு வெளியே போவதை எண்ணியும் பார்க்க முடியாது. ஆனால் கலைஞர் மீது சாவி கொண்டிருந்த ஆழ்ந்த அன்பும் நட்பும் அன்று அவரை 'ஏன் இப்படிப்பட்ட முக்கியமான சமயத்தில் தான் கொண்டிருக்கும் நட்பைக் கலைஞருக்கு வெளிப்படுத்தக் கூடாது?' என்று தூண்டியிருக்க வேண்டும்.

உடனே மண்டபத்தில் உக்கிராண அறைக்குள் போய் சீர்முறுக்கு, லட்டு, அதிரசம் போன்ற கல்யாண பட்சணங்களை இரண்டு மூன்று பைகளில் நிரப்பிக் கொண்டார். யாரிடமும் எதுவும் சொல்லாமல் 'இதோ வருகிறேன்' என்று மனைவியிடம் மட்டும் சொல்லிவிட்டுக் கார் ஏறி மெரீனா பீச்சை அடைந்தார்.

சாவியைக் கண்டதும் கலைஞர் ஆச்சரியத்துடன் 'ஏன் வந்தீர்கள்?' என்று கேட்டார்.

சாவி சிரித்துக்கொண்டே தின்பண்டங்களை அனைவருக்கும் விநியோகித்து விட்டு அங்கேயே அமரப் போனார். சாவியை எல்லோரும் சேர்ந்து துரத்தாத குறையாக 'என்ன இது! இப்போது நீங்கள் வரவேற்பை விட்டுவிட்டு வரலாமா? முதலில் அங்கே போய்ச் சேருங்கள்' என்று அனுப்பி வைத்தார்கள்.

ஒருமுறை சாவி தினமணி கதிர் ஆசிரியர் குழுவினரை அழைத்துக் கொண்டு எடிட்டோரியல் டிஸ்கஷனுக்காக பெங்களூர் போயிருந்தார். சேஷாத்ரிபுரத்தில் ஒரு ஹோட்டலில் சாவியும் குழுவினரும் தங்கியிருந்தார்கள். கப்பன் பூங்கா புல் தரையில் அமர்ந்து பத்திரிகைக்கான விஷயங்கள் பற்றி நாள் முழுதும் விவாதித்தார்கள்.

'அன்று மாலை பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் கலைஞர் பேசுகிறார்' என்பதைக் கேள்விப்பட்ட சாவி அந்தக் கூட்டத்துக்குப் போய் கலைஞரின் பேச்சைக் கேட்பது என்று முடிவு செய்தார்.

அன்று கலைஞர் அழகுத் தமிழில் மிக அருமையாகப் பேசி

கூட்டத்தினரைச் சொக்க வைத்தார். கூட்டம் முடிந்து கலைஞர் மேடையைவிட்டு இறங்கி வாயில் நோக்கி நடந்து வந்தபோது சாவி அங்கே வந்திருப்பதைக் கவனித்து விட்டு 'எப்ப வந்தீங்க?' என்று விசாரித்தார்.

மறுநாள் காலை கலைஞர் சென்னைக்குக் கிளம்புகிறார்.

அன்று அதிகாலை சாவி தங்கியிருந்த சேஷாத்ரிபுரம் ஹோட்டலுக்கு ஒரு கார் வந்து நிற்கிறது. 'கலைஞர் உங்களை அழைத்து வரச்சொல்லி கார் அனுப்பியிருக்கிறார். சென்னைக்கு அவர் கூடவே நீங்களும் காரில் போகிறீர்கள். நண்பர்களிடம் சொல்லிவிட்டுப் பயணமாக வந்து விடுங்கள்'' என்கிறார் வந்தவர்.

பெங்களூரிலிருந்து ஆறு மணி நேரப் பயணம்!

''அந்த ஆறு மணி நேரப் பயணம் கலைஞரின் நகைச் சுவை கலந்த பேச்சின் சுவாரசியத்தில் ஆறு நிமிடங்களாய்ப் பறந்து விட்டது எனக்கு'' என்று பூரித்துப் போகிறார் சாவி.

கலைஞர் அவர்கள் பல விஷயங்கள் குறித்து சாவியிடம் பேசிக் கொண்டே வந்தபோது சாவி அதிகம் பேசவில்லை. முதலமைச்சருடன் பயணம் செய்கிறோம் என்கிற 'த்ரில்' அவரை முழுமையாக ஆட்கொண்டிருந்தது.

''என்ன பேசாமலயே வர்றீங்க?'' என்று கலைஞர் கேட்ட போது, ''ஒரு முதலமைச்சருடன் பயணம் செய்கிறோம் என்கிற அந்த 'த்ரில்'லில் பேச்சு வரவில்லை'' என்றார் சாவி.

கிட்டத்தட்ட சித்தூரை நெருங்கும் போது கலைஞர் அவர்களை சாவி ஒரு கேள்வி கேட்டார்.

''உலகத்தின் மிகப் பெரிய அதிசயமாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?''

''ரேடியோ! எங்கேயோ ஒருவர் பேசுவதை அல்லது

பாடுவதை நாம் வீட்டிலிருந்தபடியே கேட்கிறோம். எந்த இடத்துக்குப் போனாலும் கேட்கிறோம். மலை மீது உயரத்தில் இருந்தாலும் கேட்கிறோம். அதைத்தான் பெரிய அதிசயமாகக் கருதுகிறேன்'' என்றார் கலைஞர்.

''அதே கேள்வியை நான் இன்று இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் அவரைக் கேட்டிருந்தால் 'கம்ப்யூட்டர்' என்று சொல்லியிருப்பாரோ என்னவோ?'' என்கிறார் சாவி.

தன்னால் மறக்க முடியாத பயணம் 'நாகர்கோவில் தி.மு.க. மாநாடு முடிந்ததும் திருவனந்தபுரம் கோவளம் கடற்கரைக்குப் போய் இரண்டு நாட்கள் கலைஞருடன் தங்கிவிட்டு வந்ததுதான்' என்கிறார் சாவி.

''அந்த மாநாட்டுக்கு நான் போயிருந்தேன். அப்போது நான் தினமணி கதிர் ஆசிரியர். எனக்குத் தனி அறை ஒதுக்கி வசதியாகத் தங்கவைத்து மிக அக்கறையோடு கவனித்துக் கொண்டார்கள். மாநாடு முடிந்தபின் கலைஞர், அவரது துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், அமைச்சர் மாதவன், அவரது மனைவி எல்லோரும் திருவனந்தபுரம் அருகிலுள்ள கோவளம் போவதாக திட்டம். நான் சென்னைக்குத் திரும்ப டிக்கெட் வாங்கி இருந்தேன்.

'நீங்கள் சென்னைக்குப் போக வேண்டாம். கலைஞருடன் திருவனந்தபுரம் போகிறீர்கள்' என்று கலைஞரின் உதவியாளர் ஒருவர் வந்து சொல்லிவிட்டுப் போனார்.

கலைஞருடன் பயணம் செய்யும் வாய்ப்பு மீண்டும் கிடைத்தது. கோவளத்தில் தனித்தனி குடில்களில் தங்குவதற்குப் பக்காவாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தினமும் காலையிலும் மாலையிலும் கடற்கரை மணலில் அமர்ந்து கலை, அரசியல், இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்.

இயற்கை எழில் மண்டிக் கிடந்த சுகமான சூழ்நிலை அது. நாங்கள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து சற்று தூரத்தில் ஒரு தென்னை மரம் மிகத் தாழ்வாக வளைந்து கடல் நீரை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் காட்சி எங்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

பல வருடங்களுக்குப் பிறகு கலைஞர் ஒருநாள் என்னை அறிவாலயத்துக்கு அழைத்துச் சென்று அந்தக் கட்டிடத்தை எனக்குச் சுற்றிக் காட்டினார். பிறகு தமது அறைக்கு அழைத்துப் போய்ச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். அந்த விசாலமான அறைச் சுவர் முழுதும் வியாபித்திருந்த இயற்கைக் காட்சி அழகில் நான் லயித்திருந்தேன். கோவளத்தில் கண்டு களித்த கடற்கரைத் தோற்றம் போன்றே அந்தப் படம் அமைந்திருந்தது. தாழ்வாக வளர்ந்திருந்த தென்னை, கிட்டத்தட்ட அது மாதிரியே. இந்த வியப்பு அடங்குவதற்குள், 'கோவளத்தில் நாம் பார்ப்போமே ஒரு காட்சி, அதுபோல இருக்கிறதல்லவா? இது அந்த இடமேதான். அந்தச் சாய்ந்த தென்னை மரம் கூட அப்படியே தெரிகிறது, பாருங்கள்' என்று கூறினார் கலைஞர். கோவளத்தில் தங்கியிருந்த அந்த இனிய நாட்களைப் பற்றி எண்ணுகிறபோது நெஞ்சம் இனிக்கிறது'' என்கிறார் சாவி.

கலைஞரின் நகைச்சுவை எப்போது எந்த வடிவில் வந்து வெடிக்கும் என்பது தெரியாது.

சென்னை ஜெமினி மேம்பாலத்தின் கீழே உள்ள பெரிய தூண் முகப்பில் வைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையில் இருந்த மூக்குக் கண்ணாடி, கையில் இருந்த புத்தகம் இரண்டையும் காணோம். இதைப் பார்த்த சாவி கலைஞரைச் சந்தித்தபோது, 'ஜெமினி மேம்பாலம் தூணில் உள்ள அண்ணா சிலையில் புத்தகத்தையும் காணோம். கண்ணாடியையும் காணோமே' என்றார்.

அமைதியாகக் கேட்ட கலைஞர், 'அப்படியா? அண்ணா கையில் புத்தகம் இல்லையா? பார்த்தீர்களா?' என்று கேட்டார்.

'பார்த்தேன். இல்லை' என்றார் சாவி.

'புத்தகம் இல்லாதபோது மூக்குக் கண்ணாடி எதற்கு?' என்று மறு கேள்வி போட்டு சாவியைக் குபீரெனச் சிரிக்க வைத்து விட்டார் கலைஞர்.

சாவியின் அறுபதாவது பிறந்த நாள் விழா சென்னை ஏ.வி.எம். திருமண மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. கலைஞர் அவர்கள் அந்த விழாவுக்குத் தலைமையேற்க ஒப்புக் கொண்டிருந்தார்.

ஆனால், விழா நாளன்று காலை 'சற்று உடல்நலக் குறைவால் கலைஞர் அவர்கள் கலந்து கொள்ள இயலாத நிலை' என்று சாவி அவர்களுக்கு ஒரு செய்தி கிடைத்தது. மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளான சாவி உடனே கலைஞருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

'திரிபுரா காங்கிரஸ் மாநாட்டின்போது சுபாஷ் சந்திர போஸுக்கு 104 டிகிரி காய்ச்சல். ஆனால் அந்த முடியாத நிலையிலும் காரில் ஊர்வலமாகச் சென்று மாநாட்டில் கலந்து கொண்டார். தங்களுக்கு உடல்நிலை சரியில்லையென்றாலும் விழாவில் எப்படியாவது வந்து கலந்து கொண்டாக வேண்டும்' என்று அக்கடிதத்தில் நட்புரிமையுடன் எழுதியிருந்தார்.

அன்று மாலையில் நடைபெற்ற விழாவுக்குக் கலைஞர் வந்துவிட்ட போதிலும் மிகுந்த சோர்வுடன் காணப்பட்டார். பேசும்போது 'இன்று எனக்கு வயிற்றுப் போக்காக இருந்தது. ஒரே இடத்தில் தொடர்ந்து இருக்க முடியாத நிலை. சாவி ஒரு கடிதம் எழுதி அதில் திரிபுரா மாநாட்டில் சுபாஷ்

சந்திர போஸ் காய்ச்சலுடன் மாநாட்டில் கலந்து கொண்டதைக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் நேதாஜிக்கு அன்று என்னைப்போல் வயிற்றுப்போக்கு இல்லை என்பதை சாவி கருத்தில் கொள்ள வேண்டும்' என்று சொன்னதும் விழாவுக்கு வந்திருந்தவர்கள் அத்தனை பேரும் எழுப்பிய சிரிப்பொலி அடங்க வெகு நேரமாயிற்று.

சாவி அவர்களின் மாப்பிள்ளை ராமதாஸ் மஸ்கட்டில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்தபோது நடுவில் பம்பாயில் நேர்ந்த விமான விபத்தில் உயிரிழந்த செய்தி பேரிடியாக சாவி குடும்பத்தினரைத் தாக்கியது. அப்போது சாவி அமெரிக்காவில் இருந்தார். இந்தச் செய்தியைக் கேட்டதும் கலைஞர் அவர்கள் திருமதி சாவிக்கு ஆறுதல் சொல்லி துக்கம் விசாரித்ததோடு மட்டுமல்லாமல் முரசொலியில் ஒரு பக்கம் நெஞ்சுருகி எழுதியிருந்த கடிதம் ஒரு இலக்கியமாகவே அமைந்திருந்தது.

'அந்த உணர்ச்சிபூர்வமான கட்டுரை என் சோகத்தில் பாதியைக் குறைத்து விட்டது' என்கிறார் சாவி.

சாவிக்கு இருதய பைபாஸ் அறுவை சிகிச்சை நடைபெற்று முடிந்து வீட்டுக்கு வந்து ஓய்வில் இருந்தபோதும் தமக்கு நடந்த ஆபரேஷன் சமாசாரத்தை கலைஞருக்குத் தெரியப்படுத்தவில்லை.

அந்த ஆபரேஷன் குறித்து குமுதத்தில் சாவி எழுதிய கட்டுரையைப் படித்த பிறகுதான் கலைஞருக்கு விஷயம் தெரியவந்தது. அன்றே சாவி அவர்களின் வீட்டுக்கு ஆற்காடு வீராசாமி மற்றும் தி.மு.க. நண்பர்களுடன் வந்து உடல்நலம் விசாரித்தார். 'ஏன் எனக்கு முன்பே தகவல் சொல்லவில்லை' என்று உரிமையோடு கோபித்துக் கொண்டார்.

'கலைஞர் என்னை வந்து பார்த்தது எனக்கு மிகுந்த ஆறுதலாயிருந்தது. நான் அவருக்கு சிரமம் தர விருப்பப்

படாததால்தான் சொல்லி அனுப்பவில்லை. ஆனால் அவரோ கட்டுரையைப் படித்துவிட்டு தாமாகவே என்னைப் பார்க்க வந்தது கண்டு நான் நெகிழ்ந்து போனேன். கலைஞர் பேச்சுக் கிடையில் 'உங்களைப் பார்த்தால் ஹார்ட் ஆபரேஷன் ஆனவர் போலவே தெரியவில்லை. (சில வாரங்களுக்கு முன்புதான் ஆபரேஷன் ஆகியிருந்த) குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கைப் பாருங்கள். இதயத்தை ஜாக்கிரதையாகக் கையில் தாங்கிப் பிடித்துக் கொண்டு எவ்வளவு கவனமாக நடக்கிறார், தெரியுமா?' என்று சொல்லி ஜெயில்சிங் நடப்பதைப் போலவே நடந்து காட்டினார்.

'கலைஞர் நடந்து காட்டிய அந்தக் காட்சி இப்போதும் என் கண்முன் தெரிகிறது' என்கிறார் சாவி.

ஒரு நாள் சாவி கலைஞரைப் பார்க்கப் போயிருந்தார். கலைஞர் மூன்றாவது முறையாக முதலமைச்சர் பதவி ஏற்றிருந்த சமயம் அது.

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணா அவர்களால் அழைக்கப்பட்ட வ.ரா. அவர்களிடம் கலைஞர் நிறைந்த மதிப்பு வைத்திருந்தார். வ.ரா. காலமாகி விட்டபின் அவரது மனைவி மிகுந்த சிரமதசையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். இதுபற்றி சாவி கலைஞருக்கு ஞாபகப்படுத்தி 'அந்த அம்மாளுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

'சரி; இப்போதே போய் அந்த அம்மாளிடம் ஒரு அப்ளிகேஷன் எழுதி வாங்கி வாருங்கள். ஆயிரம் ரூபாய் பென்ஷன் தர ஏற்பாடு செய்கிறேன்' என்றார் கலைஞர்.

உடனே புறப்பட்டுப் போய் அப்ளிகேஷன் எழுதி வாங்கி வந்து கலைஞரிடம் கொடுத்தார் சாவி.

அந்த நிமிஷமே பென்ஷனுக்கு உத்தரவு போட்டு விட்டார் கலைஞர்.

கலைஞரின் நெஞ்சுக்கு நீதி, குறளோவியம் இரண்டையுமே சாவி தினமணி கதிரில் வெளியிட்டார். நெஞ்சுக்கு நீதி சில வாரங்கள் குமுதத்தில் வெளிவந்து பின்னர் சில காரணங்களால் நின்று போனபோது, ஒரு பத்திரிகையில் வந்த அந்தத் தொடரை தம் பத்திரிகையில் வாங்கிப் போடுவது பண்பான செயல் ஆகாது என்று சாவி கருதினார். ஆயினும், சாவி 'நான் கதிரில் மீதியை வெளியிடுகிறேன்' என்று முன் வந்தது கலைஞரின் மீது அவர் கொண்டிருந்த நட்பின் ஆழத்துக்கு எடுத்துக்காட்டு என்றே சொல்ல வேண்டும்.

''கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' கட்டுரை பாதியில் நின்று போனபோது அதை தினமணி கதிரில் வெளியிட முன்வந்தது பற்றி பொதுஜன அபிப்ராயம் பலவாறு இருந்தது. எனினும் அதைத் துணிந்து வெளியிட்டவர் சாவி'' என்று பிரபல விமரிசகர் சுப்புடு 'சாவி மணி விழா' மலரில் எழுதிய கட்டுரையில் பாராட்டி இருக்கிறார்.

குறளோவியத்துக்கு கலைஞரின் பேனாவும் கோபுலு அவர்களின் தூரிகையும் அமைத்த கூட்டணி கதிரின் விற்பனையை உயர்த்தியது உண்மை.

கலைஞர் அவர்கள் ஒரு நாள் சாவியை போனில் அழைத்து, ''பேசி ரொம்ப நாளாச்சு. எப்படி இருக்கிறீர்கள்?'' என்று விசாரித்தார்.

'கால் வலிதான். வீங்கிப் போயிருக்கிறது' என்றார் சாவி.

''அப்படியா? அதற்கு ஒரு தைலம் இருக்கிறது. அதை வாங்கிப் பூசுங்கள்'' என்றார் கலைஞர்.

பத்து நாட்களுக்குப் பின் முதல்வர் கொடுத்தனுப்பிய

மூட்டு வலி எண்ணெயைக் கொண்டு வந்த கார் டிரைவர், 'ஐயா கொடுத்துட்டு வரச் சொன்னாங்க' என்று தெரிவித்து விட்டுப் போனார்.

சாதாரணமாக உரையாடிக் கொண்டிருந்தபோது 'கால் வலி' என்று சொன்னதை அவ்வளவு அக்கறையாக கவனத்தில் வைத்து, பாண்டிச்சேரி போயிருந்தபோது அந்த எண்ணெயை ஞாபகமாக வாங்கி வந்து கொடுத்த கலைஞரின் அன்பு சாவியை நெகிழ வைத்தது. டெலிபோனில் நன்றி சொன்னபோது, 'பாண்டிச்சேரி போயிருந்தேன். இந்த எண்ணெய் நல்லது என்று சொன்னார்கள். உங்கள் கால் வலி நினைவு வந்தது. உடனே வாங்கி வந்தேன்'' என்றார் கலைஞர்.

மிகச் சமீபத்தில் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு சாவிக்கு பெசன்ட் நகரில் ஒரு வீட்டுமனை ஒதுக்கியது. ஆனால் அதில் சில சட்டச் சிக்கல்கள் இருந்ததால் கலைஞரிடம் போய் 'இந்தச் சிக்கல்களை விரைவாக விலக்கிக் கொடுத்தால் இந்த வயதான காலத்தில் சின்னதாய் ஒரு வீடு கட்டிக் கொண்டு அமைதியாக ஓய்வெடுப்பேன்' என்றார் சாவி.

'உங்களுக்கு என்ன வயதாகிறது?' என்று கேட்டார் கலைஞர்.

'எண்பத்தைந்து' என்றார் சாவி.

'இந்த வயதில் உங்களுக்குச் சின்ன வீடு கேட்கிறதா?' என்று கலைஞர் கேட்டதும் சாவி குபீரென்று சிரித்து விட்டார்!

உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களையும் நட்புக்கு சாவியைப் பொறுத்தவரை கலைஞரைத் தவிர வேறு உதாரணம் இல்லை.

''இப்படி ஒரு முறையல்ல; இரண்டு முறை எனக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்திருக்கிறார் கலைஞர்'' என்கிறார் சாவி.

---

# 40. கதிர் ஆசிரியர் யார்?

தினமணி கதிரில் சாவி வேலைக்குச் சேர்ந்தபோது அதன் ஆசிரியராகத்தான் சேர்ந்தார். ஆனால் பல மாதங்களாகியும் ஆசிரியர் சாவி என்று அவர் பெயரைப் பத்திரிகையில் வெளியிடாமலேயே காலம் கடத்தி வந்தார்கள். கேட்டால் பொருந்தாத சமாதானங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தது நிர்வாகம். சாவிக்கு இது மிகுந்த வேதனையைத் தந்தது. கோபம் பொங்கி வந்தபோதிலும், நிதானம் இழக்காமல் பொறுமையாக இருந்தார். நிர்வாகம் இதோ அதோ என்று சால்ஜாப்பு சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் 'ஆசிரியர்: சிவராமன்' என்று மட்டும் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்தது.

தினமணி அலுவலகத்தில் சிவராமன் கோஷ்டி தனக்கு எதிராகச் செயல்பட்டு வருவது சாவி அவர்களுக்குத் தெளிவாகவே தெரிந்து போயிற்று. ஆனாலும் பொறுத்தவர் பூமி ஆள்வார் என்கிற தத்துவத்தைக் கடைப்பிடித்தார் சாவி.

''நான் தினமணி கதிர் எடிட்டராக வருவது ஆசிரியர் சிவராமன் அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது உறுதியாகத் தெரிந்தது. முடிந்தபோதெல்லாம் என் செயல்பாடுகளுக்கு அவர் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே இருந்தார். சிவராமன் அவர்களின் அறிவாற்றலிலும் அரசியல் ஞானத்திலும் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. 'ஹிண்டு' ரகுநாதய்யருக்கு ஒப்பான அறிவாளி அவர் என்பதால் அவரிடம் மிகுந்த மதிப்பும்

மரியாதையும் வைத்திருந்தேன். ஆனால் சந்திரன்கூட தூரத்தில் இருந்து பார்க்கும் போதுதான் அழகாயிருக்கும். கிட்டத்தில் நெருங்கினால் கரடுமுரடாகத்தான் இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும். சிவராமனிடம் நெருங்கிப் பழகியபோதும் அப்படித்தான் உணர்ந்தேன். என் விஷயத்தில் அவர் ஒரு சட்டாம்பிள்ளை போல் நடந்து கொண்ட முறை எனக்குப் பிடிக்கவில்லை.

ஆசிரியர் சிவராமன் விருப்பத்துக்கு மாறாக என் பெயரை இம்ப்ரிண்ட்டில் போடுவதற்கு தைரியமில்லாததால்தான் 'இதோ அதோ' என்று பகவான்தாஸ் கோயங்கா சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடித்துக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகவே தெரிந்தது.

இதற்கிடையில் சிவராமன் அவர்கள் தான் தினமணியில் எழுதி வரும் 'கணக்கன்' கட்டுரைகள் அப்படியே தினமணி கதிரிலும் வெளியாக வேண்டும் என்று கருதினார். அதிகாரப் பூர்வமான ஆசிரியராக நான் அங்கீகரிக்கப்படாதவரை சிவராமன் கட்டுரைகளை நிராகரிக்கும் அதிகாரம் என்னிடம் இல்லை.

'தினமணி' நாளிதழுக்கு அந்தக் கட்டுரைகள் மிகப் பொருத்தமானவையே. நானேகூட அந்தக் கட்டுரைகளை ஆர்வத்தோடு படிப்பதுண்டு. ஆனால் அவ்வளவு கனமான விஷயங்களை கதிர் வாசகர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதால் அவற்றை வாசகர்கள் தலையில் கட்டுவதை நான் விரும்பவில்லை.

என் விருப்பத்திற்கு மாறாகவே நான் அக்கட்டுரைகளைத் தொடர்ந்து பிரசுரிக்க வேண்டியதாயிற்று. கதிர் வாசகர்களும் அதைப் படிக்க வேண்டும் என்பது சிவராமன் ஆசை. 'எப்படி இதை நிறுத்துவது' என்பது பற்றி நான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த சமயம் ஒருநாள் பி.டி.கோயங்கா (சின்னவர்) என்னைக் கூப்பிட்டனுப்பினார். 'காஞ்சிபுரத்தில் நமது ஏஜெண்டுகள்

மீட்டிங் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். சர்க்குலேஷன் மானேஜர் திருமதி டேனியல் தலைமையில் அக்கூட்டம் நடைபெறும். நீயும் அங்கே போய் தினமணி கதிர் பற்றி ஏஜெண்டுகள் என்ன கருத்து சொல்கிறார்கள் என்று அறிந்து வா' என்றார்.

காஞ்சிபுரம் கூட்டத்துக்குச் சுற்றுப்புற ஊர்களிலிருந்து பல ஏஜெண்டுகள் வந்திருந்தனர். வந்தவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு ''ஐயா, இந்தக் கணக்கன் கட்டுரைகளைப் போடாதீங்க. அதை யாரும் படிக்கறதில்லை'' என்றார்கள்.

''உங்கள் கருத்தை அந்த அம்மாவிடம் (மிஸஸ். டேனியல்) சொல்லுங்கள். என்னிடம் சொன்னால் போதாது'' என்று அவர்களிடம் சொன்னேன்.

கணக்கன் கட்டுரைகளை வாசகர்கள் விரும்பவில்லை என்று ஏஜெண்டுகள் சொல்வதாக அந்த அம்மாள் குறிப்பு எழுதிக் கொண்டு போய் பி.டி.கோயங்காவிடம் சொல்லி இருக்கிறார்.

மறுநாளே பி.டி.கோயங்கா என்னை அழைத்து 'கணக்கன் கட்டுரையை நிறுத்தி விடு' என்றார். நான் நிறுத்தி விட்டேன்.

சில நாட்கள் கழித்து வேறொரு விதமாக சிவராமன் தலையீடு ஆரம்பமாயிற்று. 'தினமணி'யில் அவர் எழுதும் தலையங்கங்களை தினமணி கதிரில் வெளியிட வேண்டிய புது நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பகவான்தாஸ் கோயங்கா என்னைப் பார்க்க விரும்புவதாக ஜெனரல் மானேஜர் டி.கே.டி. என்னை கோயங்கா அறைக்கு அழைத்துச் சென்றார். கோயங்கா அன்று தலையங்கம் பற்றிப் பிரஸ்தாபித்து 'என்ன சொல்கிறாய்?' என்று கோபம் வராமலே கோபமாகப் பேசினார். நான் பொறுமை இழந்து விட்டேன். ''இதோ பாருங்கள். தினமணி கதிருக்கு நான் தான் எடிட்டர். எது போட வேண்டும், எது கூடாது என்பதை முடிவு செய்ய வேண்டியவன் நான். தினமணி நாளேட்டில்

வெளியான தலையங்கங்களை நான் கதிரில் போடுவதற்குத் தயாராயில்லை'' என்று கண்டிப்பும் கறாருமாகச் சொல்லி விட்டேன். என் உத்தியோகத்துக்குச் சீட்டு கிழிந்து விடும் என்றே பலரும் எதிர்பார்த்தார்கள். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் என்ன நடந்தது தெரியுமா ? டி.கே.டி. அறையை விட்டு அப்பால் போனதும் கோயங்கா என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே எழுந்தார். எழுந்தவர் என் முதுகில் தட்டிக் கொடுத்து 'போய் உன் வேலையைப் பார்' என்றார்.

அடுத்த வாரமே தினமணி கதிரில் இம்ப்ரிண்ட்டில் 'ஆசிரியர் : சாவி' என்று அச்சிடப்பட்டிருந்தது.''

அந்த அனுபவத்தை என்னிடம் சொல்லிப் பெருமூச்சு விடும் சாவி, 'என்னால் என்றுமே மறக்க முடியாத நாள் அது' என்கிறார்.

# 41. இடுக்கண் களைந்த கலைஞர்

கலைஞரின் ஆட்சியைக் கடுமையாக விமரிசித்து தினமணி நாளேட்டில் அவ்வப்போது தலையங்கக் கட்டுரைகள் வெளியாவது உண்டு. இது கலைஞருக்குச் சற்று எரிச்சலை ஏற்படுத்தி இருந்தது. அதை ஒரு வகையான கோபம் என்று கூடச் சொல்லலாம். அப்போதெல்லாம் சாவி அவர்கள்தான் கலைஞர் அவர்கள் திருப்தி அடையும் வகையில் சமாதானம் பேசி விட்டு வருவது வழக்கம்.

கலைஞர் அவர்களின் ஆட்சி மாறி எம்.ஜி.ஆர். தலைமையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைந்தபோது எம்.ஜி.ஆர். படத்தை தினமணி கதிர் அட்டையில் போட வேண்டும் என்று நிர்வாகம் சாவியிடம் கேட்டுக் கொண்டது. ஸ்பெஷல் ஆபீசர் ராமகிருஷ்ணன் எம்.ஜி.ஆர். படத்தைக் கதிர் அட்டையில் வெளியிட வேண்டும் என்பதில் ரொம்பக் குறியாக இருந்தார். சாவியிடம் நைச்சியமாகப் பேசி காரியத்தைச் சாதிக்கப் பல உபாயங்களைக் கையாண்டார்.

''அட்டையில் யார் படத்தைப் போடுவது என்பது அப்பத்திரிகையின் ஆசிரியருக்குள்ள உரிமை. அதில் யாரும் தலையிடுவதை நான் விரும்பவில்லை. தினமணி கதிர் அட்டையில் எம்.ஜி.ஆரின் படத்தை நான் வெளியிட மாட்டேன். என்னையும் மீறி அப்படி ஒருவேளை அவர் படம் கதிரில் வெளியாகுமானால் அதற்கடுத்த வாரம் நான் கதிர் ஆசிரியராக இருக்கமாட்டேன்'' என்று ராமகிருஷ்ணனிடம் கண்டிப்பும் கறாருமாகச் சொல்லி விட்டார் சாவி.

'எம்.ஜி.ஆர். படத்தை அட்டையில் வெளியிட வேண்டும்' என்று நிர்வாகமும் தொடர்ந்து சாவி அவர்களுக்குப் பல்வேறு முனைகளிலிருந்து நிர்ப்பந்தம் தந்து கொண்டே இருந்தது. இதில் மிகவும் தீவிரம் காட்டியவர் ஸ்பெஷல் ஆபீசர் ஆர்.ராமகிருஷ்ணன்.

''இதோ பாருங்கள்! எத்தனை முறை யார் மூலம் வந்து கேட்டாலும் என் பதில் ஒன்றேதான். நான் ஆசிரியராக இருக்கும்வரை தினமணி கதிர் அட்டையில் எம்.ஜி.ஆரின் படம் வராது'' என்று ஒரே அடியாக மறுத்து விட்டார் சாவி.

இதற்கிடையில் சாவி அவர்கள் தம் குடும்பம் தொடர்பான ஒரு முக்கிய வேலையாக அமெரிக்கா செல்ல வேண்டியதாயிற்று. தாம் ஊரில் இல்லாதபோது சூழ்ச்சி நடக்கும் என்பது சாவிக்குத் தெரியாததல்ல. ஆனாலும் அவர் அமெரிக்கா போக வேண்டிய கட்டாயம் இருந்ததால் புறப்பட்டுச் சென்றார்.

எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் சிறப்பு அதிகாரி ராமகிருஷ்ணன் அவர்களிடம் சொல்லி அனுமதி பெற்ற பிறகே சாவி அமெரிக்கா போனார். திரு. ராமகிருஷ்ணனும் எந்த ஆட்சேபனையும் சொல்லாமல் சந்தோஷமாகவே அனுப்பி வைத்தார்.

இதுதான் தக்க தருணம் என்று எண்ணி சாவி ஊரில் இல்லாததைப் பயன்படுத்திக் கொண்டு தினமணி கதிர் அட்டையில் எம்.ஜி.ஆர். படத்தைப் போட நிர்வாகம் முடிவு செய்துவிட்டது. அதே சமயம் கூடவே சாவி அவர்களையும் பதவியிலிருந்து நீக்கிவிடுவது என்றும் முடிவு எடுத்தது. சாவி ரிடயர் ஆகவேண்டிய வயதைக் கடந்து, மேலும் இரண்டாண்டுகள் ஆகிவிட்டதால் அதையே ஒரு சாக்காகச் சொல்லி அவரைப் பதவியிலிருந்து நீக்கி இருப்பதாக வீட்டுக்குக் கடிதம் அனுப்பி விட்டார்கள்.

சாவி தினமணி கதிரிலிருந்து வெளியேற்றப்பட்டதற்கு எம்.ஜி.ஆர். அட்டைப்பட விவகாரம்தான் ஒரே காரணம் என்று சொல்லத் தேவை இல்லை.

தான் ஊரில் இல்லாத சமயத்தில் தமக்குக் குழி பறித்துக் கொண்டிருக்கும் கைங்கர்யம் நடந்து கொண்டிருப்பது அமெரிக்கா வில் இருந்தபோது சாவிக்குத் தெரியவில்லை. இதற்குள் இங்கே சென்னையில் 'சாவி தினமணி கதிரிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்' என்ற செய்தி வேகமாகப் பரவி கலைஞர் அவர்களின் காதுக்கும் எட்டியிருக்கிறது.

செய்தியைக் கேள்வியுற்ற கலைஞர் அவர்கள் திருமதி சாவி அவர்களுக்குப் போன் செய்து 'அவர் வந்தால் கவலைப் படாமல் இருக்கச் சொல்லுங்கள். நான் வேறொரு ஏற்பாடு செய்திருக்கிறேன். சாவி சென்னை வந்ததும் நானே அவரோடு பேசுகிறேன்' என்று சொல்லியிருக்கிறார்.

சாவி டெல்லி வழியாகத் திரும்பியதால், டெல்லி வந்து இறங்கியதும் அவரது நெருங்கிய நண்பரும் எழுத்தாளருமான திரு. பி.எஸ்.ரங்கநாதன் (கடுகு) அவர்கள் சாவியிடம் விஷயத்தை முன்கூட்டியே தெரியப்படுத்தி விட்டார். சாவிக்கு இது சற்று அதிர்ச்சி தந்த போதிலும் ஒரேயடியாய்க் கலங்கிப் போய் விடவில்லை. இம்மாதிரியான சோதனைகளும் வேதனைகளும் சாவிக்குப் புதிதல்லவே!

சென்னை விமான நிலையத்திலிருந்து காரில் கிளம்பி அண்ணாநகர் வந்து வீட்டுக்குள் காலடி வைத்த அதே தருணத்தில் டெலிபோன் ஒலிக்கவே சாவியே ரிஸீவரை எடுத்துப் பேசினார். மறுமுனையில் கலைஞர்!

''கதிர் சமாசாரம் அம்மா சொன்னாங்களா? கவலைப் படாதீங்க. 'குங்குமம்' என்ற பெயரில் புதிய பத்திரிகை ஒன்று தொடங்க முடிவு செய்திருக்கிறோம். அதுபற்றி நாளை காலை மாறன் உங்கள் வீட்டுக்கு வந்து பேசுவார்'' என்றார்.

அந்த வினாடியில் சாவி அவர்கள் மகிழ்ந்து போனார்

என்பதை விட நெகிழ்ந்து போனார் என்றுதான் சொல்ல வேண்டும்.

'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு'

என்ற குறள் வாக்கியப்படி உண்மையான நட்புக்கு இதைவிடச் சரியான உதாரணமாக வேறொன்றைச் சொல்லிவிட முடியாது.

மறுநாள் காலை முரசொலி மாறன் அவர்கள் தம்முடைய நண்பர் மோகன்தாஸுடன் சாவி அவர்களின் இல்லத்திற்கு நேரில் வந்து தாம் தொடங்கப் போகும் புதுப் பத்திரிகை 'குங்குமம்' பற்றி நீண்ட நேரம் பேசிவிட்டு 'நீங்கள்தான் அதன் ஆசிரியர்' என்று சொல்லிவிட்டுப் போனார்.

# 42. குங்கும நாட்கள்

கலைஞர் அவர்கள் வாக்களித்த படியே சாவியை ஆசிரியராகக் கொண்டு 'குங்குமம்' வார இதழ் விரைவிலேயே தொடங்கப்பட்டது. அதைக் கட்சி சார்புப் பத்திரிகையாக இல்லாமல் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் குங்குமம் இதழின் ஆசிரியர் பொறுப்பு சாவி அவர்களுக்குத் தரப்பட்டது. தி.மு.க. சார்பாக ஒரு தலைப்பட்சமான செய்திகள், கட்டுரைகள் ஏதும் குங்குமத்தில் வரக்கூடாது என்பதில் சாவி கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டார். அதேபோன்று தம்முடைய தெய்வ பக்தி, நம்பிக்கை போன்றவற்றைக் குங்குமத்தில் நுழைய விடக் கூடாது என்பதிலும் எச்சரிக்கையாக இருந்தார்.

பத்திரிகையின் பெயர் 'குங்குமம்' என்றிருந்ததால் முதல் இதழின் அட்டையில் ஒரு பெண்ணின் நெற்றியில் அவளுடைய தாய் குங்குமப் பொட்டு இடுவது போல (தாயின் வலது கரம் மட்டும் தெரியும்) புகைப்படம் எடுத்து அதையே அட்டைப் படமாக வெளியிட்டார். புகைப்படம் எடுக்கப்பட்டபோது அந்த வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டிருந்த காஞ்சி சங்கராச்சாரியார் படமும் சின்னதாக அந்தப் புகைப்படத்தில் இடம் பெற்று விட்டது. இது மிகவும் எதேச்சையாக நேர்ந்ததே தவிர குங்குமம் முதல் இதழில் காஞ்சிப் பெரியவரின் படம் வர வேண்டும் என்று சாவி திட்டமிடவும் இல்லை. அந்த எண்ணத்தில் அந்தப் புகைப்படம் எடுக்கப்படவும் இல்லை.

குங்குமம் முதல் இதழ் வெளியான ஒரு வாரத்துக்குள் கலைஞரிடமிருந்து சாவிக்கு அழைப்பு வந்தது. சாவி போயிருந்தார். சாவியைக் கண்டதும் கலைஞர் அவர்கள் தம் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து சாவியிடம் தந்து 'இது பற்றி என்ன நினைக்கிறீங்க?' என்று கேட்டார்.

திரு. ஏ.வி.பி.ஆசைத்தம்பி கலைஞருக்கு எழுதியிருந்த நீண்ட கடிதம் அது. 'குங்குமம் முதல் இதழில் காஞ்சி சங்கராச்சாரியாரின் படம் எப்படி இடம் பெறலாம்?' என்றும் தி.மு.க.வின் கொள்கைக்கு மாறாக அட்டைப்படம் அமைய எப்படி அனுமதித்தீர்கள்?' என்றும் கோபமாகக் கேட்டிருந்தார்.

சாவி நடந்ததை நடந்தபடியே கலைஞருக்கு விளக்கம் தந்தார். 'அந்தப் படம் எதேச்சையாக அட்டையில் இடம் பெற்று விட்டதே தவிர, அதில் உள்நோக்கம் எதுவும் இல்லை' என்று தன்னிலை விளக்கமளிக்கவும் 'சரி, நீங்கள் போகலாம்' என்று கலைஞர் சொல்லவும் அத்துடன் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

சாவி அவர்கள் குங்குமம் பத்திரிகையின் ஆசிரியரான சமயமும் ஆனந்த விகடனை விட்டு மணியன் விலகியதும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் அமைந்துவிட்டது.

ஒருநாள் மணியன் சாவி அவர்களுக்குப் போன் செய்து "'இதயம்' என்ற பெயரில் ஒரு பத்திரிகை தொடங்க விருப்பம். ஆனால் அந்தப் பெயர் ஏற்கனவே ஆற்காடு வீராசாமி அவர்களால் பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தாங்கள்தான் அவரிடம் எனக்காகப் பேசி அந்தப் பெயரை வாங்கித் தர வேண்டும். அதற்கான விலையை கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்றார்.

சாவி இதுபற்றி திரு. வீராசாமி அவர்களிடம் பேசினார். ஆனால் அப்பெயரைத் தர வீராசாமி அவர்கள் மறுத்து விட்டார்.

மணியனிடம் இதைத் தெரிவித்த சாவி ''இதயம் என்ற பெயர் இல்லாவிட்டால் என்ன? நீங்கள்தான் 'இதயம் பேசுகிறது' என்ற தலைப்பில் பயணக் கட்டுரைகளை எழுதி வருகிறீர்களே, அந்தப் பெயரைக் கொண்டே பத்திரிகையைத் தொடங்கலாமே, ஏற்கனவே பிரபலமான பெயரல்லவா அது!' என்ற யோசனையை வெளியிட்டார்.

''இதயம் பேசுகிறது என்ற பெயர் ஒரு பத்திரிகைக்கு நீளமான பெயராக இருக்காதா?' என்றார் மணியன்.

''முதலில் அப்படித் தோன்றலாம். ஆனால் அந்தப் பெயரே போகப் போகப் பழகிவிடும்'' என்றார் சாவி.

சாவியின் 'குங்குமம்' – மணியனின் 'இதயம் பேசுகிறது' 'சபாஷ், சரியான போட்டி' என்பதுபோல், தமிழ் வாசகர் களிடையே ஒரு பெரிய எதிர்பார்ப்பு உருவானது. குங்குமம் இதழுக்குப் பல ஊர்களிலிருந்து ஏஜெண்டுகள் அனுப்பிய டெபாசிட் பணமே பல லட்சங்களைத் தாண்டியது.

''ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் பிரதிகளுக்கு மேல் ஆர்டர் குவிந்து கொண்டே போயிற்று. அப்போது மணியன் 'ஹிந்து' பத்திரிகையில் தம் பத்திரிகை பற்றிப் பெரிதாக விளம்பரம் செய்து கொண்டார். அதைவிடக் கொஞ்சம் அதிகமாகவே 'குங்குமம்' இதழுக்கு ஆர்டர் வந்திருந்தும் நாங்கள் போட்டி போட்டுக் கொண்டு விளம்பரம் ஏதும் செய்யவில்லை'' என்கிறார் சாவி.

ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இருந்தபோது கலைஞர் அவர்கள் தாமாக முன்வந்து தன் திறமையில் நம்பிக்கை வைத்து ஒரு பத்திரிகையின் பொறுப்பைத் தந்திருக்கையில் அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற முனைப்புடன் சாவி செயல்பட்டார். அதன் பயனாக, குமுதம், ஆனந்த விகடன் இரண்டுக்கும் அடுத்து குங்குமம் என்று சொல்லும் அளவுக்கு குங்குமத்தின் விற்பனை அதிகரித்தது.

குங்குமம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த நேரத்தில், சாவியின் நெருங்கிய நண்பரும் டெல்லி ரிலையன்ஸ் நிறுவனத்தின் உயிர் நாடியுமான திரு. பாலு அவர்கள் ஒரு ஆசை விதையை சாவியின் உள்ளத்தில் ஊன்றினார்.

பாலு அவர்கள் டெல்லி அரசியல் உயர் மட்டத்திலும் அதிகாரிகள் மத்தியிலும் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்த காலம் அது. சாவியை வைத்து ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்ற ஆவல் அவருக்கு நீண்ட காலமாகவே இருந்து வந்தது. குங்குமம் தொடங்கப்பட்டு விட்டதால் சாவியை வைத்துப் பத்திரிகை நடத்தும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டார். ஆனாலும் திடீரென்று ஒருநாள் அவர் சாவிக்குப் போன் செய்து ''ஏன், நீங்க உங்க பேர்லயே ஒரு மாதப் பத்திரிகை நடத்தக்கூடாது? நான் அதற்கான எல்லா உதவிகளையும் – பொருளாதார உதவி உட்பட – செய்யத் தயார்'' என்றார்.

''நான் இப்போது குங்குமம் பத்திரிகையின் ஆசிரியர். பத்திரிகையும் பரபரப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது. மாறன் அவர்கள் என்னை கௌரவமாக நடத்திக் கொண்டிருக்கிறார். அப்படியிருக்க சொந்தப் பத்திரிகை, அது மாதப் பத்திரிகைதான் என்றாலும் அதற்கெல்லாம் இப்போது என் சிந்தனையில் இடமில்லை'' என்று கூறி மறுத்து விட்டார்.

ஆனாலும் பாலு விடுவதாயில்லை.

''கலைஞரிடம் பேசி அனுமதி பெற்று நடத்தலாமே. மாதப் பத்திரிகைக்கு மறுப்பு சொல்ல மாட்டார். தைரியமாகக் கேட்டுப் பாருங்கள். எல்லா உதவிக்கும் நான் இருக்கிறேன்'' என்று சாவிக்குக் 'கீ' கொடுத்தார் டில்லி பாலு.

அப்புறம் சில நாட்களுக்குப் பின்னர் டில்லி பாலு சென்னைக்கு வந்தபோது அவரும், அவரது நண்பர் ஆடிட்டர் குமார் (அ.இ.அ.தி.மு.க. எம்.பி.யாகவும் மத்திய அமைச்சராகவும்

இருந்து சமீபத்தில் காலமாகிவிட்ட அதே ஆடிட்டர் குமார்தான்) அவர்களும் சாவியின் வீட்டுக்கு வந்தார்கள்.

மாதப் பத்திரிகை தொடங்குவது பற்றி ரொம்ப நேரம் சாவியோடு விவாதித்தார்கள். பின்னர் 'மோனா' என்ற பெயரில் மாத நாவல் பத்திரிகை தொடங்குவதென்று முடிவாயிற்று.

சாவி மறுநாளே கலைஞர் அவர்களைச் சந்தித்து 'மோனா' மாத இதழ் பற்றி விவரமாகச் சொல்லி அந்தப் பெயரில் தான் சொந்தமாக மாத இதழ் நடத்துவதற்கான •அனுமதியும் பெற்று விட்டார்.

'குங்குமம்' பத்திரிகையில் பல புதுமைகளைப் புகுத்தி வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்த நேரத்தில் ஒருநாள் எழுத்தாளர்கள் சுப்பிரமணிய ராஜுவும், பாலகுமாரனும் சாவியைக் காண குங்குமம் அலுவலகத்துக்கு வந்தார்கள். 'குங்குமம் பத்தோடு பதினொன்றாகத்தானே இருக்கிறது? உங்கள் பத்திரிகையில் என்ன புதுமை பண்ணிக் கிழித்து விட்டீர்கள்' என்றெல்லாம் பேசி சாவியைச் சீண்டி விட்டார்கள். இருவருமே சாவிக்கு நெருக்கமானவர்கள்தான். அதனால் உரிமையோடு பேசி இருக்கிறார்கள்.

''பாலா, ராஜு... வாரப் பத்திரிகை நடத்துவது நீங்க நினைக்கிற மாதிரி அத்தனை எளிதல்ல'' என்றார் சாவி.

அவர்களிருவரும் தங்கள் வாதத்துக்கு அழுத்தம் கொடுத்துப் பேசியதும் சாவி அவர்களுக்கு ஒரு யோசனை உதித்தது. சட்டென ஒரு முடிவெடுத்து அவர்களிடம் சொன்னார்:

''இத பாருங்க... ஒரு மாசம் டைம் தருகிறேன். குங்குமம் இதழை ஒரே ஒரு வாரம் நீங்க தயார் பண்ணிக் காட்டுங்க. நான் கொஞ்சமும் தலையிட மாட்டேன். செய்கிறீர்களா?'' என்று சவால் போல் கேட்டார்.

''ஓ! சான்ஸ் கொடுத்துப் பாருங்க. செய்கிறோமா இல்லையா பாருங்க'' என்றனர் இருவரும்.

ஒரு மாதத்துக்குப் பின் வரப்போகும் ஒரு குறிப்பிட்ட இதழை அவர்கள் தயாரிப்பதென்று முடிவாயிற்று. ஒப்பந்தப்படி அவர்களும் குறிப்பிட்ட இதழைத் தயாரித்து முடித்தனர்.

''சரி; ஒரு மாசம் டைம் கொடுத்தேன். ஒரு இஷ்யூ பண்ணியிருக்கீங்க. அடுத்தடுத்து வாரா வாரம் பத்திரிகை வந்தாகணும். சிறப்பாகவும் புதுப்புது அம்சங்களோடும் வரவேண்டும். முடியுமா? எவ்வளவு சிரமம் என்று இப்போது புரிகிறதா?'' என்று கேட்டார்.

தமிழ்ப் பத்திரிகை உலகில் ஆசிரியராக உள்ள ஒருவர், வெளியிலிருந்து இரண்டு பேரை அழைத்து 'ஒரு வாரம் நீங்கள் பத்திரிகையின் ஆசிரியராக இருங்கள்' என்று வாய்ப்பு கொடுத்து உற்சாகப்படுத்திய முதல் ஆசிரியர் சாவி அவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

''அப்புறம்தான் 'குமுதம்' இந்தப் பாணியைப் பின்பற்றிப் பல பிரமுகர்களை அழைத்து, குமுதம் இதழ் தயாரிக்கும் வாய்ப்பை வழங்கியது என்பதை நானே சொல்லிக் கொள்ளக் கூடாது'' என்கிறார் சாவி.

இந்தக் காலகட்டத்தில்தான் மாதப் பத்திரிகையுடன் வார இதழ் ஒன்றும் தொடங்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கினார் டில்லி பாலு. சாவியும் அதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். 'மோனா' மாத இதழ் தொடங்கி லாபகரமாகப் போய்க் கொண்டிருந்ததால் பாலுவின் யோசனையை அசை போட்டுப் பார்த்தார் சாவி.

''எத்தனை நாளைக்குத்தான் இப்படியே மற்றவர்களுக்காக

உழைத்துக் கொண்டிருப்பது? தமக்கே சொந்தமாக ஒரு பத்திரிகை இருப்பது நல்லதுதானே? பிற்காலத்தில் தம்முடைய இரண்டு பிள்ளைகளுக்கும் அது உதவியாக இருக்குமே'' என்று எண்ணினார் சாவி.

சாவி என்ற தம்முடைய பெயரையே பத்திரிகைக்குச் சூட்டி வார இதழாக வெளியிட முடிவு செய்தார்.

ஒருநாள் கலைஞரைச் சந்தித்து தனது சொந்தப் பத்திரிகை ஆசையைத் தெரிவித்து கலைஞரின் அனுமதியோடும் வாழ்த்துக்களோடும் 'சாவி' பத்திரிகையைத் தொடங்கினார்.

# 43. சொந்தப் பத்திரிகைகள்

டெல்லி நண்பர் திரு. பாலுவின் இடைவிடாத தூண்டுதலாலும், ஊக்கத்தாலும் ஓய்வு பெற வேண்டிய வயதில் சொந்தமாகப் பத்திரிகை தொடங்கினார் சாவி. 'உழைத்தது போதும்... ரிடையர் ஆகி விடலாமா?' என்று யோசிக்கும் வயதில் ஒரு இளைஞனுக்குரிய ஆர்வத்தோடும் சுறுசுறுப்போடும் இருபதாண்டு காலம் அதை வெற்றிகரமாக நடத்தினார்.

பெரிய அளவில் இல்லாமல் குறைந்த பக்கங்களோடுதான் மே மாதம் ஆறாம் தேதி 1979 அன்று சாவி முதல் இதழ் தோன்றியது. விலை வெறும் எழுபத்தைந்து பைசா மட்டுமே. முதல் இதழ் மூன்று லட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தபோதிலும் அடுத்தடுத்து வெளியான இதழ்களின் விற்பனை படிப்படியாகக் குறைந்து கொண்டே போயிற்று.

அதிக பக்கங்கள் கொண்ட ஒரு கனமான பத்திரிகை யையே வாசகர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட சாவி அடுத்த வாரமே பக்கங்களை அதிகரித்து, விலை யையும் ஏற்றி வாசகர்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வகையில் மாற்றி அமைத்தார்.

இதனால் 'சாவி' இதழ் விற்பனை வாரா வாரம் ஏறிக் கொண்டே போனதால் விற்பனை முகவர்கள் அனுப்பி வைத்த டெபாசிட் தொகை ஏழரை லட்சம் ரூபாயைத் தாண்டியது. பண பலம், பார்ட்னர் பலம் இரண்டும் சேரவே சொந்தமாக

ஆஃப்செட் அச்சு எந்திரம் வாங்கும் அளவுக்கு சாவிக்கு தைரியம் பிறந்தது.

அப்போது சென்னை அமைந்தகரையில் 'அருண்' ஹோட்டல் கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் சாவி அலுவலகம் இயங்கி வந்தது. பூஜை போட்ட முதல் நாளிலிருந்தே சாவி இதழோடு நெருங்கிப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

வாரத்தில் சில மணி நேரங்களில் 'சாவி' இதழை அச்சடித்து முடித்து விடும் அந்த ஆஃப்செட் மெஷின் மற்ற நேரங்களில் 'சோம்பேறி'யாகவே உறங்கிக் கிடக்கும். அதற்கு முழு நேர வேலை தரவேண்டும் என்கிற நோக்கத்தில் இன்னும் சில பத்திரிகைகளையும் தொடங்கி நடத்த முடிவு செய்தார்.

இன்றைய 'ஜூனியர் விகடன்' போன்ற புலனாய்வு பத்திரிகை களுக்கெல்லாம் முன்னோடி என்று சொல்லக்கூடிய 'விஸிட்டர் லென்ஸ்' பத்திரிகையைத் தொடங்கினார். புதிய பத்திரிகைகளைத் தொடங்கி அவற்றின் பொறுப்பைத் தனித்தனி ஆசிரியர்களிடம் ஒப்படைத்து அவர்களின் உரிமையில் தலையிடாமல் அதே சமயம் அந்தப் பத்திரிகைகளின் தரத்தைக் கண்காணித்து வந்தார்.

'சுஜாதா' என்ற சினிமா மாத இதழுக்கு திரு. பாரி வள்ளலையும் விசிட்டர் லென்ஸுக்கு ஆனந்த் அவர்களையும் ஆசிரியராக்கினார்.

அந்தக் காலகட்டத்தில் சாவி அவர்கள் தொடங்கிய இன்னொரு வித்தியாசமான பத்திரிகை 'திசைகள்'. அதன் ஆசிரியர் பொறுப்பை எழுத்தாளர் மாலனிடம் ஒப்படைத்தார். தமிழகத்தின் மாவட்டங்கள் தோறும் திசைகளுக்கென நிருபர்களை நியமித்துப் பல்வேறு இடங்களிலிருந்தும் சுவையான கட்டுரைகள் வந்து சேர ஏற்பாடு செய்யப்பட்டது.

சாவி நிறுவனத்திலிருந்து வெளியான மற்றொரு பத்திரிகை 'பூவாளி'. இது ஆங்கிலத்தில் வெளியாகும் 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' பத்திரிகை போன்ற தோற்றமும் பொருளடக்கமும் கொண்டது.

ஒவ்வொரு மாதமும் வெளியான பூவாளியின் ஒவ்வொரு இதழும் ஒரு பொக்கிஷம் என்று சொல்லலாம். உலகின் முக்கிய வார, மாத இதழ்களையெல்லாம் தேடிப் பிடித்து அந்த இதழ்களை ஒவ்வொன்றாகப் புரட்டி அவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கதை கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. பூவாளியின் விலை பத்து ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கென மொழி பெயர்ப்பாளர்கள் குழு ஒன்றையும் சாவி உருவாக்கினார். அவர்களுக்கு இந்த வெளிநாட்டுப் பத்திரிகைகளைப் பிரித்துக் கொடுத்து, யார் யார் எதை எதை மொழி பெயர்த்துத் தர வேண்டும் என்று பட்டியலிட்டு பின்னர் உரிய நேரத்தில் அவற்றை வாங்கி அச்சுக்குக் கொடுக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்.

'பூவாளி' எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை.

'திசைகள்' பத்திரிகையும் சரியாக நடக்காததால், எல்லாமாகச் சேர்ந்து பெரும் நஷ்டத்தில் கொண்டு விட்டது.

இப்படி, பத்திரிகைகளைத் தொடர்ந்து நஷ்டத்தில் நடத்திக் கொண்டிருக்க சாவி க்ரோர்பதியா என்ன?

'சாவி', 'மோனா' இதழ்களைத் தவிர மற்ற எல்லா துணைப் பத்திரிகைகளையும் நிறுத்த வேண்டியதாயிற்று. பத்திரிகைகளால் ஏற்பட்ட நஷ்டம், ஆஃப்செட் மெஷின் வாங்குவதற்காக சிண்டிகேட் வங்கியில் வாங்கிய கடன் இந்த இரண்டினால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்க சாவி பெரும் பாடுபட வேண்டியதாயிற்று.

சாவி அவர்களோடு நானும் ஒரு முறை ஜப்பான் சென்றிருந்தேன். டோக்கியோ டய்ச்சி ஓட்டலில் தங்கியிருந்த நாங்கள் சாப்பாட்டுக்காக நாயர் உணவு விடுதிக்குப் போயிருந்தோம்.

மிகச் சின்ன இடம்தான். ஆனாலும் புகழ்பெற்ற இந்திய உணவு விடுதி அது. அதை நடத்தி வந்த நாயர்ஸான் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர். அவரது நாயர் என்ற பெயரோடு 'ஸான்' என்ற மரியாதைச் சொல்லையும் சேர்த்து அழைப்பார்கள் (காந்திஜி, நேருஜி என்று ஜி சேர்த்துச் சொல்வதைப் போல்).

சாவியின் அறிமுகம் கிடைத்தபோது நாயர்ஸான் மிகவும் மகிழ்ந்தார். ஓரிரு தினங்களிலேயே இருவரும் நட்பால் இணைந்து விட்டார்கள். நாயர்ஸான் வாழ்க்கை ஒரு வீர வாழ்க்கை. இந்திய விடுதலைப் போரைத் தென் கிழக்கு ஆசிய மண்ணிலிருந்து' நடத்திய விடுதலைப் போராட்ட வீரர்களான ராஷ் பிஹாரி போஸ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போன்ற தலைவர்களோடு இணைந்து விடுதலைப் போருக்கு வியூகம் அமைத்தவர். ஜப்பான் வாழ் இந்தியர்களில் அவர்தான் மூத்தவர். திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்தியப் பிரதமராக ஜப்பான் போயிருந்தபோது இந்திய சங்கத்தின் தலைவராக இருந்த நாயர்ஸானைத் தனியாகச் சந்தித்துப் பேசினார் என்பது நாயர்ஸானுக்குள்ள தனிச்சிறப்பு.

நாங்கள் ஜப்பான் சென்றிருந்தபோது நாயர்ஸான் தம்முடைய சுயசரிதையை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருந்தார். அப்புத்த கத்தைத் தமிழிலும் வெளியிட வேண்டும் என்று நாயர்ஸான் விரும்பியபோது அப்பணியைச் செவ்வனே செய்து முடிக்க அவர் தேர்ந்தெடுத்தது சாவி அவர்களைத்தான். சாதனைகள் நிறைந்த நாயர்ஸான் வாழ்க்கையைத் தமிழில் மொழி பெயர்க்கும் அரிய வாய்ப்பு எனக்குத் தரப்பட்டது.

சாவி சாருடன் நண்பராகிவிட்ட நாயர்ஸான் சாவியின் உழைப்பு, நேர்மை, நாணயம், திறமை மீது பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

சாவியின் ஜப்பான் விஸிட் இந்த முதல் சந்திப்போடு நின்று விடவில்லை. அந்த நாட்டின் அகல நீளத்தை அடிக்கடி அளந்து கொண்டிருந்தார். அடுத்த சில ஆண்டுகளில் 'சாவி' இதழ்

பொருளாதாரப் பிரச்னையில் சிக்கியபோது சாவி அவர்கள் திடீரென ஒருநாள் கிளம்பி ஜப்பான் போனார். நாயர்ஸானைச் சந்தித்து தம்முடைய பொருளாதார நெருக்கடியை விளக்கினார்.

எல்லாவற்றையும் உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்ட நாயர்ஸான் 'உங்களுக்கு இப்போது எவ்வளவு பணம் தேவைப் படும்?' என்று மட்டுமே கேட்டார்.

'இரண்டு லட்சம்' என்றார் சாவி.

'இவ்வளவுதானே? நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள். பணம் உங்களுக்கு வந்து சேரும்' என்றார் நாயர்ஸான்.

சாவி சென்னை வந்து சேருவதற்குள் திருவனந்தபுரத்தில் நாயர்ஸானின் வங்கிக் கணக்கிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் சாவியின் சென்னை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப் பட்டிருந்தது.

பத்திரம் இல்லை. கையெழுத்து இல்லை. 'எப்போது, எப்படித் திருப்பிக் கொடுப்பீர்கள்?' என்ற கேள்விகள் எதுவுமே இல்லை. இதுவல்லவா நட்புக்கு இலக்கணம் என்று நான் அதிசயித்துப் போனேன்.

பணம் வந்து சேர்ந்த அடுத்த மாதத்திலிருந்தே மாதா மாதம் பத்தாயிரம் ரூபாயாக நாயர்ஸானின் திருவனந்தபுரம் வங்கிக் கணக்கில் தவறாமல் கட்டிக் கடனைத் தீர்த்து விட்டார் சாவி.

இப்போது கூட நாயர்ஸான் அவர்களின் நினைவுகள் பற்றி நான் பேச்செடுத்தால் சில நிமிடங்கள் அப்படியே நெகிழ்ந்து உருகிப் போய் விடுவார் சாவி.

சிண்டிகேட் வங்கியில் வாங்கிய கடன் வட்டியோடு வெகு வேகமாக ஏறிக் கொண்டிருந்தது. வாங்கிய மெஷின் பழசாகிப் போனதால் நல்ல விலைக்கு விற்கவும் முடியவில்லை.

கடன் வெள்ளம் தலைக்கு மேல் போய்க் கொண்டிருந்த நேரத்தில் சாவி அவர்களைக் கரையேற்றி விட்டவர் இந்தியன் வங்கியின் அன்றைய தலைவர் திரு. எம்.கோபாலகிருஷ்ணன் அவர்கள்தான்.

சாவியின் நாணயத்திலும் நேர்மையிலும் நம்பிக்கை வைத்து பத்து லட்சம் ரூபாய் கடன் 'சாங்ஷன்' செய்தார். சிண்டிகேட் வங்கியில் வாங்கிய பத்து லட்சம் ரூபாய் கடன் வட்டியும் வட்டிக்குக் குட்டியுமாகச் சேர்ந்து பதினெட்டு லட்சம் ரூபாயாக வளர்ந்திருந்தது. இந்தியன் வங்கி தந்த பத்து லட்சத்தை உடனடியாக சிண்டிகேட் வங்கியில் கட்டியபோது மேலும் எட்டு லட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்று கெடுபிடி செய்தார்கள்.

''இந்த விஷயத்தில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி என்னை இந்தக் கடனிலிருந்து மீட்டவர் திரு. மூப்பனார் அவர்கள் தான்'' என்று நன்றிப் பெருக்கோடு சொல்கிறார் சாவி.

''பொருளாதார ரீதியாக என் சங்கடங்களைத் தீர்த்தவர்கள் மூன்று பேர். அந்த வகையில் நான் யாராவது மூன்று பேருக்கு சிலை வைக்க வேண்டுமென்றால் நாயர்ஸான், கோபாலகிருஷ்ணன், மூப்பனார் ஆகியவர்களுக்குத்தான் வைக்க வேண்டும்'' என்று சாவி அடிக்கடி சொல்வதுண்டு.

கலைஞர் அவர்களுக்கு சாவி ஏற்கெனவே நிரந்தரமாக ஒரு சிலையை அமைத்து விட்டார் என்பது ஊரறிந்த ரகசியம். அந்தச் சிலை சாவியின் இதயத்தில் நிரந்தரமாக இடம் பெற்றுள்ளது. கால வெள்ளத்தால் அழிக்க முடியாதது.

---

# 44. நட்புக்கு இலக்கணம்

**சா**வி – கலைஞர் நட்பின் பல்வேறு பரிமாணங்களை முந்தைய அத்தியாயம் ஒன்றில் நான் விவரமாகச் சொல்லி இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் சிகரமான ஒரு சம்பவத்தை இங்கே சொல்லியாக வேண்டும்.

*13.05.1992* தேதியிட்ட சாவியில் திரு. பி.கிருஷ்ணராஜ் என்கிற வாசகர் எழுதியிருந்த ஜோக் ஒன்றை சாவி அவர்கள் அட்டைப் படமாக வெளியிட்டார்.

முதலிரவு அறை. மணமகன் அந்தக் கட்டிலில் அமர்ந்திருக்க, மணப்பெண் நிர்வாணமாக மணமகன் முன் நின்று கொண்டிருப்பாள். அந்தப் பெண்ணின் உருவம் நிர்வாணமாகக் காட்டப்பட்டிருந்தபோதிலும் ஆபாசம் இல்லாத அளவுக்கு முதுகுப் பக்கம் மட்டுமே காட்டப்பட்டிருக்கும். கையில் பால் சொம்பு. இதுதான் ஜோக்குக்கான படம்.

''அத்தைதான் உங்களுக்கு 'ஆடை'யில்லாம பால் தரச் சொன்னாங்க.''

இதுதான் அந்த ஜோக்குக்கான வசனம்.

இந்த அட்டைப் படத்தோடு வெளியான சாவி இதழ் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. வெறும் நகைச்சுவைக்காக போடப்பட்ட இந்த ஜோக் வெளியானதும் 'இது பெண் குலத்தையே அவமானப்படுத்துகிறது. இவ்வளவு முட்டாள்தனமாகவா ஒரு

பெண் நடந்து கொள்வாள்' என்றெல்லாம் மாதர் சங்கங்கள் வரிந்து கட்டிக் கொண்டு எதிர்ப்பு தெரிவிக்க, இப்படிப்பட்ட 'ஆபாச ஜோக்'கை வெளியிட்ட குற்றத்துக்காக ஜெயலலிதா முதல்வராக இருந்த அன்றைய அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின்போது சாவி அவர்கள் கைது செய்யப்பட்டார்.

அன்று மாலை நான் அண்ணாநகரில் சாவி அவர்கள் வீட்டில்தான் இருந்தேன். நான்கு மணி அளவில் ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த சிலர் சாவியின் வீட்டுக்கு எதிரில் கூடி நின்று கோஷங்கள் எழுப்பினார்கள். பின்னர் சங்கப் பிரதிநிதிகள் சிலர் வீட்டுக்குள் வந்து சாவி அவர்களைச் சந்தித்தபோது 'இது வெறுமனே ஒரு நகைச்சுவை துணுக்குதான். பெண்களை கேவலப்படுத்தும் நோக்கம் எனக்கில்லை' என்று சாவி விளக்கியபோதிலும் அவர்கள் சமாதானம் அடையவில்லை.

'உங்களைப் போன்ற தேர்ந்த மூத்த பத்திரிகை ஆசிரியரிடமிருந்து இப்படியொரு அட்டைப்படத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் வேதனை' என்று அவர்கள் சொன்னதும் 'வாருங்கள்' என்று அவர்களையும் அழைத்துக் கொண்டு வாசலுக்கு வந்து வெளியே கோஷம் போட்டவர்களிடம் 'உள்நோக்கம் ஏதுமின்றி இயல்பாகப் போடப்பட்ட இந்த ஜோக் உங்கள் உணர்வுகளைப் பாதித்திருக்கிறது என்றால் ஐ ஆம் ஸாரி' என்று வெளிப்படையாக வருத்தம் தெரிவித்தார். அப்புறம்தான் அவர்கள் கலைந்து சென்றார்கள். அத்துடன் முடிந்திருக்க வேண்டிய விவகாரம் அது. ஆனால் முடியவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. உயர் அதிகாரிகள் இறங்கி வந்தார்கள். சாவி அவர்களையும், அப்போது சாவியில் உதவி ஆசிரியராக இருந்த திரு. ரவி பிரகாஷ், பத்திரிகையை அச்சிட்ட மணி என்பவரையும் கைது செய்து அண்ணா நகர் காவல் நிலையத்துக்குக் கொண்டு போனார்கள். அவர்களைத் தொடர்ந்து நானும் சாவி அலுவலகத்தைச்

சேர்ந்த சிலரும் அங்கே விரைந்தோம்.

சாவி, ரவி பிரகாஷ், மணி மூவரையும் போலீஸார் மாடிக்கு அழைத்துப் போனார்கள். இதற்குள் மாலை மங்கி இருட்டிப் போய் விட்டது. அங்கே மின் விளக்கு, மின் விசிறி எதுவுமே வேலை செய்யாததால் புழுக்கமாக இருந்தது. மாடி ஹாலில் மூவரையும் உட்கார வைத்துவிட்டு எல்லோரும் கீழே வந்து விட்டார்கள். நேரம் ஆக ஆக எனக்குப் பதட்டம் அதிகமானது. போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைவதே அதுதான் எனக்கு முதல் அனுபவம். அங்கு ஒரே கெடுபிடியாக இருந்தது. சாவி அவர்களை மேலே சென்று பார்க்கவும் அனுமதி இல்லை. அப்புறம் அரை மணி நேரத்துக்கெல்லாம் யாரும் எதிர்பாராத அந்த விந்தை நடந்தது!

சர்... சர்... என்று விரைந்து வந்த மூன்று கார்கள் அந்தக் காவல் நிலைய வளாகத்துக்குள் நிற்கவும் மறு வினாடி காரின் கதவுகள் திறக்கவும், முதலில் இறங்கி வந்தவர் கலைஞர் அவர்கள். தொடர்ந்து ஆற்காடு வீராசாமி, மாறன், ஆலடி அருணா, ஆயிரம் விளக்கு உசேன், சில வழக்கறிஞர்கள்.

கலைஞர் அவர்கள் உள்ளே வந்ததும் 'நீ மட்டும்தான் இருக்கியா? என்ன நடந்தது?' என்று என்னைக் கேட்கவும் நான் நடந்ததைச் சொன்னேன்.

போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து 'இப்பவே நான் சாவியைப் பார்த்தாகணும். அவரை எங்கே வச்சிருக்கீங்க?' என்று கேட்டார் கலைஞர். போலீஸார் சரியான பதில் சொல்லாமல் இப்படியும் அப்படியும் ஓடி பாசாங்கு காட்டினார்கள். சிறிது நேரம் பொறுத்துப் பார்த்த கலைஞர் அவர்கள் யாருடைய பதிலுக்கும் காத்திராமல் வேகமாக மாடிப்படிகளில் ஏறி சாவி உட்கார்ந்திருந்த இடத்தை அடைந்தார்கள். கும்பலோடு சேர்ந்து நானும் மேலே போய்விட்டேன். அதுவரை அங்கே இருண்டு கிடந்த விளக்குகள்

பளிச்சென்று எரிய ஆரம்பித்தன. மின் விசிறிகள் சுழல ஆரம்பித்தன. ஏதோ திரைப்படத்தில் பார்ப்பது போலக் காட்சிகள் மாறிக் கொண்டே போயின.

சாவி அவர்கள் அருகில் அமர்ந்து சிறிது நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த கலைஞர் 'இதெல்லாம் சாதாரண விஷயம், கவலைப்படாதீங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று தைரியம் கூறிவிட்டு, ஆயிரம் விளக்கு உசேனிடம் தம் சட்டைப் பையில் இருந்து நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து 'இவர்கள் மூவருக்கும் டிபன் வாங்கிக் கொடு' என்றார். தம்முடன் அழைத்து வந்த வழக்கறிஞர்களிடம் சில உத்தரவுகளைப் பிறப்பித்த பிறகே காவல் நிலையத்தை விட்டுப் புறப்பட்டார். எங்கே போனார் தெரியுமா? நேராக சாவியின் வீட்டுக்குப் போய் திருமதி சாவி யிடம் 'ஜாமீனுக்கு ஏற்பாடு செய்து விட்டேன். கொஞ்ச நேரத்தில் வந்திடுவார். கவலைப்படாதீர்கள்' என்று சொல்லித் தேற்றிய பின்புதான் தம் வீட்டுக்குப் போனார்.

இதற்கிடையில் சாவி, ரவி பிரகாஷ், அச்சக மணி மூவரையும் இரவு பத்து மணியளவில் மாஜிஸ்டிரேட் வீட்டுக்கு அழைத்துப் போய் அவரைத் தூக்கத்திலிருந்து எழுப்பி 'ஆபாச ஜோக் போட்டதற்காக இவர்களைக் கைது செய்திருக்கிறோம்' என்று பதிவு செய்தவுடன், வழக்கறிஞர்கள் ஜாமீன் மனு தாக்கல் செய்ய அவர்களை ஜாமீனில் விடுதலை செய்தார் மாஜிஸ்ட்ரேட்.

'சாவி கைது செய்யப்பட்டிருக்கிறார்' என்ற செய்தி கிடைத்ததும் எந்த ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு, ஜாமீனில் எடுக்க முன்னேற்பாடுகளுடன் வழக்கறிஞர்களையும் அழைத்துக் கொண்டு வந்து, தேவையான ஏற்பாடுகளைப் பக்காவாகச் செய்து விட்டு, அங்கிருந்து சாவியின் வீட்டுக்குப் போய், பயந்து கொண்டிருந்த திருமதி சாவியிடம் ஆறுதல் சொல்லி விட்டுப்போன

அந்த உயர்ந்த நட்புக்கு இலக்கணம்தான் கலைஞர். சாவி இன்றளவும் போற்றிக் கொண்டிருப்பது அந்த நட்பு பற்றித்தான்.

பதினெட்டு வருடங்கள், பல்வேறு சோதனைகளுக்கு இடையே 'சாவி' வார இதழைத் தொடர்ந்து சிறப்பாக நடத்திக் கொண்டு வந்தார் சாவி.

நஷ்டம் காரணமாக நடத்த முடியாமல் போனது ஒருபுறம்; அவ்வப்போது ஏற்பட்டு வந்த சில அலுவலகப் பிரச்னைகள் ஒருபுறம். இப்படி எல்லாமாகச் சேர்ந்து 'போதுமே; பத்திரிகையை நிறுத்தி விடலாம்' என்கிற முடிவுக்கு வந்து விட்டார் சாவி. அப்புறம் வெகு விரைவிலேயே 'சாவி' இதழை நிறுத்தியும் விட்டார்.

''என்னிடம் ஊக்கமுடன் உழைத்தவர்கள் திடீரென வேலை இல்லாமல் நிற்பது கண்டு எனக்கு வருத்தம்தான். ஆனால் சில நாட்களிலேயே அவர்களுக்கு வேறு வேலை கிடைத்துவிட்டது. குறிப்பாக ரவி பிரகாஷ் ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவிலும், மதிக்குமார் (கார்ட்டூனிஸ்ட் மதி) தினமணியிலும் சேர்ந்து இன்று நல்ல நிலையில் இருப்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது'' என்கிறார் சாவி.

'சாவி' என்ற பத்திரிகையின் பெயர் உரிமை மட்டும் இவரிடமே இருந்து வந்தது.

'க்வான்டாஸ்' நிறுவன அதிபர் திருவேங்கடமும் அவருடைய பார்ட்னர் திரு. முத்துகிருஷ்ணனும் ஒரு நாள் சாவி அவர்களைச் சந்தித்து ''நீங்களே ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்துவதாக இருந்தால் நாங்கள் 'சாவி' இதழ் உரிமையை விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்புகிறோம்'' என்றார்கள்.

'' 'சாவி' என்கிற பெயரை வைத்துக் கொண்டு இனி நான் என்ன செய்யப் போகிறேன்? எனக்கும் வேலை இல்லாமல்

சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஆகவே நீங்களே எடுத்து நடத்துங்கள்'' என்றார் சாவி.

''சாவி பத்திரிகை உரிமையை வேறு ஒருவருக்குக் கொடுத்து விட்டேன்'' என்று சாவி கலைஞர் அவர்களிடம் போய்ச் சொன்ன போது கலைஞர் சாவியை வன்மையாகக் கண்டித்து, 'அந்தப் பெயரை நீங்கள் விலைக்குக் கொடுத்திருக்கக் கூடாது. ரொம்பப் பெரிய தவறு செய்து விட்டீர்கள்' என்று கோபித்துக் கொண்டார்.

இரண்டாம் தடவையாக சாவி இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தபோது ஒருநாள் அவர் என்னிடம் சொன்னார்:

''ராணி! (என்னை அவர் அழைப்பது அப்படித்தான்) ஐ திங்க் ஐ ஹேவ் ஹேட் எ லாங் இன்னிங்ஸ். ரிடையர் ஆயிடலாம்னு பார்க்கிறேன்.''

வயதுக்கு மீறிய உழைப்பு அவருடையது என்பதை நான் அறிந்திருந்ததால் ''இதைத் தாங்கள் முன்பே செய்திருக்க வேண்டும்'' என்றேன்.

# 45. சாவி வாயால் சபாஷ்!

ஒருவர் எவ்வளவுதான் திறமைசாலியாக இருந்தாலும் அத்திறமை அரங்கேற யாராவது களம் அமைத்துத் தர வேண்டும். 'ஆம்... அப்படித்தான்... வெரிகுட்... தொடர்ந்து செய்...' என்று யாரேனும் ஒருவர் முதுகில் தட்டிக் கொடுக்க வேண்டும். அந்த 'யாரேனும் ஒருவர்' சாவியைப் போன்று வேறு யாராவது இருக்கிறார்களா என்பது வினாக்குறிதான்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நான் சாவி அவர்களோடு நெருங்கிப் பழகி வருகிறேன். அவர் யார் யாரை எப்படியெல்லாம் ஊக்குவித்திருக்கிறார் என்பதைக் கூடவே இருந்து கவனித்திருக்கிறேன் என்றாலும் இந்த நூலை நான் எழுதத் தொடங்கியபோது 'எல்லாவற்றையும் நாமே எழுதிக் கொண்டிருப்பதை விட சம்பந்தப்பட்டவர்களையே கேட்டுப் பார்ப்போமே' என்று தோன்றியது.

சிலரைத் தொடர்பு கொண்டபோது சாவியைப் பற்றிய அவர்களது நன்றி பொங்கும் நினைவுகள் மலையாய்க் குவிந்து போயின.

பானை முழுவதையும் கொட்டிப் பரிமாற இடமில்லை. எனவே பதம் பார்க்க இங்கே சில பருக்கைகள்.

'இந்த இரண்டெழுத்து எழுத்தாளர் எத்தனையோ தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கியவர் என்றாலும் இதை அவராக

என்றுமே சொல்லிக் கொண்டதில்லை. ஆனால் அவரால் வளர்ந்தவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். 'அதுதான் சாவியின் சிறப்பு' என்று கூறும் தொழிலதிபர் டாக்டர் நல்லி குப்புசாமி அவர்கள் ''இன்றளவும் ஒரு எழுத்தாளரின் புத்தகங்களை ஒட்டு மொத்தமாக வாங்கி யாருக்காவது பரிசளிக்கலாம் என்று நினைத்தால், குடும்பத்தார் அனைவராலும் படித்துப் பாதுகாக்கப்படும் புத்தகங்களாக அவை இருக்க வேண்டும் என்று நினைத்தால், நான் முதலில் நாடுவது சாவியின் புத்தகங்களையே'' என்கிறார்.

பலருக்கு உதாரணமாக இருக்க வேண்டுமென்றால் முதலில் அப்படி இருப்பதற்கான தகுதியை ஒருவர் பெறவேண்டும். காலம் கட்டளையிடும் மாற்றங்களுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். சாவி அப்படித் தம்மை முழுமையாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டவர்.

மூத்த பத்திரிகை ஆசிரியரும், கல்கி அவர்களோடு நெருங்கிப் பழகியவருமான பகீரதன் அவர்கள் சாவியின் எழுத்துத் திறமை பற்றிக் குறிப்பிடுகையில், ''அறுபது வருடங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டுப் பத்திரிகை உலகில் கரடுமுரடான தமிழே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. அப்படி கரடுமுரடாக இருந்த தமிழ், தேனினும் இனிய மணிப்பிரவாளமாகப் பொங்கிப் பிரவகித்தது. உள்ளுக்குள் பொருமிக் கொண்டிருந்த தமிழ் மொழி மனம் விட்டு கலீர் கலீர் என்று வாய் விட்டுச் சிரித்தது.

இந்த ரசவாத வித்தையை நிகழ்த்திய 'பிதாமகர்களில்' இன்று எஞ்சியிருப்பவர் நண்பர் சாவி ஒருவர்தான். தமிழ் நடையின் சிற்பிகளில் மிக முக்கியமானவர் சாவி'' என்று சொல்கிறார்.

நீண்ட காலமாக டெல்லியிலேயே இருந்து வரும் திரு. பி.எஸ்.ரங்கநாதன் (கடுகு) எழுதுகிறார்:

''எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் சாவிக்கு நிகர்

யாருமில்லை. எழுத்தாளர்களை 'ஸ்டார்' மாதிரி ஆகச் செய்தவர் அவர். சில சமயம் தகுதிக்கு அதிகமாகவே அவர்களைத் தூக்கி விடுகிறாரோ என்று கூடத் தோன்றும்.

எழுத்தாளர்களுக்கு அவர் அளிக்கும் சிறப்பே தனி. சாவி அவர்களால் எனக்கு நிறைய நண்பர்கள் கிடைத்ததையும் நான் இங்கு சொல்லியாக வேண்டும். அவருக்கு ஏராளமான நண்பர்கள். அவர்கள் அனைவரையும் தமது எல்லா நண்பர்களுக்கும் அவரால் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்க முடியாதுதான். சிலர் விடுபட்டுப் போக வாய்ப்புண்டு. அப்படி விடுபடாதவர்களில் நானும் ஒருவன்.''

'' 'சாவி.' இந்த இரண்டு எழுத்துக்களை வைத்துக் கொண்டு எத்தனை உலகங்களைத் திறந்து காட்டியிருக்கிறார் இந்த மனிதர்'' என்று வியக்கும் 'கல்கி' ஆத்மா அவர்கள் (திரு. சதாசிவம் அவர்களால் 'என் ஆத்மா' என்று பெருமையோடு அழைக்கப்பட்டவர்) ''வாழ்க்கையில் அவர் பட்ட துன்பங்கள் ஏராளம். ஆனால் அவற்றை ஒருபோதும் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் மேல் அவர் சுமத்தியதில்லை. வேதனைகளை மௌனமாகத் தாங்கிக் கொண்டு பிறரை ஊக்குவிக்கும் பணியைப் புன்முறுவலோடு செய்பவர் அவர்'' என்கிறார்.

சாவி மணிவிழா மலரில் எழுத்தாளர் சுஜாதா எழுதியிருப்பதைப் பார்ப்போம்.

''என் போன்ற பல எழுத்தாளர்களுக்கு அவர் மிகுந்த ஆதரவு தந்திருக்கிறார். தன் பத்திரிகையில் தானே ஆதியோடந்த மாக வியாபிக்க மாட்டார். தானே ஒரு சிறந்த எழுத்தாளராக இருந்தும் மற்றவர்களுக்கு அபார சலுகைகளும் சுதந்திரமும் தந்து அவர்களை ஊக்குவிப்பதில் அவர் மிகவும் தனிப்பட்டவர்.''

கவிஞர் நிர்மலா சுரேஷின் அனுபவம் எப்படி?

''கடந்த ஆண்டில் நான் அரபுக் கவிதைகளைத் தமிழில்

மொழி பெயர்த்தபோதுதான் முதன்முதலாக 'சாவி' அலுவலகம் சென்று அவரைச் சந்தித்தேன். பொதுவாக எந்தப் பத்திரிகை அலுவலகத்துக்கும் நான் சென்றதில்லை. அன்று அவர் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த அவசரத்திலும் ஐந்து நிமிடம் ஒதுக்கி என்னோடு பேசினார்.

கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை திறப்பு விழாவுக்காக, சிறப்பு ரயிலில் நூற்றுக்கணக்கானவர்கள் சென்றோம். அப்போது சாவி அவர்களிடம் நான் எழுதிய 'அரபுக் கவிதைக்கு ஆரத்தி' என்ற புத்தகத்தைத் தந்தேன். உடனே திறந்து படிக்க ஆரம் பித்தவர் அவ்வப்போது என்னைப் பாராட்டிக்கொண்டே ஐம்பது பக்கங்களுக்கு மேல் படித்து விட்டார். அனுபவம் மிகுந்த, அந்த எழுத்து ஞானியின் பாராட்டு ஒருபுறமிருக்க, என் வாழ்க்கையில் புத்தகம் கையில் கிடைத்த உடன் பிரித்துப் படிக்கிற ஆர்வத்தை சாவி அவர்களுக்கு முன்னால் ஒரே ஒருவரிடம்தான் கண்டிருக்கிறேன். அவர்தான் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்.

படித்து முடித்ததும் திரு. சாவி அருகில் இருந்த கவிஞர் தமிழன்பனிடம், ''இந்தப் புத்தகத்தைப் படித்தீர்களா? மொழி பெயர்ப்பு என்றே சொல்ல முடியாது. ரொம்ப சரளம்'' என்றார் தேர்ந்த ரசனையுடன். மனம் திறந்து உண்மையை எடுத்துரைக்கும் இந்த நல்ல பண்பை இலக்கிய உலகில் காண்பது அரிது'' என்கிறார் கவிஞர் நிர்மலா சுரேஷ்.

இன்று தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான பாலகுமாரன் அவர்களும் சாவியின் மோதிரக் கையால் குட்டுப்பட்டவரே.

''என் வாழ்க்கையில் ஒரு காலகட்டத்தில் சில வருடங்கள் அவருக்குப் பிரியமானவராய் நெருங்கி அவரைச் சுற்றி வலம் வந்திருக்கிறேன். சாவிக்கு அருகே இருப்பவர்களுக்கு எப்போது நல்ல வாய்ப்பு கொடுக்கப்படும் என்று சொல்ல

முடியாது. திடீரென்று சாவி அரவணைத்துக் கொண்டு அரங்கேற்றுவார். அதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

சாவியினுடைய வெற்றியின் ரகசியம் விரைவு. வெகு விரைவு. அநியாயமான விரைவு. அதே நேரம் அந்த விரைவு செயலினுடைய நேர்த்தியை ஒருக்காலும் குறைத்து விடாது. செயல் விரைவாகவும் இருக்க வேண்டும். அதே நேரம், சீராகவும் இருக்க வேண்டும். யோசித்து இது நல்ல விஷயம் என்று தெரிந்து விட்டால் நான்கு நாட்கள் ஆறப் போட்டு செய்வது என்பது சாவிக்குச் சற்றும் பிடிக்காத விஷயம்.

'சாவி' பத்திரிகை ஆரம்பித்தபோது செய்திகளைக் கட்டுரையாக்கிக் கொடுக்கின்ற சில வேலைகளுக்கு என்னைப் பணித்தார். ஆனால், என்னுடைய எண்ணமெல்லாம் எழுத்தாளராகி, நாவலாசிரியராக மாற வேண்டும் என்பதிலேயே இருந்தது.

தான் வாழ்க்கையில் முன்னேற அதிகம் சிரமப்பட்டதாலோ என்னவோ, மற்றவருக்கு வாய்ப்புக் கொடுப்பதில் சாவி அவர்கள் வள்ளலாகவே இருந்திருக்கிறார். அவரை அண்டியவர்களை மேலே தூக்கி விடுவதில் பெருங்கருணை மிக்கவராகவே வாழ்ந்திருக்கிறார்.

ஒருநாள் சாவி அவர்கள் என்னைப் பார்த்ததும், 'நாவல் எழுத வேண்டும், தொடர்கதை எழுத வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே, உனக்கு ஒரு வாய்ப்புத் தருகிறேன். உடனடியாக அடுத்த வாரம் தொடர்கதை எழுதுவதற்கு ஏற்பாடு செய். ஐந்து வாரங்கள் தொடர்கதையைப் பார்ப்பேன். அந்தத் தொடர்கதை சுவாரசியமாக இருந்தால் மேற்கொண்டு தொடரும். இல்லையெனில் ஆறாவது வாரம் நிறுத்தப்பட்டு விடும். இதற்குச் சம்மதமானால் எழுது' என்று சொன்னார்கள்.

ஏற்கனவே எழுதி வைத்திருந்த ஒரு தொடர்கதையை மறுபடியும் படித்து, மூன்றாம் முறையாகத் திருத்தி எழுதி, முதல் மூன்று அத்தியாயங்களைக் கொண்டு போய்க் கொடுத்தேன்.

படித்துப் பார்த்துவிட்டு, 'புதிதாக இருக்கிறது. விறுவிறுப்பாக இருக்கிறது. நீயே மணியன் செல்வனிடம் கொண்டு போய் அருகே உட்கார்ந்து படம் போட்டு எழுதி வாங்கி வா. படம் சரியாகப் போட்டால் தொடர்கதை பிரகாசமாக இருக்கும். உன்னுடைய மற்ற வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு தொடர்கதையில் கவனம் செலுத்து' என்று சொன்னார்.

நான் சாவியில் முதன்முதலாக எழுதிய தொடருக்குப் பெயர் 'மெர்க்குரிப் பூக்கள்.' அந்தக் கதை கொடுத்த வெற்றி என்னை ஒரு எழுத்தாளனாக நிலை நிறுத்தியது. வெறுமே துணுக்குச் செய்திகளையும், சினிமா பற்றிய கட்டுரைகளையும், நடிக நடிகையரோடு பேட்டிகளையும் எழுதிக் கொண்டிருந்த பாலகுமாரனை, நிருபராகவே பத்திரிகையில் நிலைத்து விடுவோமோ என்று நினைத்துக் கொண்டிருந்த பாலகுமாரனை பளிச்சென்று திசை திருப்பி சாவி எழுத்தாளனாக்கினார்'' என்கிறார் பாலகுமாரன்.

பிரபல எழுத்தாளர் ராஜேஷ்குமாரின் அனுபவம் சற்று வித்தியாசமானது.

''சாவி அவர்களை முதன் முதலாகச் சந்தித்தபோதே ஒரு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொண்டேன்.

அரை மணி நேரம் என்னிடம் இயல்பான நகைச்சுவையோடு பேசிக் கொண்டிருந்த பின் கேட்டார்:

'''சாவி'க்கு ஏதாவது கதைகள் கொண்டு வந்திருக்கிறீர்களா?''

'கொண்டு வந்திருக்கேன் ஸார்.'

நான் கொடுத்த கதைகளை ஆர்வமாய் வாங்கிப் படித்த அவரின் முகத்தில் கோபம் தெரிந்தது. நான் திடுக்கிட்டேன்.

'இந்தக் கதைகள் வேற ஒரு பத்திரிகைக்கு அனுப்பப்பட்டு அவங்க நிராகரிச்சதுதானே?'

எப்படிக் கண்டு பிடித்தார்? குமுதம் என்று எழுதியிருந்த முதல் பக்கத்தைக் கிழித்துவிட்டு வேறு தாளில் 'சாவி' என்று எழுதித்தானே கொடுத்திருந்தேன்!

'சொல்லுங்க ஸார்' என்றார் சாவி.

'ஆமாம் ஸார்' ஒப்புக் கொண்டேன்.

நான் உண்மையைச் சொல்லி விட்டதால் சாவி சட்டென்று கோபம் தணிந்தார்.

'இதோ பாருங்க ராஜேஷ் குமார்! நான் சொல்றதை நல்லா மனசில வாங்கிக்குங்க. யாருக்குமே 'ஸெகண்ட் ஹாண்ட்'னா கொஞ்சம் இளப்பம்தான். இனிமே ஒரு பத்திரிகையிலிருந்து திரும்பி வந்த கதைகளை இன்னொரு பத்திரிகைக்கு அனுப்பும்போது சுத்தமான பேப்பர்ல வேற புதுசா ஒரு பிரதி எடுத்து அனுப்பறது உத்தமம். ஒரு பத்திரிகையில இருந்து திரும்பி வந்த கதையைச் சுலபமா அடையாளம் கண்டுபிடிக்க முடியும். பேப்பர்களோட முனைகள் சுருண்டு, அழுக்காகி, முன்னே குத்தப்பட்ட குண்டூசி ஓட்டைகளோடு அதன் கற்பு பறிபோன விஷயம் தெரிஞ்சு போயிடும். இந்தக் கதைகளைக் கொடுத்துட்டுப் போங்க. நான் படிச்சுப் பார்க்கிறேன். கதை நல்லாயிருந்தா அச்சில் ஏறும். இல்லேன்னா போஸ்ட்மேன் மூலமா உங்க வீட்டுப் படியேறும்' என்றார்.

இப்போதும்கூட எந்த ஆரம்ப எழுத்தாளராவது என்னிடம் யோசனை கேட்கும்போது நான் இந்தச் சம்பவத்தைச் சொல்லாமல் இருப்பதில்லை. இதுவரை நூறு தடவை சொல்லியாயிற்று. அலுக்கவே இல்லை.''

பட்டுக் கத்தரித்த மாதிரி எழுதும் பட்டுக்கோட்டை பிரபாகர் சொல்கிறார்:

''அப்போது அவர் குங்குமத்தில் ஆசிரியர். ஐந்து

சிறுகதைகள் மட்டும் வெளியாகியுள்ள எழுத்தாளன் நான். (அதில் இரண்டு குங்குமத்தில்) நன்றி நவில எலுமிச்சைப் பழத்துடன் அவர் அலுவலகத்தில் நான். அறைக்குள் அவர். கவர்ச்சியான அறைக் கதவுகள் அவரின் வேட்டி கட்டிய கால்களைக் காட்டுகின்றன. உள்ளே போய் தகவல் சொல்லி வெளிவந்த நபர் என்னிடம், 'உங்க கதைகள் நல்லா இருந்ததால போட்டோம். இதுல நன்றி சொல்ல எதுவுமில்லை. தொடர்ந்து எழுதச் சொன்னாரு. அவரைப் பார்க்கணும்னு அவசியமில்லைன்னு சொல்லச் சொன்னாரு' என்றதும் எனக்கு ஏகமாய் ஏமாற்றம். அதன் பிறகு அவர் தனியாக 'சாவி' இதழ் ஆரம்பித்த பிறகுதான் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. அப்போது இந்தச் சம்பவத்தைச் சொன்னேன்.

'அப்படியா!' என்று சிரித்தார்.

நான் எழுதிய இரண்டாவது சிறுகதைக்கே சாவி சாரிடமிருந்து கடிதம் வந்ததில் பிரமித்துப் போனேன்.

'பிரபாகர், உங்கள் எழுத்தில் ஒரு 'பொறி' இருக்கிறது. நிறைய எழுதுங்கள். முன்னுக்கு வர முடியும். வாழ்த்துக்கள்' என்று கைப்பட அவர் எழுதின அந்த முதல் கடிதத்திலிருந்து அதன் பிறகு இன்று வரை அவர் எழுதின பல கடிதங்களையும் பத்திரமாக வைத்திருக்கிறேன். அந்தக் கடிதங்களில் ஒரு தந்தையின் பாசம் இருக்கும். ஊக்குவிப்பு இருக்கும். சுறுசுறுப்பூட்டும் டானிக் கலந்திருக்கும்.

தனது எழுத்துலக பிரவேசத்துக்கு மிகச் சிறந்த பாதை போட்டுக் கொடுத்தவர் சாவி என்பதை நன்றியோடு குறிப்பிடுகிறார் அனுராதா ரமணன்.

''எழுத ஆரம்பித்த புதுசு. சாவி அவர்கள் அப்போது குங்குமத்தில் ஆசிரியராக இருந்தார். நான் மேட்டூரில் இருந்தேன். தொடர்ந்து நாலைந்து சிறுகதைகள் பிரசுரமாகி

இருந்தன. வெளிப் பத்திரிகைகளில்தான். குங்குமத்துக்கு 'பிரண்ட்ஷிப்' என்கிற தலைப்பில் சற்றே பெரிய கதை ஒன்றைத் தபால் வழியாக அனுப்பி வைத்தேன். கிட்டத்தட்ட நாலைந்து மாதங்கள் கிணற்றில் போட்ட கல்லாக கதை இருக்க, சாவி அவர்களுக்கு இதுபற்றி விசாரித்து ஒரு கடிதம் எழுதினேன். உடனடியாக அவரிடமிருந்து பதில் வந்தது. அவர் கைப்பட. நறுக்குத் தெறித்தாற்போல் சிறிய கடிதம்தான். 'உங்களது கதை படித்தேன். மிகச்சிறந்த எழுத்தாளரில் ஒருவராக எதிர்காலத்தில் நீங்கள் திகழப் போகிறீர்கள். இது என் கணிப்பு. கூடிய விரைவில் குங்குமம் இதழில் கதை வெளிவரும். என் வாழ்த்துக்கள்.'

இவ்வளவுதான் கடிதத்தின் விஷயம்.

ஆனால் அந்த வரிகள் என்னை இமயமலை உச்சிக்குக் கொண்டு போய் உட்கார வைத்தது. மறுபடி மறுபடி அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்ப்பேன். வீட்டுக்கு யார் வந்தாலும் அது பற்றிப் பேசாமல் இருக்க மாட்டேன். குழந்தை போல் ஓடிச்சென்று அந்தக் கடிதத்தை எடுத்து வந்து படித்துக் காட்டுவேன்.

'வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி'
'சாவி வாயால் சபாஷ்'

என்னளவில் இரண்டும் ஒன்றுதான். இதுதான் ஆரம்பம். இதற்குப்பின் எத்தனையோ முறை கடிதப் போக்குவரத்து, நேரில் சந்திப்பு. அப்படிச் சந்திக்கும்போதெல்லாம் சொல்ல முடியாத உற்சாகம் நம்மை தொற்றிக் கொள்ளும்.

கதையை விமரிசிப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். அவருக்குப் பிடித்த மாதிரி இல்லாவிட்டால் 'நறுக்'கென சொல்லியும் விடுவார். அதற்காக வருத்தப்படக் கூடாது. ஆனால் ரோசப்பட வேண்டும். மறுபடியும், மறுபடியும் அவர் வாயால் சபாஷ் வாங்கும்போது அன்றுதான் முதல் கதை எழுதிய எழுத்தாளர் போல் உணர்வேன்.

எழுத்தானாலும், சாப்பாடானாலும், சங்கீதமானாலும் அதை பாராட்டி விமர்சிக்க அங்கே ஒரு சாவி வேண்டும். அப்பொழுதுதான் அங்கே களை கட்டும்.

இன்னமும் கூட எந்தப் பத்திரிகையில் நான் எழுதினாலும், 'இந்த எழுத்தை சாவி சார் படிச்சா என்ன சொல்லுவார்' என்று நினைத்துப் பார்ப்பேன்.

எனக்குத் தெரியும். எந்தப் பத்திரிகையில் நான் எழுதினாலும் அவர் படிப்பார். உடனேயே விமரிசிக்க முடியாவிட்டாலும், பக்கத்தில் இருப்பவர்களிடம் படிக்கச் சொல்லிக் கொடுப்பார். அது கள்ளம் கபடமே இல்லாத ரசிக மனம். அந்த மனம் இருக்கும் வரை எங்களைப் போன்ற எழுத்தாளர்களும் சிறப்பாக மதிக்கப் படுவோம்.''

இசை, நடனம், பயணங்கள், கதை என்று பல துறைகளிலும் கால் பதித்து புகழ் ஏணியில் ஏறி வரும் ஸுஜாதா விஜயராகவன் அவர்களைப் பல வகையிலும் ஊக்கம் தந்து உற்சாகப்படுத்தியவர் சாவி.

''எனது 'அரங்கம்' நாவலை முதல் எழுபது பக்கங்கள்போல் ஒரே மூச்சில் எழுதி முடித்த பின் என் மனதில் ஒரு சோர்வு. முழுக்க முழுக்க கர்நாடக இசை பற்றிய இந்த நாவலை யார் பிரசுரிக்கப் போகிறார்கள் என்ற சந்தேகம். அவ்வளவுதான். அப்படியே உள்ளே வைத்து விட்டேன்.

ஒரு வருடத்துக்குப் பிறகு, முதல் நான்கு அத்தியாயங்களை சாவி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். 'படித்துப் பாருங்கள். பிரசுரத்துக்கு ஏற்றதாக இருக்கிறது என்று தோன்றினால் மேற் கொண்டு எழுதுகிறேன்' என்றேன்.

'உங்கள் எழுத்தில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கும் உங்கள் எழுத்தைப் பற்றிய பொறுப்புணர்வு இருக்குமல்லவா? அது போதும்' என்று முடித்து விட்டார்.

ஒருமுறை 'வாரா வாரம் ஏதாவது பொருள் பற்றித் தொடர் எழுதுங்களேன்' என்றார் சாவி.

'குப்பையைப் பற்றி எழுதட்டுமா?' என்று கேட்டேன்.

'சரி எழுதுங்கள். ஆனால் ஒரே பக்கத்துக்குள் விஷயம் அடங்க வேண்டும்' என்று வரம்பு கட்டினார்.

சுருக்கி எழுதும் கலை சும்மா வந்து விடாது என்று எனக்குப் புரிய வைத்ததும் வேண்டாததை வெட்டி எறியவும், சொல்ல வந்ததை சுவாரசியமாகச் சொல்லக் கற்றுக் கொண்டதும் சாவி பயிற்சிக்கூடத்தில்தான்.''

'பத்திரிகைத் துறையில் என் ஈடுபாடு தளர்ந்து போன நேரங்களில் உற்சாக உரமூட்டி என்னை வளர்த்த பத்திரிகையாளர்களில் சாவிக்குத்தான் முதலிடம்' என்கிறார் மெரீனா.

'நான் கூட மறந்துவிட்ட என் ஜோக்குகளையும், அரசியல் கார்ட்டூன்களையும் பல வருடங்கள் கழித்து ரசித்தும் பாராட்டியும் அவர் நினைவு கூர்ந்து சொல்லும்போது எனக்கு வியப்பாக இருக்கும்' என்று சொல்லும் மெரீனா, தாம் சாவியுடன் மதுரையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு விகடன் சார்பாகச் சென்றிருந்த அனுபவத்தை நினைத்துப் பார்க்கிறார்:

''மேடைப் பேச்சுகள் தவிர எத்தனையோ 'சைட் லைட்ஸ்'களில் சாவி என் கவனத்தைத் திருப்பி குறித்துக் கொள்ளச் சொல்வார். ஒரு நிருபருக்கு கை, காது, கண், சிந்தனையெல்லாம் ஒருங்கே செயல்பட வேண்டும் என்பதை சாவியிடமிருந்து நான் அறிந்து கொண்டேன். 'ஒரு பத்திரிகை யாளனுக்கு அப்சர்வேஷன்' மிகமிக முக்கியம். குறிப்பெடுக்க மறந்ததை நினைவில் நிறுத்திக் கொள்ளும் திறன் தேவை. சாவி அதிகமாகக் குறிப்பெடுத்து நான் பார்த்ததில்லை. ''பார்ப்பதையும், கேட்பதையும் 'நமக்குள்ளே' வாங்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் கட்டுரை எழுதும்

போது நடந்தவை வீடியோ படம் போல நமக்குப் பளிச்சிடும்'' என்பார். பயணக் கட்டுரைகளில் இது எனக்கு மிகவும் உதவியாக இருந்தது'' என்று முடிக்கிறார் மெரீனா.

ராணிமைந்தன் என்கிற என்னை சாவி அவர்கள் எப்படி யெல்லாம் ஒரு பத்திரிகையாளனாக உருவாக்கினார் என்பதை நினைக்கும்போது எனக்கே இப்போது வியப்பாக இருக்கிறது. பத்திரிகையின் ஒவ்வொரு அம்சத்தையும் தமக்கே உரிய பாணியில் அவர் எனக்கு உணர வைத்தார்.

ஒருமுறை 'குங்குமம்' இதழுக்காக 'தினந்தோறும் சென்னை நகரில் நடக்கும் பல்வேறு கூட்டங்களுக்குப் போக வேண்டும். பேசுகிறவர்களில் யாராவது சுவையாக ஏதேனும் சொன்னால் அதைக் குறிப்பெடுத்துக் கொண்டு வந்து நாலு வரி 'பளிச்'சென்று தர வேண்டும். இது மாதிரி ஒவ்வொரு வாரமும் ஏழு அல்லது எட்டு செய்திகள் தேவை' என்றார் சாவி.

'பெரிய அரசியல் கூட்டங்களுக்குப் போக வேண்டாம். அவை பற்றித்தான் மறுநாள் பேப்பரில் வந்து விடுமே' என்று அட்வைஸ் வேறு செய்திருந்தார்.

ஹிண்டு நாளிதழில் 'டுடேஸ் எங்கேஜ்மென்ட்ஸ்' பகுதியிலிருந்து நகரில் நடக்கும் சின்னச் சின்னக் கூட்டங்கள் பற்றித் தெரிந்து கொள்வேன். தினமும் ஒரு கூட்டத்துக்குப் போய் உட்கார்ந்திருப்பேன். சில நாட்கள் என் துரதிர்ஷ்டம் ஒரு மேட்டரும் தேறாது. மவுண்ட் ரோடு எல்.எல்.ஏ. கட்டிடம், ராயபுரம், மண்ணடி, அசோக் நகரில் ஒரு வீட்டு மாடி, மயிலாப்பூரில் ஏதாவது ஒரு சந்து என்று மாலை வேளைகளில் சென்னையில் எங்கு வேண்டுமானாலும் நான் இருப்பேன். 'மேட்டர் கிடைக்க வில்லை' என்று ஸாரிடம் சொல்ல முடியாது. 'அப்புறம் நீ என்ன ஜர்னலிஸ்ட்?' என்று கேட்டு விடுவார்.

ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கூட்டங்கள் கூடப்

போனதுண்டு. அலைச்சல் என்றால் அப்படியொரு அலைச்சல். 'இப்படி உடம்பை வருத்திக் கொண்டு எழுதித்தான் ஆக வேண்டுமா?' என்று கூடச் சலிப்பு தோன்றும். 'கொடுத்திருக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு நம்மை நிரூபித்து ஸாரிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும்' என்ற உறுதி அந்தச் சலிப்பைப் போக்கிவிடும்.

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் 'மாலை வேளை', 'மைக்' போன்ற தலைப்புகளில் நான் அப்பகுதியை எழுதி வந்தேன். அந்தப் பயிற்சியால்தான், ஒருவரிடம் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தாலும் எழுதுவதற்கு எதை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

'துணுக்கு எழுது என்பார்; நாடக விமரிசனம் எழுதச் சொல்வார்; இன்று இந்த சினிமாவைப் பார்த்து விட்டு நாளை காலை பட விமரிசனம் என் மேசை மீது இருக்க வேண்டும்' என்பார். பேட்டிக் கட்டுரைகள் எழுதும்போது எதை எதை விட்டுவிட வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பார்.

'உன் மேட்டரை நான் எடிட் செய்தபின் நீ ஒரு தரம் படித்துப் பார். புரியும்' என்பார். கட்டுரைகளுக்கு புகைப்படங்கள் எவ்வளவு அவசியம் என்பதைப் பல உதாரணங்கள் மூலம் வலியுறுத்துவார்.

சில சமயங்களில் எதுவும் பேசாமல் அவர் செய்யும் லே அவுட்களை அருகிலிருந்து கவனித்தாலே போதும். பல நுணுக்கங்கள் தாமாகவே புரியும். இப்படி படிப்படியாக அவர் கற்றுத் தந்த அம்சங்கள் கணக்கிலடங்காதவை. துணுக்கிலிருந்து தலையங்கம் வரை அவர் எனக்குத் தந்த வாய்ப்புகளைத் திரும்பிப் பார்க்கையில் 'அடேயப்பா!' என்று வியப்பாக இருக்கிறது. சாவிதான் எனக்கு 'சாந்தி நிகேதன்' என்று சொல்லிக் கொள்வதில் எவ்வளவு பெருமை!''

# 46. பத்திரிகை அவர் மூச்சு

சென்னை உயர்நீதி மன்றத்தின் மூத்த வழக்கறிஞர்களில் ஒருவரும், நாரத கான சபா செயலாளருமான ஆர்.கிருஷ்ணசாமி அவர்கள் 'என்னையும் ஒரு எழுத்தாளனாக ஆக்கிய பெருமை சாவிக்குத்தான்' என்கிறார்.

'' 'சாவி' என்ற இந்த இரண்டெழுத்துகளில் ஒரு சகாப்தமே அடங்கியுள்ளது. சாவியை சுமார் பதினைந்து ஆண்டுகளாக நெருக்கமாக அறிவேன். சாவியைப் பொறுத்தவரை அவர் ஒரு குழந்தை மனது படைத்தவர். அவர் உள்ளத்தில் வன்மம் கிடையாது. காழ்ப்புணர்ச்சியைக் காண முடியாது. அவரது கோபமும் ஒரு குழந்தைக்குண்டான கோபம்தான். ஒரு உயர்ந்த மனிதர். நட்பென்றால் அதற்காக எதையும் செய்யத் துணிந்தவர். ஆனால் நேர் வழியில்தான். வெளிப்படையாகப் பேசும் குணம் உள்ளவர்.

''ஒரு சமயம் வழக்கின் தன்மைகளைப் பற்றி எங்களிடையே விவாதம் ஏற்பட்டது. அப்போது சாவி கூறினார்:

'இன்றைய நாட்களில் தீர்ப்புகள் யாவும் விலை கொடுத்து வாங்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆகவே உங்களைப் போன்ற வழக்கறிஞர்களுக்கு என்ன வேலை உள்ளது? வழக்காடுவதே வியாபாரமாகப் போகிறது.' உண்மையில் அவர் யாரையும் குறை கூற விரும்பவில்லை. பத்திரிகைகளில் வரும் செய்திகளைப்

படித்து விட்டும், சமுதாயத்தில் பேசப்படும் செய்திகளைக் கேள்விப்பட்டுமே இவ்வாறு அவர் கூறினார்.

'சாவி சார்! மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், உங்களைப் போல் எண்ணம் கொண்டவர்கள் பலர் உள்ளனர். ஆனால் அது உண்மையல்ல. நீதிபதி தம்முடைய நீதிமன்றத்தில், இறைவனின் பிரதிநிதியாகத்தான் இருக்கிறாரே தவிர அவர் தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்குட்பட்டு தீர்ப்புக் கூறுவதில்லை. பல நேரங்களில் தீர்ப்புகள் சட்டத்தின் அடிப்படையில் இல்லாமல் நியாயத்தின் அடிப்படையில் அமைவதும் உண்டு. இதற்கெல்லாம் காரணம் 'மேலே ஒரு நீதிபதி' இருக்கிறார் என்றேன்.

எடுத்துக்காட்டாக ஓரிரு வழக்குகளைப் பற்றி நான் விவரித்தேன். அதையெல்லாம் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர் ''நீங்களே ஏன் இம்மாதிரி வழக்குகளைக் கொண்டு 'சாவி' இதழில் கட்டுரைகள் எழுதக்கூடாது? அவற்றைப் படித்தால் நீதிமன்றங்களின் மேல் மக்களுக்கு உயர்வான எண்ணம் ஏற்படுமே!'' என்றார். இதைப் போல் ஆன்மீகத்திலும் அவரது கருத்து மாறுபட்டதாக இருந்தபோது, நான் எடுத்துச் சொன்ன சில கருத்துக்களை ஏற்று தமது பத்திரிகையில் ஆன்மீக மணம் வீசச் செய்தார்.''

தினமணி நாளிதழில் கார்ட்டூனிஸ்டாகப் புகழ் பெற்று விளங்கும் 'மதி' அவர்கள் ''சாவியின் 'நர்சரி'ப் பள்ளியில் பயின்றவர்களில் நானும் ஒருவன்'' என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

''பொதுவாகவே அவருக்கு கார்ட்டூனிஸ்ட்டுகள் மீது பிரியம் அதிகம். ஒரு கார்ட்டூனுக்குத் தேவையான நுணுக்கங்கள் அத்தனையும் அவருக்கு அத்துபடி! ஐடியாவுக்குத் தகுந்தவாறு லைன்ஸ் இருக்க வேண்டும் என்பார். சில கார்ட்டூன்களுக்கு லைன்ஸ் தடிமனாக இருக்க வேண்டும். சில கார்ட்டூன்களுக்கு

லைன்ஸ் மெலிதாக இருக்க வேண்டும். கோடுகள் மெலிதாக இருக்க வேண்டும் என்பதை 'ஓமப்பொடி லைன்ஸ்' என்பார். கார்ட்டூன் லைன்ஸில் எப்பொழுதும் ஒரு natural flow இருக்க வேண்டும் என்பார். முதலில் அவரது ஒப்புதலுக்காக எனக்குத் தோன்றும் கார்ட்டூன் ஐடியாவை ஒரு rough paperல் வரைந்து காட்டுவேன். பலமுறை அந்த rough copyயையே பத்திரிகைக்கு பயன்படுத்திக் கொள்கிறேன் என்று வாங்கி வைத்துக் கொள்வார். 'இதை நீங்கள் fair செய்தால் தற்போது இருக்கும் இயல்பான அழகைக் கெடுத்து விடுவீர்கள்' என்று fair செய்வதையே தடுத்து விடுவார். அந்த அளவுக்கு நுணுக்கங்கள் தெரிந்தவர். கார்ட்டூனிஸ்ட்டுகள் பிரஷ்ஷைத் தவிர வேறு எதையும் பயன் படுத்தக் கூடாது என்பது அவருடைய கருத்து. அதை இன்றளவும் நான் கடைப்பிடித்து வருகிறேன்.

ஒரு செய்தியை எவ்வாறு display செய்ய வேண்டும் என்பதில் அவருக்கு நிகர் அவரேதான். அவருடைய layout sense அற்புதமானது. லே–அவுட்தான் ஒரு பத்திரிகைக்கு உயிர் என்பார். அந்த அளவுக்கு அதற்கு முக்கியத்துவம் கொடுப்பார். ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு அழகு. லே–அவுட் என்பது ஒரு பத்திரிகைக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்தும் வகையில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை 'சாவி'தான். இன்றும் அந்த அளவு லே – அவுட் திறனை வேறு எந்தப் பத்திரிகையிலும் என்னால் காண முடியவில்லை.''

சாவி கற்றுக் கொடுத்ததையெல்லாம் வேதவாக்காக ஏற்று இன்று ஆனந்த விகடன் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றிருக்கும் நண்பர் ரவி பிரகாஷ் சாவியிடம் பயிற்சி பெற்ற மாணவர்களில் ஒருவர். சாவி இதழில் தான் பணிபுரிந்த காலகட்டங்களில் தனக்கு ஏற்பட்ட ஒவ்வொரு அனுபவமும் எப்படி ஒரு பாடமாக அமைந்தது என்பதையும், பத்திரிகைத் தொழிலை அவர் எப்படி ஒரு தவமாக மேற்கொண்டிருந்தார் என்பதையும் ரவி பிரகாஷ்

நம்மிடம் பகிர்ந்து கொள்ளும்போது சாவி என்கிற பத்திரிகை ஆசிரியரின் பல்வேறு பரிமாணங்கள் நமக்குப் புரிந்து போகிறது. அவரது கடமையுணர்வு, ஊன் உறக்கம் பாராத உழைப்பு, கற்றுத் தரும் பண்பு, பாசம், பரிவு, மனிதாபிமானம் இத்தனைக்கும் ரவியின் அனுபவங்களே சிறந்த உதாரணங்கள்.

ரவி பிரகாஷ் சொல்கிறார்:

''ஆசிரியர் சாவி அவர்களிடம் நான் வேலைக்குச் சேர்ந்த புதிது. ஆசிரியர் பார்ப்பதற்காக ஒரு மேட்டரின் 'காலி' அவரது மேஜை மீது இருந்தது. ஆசிரியர் வீட்டிலேயேதான் ஆபீஸ். அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். வருவதற்குச் சற்று நேரமாகும் என்ற நிலையில் நான் சும்மா இராமல் அவர் பார்ப்பதற்காக வைத்திருந்த 'காலி'யை எடுத்து புரூஃப் பார்த்து வைத்ததோடு அல்லாமல், தேவையில்லை என்று எனக்குத் தோன்றிய பகுதிகளை யெல்லாம் 'எடிட்' செய்து வைத்து விட்டேன்.

இதைப் பார்த்த உதவி ஆசிரியர் கண்ணன் என்பவர் எனக்கு செம டோஸ் விட்டார். 'இது என்ன முந்திரிக் கொட்டைத்தனம்? நீ வேலைக்குச் சேர்ந்து ஒரு மாசம் கூட ஆகலை. அதுக்குள்ளே ஆசிரியருக்கு வைத்த 'காலி'யில் புரூஃப் பார்க்கிற அளவுக்கு ஆயிட்டியா? அவர் பார்க்கிற புரூஃப் கிளீனா இருந்தாத்தான் அவர் அதைப் படிப்பார். இப்படி அதில் கை வெச்சிருக்கிறியே... இப்போது இன்னொரு 'காலி' வாங்கி வரவும் நேரமில்லையே... போச்சு... ஆசிரியருக்கு கோபம் வரப்போகுது. இன்னியோட உன் வேலை காலி!' என்று பயமுறுத்தினார்.

சாவி அவர்கள் சாப்பிட்டுவிட்டு வந்து நான் திருத்தி வைத்திருந்த 'காலி'யை எடுத்து ஒரு 'கிளான்ஸ்' பார்த்தார்.

கண்ணன் சொன்னதுபோல ஆசிரியர் சாவி என் மீது கோபப்படவில்லை. மாறாக, ''வெரிகுட்! நல்லா புரூஃப்

பார்த்திருக்கிறான். நாளையிலிருந்து இவனையே புரூஃப் பார்க்கச் சொல்லி கரெக்ஷன் போட்டு வாங்குங்க, அப்புறமா நான் பார்க்கிறேன்'' என்று கண்ணனிடம் சொல்லி விட்டார்.

புதுப்பையனோ, பழைய பெரியவரோ, அறிமுக எழுத்தாளரோ, பிரபல எழுத்தாளரோ... ஆசிரியர் சாவிக்கு அதெல்லாம் முக்கியம் இல்லை. செய்கிற வேலையை மட்டும்தான் பார்ப்பார்.

ஆசிரியர் சாவியைப் பற்றிப் பொதுவாக எல்லோருமே சொல்கிற ஒரு கருத்து 'அவர் மகா கோபக்காரர்.'

அவர் என்னிடமும் பலமுறை கோபப்பட்டிருக்கிறார். ஆனால் அத்தனையும் என் மீது உள்ள அக்கறையினாலும், நான் என் பணியில் மேலும் சிறப்படைய வேண்டும் என்பதாலும்தான். நியாயமற்ற விதத்தில் அவர் யார் மீதும் கோபப்பட்டதாக என் அனுபவத்தில் கண்டதில்லை.

எந்த விஷயத்தையும் எதிராளிக்குப் புரிகிற விதத்தில் எளிமையாகவும், சுவாரசியமாகவும், தமாஷான உதாரணங் களோடும் விளக்குவதில் சாவிக்கு நிகர் சாவி அவர்களே!

பிரபல வாரப் பத்திரிகை ஒன்றில், அரைப்பக்க அளவுக்கு காலியாக இருந்த ஒரு இடத்தில் ஃபில்லருக்காக ஒரே ஒரு ஜோக் போடப்பட்டிருந்தது. ஜோக்குக்கான அளவு படத்துடன் சேர்த்து கொஞ்சம்தான். ஆனால் இருந்த இடமோ அரைப் பக்கம். இதனால், இடத்தை நிரப்புகிற விதமாக அந்தப் பத்திரிகையின் லே-அவுட் ஆர்ட்டிஸ்ட் ஜோக்கைச் சாய்த்து டிஸைன் செய்து, மேலும் கீழும் பிரஷ்ஷால் கோடு போட்டு ஒருமாதிரி இடத்தை நிரப்பிச் சமாளித்திருந்தார்.

இதை என்னிடம் காண்பித்து, 'இந்த ஜோக்கை எப்படிப் போட்டிருக்காங்கன்னு பார்! இது எப்படியிருக்குன்னா காலியான ரயில் பெட்டியில் ஏறிக்கிறவன் முழு பெஞ்ச்சும் காலியாய்

இருப்பதைப் பார்த்து அதையும் சேர்த்து அனுபவிக்கணும்னு காலை நீட்டிப் படுத்து அத்தனை இடத்தையும் ஆக்கிரமித்துக் கொள்வான். அந்த மாதிரி இருக்கு இந்த ஜோக்கைப் போட்டிருக்கிற விதம்!' என்றார்.

என் மனதில் இந்த உதாரணம் மூலம் பசுமரத்தாணியாய்ப் பதிந்து விட்டது. இதை சாவி ஒருவரால்தான் புரிய வைத்திருக்க முடியும். எந்த ஜர்னலிஸப் படிப்பும் இதைக் கற்றுத் தரமுடியாது.

லே-அவுட் செய்வதென்பது சும்மா cut and paste சமாசாரம் இல்லை; அது ஒரு கலை என்பதை எனக்கு உணர்த்தியவர் அவர்தான். லே-அவுட் செய்யப்பட்ட பக்கத்தைப் பார்த்து 'இந்த டைப் எழுத்து சரியில்லை. slant type போட்டுப் பார். பக்கம் அழகாக அமையும்' என்பார். ஆசிரியர் சொன்ன அந்த மாற்றத்தைச் செய்த பின் நிஜமாகவே அந்த வித்தியாசம் புரியும். 'இந்தத் தலைப்பு எழுத்தை இவ்வளவு பெரிசாக வைக்காதே. சின்னதாக இந்த மூலையில் வை. இங்கே தாராளமாக ஸ்பேஸ் கொடு' என்பார். அதைச் செய்த பின், அந்தப் பக்கத்தைப் பார்த்தால் 'ஆகா' என்று இருக்கும். அதற்கு முன் அடைசலாக, இருந்த பக்கம் ஆசிரியர் சொன்ன மாற்றத்தைச் செய்த பின் பளிச்சென்றிருக்கும். 'செங்கல் சுவர் அடுக்கின மாதிரி போட்டுத் திணிக்காதே! மூச்சு வாங்கக் கொஞ்சம் இடம் கொடு. அப்பத்தான் படிக்க முடியும்' என்பார்.

பத்திரிகைப் பணி என்பது சாவி அவர்களின் மூச்சு . புரூஃப் திருத்த உட்கார்ந்தால் அதிலேயே வெகுவாக ஆழ்ந்து போய் விடுவார். பக்கத்தில் இடியே விழுந்தாலும் தெரியாது. நானே நேரடியாகப் பார்த்து அதிசயித்த சம்பவம் ஒன்று உண்டு.

ஒருநாள் தம்முடைய அறையில் அமர்ந்து புரூஃப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த அறைக்கு 'அட்டாச்டு பாத்ரூம்' உண்டு. இடையில் ஒருமுறை எழுந்து அந்த பாத்ரூமுக்குப் போய் வந்து மீண்டும் புரூஃப் திருத்தத் தொடங்கி இருக்கிறார்,

நான் சற்று நேரம் கழித்து அவர் அறைக்குள் போனவன், திடுக்கிட்டுப் போனேன். கணுக்கால் வரை தண்ணீர். ஆசிரியரைப் பார்த்தேன். அவரது கால்களும் தண்ணீரில் மூழ்கியிருந்தன. வேட்டியின் நுனி நனைந்திருந்தது. ஆனால் அது தெரியாமல், ஆசிரியர் ரொம்ப மும்முரமாக புரூஃப் திருத்துவதில் முனைந்திருந்தார். மெதுவாகக் குரல் கொடுத்து அவரது கவனத்தைத் திருப்பினேன். 'சார்... அறைக்குள் தண்ணீர்' என்றேன். அவர் அப்போதுதான் அதையே கவனித்தவராய் 'அடாடா... பாத்ரூம் போனவன் வாஷ் பேஸின் குழாயை மூட மறந்துட்டேன் போலிருக்கு. போய் கொஞ்சம் நிறுத்திடேன்' என்றார்.

நான் குழாயை மூடிவிட்டு வெளியே வந்தபோது சாவி தன் இரு கால்களையும் தூக்கி நாற்காலியில் சப்பணமிட்டு அமர்ந்தபடி, மீண்டும் புரூஃப் திருத்துவதில் மூழ்கிப் போயிருந்தார். இவரிடம் பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது எனது கொடுப்பினை அல்லாது வேறென்ன?

பத்திரிகையின் கடைசி கட்ட வேலைகள் ஒவ்வொரு வார இறுதியிலும் சனிக்கிழமையன்று ராத்திரி இரண்டு அல்லது மூன்று மணிக்கு முடியும். அதுவரையிலும் விழித்திருந்து லே-அவுட் செய்த பக்கங்களைப் பார்த்த பிறகே படுக்கச் செல்வார் ஆசிரியர்.

விடியற்காலை மூன்று மணி அளவில் ஃபாரம் வேலை முடியும். எழுந்து போய்க் கதவை லேசாகத் தட்டுவேன். 'இதோ வரேன்' என்று குரல் கொடுத்துவிட்டு, உடனே எழுந்து வருவார். நான் முடித்து வைத்திருக்கும் பக்கங்களை ஆர்வமுடன் பார்ப் பார். 'நறுக்' கென்று சில கரெக்ஷன்கள் சொல்வார். 'ஐயோ... என் மூளைக்கு இது எப்படி எட்டாமல் போயிற்று?' என்று தலையில் தட்டிக் கொள்கிற மாதிரியான கரெக்ஷனாக இருக்கும் அது. என் மனசில் ஓடும் எண்ணத்தைப் படித்தவர் போன்று,

'தூங்கிக்கிட்டிருந்தவர் எழுந்து வந்து பளிச்சென்று ஒரு கரெக்ஷன் சொல்லிட்டாரே, எப்படி? நமக்கு அது தோணவே இல்லியே, ஏன்?'னு யோசிக்கிறாயா? நீ காலையிலேர்ந்து இதே வேலையா உழண்டுகிட்டிருக்கே! நான் புதுசா வெளியிலிருந்து வந்து பார்க்கிறேன். அதனாலதான் வெள்ளைத் துணியில கறுப்புப் புள்ளி பட்ட மாதிரி அந்தத் தப்பு மட்டும் பளிச்சென்று என் கண்ணுல படுது. நீ இதுக்காக ஒண்ணும் கவலைப்படாதே!' என்பார்.

ஒருமுறை சாவி அவர்கள் வெளிநாடு போயிருந்தார். நாங்கள் 'சாவி' இதழின் அந்த வாரத்துக்கான வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தோம்.

அன்றிரவு ஒரு மணிக்கு சாவி சார் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தார். காரிலிருந்து இறங்கியவர், நேரே என்னிடம் வந்து என் எதிரே உட்கார்ந்து கொண்டு 'என்ன... பேஜெல்லாம் முடிச்ச வரையில நான் பார்க்கலாமா?' என்றார்.

ஒருமுறை எனக்கு நல்ல ஜுரம் கண்டிருந்தது. ஆனால் அந்த வாரத்து இதழுக்கான கடைசி கட்ட வேலைகள் பாக்கி இருந்தன. ஆபீஸ் போனேன். ஜுரத்துடனேயே வேலை செய்து கொண்டிருந்தேன். நான் படும் சிரமத்தை ஆசிரியர் சாவி கவனித்தாரா இல்லையா என்றும் நான் கவனிக்கவில்லை. என் வேலையில் மூழ்கியிருந்தேன்.

சற்று நேரத்தில் என் முன் நிழலாடியது. நிமிர்ந்தேன். பதறி விட்டேன். சாவி சார் நின்றிருந்தார். ஒரு கையில் பெரிய கிண்ணம் நிறைய கரைக்கப்பட்ட ரசம் சாதம். மறுகையில் வெந்நீர் டம்ளர். போதாக்குறைக்கு, சட்டைப் பையிலிருந்து ஒரு குரோசின் மாத்தி ரையை எடுத்து நீட்டி, 'ரவி, முதல்ல இந்த ரசம் சாதத்தைக் குடி. மிளகு ரசம். குடிச்சா நல்லா கண கணன்னு இருக்கும். அப்புறம் இந்த மாத்திரையைப் போட்டுக்கோ' என்றார்.

எனக்கு அவருடைய அன்பைத் தாங்க முடியவில்லை.

கண் கலங்கி விட்டேன். 'கூப்பிட்டிருந்தா நானே வந்திருப்பேனே, நீங்க எதுக்கு...' என்றேன்.

'நீ என் பத்திரிகையைக் கவனிச்சுக்கறே! உன்னை நான் கவனிச்சுக்க வேணாமா? சுயநலம்னுதான் வெச்சுக்கோயேன்!' என்று சிரித்தார்.

அந்த அளப்பரிய அன்பை, வெறும் முதலாளி தொழிலாளி உறவுடன் முடிந்து விடாத, ரத்தமும் சதையும் மட்டுமே தரக்கூடிய பாசத்தை வேறு எவரிடமும் நான் கண்டதில்லை.

'கோபம்... கோபம்...' என்று சாவி அவர்களைப் பற்றிச் சொல்பவர்களைக் கண்டால் எனக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தின் அடிநாதமாக இழையும் அன்பைப் புரிந்து கொள்ளத் தெரியாதவர்கள் அவர்கள் என்றுதான் சொல்வேன்.

கடைசியாக ஒன்று:

சாவி இதழ் நிறுத்தப்பட்டு நான் விகடனில் வந்து சேர்ந்து ஐந்தாறு மாதங்கள் ஆனபின்பும் சாவி சாரைச் சென்று பார்க்கவே இல்லை. (அதற்கான காரணத்தைச் சுருக்கமாக எழுதவும் முடியாது.) அதன்பின் அவரது சதாபிஷேகத்தின்போது எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். போயிருந்தேன்.

என்னைப் பார்த்ததும் அவர் கேட்ட முதல் கேள்வி. 'உன்னை அவா நல்லா வெச்சுண்டிருக்காளா?'

அப்பா...! எவ்வளவு பாசமும் பரிவும் கொண்ட கேள்வி இது! திருமணமாகிப் புகுந்த வீடு சென்ற தனது மகள் சில மாதங்கள் கழித்துப் பிறந்த வீடு வரும்போது, தன் மகளின் தலையைப் பரிவோடு வருடி ஒரு தகப்பனார் பாசத்துடன் கேட்கிற கேள்வியல்லவா இது?''

# 47. பயணங்கள் – நண்பர்கள்

பத்திரிகைப் பணிக்கு அடுத்து சாவிக்கு மிகவும் பிடித்தது பயணம்தான். சென்னையை விட்டு வெளியே போவது என்றாலே அவருக்குக் குஷி பிறந்து விடும். இந்தியாவில் அவர் போகாத இடமே இல்லை. குறிப்பாக தென்னிந்தியாவில் அவருக்குப் பிடித்த இடங்கள் பெங்களூர், கோவை, ஊட்டி.

தனியாகப் பயணம் செய்வதை சாவி எப்போதுமே விரும்புவதில்லை. ஒத்த கருத்துடையவர்கள் யாராவது உடன் இருக்க வேண்டும். பயணத்தின் முக்கியத்துவத்தை நன்கறிந்தவர் அவர். 'பத்து புத்தகங்கள் படிப்பதும் ஒரு பயணம் போவதும் சமம்' என்பார்.

சாவியின் இந்த ஆர்வம் பற்றி அவரது மகள் திருமதி உமா பிரசாத் எழுதுகிறார்:

''நான் பள்ளிக்கூட மாணவியாக இருந்தபோது அப்பாவுக்கு ஒருமுறை பத்திரிகை விஷயமாக உதவி ஆசிரியர்களுடன் ஊட்டி புறப்பட்டுக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்து 'நீயும் வா' என்று அழைத்தார். பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த நேரம். 'படிக்க வேண்டியிருக்கு அப்பா... நான் வரவில்லை' என்றேன். 'பாடப் புத்தகத்தை அப்புறம் படிச்சுக்கலாம். முதல்ல வந்து ஊரைப் படி' என்று அழைத்துக் கொண்டு போனார். அந்த ஊட்டிப் பயணம் என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக அமைந்து விட்டது.

அவ்வளவு பொது விஷயங்களை நான் அந்தப் பயணத்தில் தெரிந்து கொண்டேன்.

அப்புறம் அமெரிக்கா, ஐரோப்பா பயணத்தின் போதும் என்னையும், என் மகன் நவீனையும் அழைத்துக் கொண்டு போனார். ஒரு மாதம் சுற்றுப் பயணம் செய்தபின் ஏதோ ஒரு பல்கலைக்கழகத்தில் பயின்று விட்டுத் திரும்பியது போலிருந்தது.''

சாவியின் வாழ்க்கையில் அவர் மேற்கொண்ட உள் நாட்டுப் பயணங்களைவிட வெளிநாட்டுப் பயணங்களே அதிகம். அவரது முதல் வெளிநாட்டுப் பயணத்துக்கு வகை செய்தவர் காலம் சென்ற நண்பர் 'ஏர் ஃபிரான்ஸ்' கோபால் அவர்கள். ஏர் பிரான்ஸ் விமான சர்வீஸ் முதல்முதல் ஜப்பானுக்குத் துவக்கப் பட்டபோது அதில் சாவியும் இடம் பெற்றிருந்தார்.

அடுத்ததாற்போல் சாவி மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணம் ரஷ்யாவுக்கும், கிழக்கு ஜெர்மனிக்கும்.

ரஷ்யப் பயணம் முடிவானதும், அதே பயணத்தில் கிழக்கு ஜெர்மனியையும் சாவி சென்று பார்க்கும் வகையில் ஏற்பாடு செய்தவர் சென்னையில் அந்நாட்டுத் தூதரகத்தில் கௌரவத் தொடர்பு அதிகாரியாக இருந்த சங்கரன் அவர்கள்.

அன்றைய அமைச்சர் க.ராசாராம், அமைச்சர் செ.மாதவன், டாக்டர் எம்.ஏ.எம்.ராமசாமி, கீதா ஹோட்டல் ஜெயராம அய்யர் போன்ற பிரமுகர்கள் காஞ்சி ஹோட்டல் கார்டனில் சாவியை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். எம்.ஏ.எம்.ராமசாமி அவர்கள் ஒரு பெரிய சூட்கேஸை சாவியிடம் தந்து 'திரும்பி வரும்போது இது நிறைய மேட்டர் கொண்டு வாருங்கள்' என்று கூறியதை சாவி இப்போதும் மறக்காமல் சொல்லி மகிழ்கிறார்.

ஒவ்வொரு பயணக் கட்டுரை எழுதும்போது சாவி அதில்

ஏதேனும் புதுமை செய்வது வழக்கம். பயணக் கட்டுரை எழுதினால் அது ஒரு கதை போல் சுவாரசியமாக இருக்க வேண்டும் என்பார். ரஷ்யப் பயணக் கட்டுரையிலும் சாவி ஒரு புதுமை செய்தார். தம்முடன் கோபால்ராவ் என்ற கற்பனை கதாபாத்திரத்தைக் கூடவே அழைத்துக் கொண்டு போவது போலவும், சென்ற இடங்களில் தன் மனசாட்சி கேட்ட சில கேள்விகளை கோபால்ராவ் மீது போட்டு அவர் கேட்பது போலவும், சாவி பதில் சொல்வது போலவும் ஒரு புதுமையான உத்தியைக் கையாண்டு எழுதினார். அந்தப் புதுமையான முயற்சியைப் பாராட்டி அமைச்சர் ராசாராம் ஒரு கூட்டத்தில் பேசினார்.

தொடர்ந்து பங்களாதேஷ் சுதந்திரம் பெற்ற சூட்டோடு டாக்கா போய் பங்களாதேஷின் தந்தை என்று போற்றப்பட்ட முஜிபுர் ரஹ்மானை தினமணி கதிர் சார்பில் பேட்டி காணும் அரிய வாய்ப்பு சாவிக்குக் கிடைத்தது. முஜிபுர் அவர்கள் கவியரசர் ரவீந்திரநாத் தாகூரிடம் தமக்குள்ள பெருமதிப்பைச் சொல்லி தாகூரின் சில பாடல்களைப் பாடிக் காட்டினார்.

பங்களாதேஷ் விடுதலை பெற்ற மூன்றாவது நாளே சாவிக்கு பேட்டி கிடைத்தது. பிரதமரை பேட்டி காண நூற்றுக் கணக்கான நிருபர்கள் காத்திருந்த நேரம் அது. பேட்டிக்கு ஐந்தே நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் சாவியின் ஆர்வத்தையும் அக்கறையையும் கண்ட முஜிபுர் அவர்கள் பேட்டி நேரத்தை இருபது நிமிடங்களாக மாற்றிக் கொண்டார்.

இப்பயணங்களைத் தொடர்ந்து சாவியின் வெளிநாட்டுப் பயணங்கள் அடுத்தடுத்து நடைபெற்று வந்தன. அதுமட்டுமல்ல; அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா நாடுகளுக்குத் திரும்பத் திரும்பப் போய் வந்து கொண்டிருந்தார். ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்தையும் யாராவது 'ஸ்பான்ஸர்' செய்ய வேண்டுமென்றோ, அந்த நாடுகளிலிருந்து ஏதேனும் அமைப்புகள்

அழைப்பு அனுப்பி வரவேற்க வேண்டுமென்றோ சாவி காத்திருப்பதில்லை. நினைத்தால் கிளம்பி விடுவார்.

'மூன்று மாதங்கள் சென்னையில் அயராமல் உழைத்த பின்னர் ஒரு வாரம் எங்காவது ஒரு வெளிநாட்டுக்குப் போய் வந்தால்தான் என் பேட்டரி சார்ஜ் ஆகிறது' என்பார் அவர்.

சாவிக்குப் பல நாடுகளிலும் நண்பர்கள் உண்டு. சாவியை உயிருக்குயிராக நேசிக்கும் நண்பர்கள் பலர். அவர்களில் முக்கிய மானவர் ஜப்பானில் இருந்த நாயர்ஸான்.


நாயர்ஸானின் வாழ்க்கை வரலாற்று நூலை சென்னையில் ஒரு சிறப்பான விழா நடத்தி சாவி வெளியிட்டபோது அந்த விழாவில் கலந்துகொள்ள நாயர்ஸான் ஜப்பானிலிருந்து வந்திருந்தார். அந்த ஆண்டு ஜப்பான் நாட்டு சக்கரவர்த்தி 'ஜப்பானியரல்லாத வருக்கு ஜப்பான் அரசு வழங்கும் உயரிய விருது' ஒன்றை நாயர் ஸானுக்கு வழங்கிக் கௌரவித்திருந்தார். நூல் வெளியீட்டு விழா நாயர்ஸான் பாராட்டு விழாவாகவும் அமைந்தது. நாயர்ஸான் சென்னையில் இருந்தபோது ஒருநாள் அவரைத் தமது வீட்டுக்கு காலை சிற்றுண்டிக்காக சாவி அழைத்து வந்ததை ஏ.வி.எம். சரவணன் அவர்கள் பெருமையோடு சொல்லிக் கொள்கிறார்.

'நாயர்ஸான் என் வீட்டுக்கு வந்தது குறித்து நான் பெருமையடைந்தேன். மிகச்சிறந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரரும், ராஷ் பிஹாரி போஸ் போன்ற பெரும் தலைவர்களுடன் பழகும் வாய்ப்பு பெற்றவருமான நாயர்ஸான் அவர்களுக்கு நான் என் இல்லத்தில் அளித்த சிற்றுண்டி விருந்தின்போது செட்டி நாட்டு அயிட்டங்கள் பரிமாறப்பட்டன. சுவையான உணவு ரசிக ரான சாவி அந்த உணவு வகைகளைப் பற்றி நாயர்ஸானுக்கு விரிவாக விளக்கியது என்னுள் பசுமையாக இருக்கிறது' என்கிறார் ஏ.வி.எம்.சரவணன்.

புஷ்பலா மோகன் என்பவர் சாவியின் மற்றொரு நண்பர்.



புதல்விகள் உமா, வைஜயந்தி – சாவி, ஜானகி – ஜெயா, மாலதி



அமெரிக்காவில் - மகள் வைஜயந்தி, கணவர் விசுவநாதனுடன்...



எங்கள் குடும்பம் பெரிசு. கலைஞர் சாவியின் இல்லத்துக்கு வந்திருந்தபோது...

முதல்வரிசை இடமிருந்து - ராமமூர்த்தி, ரதி, மாலதி, வைஜயந்தி, உமா.
இரண்டாவது வரிசை - ஆர்த்தி, மருமான் சந்துரு, விசுவநாதன், பேரன் நவீன், குரு பிரசாத்.
பின்னால் - மும்பை ராஜன், மாப்பிள்ளை பிரசாத்.





நியூஸிலாந்தில் கௌதம், ஆர்த்தி, ஜெயா, பேரன் அமிதாப்புடன் சாவி, மாப்பிள்ளை அர்த்தநாரி...

மருமகள் சீதா, விசுவநாதன், வைஜயந்தி, அருண், இந்து (அருண் மனைவி)





பேத்தி ரம்யா, பேரன் நவீனுடன்

அமெரிக்காவில் திருமதி ஜானகி, பேத்தி ரம்யாவுடன்...





தவத்திரு சச்சிதானந்த சுவாமிகள் (வர்ஜீனியா லோட்டஸ் டெம்பிள்), சாவி,
புதல்வர்கள் மணி, பாச்சா, சீதா (பாச்சா மனைவி)

எண்பதாம் ஆண்டு சதாபிஷேகத்தன்று அன்புத்தாயார் சீதாலட்சுமி (வயது நூறு)
மற்றும் உறவினர்களுடன்...





வாஷிங்டனில்... வாஷிங்டன் ஸ்தூபிக்கு
முன்னால் ம.பொ.சி., சாவி, மற்ற நண்பர்கள்...

'நீல்கிரீஸ்' உரிமையாளர்
திரு. சென்னியப்பன் அவர்களுடன்..




திரு நெ.து. சுந்தரவடிவேலு,
வி.ஜி. பன்னீர்தாஸுடன்...





தினத்தந்தி அதிபர்
திரு. சிவந்தி ஆதித்தன்
அவர்களுடன்...

முன்னாள் அமைச்சர்
கே. ராசாராம் - சாவி
பின்னால் ராமமூர்த்தி






திரு. கமல்ஹாசன் - சாவி



முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன்...

கல்கி ராஜேந்திரன் கல்கி நினைவுப் பரிசாக விநாயகர் திரு உருவச் சிலை தருகிறார்.

↓ எம். சரவணன், மு.மு. இஸ்மாயீல், மூப்பனார்.



வேலூர்க்காரரான அவர் போலீஸில் சேர்ந்து கொஞ்ச நாள் தமிழ் நாட்டில் பணியாற்றியபின் ஜப்பான் சென்று டோக்கியோவில் மிகப் பெரும் செல்வந்தப் பெண்மணியான மேடம் மிட்ஸூயி அவர்களின் நம்பிக்கைக்குரியவராகி அவரது செயலாளராக வாழ்ந்து கொண்டிருந்தார். சாவி ஜப்பானுக்கு வருகிறார் என்றாலே புஷ்பலாவின் முகம் தாமரையாக மலர்ந்து விடும். அப்படியொரு நட்பு! சாவி அவர்களுடன் நான் போயிருந்த இரண்டு சமயங்களிலும் அவர் எங்களை டோக்கியோ மட்டுமின்றி ஒஸாகா, கியோட்டோ, ஹிரோஷிமா, நாரா போன்ற நகரங்களுக்கும், கிராமப் பகுதிகளுக்கும் அழைத்துப் போய் சுற்றிக் காட்டி உபசரித்த விருந்தோம்பல் மறக்க முடியாதவை. நாயர்ஸான், புஷ்பலா மோகன் இருவருமே இப்போது உயிரோடு இல்லை.

அயாகா ஹோரிஸான் என்ற ஜப்பானியப் பெண்மணியை சாவிக்கு அறிமுகப்படுத்தியவர் புஷ்பலா மோகன்தான். அப்புறம் அந்த நடுத்தர வயது மங்கை சாவியின் குடும்பத் தோழியாகவே மாறிவிட்டார். ஜப்பானியர்களுக்கு நல்ல ஆங்கிலம் தெரியாது என்று பொதுவான ஒரு கருத்து உண்டு. அது ஒரு காலம். இப்போது மாறிவிட்டது. திருமதி ஹோரிஸான் சாவிக்கு எழுதும் ஆங்கிலக் கடிதங்கள் இலக்கியம் என்று போற்றும் அளவுக்கு உயர்ந்து காணப்படும்.

ஜப்பான் அரசியல், கலாசாரம், இயற்கை வளம், பொருளாதாரம், வெயில், மழை என்று எதையும் விடாமல் சுவாரசியமாகக் கடிதம் எழுதுவார். டாக்டர் கலைஞரைப் பற்றிகூட ஹோரி ஸானுக்குத் தெரியும். ஏனெனில் அவருக்கு சாவி கடிதம் எழுதும் போதெல்லாம் கலைஞர் அவர்களின் புதுப்புது திட்டங்கள் பற்றி, அவருடைய பேச்சுத் திறன், எழுத்துத் திறன் பற்றி, தமிழ்ப் புலமை பற்றி விளக்கமாக எழுதுவார். இந்தக் கடிதப் போக்கு வரத்து நட்பு இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஹாங்காங் என்றாலே சாவிக்கு நினைவுக்கு வருபவர்கள் பாலன் சச்சித், அய்யூப், சுக்கூர் என்ற இனிய நண்பர்கள்தான். ஹாங்காங்கிற்கு சாவி போகும்போது ஒன்று பாலன் வீடு அல்லது அய்யூப் வீட்டில்தான் தங்குவார். நண்பர் சுக்கூர் வீட்டில் ஒருவேளையாவது சாப்பிடாமல் வரமாட்டார். ஹாங்காங்வாழ் இந்தியர்களில் மெத்தப் படித்தவர் என்ற பெருமைக்குரியவர் பாலன். அங்கே ஒரு கல்லூரியில் நிர்வாகவியல் பேராசிரியராக இருந்து வருகிறார். சாவிக்கும் பாலனுக்கும் இடையே பொதுவான ஒற்றுமை நகைச்சுவை. பாலன் பேசத் தொடங்கினாலே ஜோக் மழைதான். சாவி வயிறு குலுங்கச் சிரித்து ரசிப்பார். ஒருமுறை 'சாவி ஹாங்காங் சிறப்பிதழ்' தயாரிக்கும் பணி சம்பந்தமாக என்னையும் நண்பர் எக்ஸ்னோரா நிர்மல் அவர்களையும் அழைத்துப் போனார். நிர்மல் ஏற்கனவே இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாளராக சில ஆண்டுகள் ஹாங்காங்கில் பணி புரிந்தவர். மிகச்சிறந்த புகைப்படக் கலைஞர். அவர் ஹாங்காங்கில் எடுத்த படங்கள்தான் சாவி சிறப்பிதழைப் பரிமளிக்கச் செய்தன.

சாவி அவர்கள் ஜாதி, மத, பேதங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதில் யாருக்காவது சந்தேகமிருந்தால் அவர்கள் சாவியை பாங்காக்கிலோ, ஹாங்காங்கிலோ பார்க்க வேண்டும். எந்த நேரத்திலும் அவரை இஸ்லாமியச் சகோதரர்கள் மொய்த்துக் கொண்டிருப்பார்கள். தாய்லாந்துவாழ் தமிழர் இலியாஸ் என்கிற இனிய நண்பரிடம் சாவிக்கு இதயபூர்வமான ஈடுபாடு உண்டு. சிதம்பரத்துக்காரரான இலியாஸ் தம்முடைய அயராத உழைப்பாலும் வியாபாரத் திறமையாலும் இன்று பேங்காக்கில் கொடி கட்டிப் பறக்கிறார். தாய்லாந்து அரசு இவரைப் பாராட்டிப் பல சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறது. மிகச்சிறந்த ஏற்றுமதியாளருக்கான பெருமைக்குரிய விருதையும் இவர் பெற்றிருக்கிறார்.

சாவி வருகிறார் என்றால் இலியாஸின் கார் பாங்காக் விமான நிலையத்தில் தயாராய்க் காத்திருக்கும். இலியாஸுக்குச் சொந்தமான 'உட்லண்ட்ஸ் இன்' ஹோட்டலில் ஒரு அறை

சாவிக்காக எப்போதும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். அந்த அளவுக்கு சாவியின் நட்பைப் பெரிதும் மதித்துப் போற்றுபவர் இலியாஸ். சாவியுடன் செல்லும்போதெல்லாம் இலியாஸின் விருந்தோம்பலை நானும் அனுபவித்திருக்கிறேன்.

'என்ன இலியாஸ், ஏதாவது பேசுங்க' என்பார் சாவி.

'நீங்க பேசணும். நான் கேக்கணும். உங்க அனுபவங்கள்தானே எனக்குப் பாடம். நீங்க பேசுங்க...' என்பார் இலியாஸ். இப்படி ஒரு ஆத்மார்த்தமான நட்பு பாங்காக்கில் சாவிக்கு மலர்ந்திருக்கிறது.

சாவி பற்றி இலியாஸ் சொல்கிறார் :

''தனக்குச் சற்று ஓய்வு தேவைப்படும் போதெல்லாம் பேங்காக் வந்து என் ஹோட்டலில் சாவி அவர்கள் தங்கிச் செல்வது வழக்கம். அப்போதெல்லாம் நான் அவருடன் பேசி புத்துணர்ச்சி பெறுவேன். அவரது சில நடவடிக்கைகள் முக்கிய மான பல பாடங்களை மௌனமாக நமக்குப் போதிக்கும். ஒரு முறை நான் அவரை என் வீட்டுக்கு அழைத்துப் போயிருந்தேன். வீடு சற்று உயரத்தில் இருப்பதால் பல படிகள் ஏறிச் செல்ல வேண்டும். 'சாவி வயதானவராயிற்றே, படியேற சிரமப்படுவாரே' என்ற அக்கறையில் நான் சாவியின் கையைப் பிடித்து அழைத்துப் போக எண்ணி அவர் கையைப் பிடிக்கப் போனேன். ஆனால் அவர் என் கையைச் சட்டென்று உதறித் தள்ளிவிட்டார். எனக்குக் கொஞ்சம் சங்கடமாகிவிட்டது. 'ஏதும் தவறு செய்து விட்டோமோ' என்று உள்மனம் உறுத்தியது. 'ஏன் ஸார் கையை உதறி விட்டீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு அவர் 'எனக்கு என்ன வயது என்று நினைக்கிறீர்கள்?' என்று பதில் கேள்வி கேட்டார்.

'எண்பதுக்கு மேல் இருக்கும்' என்றேன். 'இல்லை... என் வயது இருபத்தைந்துதான்...' என்றவர் தொடர்ந்து 'இலியாஸ்... உடலுக்கும் வயதுக்கும் சம்பந்தம் இருக்கலாமே தவிர மனதுக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை. நான் எப்போதுமே

மனதளவில் இருபத்தைந்து வயதைத் தாண்டுவதில்லை. எனவே என்னால் முடியும். மனோதிடம்தான் வேண்டும். என்னால் நிச்சயம் முடியும். இந்தப் படிகளை நானே ஏறுகிறேன் பாருங்கள்'' என்று சொல்லிக் கொண்டே அத்தனை படிகளையும் மிக எளிதாக ஏறி வந்து விட்டார். அன்று அவரிடமிருந்து நான் ஒரு பெரிய பாடம் கற்றுக் கொண்டேன்.''

பாங்காக் தமிழ்ச் சங்கத்தின் வெற்றிகரமான செயல் பாடுகளில் இலியாஸ் பெரும்பங்கு வகிப்பவர். அதேபோல அய்யூப் என்கிற நண்பரும் சாவிக்கு இணக்கமானவர். அய்யூப் அவர்களுக்கு ஹாங்காங்தான் தலைமையகம் என்றாலும் உலகின் மற்ற நாடுகளுக்கு வர்த்தக நிமித்தம் ஏதோ பக்கத்து வீட்டுக்குப் போய் வருவதுபோலப் போய் வருபவர். பாங்காக்கில் அவர் சகோதரர் ஹுமாயூன் அவர்களும் இருப்பதால் அடிக்கடி பாங்காக் போய்த் தங்கிவிட்டு வருவார்.

சாவி ஹாங்காங் போனாலும் பாங்காக் போனாலும் அய்யூப் வீட்டில் தஞ்சாவூர் பாணியில் தயாரிக்கப்படும் இட்லி சாம்பார் சாப்பிடாமல், ஸ்பெஷல் டீ குடிக்காமல் வருவதில்லை. சமீபத்தில் பல்துறைப் பிரமுகர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற மறக்க முடியாத சம்பவங்களை தங்க.காமராஜ் என்ற இளைஞர் தொகுக்க, அதை நூலாக வெளியிடுவதற்கான அத்தனை உதவிகளையும் செய்திருப்பவர் அய்யூப் அவர்கள்தான்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்கு சாவி பலமுறை சென்றதுண்டு. முதன் முதலில் பினாங்கு நகருக்குச் சாவி போன போது அங்கு பெரும் தனவந்தரும், பிரபல வர்த்தகருமான ஆறுமுகம் பிள்ளை அவர்களின் நட்புக்குப் பாத்திரமானார். திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் சாவி அவர்கள் பற்றி ஓர் அறிமுகக் கடிதம் எழுதி அனுப்பியிருந்தார். அரண்மனை போன்ற தமது வீட்டில் சாவியையும் அவரது மனைவியையும் தங்க வைத்து ஆறுமுகம் பிள்ளை உபசரித்த பாங்கு மறக்கக்

கூடியதல்ல. தமக்குச் சொந்தமான ஒரு மலைப் பகுதிக்குச் சாவியை அழைத்துப்போய் அங்கே மலை உச்சியில் உள்ள தமது பங்களாவில் தங்க வைத்தார். 'இந்த மலை முகட்டிலிருந்து பார்க்கும்போது எவ்வளவு தூரம் உங்களுக்குத் தெரிகிறது?' என்று கேட்டார் ஆறுமுகம் பிள்ளை. ரொம்ப தூரத்துக்கு அப்பால் வானமும் பூமியும் சந்திக்கும் எல்லையைக் காட்டி அதுவரை தெரிகிறது' என்றார் சாவி.

'அதுவரைக்கும் நம்ம இடம்தான்' என்று பிள்ளை சர்வ சாதாரணமாகச் சொன்னதை சாவியால் நம்ப முடியவில்லை. ஆறுமுகம் பிள்ளைக்கு அத்தனைப் பெரிய சொத்தும், நிலங்களும் உண்டு என்று திருமுருக கிருபானந்தவாரியார் சொன்ன பிறகே சாவிக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் பிள்ளை அவர்கள் நோய் வாய்ப்பட்டு வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது சாவி தம்பதியர் வேலூர் போய் அவரைப் பார்த்துவிட்டு வந்தார்கள். பிள்ளை அவர்கள் மறைந்த பின்பும் அவரது மகன் நாகராஜனுடன் அந்த நட்பு தொடர்கிறது.

சாவியால் மறக்க முடியாத மலேசிய நண்பர்களில் மிக முக்கியமானவர் நண்பர் வீ.செல்வராஜ். மலேசியாவின் புகழ்பெற்ற எழுத்தாளராகவும், மனிதநேயம் மிக்க பண்பாளராகவும் வாழ்ந்து வந்த – 'செல்வா' என்று அழைக்கப்பட்ட – செல்வராஜ் மீது சாவி அவர்கள் ஆழ்ந்த அன்பும் நட்பும் கொண்டிருந்தார். சமீபத்தில் 'செல்வா திடீரென மாரடைப்பால் காலமானார்' என்ற செய்தி கேட்டு சாவி அடைந்த துயரத்துக்கு அளவேயில்லை.

''இதிகாசங்களையும், இலக்கியங்களையும் திரும்பத் திரும்பப் படிப்பதனால் தெரிந்து கொள்ளும் பல உண்மைகளைப் போல சாவி அவர்களோடு சில மணி நேரம் உரையாடினாலே போதும். பலப்பல உண்மைகள் புலப்படும். இது நான் அவரைச்

சந்தித்தபோது மாத்திரமல்ல, மற்றவர்கள் அவரோடு உரையாடிக் கொண்டிருந்த போதும் கவனித்திருக்கிறேன். அவரது அனுபவங்கள் அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரம். 'மண் பயனுற வேண்டும்' என்ற மகாகவியின் வரிக்கு சிறந்த உதாரணம் சாவி அவர்கள்'' என்று செல்வா எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மலேசியாவில் சாவிக்குக் கிடைத்துள்ள மற்றொரு அருமை நண்பர் நீதிபதி ஸ்ரீராம். கோலாலம்பூரில் பிரபல வழக்கறிஞராக இருந்து இப்போது நீதிபதியாகப் பதவி வகிக்கிறார். நீதிபதியானதும் வருவாய் குறைந்து விட்டதால் தர்மங்கள் அதிக அளவில் செய்ய முடியவில்லையே என்று வருந்துகிறார். இவரது மனைவி திருமதி சந்திரா ஸ்ரீராம் ஒரு சிறந்த பரத நாட்டியக் கலைஞர். பண்பின் உறைவிடம். தெய்வ பக்தி மிக்கவர். இந்த இனிய தம்பதியரின் இரண்டு பிள்ளைகளும் லால்குடி ஜெயராமன் அவர்களிடம் வயலின் கற்றுத் தேர்ந்து அவருடைய பெருமைக்குரிய சீடர்களாயிருந்து வருகிறார்கள். ஸ்ரீராம் தம்பதியர் இந்தியா வரும்போதெல்லாம் சாவியைப் பார்த்துப் பேசாமல் திரும்புவதில்லை. சமீபத்தில் ஸ்ரீராம் 'டத்தோ' ஸ்ரீராம் ஆகியிருக்கிறார்.

நல்லதொரு எழுத்தாளருக்கு எங்கேயும் மரியாதை உண்டு என்பதற்கு 'சாவி மலேசியா சிறப்பிதழ்' வெற்றி பெற மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு செய்த உதவிகளை முக்கியமாகச் சொல்ல வேண்டும். 'தன் வாழ்நாளில் அறுபது சதவீதத்தை பத்திரிகைப் பணிக்கே செலவிட்ட மிகச் சிறந்த எழுத்தாளர் சாவி. இவருக்கு நாம் உதவ வேண்டியது அவசியம்' என்று தாமே மலேசியாவின் பல முக்கிய வர்த்தகப் பிரமுகர்களுடன் தொலை பேசியில் பேசி அந்தச் சிறப்பு மலருக்கு விளம்பரங்கள் வாங்கி உதவியுள்ளார். 'டத்தோ' செய்த இந்தப் பேருதவியை சாவி எப்போதும் மறந்ததில்லை.

எந்த நாட்டுக்குப் போனாலும் சிங்கப்பூருக்கு ஒரு

ஹலோ சொல்லாமல் சாவி வீடு திரும்ப மாட்டார். அவ்வளவு நண்பர்கள் அங்கே அவருக்கு. அவரோடு நானும் அடிக்கடி சிங்கப்பூர் போயிருப்பதால் அவர்கள் எல்லோரும் எனக்கும் நல்ல நண்பர்களாகி விட்டார்கள்.

நண்பர் யாகப் சாவி அவர்களின் உற்ற நண்பர். சிங்கப்பூரில் நாணயம் மாற்றும் (மணி சேஞ்சர்) தொழில் புரிந்து வரும் யாகப் அவர்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் மிகுந்த நாட்டம் உள்ளவர். கலைஞரிடம் மாறாத அன்பும் பக்தியும் உடையவர். கலைஞரின் தமிழ் அவருக்குக் கற்கண்டு மாதிரி. எனவே சாவியின்பால் அவர் ஈர்க்கப்பட்டதில் வியப்பில்லை.

''சாவியுடன் பேசுவது எனக்கு டானிக் மாதிரி. அவர் ஒரு அனுபவச் சுரங்கம். எந்தப் பிரச்னையைச் சொன்னாலும் சாவியிடம் ஒரு தீர்வு இருக்கும். 'என்ன யாகப்?' என்று கேட்டுக்கொண்டே அவர் என் கடைக்குள் நுழையும் போதே மனம் மகிழ்ச்சியில் நிறைந்து போகும். சாதி மத பேதத்திற்குள் தன்னைத் திணித்துக் கொள்ளாத பரந்த மனம் படைத்த சாவியின் நட்பு என் வாழ்க்கையில் கிடைத்த மாபெரும் பரிசு'' என்கிறார் யாகப்.

நண்பர் நாகராஜன் (ICFTU) சிங்கப்பூரில் சாவியின் நண்பர்களில் மிக முக்கியமானவர். சிங்கப்பூர் டிரேட் யூனியன் அலுவலகத்தில் ஜெனரல் செக்ரடரியாக இருப்பவர். 'என் வீட்டில் தங்கலாமே' என்று வீட்டுச் சாவியை எடுத்துக் கையில் கொடுக்கும் உண்மையான நண்பர்களில் அவரும் ஒருவர். நாகராஜனும் அவர் மனைவி தேவகியும் சாவியின் குடும்ப நண்பர்கள்.

சிங்கப்பூர் சம்பவாங் துறைமுகப் பகுதியில் வசித்து வந்த ராஜாமணி குடும்பமும் சாவியின்பால் பாசம் பொழியும் குடும்பம். இப்போது ராஜாமணி அவர்கள் ஆஸ்திரேலியாவில் தம் குடும்பத் துடன் சொந்த வீடு கட்டிக் கொண்டு மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறார். 'சாவி அங்கே வரமாட்டாரா என்று தம் வீட்டைப்

பார்க்க மாட்டாரா' என்று ஆவலாகக் காத்திருக்கிறார். ஒவ்வொரு முறை கடிதம் எழுதும்போதும் அழைப்பு விடுக்கிறார். சாவி மட்டும் ஆஸ்திரேலியா போனால் கங்காரு தன் குட்டியைப் பாசமுடன் தன் மடியில் வைத்துக் காப்பது போல ராஜாமணி தனது நட்பு மடியில் சாவியைப் போட்டு உபசரிப்பார் என்பதில் ஐயமில்லை.

சாவியின் சிங்கப்பூர் வாழ் நண்பர்கள் பட்டியலில் ஆடிட்டர் நாராயணன் என்ற பெயர் இடம் பெறாமல் பட்டியல் முழுமை பெறாது. சிங்கப்பூரில் முன்னணியில் சிறந்து' விளங்கும் இந்திய ஆடிட்டர்களில் நாராயணன் மிக முக்கியமானவர். அரசு வட்டாரத்திலும் அதிகாரிகளிடையிலும் அவர் மிகப் பிரபலம். சிங்கப்பூர் அரசின் கீழ் இயங்கும் தமிழர் நல அமைப்புகளில் நாராயணனுக்குப் பங்கு உண்டு. பொது அறிவு நிரம்பப் பெற்றவர். மனிதர்களைத் துல்லியமாக எடை போடும் ஆற்றல் மிக்கவர். உலக விவகாரங்கள் அவரது உள்ளங்கையில். செய்யும் தொழிலே தெய்வமெனக் கருதுபவர். உழைப்பால் உயர்ந்தவர். சிங்கப்பூரில் வாழும் புத்திசாலி இந்தியர்களில் நாராயணனும் ஒருவர்.

''ஒரு பத்திரிகை ஆசிரியராக மட்டுமின்றி, பத்திரிகையை விற்கத் தெரிந்த பிஸினஸ் அறிவும் சாவிக்குள் இருப்பதை ஒரு ஆடிட்டர் என்ற முறையில் நான் பலமுறை உணர்ந்திருக்கிறேன். நான் எவ்வளவோ படிக்கிறேன். ஆனால் சாவி சாரிடம் கொஞ்ச நேரம் உட்கார்ந்து அவரது வாழ்க்கை அனுபவங்களைக் கேட்டு விட்டு வீடு திரும்பும்போது ஏதோ புதிதாக ஒன்றைத் தெரிந்து கொண்ட உணர்வு எனக்குத் தோன்றும். எனவேதான் சாவியிடம் உரையாடும் வாய்ப்பை நான் தவறவிடுவதேயில்லை'' என்கிறார் ஆடிட்டர் நாராயணன். அவரும் அவரது துணைவியார் ராதிகாவும் சாவியைத் தங்கள் உறவுக்காரர் போல் பாவித்து உபசரிக்கும் அழகே அலாதி.

சாவி எங்கேயும் தனியாகப் பயணம் போகும் வழக்கம்

இல்லாதவர் என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஒருமுறை ஓவியர் ஜெயராஜ் அவர்களை இத்தாலி, பிரான்ஸ், லண்டன், ஆர்ம்ஸ்டர்டாம், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நகரங்களுக்குக் கூட்டிப் போயிருந்தார். பொதுவாக பயணக் கட்டுரைகள் புகைப்படங்களோடுதான் வெளிவரும். சாவியின் அந்தப் பயணக் கட்டுரை ஜெயராஜ் அவர்களின் ஓவியங்களோடு வெளிவந்தது. ஒரு பத்திரிகையாசிரியர் தன் வெளிநாட்டுப் பயணத்தின்போது ஒரு ஓவியரையும் உடன் அழைத்துப் போய் 'ஸ்பாட் ஸ்கெச்சஸ்' வரையச் சொல்லி அதையே தன் கட்டுரைக்குப் பயன்படுத்தியது அநேகமாக அதுதான் தமிழில் முதன்முறையாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

நீல்கிரீஸ் பல்பொருள் அங்காடியின் அதிபர் குடும்பம் சாவிக்கு மிகவும் பரிச்சயமான ஒன்று. சென்னையில் நீல்கிரீஸ் பொறுப்பாளராக இருக்கும் திரு. நடராஜன் அவர்கள் ஒருமுறை சாவியின் ஐரோப்பிய பயணத்தின்போது உடன் சென்றிருந்தார்.

''ஒரு சிறந்த எழுத்தாளருக்குக் கிடைக்கக்கூடிய மாபெரும் கௌரவத்தை அப்போதுதான் நான் நேரில் பார்த்தேன். வெளி நாடுகளில் சாவிக்குத்தான் எத்தனை நண்பர்கள்! எங்கே போனாலும் விமான நிலையத்தில் நண்பர்கள் வந்து காத்திருந்தார்கள். லண்டனில் பி.பி.சி. இயங்கும் 'புஷ் ஹவுஸை' நான் சாவியுடன் போய்ப் பார்த்தபோது எனக்கு ஒரு த்ரில். எப்பேர்பட்ட நிறுவனம் பி.பி.சி! அதனுள் போய்ப் பார்ப்பது அத்தனை எளிதான காரியமல்ல. சாவி என்ற புகழ்மிக்க எழுத்தாளருடன் நான் போயிருந்ததால் எனக்கும் அந்த வாய்ப்பு கிடைத்தது'' என்று சென்னை நீல்கிரீஸ் நடராஜன் பெருமையோடும் பேருவகையோடும் சொல்கிறார்.

பாரீஸ் நகரில் சாவிக்கு ஜமால் என்று ஓர் இனிய நண்பர். பாரீஸ் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சி, யோகா ஆசிரியராக இருக்கும் ஜமால், எழுத்து இலக்கியம் மீது ஆர்வமும் பற்றும் கொண்டவர். பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்தவர்.

சாவி அவர்களுடன் நான் ஒருமுறை பிரான்ஸ் போயிருந்தபோது பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தினர் சாவிக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். அதை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்தியவர் திரு. ஜமால் அவர்கள். சாவியின் பெருமைகளைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். விருந்துக்குப் பின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இப்படி சாவியின் வெளிநாட்டுப் பயணங்களும், வெளி நாட்டில் சாவிக்குக் கிடைத்துள்ள நண்பர்களின் பட்டியலும் வெகு நீளமானது. அவ்வளவு நண்பர்களையும் பற்றி எழுதுவதற்கு இந்த நூலில் இடமில்லை.

---

# 48. நடத்திய விழாக்கள்

ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் நடைபெற்ற நாதஸ்வரக் கலைஞர்கள் மாநாட்டில் வாசித்த நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அவர்களின் திறமையை வெகுவாகப் பாராட்டி 'கல்கி' இதழில் சாவி ஒரு கட்டுரை எழுதினார். பின்னர் தமது 'வாஷிங்டனில் திருமணம்' தொடரிலும் நாமகிரிப்பேட்டை அங்கே போய் வாசிப்பதுபோலக் கற்பனை செய்து எழுதியிருந்தார்.

சாவி கற்பனையாக எழுதியது நாமகிரிப்பேட்டை வாழ்க்கையில் நிஜமாகவே நடந்தது! கிருஷ்ணன் அவர்களை ஒரு இசைத் தூதராக இந்திய அரசு பர்மா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஃபிஜி போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்தது. சுமார் மூன்று மாத காலம் தன் வாசிப்பால் அந்நாட்டு மக்களை மகிழ்வித்து விட்டு திரும்பிய நாமகிரிப்பேட்டை அவர்களுக்கு சென்னையில் டாக்டர் கலைஞர் தலைமையில் ஒரு பெரும் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தார் சாவி. அவ்விழாவில் அப்போதைய அமைச்சர் க.ராசாராம், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. ஆகியோர் முன்னிலையில் தங்க நாதஸ்வரம் பரிசளித்து அக்கலைஞரை பெருமைப்படுத்தினார்.

இந்த விழாவினை நினைவு கூர்ந்து சாவி மணிவிழா மலரில், ''இசையிலே—அதுவும் கர்நாடக இசையிலே— சாவி மிகுந்த நாட்ட முடையவர். பல்வேறு இசைக் கலைஞர்களின் தனித்திறமைகள் பற்றி அவருக்குத் தெரியும். இசையின் நுட்பங்களைப் பற்றி மிகத் தெளிவான அபிப்ராயங்களை அவர் கொண்டிருந்தாலும், இசை

பற்றிய சர்ச்சைகளில் அவர் பெரும்பாலும் ஈடுபடுவதில்லை'' என்று தன் கட்டுரையில் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

நாமகிரிப்பேட்டையாரின் மருமகனும், சென்னைத் தொலைக் காட்சி நிலைய முன்னாள் இயக்குநருமான திரு. ஏ.நடராஜன் சொல்கிறார்:

''நான் அப்போது பாண்டிச்சேரி வானொலி நிலையத்தின் இயக்குனராக இருந்தேன். சென்னையில் என் மாமாவுக்கு நடத்தப் போகும் பாராட்டு விழா ஏற்பாடுகள் பற்றி சாவி அவர்கள் எனக்குத் தொலைபேசி மூலம் அடிக்கடி தகவல் சொல்வார். அவரது தகுதிக்கு என்னிடம் அவற்றைத் தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லை. அதுமட்டுமல்ல, நான் ஏதாவது சின்னச் சின்ன யோசனைகள் சொன்னாலும் 'அவ்வளவுதானே... செஞ்சிட்டாப் போவுது' என்று சொல்லி அதை அக்கறையாகச் செய்து முடிப்பார்.''

முன்னாள் அமைச்சர் க.ராசாராம் அவர்களும் சாவியும் நெருங்கிய நண்பர்கள். திரு. ராசாராம் எந்தக் கட்சியில் இருந்தாலும் சாவி–ராசாராம் இடையேயான நட்பு எப்போதுமே பாதிக்கப்பட்ட தில்லை. அரசியல் கருத்து வேறுபாடு, கட்சிக் கொள்கை எதுவும் அவர்கள் நட்புக்குத் தடையாக இருந்ததில்லை.

கிட்டத்தட்ட ஒரு வருட காலம் நான் ராசாராம் அவர்களை அவ்வப்போது சந்தித்து அவரது வாழ்க்கை வரலாற்றை 'ராசாராம் – 60' என்ற தலைப்பில் எழுதினேன். அந்த நூலை மலேசியா அமைச்சர் டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்தார் சாவி.

திரு. மூப்பனார் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட கல்கி நூற்றாண்டு விழாக்குழுவில் சாவியும் இடம் பெற்றிருந்தார். குழுவின் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டதுடன் தம்முடைய பங்கை மிகச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

'கல்கி' ராஜேந்திரன் கூறுகிறார்:

''மூப்பனார் அவர்கள் தலைமையில் நூற்றாண்டு விழாக் குழுவில் சாவி அருமையாகப் பணியாற்றினார். மிகச் சிறந்த யோசனைகளைக் கூறியதுடன் 'கல்கி நூற்றாண்டு விழா'க்கள் பலவற்றில் பங்கேற்றார். வேறு எந்த ஒரு எழுத்தாளருக்கும் இல்லாத விதத்தில் மிகச்சிறப்பாக தமது குருநாதருக்கு இந்தியப் பெருநகரங்கள் பலவற்றில் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் விழாக்கள் எடுக்கப்பட்டதைக் கண்டு மனம் பூரித்தார். நூற்றாண்டு தொடக்க விழா 09.09.1998ல் ஏற்பாடாகியிருந்தது. அன்று சாவி அவர்களின் வாழ்க்கையில் ஒரு பேரதிர்ச்சி இடியாய் வந்து இறங்கியது. அவரது வாழ்நாள் சேமிப்பு முழுவதும் ஒரு நிதி நிறுவனத்துடன் சேர்ந்து மூழ்கிப் போயிற்று. அன்று பகல் ஒரு மணிக்கு இந்தச் செய்தி அவர் காதுக்கு எட்டியது. ஆனாலும் அதற்காக இடிந்து போகாமல் புன்னகையுடன் அந்த இடியைத் தாங்கிக் கொண்டார். அதுமட்டுமல்ல; அன்று மாலை ஆறு மணிக்கு நடைபெற்ற விழாவுக்கு வந்து, சிறிதும் கலங்காமல் மேடையேறி, அற்புதமாகப் பேசி அமரர் 'கல்கி' அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். இப்படிப் பல சோதனையான சந்தர்ப்பங்களில் சாவி காட்டியிருக்கும் மனோதிடம் எனக்கு பிரமிப்பையும், அவரிடம் பெருமதிப்பையும், மரியாதையையும் ஏற்படுத்துகிறது.''

சமீபகாலமாக சாவி அவர்கள் 'ஞானபாரதி' என்ற அமைப்பில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். கலைத் துறையிலும், பத்திரிகைத் துறையிலும் தங்கள் முத்திரைகளைப் பதித்த இசை, நடன, நாடக, எழுத்துக் கலைஞர்களைப் பாராட்டி ஆண்டு தோறும் பரிசளித்து ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமது நண்பர்கள் நாரத கான சபா ஆர்.கிருஷ்ணசாமி, கோபுலு, திருமதி சிவசங்கரி மற்றும் தமது மகள் திருமதி உமா பிரசாத் ஆகியோரை அறங்காவலர்களாகக் கொண்டு 'ஞானபாரதி

அறக்கட்டளை' ஒன்றை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கினார். வயது பேதம் பார்க்காமல் முத்திரை பதித்த வித்தகர்களைத் தேர்வு செய்து ஒவ்வொரு ஆண்டும் எளிமையான, அதே சமயம் ஏற்றமிகு விழாவாக ஏற்பாடு செய்து பொற்கிழி அளித்து கலைஞர்களைக் கௌரவித்து வருகிறார்.

---

# 49. நண்பர்கள் வட்டம்

எழுதும்போது மட்டுமின்றி சாதாரணமாக உரையாடும் நேரங்களிலும் இயல்பாக நகைச்சுவை இழையோடும் ஒரு பேற்றினைப் பெற்றிருப்பவர் சாவி.

எழுத்தாளர் பரணீதரன் சொல்வதுபோல ''ஊனோடும் உதிரத்தோடும் ஊறிவிட்ட இத்தகைய நகைச்சுவை உணர்வு கொண்டவர்களால்தான் அகங்காரத்தையும், கோபத்தையும், துயரத்தையும், சுகத்தையும், இறப்பையும், பிறப்பையும், கண்ணீரையும், கட்டுக்கடங்காத மகிழ்ச்சியையும் சீர் படுத்தி, நெறிப்படுத்தி ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் சமமாக அமர்த்தி வாழ்க்கை ஓடத்தை உள்ளார்ந்த அமைதியுடன் செலுத்த முடியும்.''

சாவியால் அப்படிச் செலுத்த முடிகிறது என்பது உண்மை.

சாவி இதழுக்கு பதில்கள் எழுதும்போது நான் பலமுறை அருகிலிருந்து கவனித்திருக்கிறேன். அஞ்சலட்டையில் எழுதப் பட்டிருக்கும் கேள்விகளைப் படித்ததும் சட்டென்று அவருக்குப் பதில் தோன்றும் வேகத்தைப் பார்க்க வேண்டும்! அதே அஞ்சல் அட்டையில் அந்தக் கேள்விக்குக் கீழேயே தன் பதிலை நுணுக்கி எழுதி அப்படியே அச்சுக்கு அனுப்பி விடுவார். ஒவ்வொரு பதிலிலும் நகைச்சுவைக் கீற்று மின்னல் போல் பளிச்சிடும்.

'பதில் ஒரே ஒரு வரியில்தான் என்றாலும் சாவி அதிலும்

நம்மைச் சிரிக்க வைத்து விடுவார். அல்வாத் துண்டு விரல் அளவு இருந்தாலும் இனிக்காமலா போகும்?' என்று கேட்கும் ராணி ஆசிரியர் அ.மா.சாமி அவர்கள் சாவியின் பதில்களில் தான் மிகவும் ரசித்த சிலவற்றைச் சொல்கிறார்:

ஒரு கேள்வி: ''மஞ்சள் பத்திரிகை எப்படி இருக்கும்?''

சாவியின் பதில்: '''பச்சை'யாக இருக்கும்.''

கேள்வி: ''தமிழ்நாட்டில் இ.காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்குமா?''

பதில்: ''இ.காங்கிரஸ் ஆட்சி மக்களுக்குப் பிடிக்குமா?''

கேள்வி: பொன், பெண் – நீங்கள் விரும்புவது எது?

பதில்: 'PEN.'

இப்படி நகைச்சுவையைப் பக்குவமாகக் கையாள்வது சாவிக்குக் கை வந்த கலை.

நகைச்சுவை உணர்வு மிக்கவர்கள் எப்போதுமே சாவிக்கு நெருக்கமாக இருப்பார்கள்.

'நீங்கள் யாருடைய பரம ரசிகர்?' என்று ஒரு வாசகர் கேட்ட கேள்விக்கு 'மனோரமா' என்று சாவி பதில் சொல்லி இருக்கிறார். காரணம்: நகைச்சுவை.

சாவியின் நகைச்சுவை பற்றி தினமணி கார்ட்டூனிஸ்ட் மதி:

'சாவி' இதழில் நான் வரைந்திருந்த கார்ட்டூனைப் பார்த்து ரசித்த சாவி அவர்கள் 'கடற்கரையில் ஒரு கூட்டம் போட்டு உனது கைக்கு ஒரு மோதிரம் போடலாம்னு தோணுது' என்று சொன்னார். அடுத்த நிமிடம் ''ஏதோ மனதில் பட்டதைச் சொன்னேன். அதற்காக 'மோதிரம் எங்கே?'ன்னு கேட்டுடாதே'' என்று தமக்கே உரிய டைமிங்கோடு முடித்தார்.

அதேபோல சாவி இதழில் எழுதியதற்காக சக பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு சன்மானத் தொகையாக ஐந்நூறு ரூபாய்க்கு 'செக்' ஒன்றை என் மூலம் கொடுத்தனுப்பினார். அதைப் பெற்றுக் கொண்டவரோ 'ஆகா! நான் இதை எதிர்பார்க்கவே இல்லை. சாவியே கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறார். இதை நான் வங்கியில் டெபாசிட் செய்யப் போவதில்லை. என்னுடன் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளப் போகிறேன்' என்றார். மறுநாள் நான் இதை சாவியிடம் தெரிவித்தபோது 'அடாடா, இது தெரிந்திருந்தால் செக்கை ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் கொடுத்திருப்பேனே' என்றதும் நான் குபீரென்று சிரித்து விட்டேன். அந்த இயல்பான நகைச்சுவையை நான் லெகுவாக ரசித்தேன்.

தமது மகள் மாலதியுடனும், மருமகன் ராமமூர்த்தியுடனும் ஒருமுறை காரில் போய்க் கொண்டிருந்தார் சாவி. பேச்சு வாக்கில் 'பெட்ரோல் விலை ஏறிவிட்டதே' என்றார் ராமமூர்த்தி. சற்று கூட யோசிக்காமல் 'அடுத்த வருடத்தை விட இந்த வருடம் விலை குறைவாக இருக்கிறதே என்று சந்தோஷப் படுங்கள்' என்றாராம் சாவி பட்டென்று. 'அப்பாவின் இந்த ஜோக்கை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது' என்கிறார் மாலதி.

இப்படி தனது இயல்பான நகைச்சுவைப் பேச்சாலும், எழுத்தாலும் பலரையும் கவர்ந்திருப்பவர் சாவி. இந்தப் பண்பின் காரணமாகவே இவருக்கு ஒரு நெருங்கிய வட்டம் – உண்மையான நண்பர்கள் அடங்கிய வட்டம் – உருவாகி இருக்கிறது.

தமிழக சட்டப் பேரவையின் முன்னாள் தலைவரும், முன்னாள் அமைச்சருமான க.ராசாராம் அவர்கள் சாவியின் நெருங்கிய நண்பர். நான் எப்போது அவரைப் பார்க்கப் போனாலும் 'என்ன, சாவி எப்படி இருக்கார்?' என்பதுதான் அவர் கேட்கும் முதல் கேள்வியாக இருக்கும்.

ராசாராம் அவர்கள் ஒருமுறை டெல்லிக்குப் போயிருந்த போது சாவியும் அங்கே போயிருந்தார். அப்போது தனக்குத் தெரிந்த அரசியல் தலைவர்களிடமெல்லாம் (பட்நாயக், ஜகஜீவன்ராம் போன்றவர்களிடம்) சாவியை அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினார். சாவி தினமணி கதிரில் அவற்றை ஒரு புகைப்படக் கட்டுரையாக வெளியிட ராசாராமுக்கு வந்தது தலைவலி! 'டெல்லியில் ராசாராம் தமக்காக ஏதோ ஒரு தனி 'லாபி'யை உருவாக்கிக் கொண்டு வருவதாக தி.மு.க. தலைமைக்குச் செய்தி எட்ட, தி.மு.க.விலிருந்து அவர் விலகுவதற்கு அதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

நேரம் கிடைக்கும்போது ராசாராம் அவர்கள் சாவி வீட்டுக்கு வருவதும், ராசாராம் இல்லத்துக்குச் சாவி போவதும் இன்றும் வாடிக்கை. சாவியின் எண்பத்தைந்தாவது பிறந்த நாளான இந்த ஆண்டு ஆகஸ்டு பத்தாம் தேதியன்று ராசாராம் சாவியின் வீட்டுக்கு வந்து சால்வை போர்த்தி வாழ்த்தியதும், அதே மாதம் இருபத்தாறாம் தேதியன்று ராசாராம் அவர்களின் எழுபத்தைந்தாவது பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு சாவி அவரை வாழ்த்திப் பேசியதும் ஒரு நீண்ட கால நட்பின் ஆழத்தை உணர்த்தும் செயலே.

அதேபோல சாவியின் உள்வட்ட நண்பர்களில் மிகவும் முக்கியமானவர் கவிஞர் வைரமுத்து அவர்கள். கவிஞரின் தமிழில் சாவி சொக்கிப் போவார். அவர் இல்லாத சமயங்களில் பல முறை என்னிடம் 'எப்படி ஸார் வைரமுத்துவுக்கு மட்டும் தமிழ் இவ்வளவு அழகா வருது? அடாடா...!' என்று வியந்து பாராட்டி மகிழ்ந்திருக்கிறார். கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் சாவியின் கேள்வி – பதில்களைப் படித்து ரசிக்கத் தவறியதில்லை.

சாவியின் 'வேதவித்து' நாவலுக்கு தாம் எழுதிய

முன்னுரையில் கவிஞர் வைரமுத்து குறிப்பிடுகிறார்:

''இந்த நாவலை நான் வாசித்தேன் என்பது பொய். இந்த நாவலுக்குள் நான் வசித்தேன் என்பதே மெய்.''

அதேபோல சாவியின் 'பழைய கணக்கு' புத்தகத்தைப் படித்துவிட்டு வைரமுத்து சாவிக்கு எழுதிய கடிதத்தில் (14.7.91) 'எல்லாச் சிப்பிகளிலும் கூட மழை தன்னை விதைத்து விட்டுப் போகலாம்; ஆனால் ஏதாவது ஒரு சிப்பிதான் அதை முத்தாய் முதிர்ந்து கொடுக்க முடியும்' என்று குறிப்பிட்டு 'உங்கள் மூலமாக நாங்கள் பிறக்காத காலத்திலும் வாழ முடிகிறது' என்று எழுதியிருக்கிறார்.

சாவியைப் 'பெருமைக்குரிய பெரியவர்' என்று போற்றும் கவிஞர் வைரமுத்து,

''பேராசிரியர் கல்கியை நான் பார்த்ததில்லை. அக்கிரகாரத்து அதிசய மனிதர் வ.ரா.வை நான் பார்த்ததில்லை. ஆசிரியர் சாவியிடம் இந்த இருவரையும் ஒரு சேரப் பார்க்கிறேன்...

எழுத்தாளர்...

எழுத்தாளர்களை உருவாக்கிய எழுத்தாளர்...

உலவும் காற்றாய், ஓடும் நதியாய் இந்த வயதிலும் இளமை குன்றாத செயல் வீரர்...

வாழ்க்கையின் பன்முகப்பட்ட வலிகளை – மகிழ்ச்சியை – தனது உடம்பிலும் நெஞ்சிலும் தேக்கி வைத்திருக்கும் அனுபவங்களின் கஜானா...

எழுத்தில் முரசு கொட்டிய முற்போக்குச் சிந்தனைகளைச் சொந்த வாழ்விலும் கடைப்பிடித்துக் காட்டிய கர்மவீரர்.

வெற்றிகளை மட்டுமே பகிர்ந்து கொண்டு தோல்விகளைப் பதுக்கி வைத்துக் கொள்ளும் பண்பாட்டாளர்...

தமிழ்ப் பத்திரிகை உலகின் உருவத்தையும், உள்ளடக்கத்தையும் முன்னெடுத்துச் சென்ற முன்னோடிகளுள் ஒருவர்.

நகைச்சுவையைச் சமைக்கவும் தெரிந்தவர்; சாப்பிடவும் தெரிந்தவர்.

மேடையில், உரையாடலில் யாரையும் காயப்படுத்தி விடாத நனி நாகரிகர்...

முன்னோடிகளைப் போற்றும் பொன்னுள்ளம் கொண்டவர்...

காந்தி முதல் கலைஞர் வரை உடனிருந்து கட்டுரை எழுதிய உயர்ந்த வரலாற்றுக்கு உரிமையுள்ள ஒரே மனிதர்...

எல்லாவற்றுக்கும் மேலாய் தன் மனைவி ஜானகி அம்மையார் என்னும் உயர்ந்த பெண்மணியைக் கண்போல் காக்கும் கணவர்...

தன் பிள்ளைகளுக்கு முதலெழுத்தாக மட்டும் இல்லாமல் முதலாகவும் இருக்கும் மூத்த தந்தை...

அவரை நித்தம் ஒரு பொழுதேனும் நினைத்துக் கொள்வதால் நெஞ்சில் ஈரம் கட்டுகிறது.

அவர் பல்லாண்டு வாழவேண்டுமென்று என் உதடுகள் எனக்குத் தெரியாமலேயே முணுமுணுத்துக் கொள்கின்றன.

ஏதோ ஒரு பாசம், இனந்தெரியாத நேசம் அவர் மீது எனக்கு'' என்று முடிக்கிறார்.

'எனது 85வது பிறந்த நாளின்போது என் வீட்டுக்கு வந்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாக இருந்து உரையாடி விட்டுப் போனார் கவிஞர்' என்று மிகப் பெருமையோடும் பூரிப்போடும் சொல்லி மகிழ்கிறார் சாவி.

பெங்களூர் நீல்கிரீஸ் அதிபர் சென்னியப்பன் சாவியின் குடும்ப நண்பர். நீல்கிரீஸ் போய் சென்னியப்பனைப் பார்க்காமல் திரும்பினால் சாவியின் பெங்களூர்ப் பயணம் எதுவும் முழுமை அடைந்ததில்லை.

''பிரிகேட் ரோடில் ஒரு மூலையில் மிகச் சிறிய அளவில் நாங்கள் நீல்கிரீஸ் தொடங்கியபோதே சாவியும் அவரது மனைவியும் இங்கே வந்து சாமான்கள் வாங்கிப் போயிருக்கிறார்கள். அப்போதுதான் சாவியின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது' என்று நினைவு அலைகளில் மூழ்கிப் போகிறார் திரு. சென்னியப்பன்.

''எங்கள் வளர்ச்சியில் சாவியின் பங்கு மகத்தானது. ஈரோடில் எங்களது டெய்ரி ஃபார்ம் பற்றி சாவி விகடனில் ஒரு கட்டுரை எழுதி பிரபலப்படுத்தினார். நான் என் சகோதரர்கள் மணி, ராஜா மூவரும் நீல்கிரீஸ் வளர்ச்சியில் இணைந்து இயங்கும் பாங்கினை ஒரு நல்ல காபிக்கு ஒப்பிட்டு 'சரியான விகிதத்தில் கலக்கப்பட்ட பால் – டிகாக்ஷன் – சர்க்கரை போன்று இந்த மூவரும்' என்று சாவி ஒருமுறை ஈரோடு நீல்கிரீஸ் நிகழ்த்திய நிகழ்ச்சி ஒன்றில் பேசியதை நான் இப்போதும் நினைத்துப் பார்த்து ரசிப்பதுண்டு.

எங்கள் நீல்கிரீஸ் கடைக்குக் கலைஞரை ஒருமுறை அழைத்து வந்து எங்களைப் பெருமைப்படுத்தியவர் சாவி.

அதேபோல் காமராஜரிடமிருந்து எங்கள் தரமான வெண்ணெய் மற்றும் இதர பொருட்கள் பற்றிப் பாராட்டி எழுதியுள்ள 'சர்டிபிகேட்' வாங்கித் தந்தவரும் அவர்தான்.

விகடனிலும், கதிரிலும், சாவியிலும் எங்களைப் பற்றி சாவி எழுதிய எழுத்துக்கள் எங்கள் மீது போட்ட வெளிச்சம்தான் நாங்கள் இந்த அளவுக்கு முன்னேறப் பின்னணி பலமாக அமைந்தது'' என்று மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார் சென்னியப்பன்.

கோவையில் உள்ள பல வர்த்தகப் பிரமுகர்களும், தொழில் அதிபர்களும் சாவியின் நீண்ட கால நண்பர்கள். அவர்களில் சாவியிடம் மிகுந்த அன்போடு பழகிய 'அசோகா பாக்கு' உரிமையாளர் திரு. கிருஷ்ணா செட்டியார் முக்கியமானவர். சாவியின் மகன் பாச்சா கோவையில் ஜி.டி.நாயுடுவிடம் தொழில் கல்வி பயின்ற ஓராண்டு காலம் அசோகா கிருஷ்ண செட்டியார் அவர்கள் வீட்டில்தான் தங்கியிருந்தார். செட்டியார் அவர்களின் புதல்வர்கள் குப்புராஜ், அனந்த் இருவரும் அந்த நட்புறவை மறவாமல் தொடர்ந்து பழகி வருவதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறார் சாவி.

சென்னையில் முக்கிய தொழிலதிபர்கள் பலர் சாவியின் நண்பர்கள். அவர்களில் திரு. ஒபுல் ரெட்டியும், திரு. டி.டி.வாசுவும் ரொம்ப நெருக்கம்.

'பாண்ட்ஸ்' பலராமன் அவர்கள் சாவியின் உற்ற நண்பர். சாவியின் நகைச்சுவைப் பேச்சு, எழுத்து இரண்டையும் ரசித்துப் பாராட்டுவார். சாவி அவர்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். சாவி இதழ் இரண்டாவது முறை தோன்றுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர். திரு. பலராமன் அவர்கள் தமக்குச் செய்துள்ள பேருதவிகளை சாவி மிகப் பெருமையோடு அடிக்கடி சொல்லிப் பெருமைப்படுவதுண்டு. திரு. பலராமன் அவர்களின் மனைவி திருமதி சாந்தி பலராமனும் சாவியின் எழுத்துகளைப் படித்து ரசிப்பவர். சாவி குடும்பத்தாருடன் அன்போடு பழகி வருபவர்.

நாரத கான சபாவின் செயலாளரும், சென்னை உயர்நீதி மன்ற மூத்த வழக்கறிஞர்களில் ஒருவருமான ஆர்.கிருஷ்ண சாமியின் மீது சாவிக்கு மிகுந்த மதிப்பும் அன்பும் உண்டு. வாரம் ஒரு முறையாவது இருவரும் சந்தித்து நாட்டு நடப்பு பற்றிப் பேசி, விவாதித்து தெளிவு காணத் தவறுவதில்லை.

கிருஷ்ண கான சபா செயலாளர் திரு. யக்ஞராமன் சாவியின் ஆப்த நண்பர். சுருதி லயம் பிசகாத இனிய நட்பு.

ஸ்ரீராம் குரூப் டைரக்டர் கண்ணன் சாவியின் நீண்ட நாளைய நண்பர். ஸ்ரீராம் நிறுவனத்தின் தூண்களில் ஒருவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் கண்ணன் இலக்கியத்தில் மிக்க ஈடுபாடு கொண்டவர். அடக்கமான சாதனையாளர். சாவியிடம் மிகுந்த மதிப்பு கொண்டுள்ளவர். பல நேரங்களில் சாவிக்குப் பெருமை சேர்த்தவர். இரு குடும்பத்தினரும் உறவினர் போல் பழகி வருபவர்கள்.

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் மணி கிருஷ்ணசாமி, எம்.கே. என்றழைக்கப்படும் எம்.கிருஷ்ணசாமி, எக்ஸ்பிரஸின் முன்னாள் பொது மேலாளர் டி.கே.தியாகராஜன் (டி.கே.டி.), ஆர்.ராமகிருஷ்ணன், விழாவேந்தன் என்.கே.டி.முத்து, திருமதி சுலோசனா முத்து, திரு. வெங்கட்ராமன்– திருமதி ராமப்ரியா (ஜெயம்) தம்பதியர், முதுபெரும் எழுத்தாளர் பகீரதன், கீதா போதகர் கிரிதாரி பிரசாத், அன்னபூர்ணா உரிமையாளர் தாமோதரசாமி நாயுடு, அண்ணா நகர் ரங்க விலாஸ் திரு. பத்மநாபன் என்று சாவியின் நண்பர்கள் பட்டியல் மிக நீளமானது.

பெங்களூரின் புகழ்பெற்ற மாவல்லி டிபன் ரூம் அதிபர் ஹரிச்சந்திரா சாவியின் நெருங்கிய நண்பர். பெங்களூர் போகும் போதெல்லாம் எம்.டி.ஆரில் சாவிக்குத் தரப்படும் தனி மரியாதையை நான் பலமுறை நேரில் கண்டிருக்கிறேன். ஹரிச் சந்திராவின் கள்ளமில்லாத அந்த வெடிச் சிரிப்பு சாவிக்கு மிகவும் பிடிக்கும். சாவியின் ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் பெங்களூரிலிருந்து எம்.டி.ஆரின் 'ஸ்பெஷல் ஸ்வீட்ஸ்' சாவிக்கு வரத் தவறியதில்லை.

சமீபத்தில் ஹரிச்சந்திரா மாரடைப்பு காரணமாக இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு சாவி ஆறாத்துயருக்கு ஆளானார்.

சாவியின் நெருங்கிய நண்பர் வட்டத்தில் வயது

வித்தியாசம் இராது. இளைய தலைமுறையினர் பலருடன் பழகி அவர்களுடன் முற்போக்கு எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில் சாவிக்கு ஆர்வம் அதிகம். அப்படிப்பட்டவர்களில் சென்னை மாநகரத் தந்தை மு.க.ஸ்டாலின் அவர்கள் முக்கியமானவர். சாவியின் மீது மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டிருப்பவர் ஸ்டாலின். மேயர் பதவியேற்றதும் ஸ்டாலின் அவர்கள் சாவியின் வீட்டுக்கு நேரில் சென்று பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பெற்றதை சாவி மிகப் பெருமையோடு சொல்லி மகிழ்கிறார். சாவியின் எண்பத்தைந்தாவது பிறந்த நாளின்போது வீட்டுக்கு வந்து வாழ்த்திய பிரமுகர்களில் மேயர் ஸ்டாலின் அவர்களும், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் மிக முக்கியமானவர்கள்.

எண்பத்தைந்து வயதுக்காரரான சாவி அவர்களுக்கு எழுபத்தைந்து வயதிலும் நண்பர்கள் உண்டு. இருபத்தைந்து வயதிலும் நண்பர்கள் உண்டு. இதுவே சாவியின் தனிச்சிறப்பு.

---

# 50. நல்லதொரு குடும்பம்

'நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்' என்றால் சாவி அவர்களின் குடும்பம் சந்தேகமின்றி ஒரு பல்கலைக் கழகம்தான்.

அந்தக் குடும்பத்தின் ஆதார சுருதி திருமதி ஜானகி அம்மையார் என்றால் மிகையில்லை. எப்போதும் எழுத்தும் பத்திரிகையுமே தன் உலகம் என்று ஒரு தனி உலகத்தில் மிதந்து கொண்டிருக்கும் கணவர். பிரசித்தி பெற்ற அவரது முன்கோபம். இதற்கிடையில் நான்கு மகள்கள், இரண்டு மகன்கள் ஆகியோரை வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்க வேண்டிய பெரும்பொறுப்பு. இன்றைய வசதிகள் ஏதும் இல்லாத அன்றைய சூழ்நிலையில் திருமதி ஜானகி அம்மையார் இந்தக் குடும்பத்தைப் பேணிக் காத்த பாங்குக்கு சரியான முறையில் சாவி அவர்களாலேயே நன்றி செலுத்தி விட முடியாது.

சாவிக்கு எல்லாமே குறித்த நேரத்தில் நடந்தாக வேண்டும். மணமுள்ள காபி, சுவையான உணவு போன்ற சில பழக்கங்களுக்கு கிட்டத்தட்ட அவர் அடிமை. காபி என்றால் அது ஒரு பக்குவமான சூட்டில் இருக்க வேண்டும். அந்தப் பக்குவம் திருமதி சாவிக்கு மட்டுமே தெரியும். காபி குடிக்கும் நேரத்தில் சாவி எதையாவது எழுதிக் கொண்டிருந்தால் காபியைக் கொண்டு வந்து பக்கத்தில் நின்று கொண்டு, 'இந்தாங்க காபி' என்று சொல்லி அவரது எழுத்துத் தவத்தைக் கலைத்து விடாமல்

காத்திருந்து கணவர் தலை நிமிரும்போது சட்டென்று காபியை நீட்டும் அவரது பண்பைக் கண்டு நான் வியந்திருக்கிறேன்.

பொறுமை என்றால் அப்படியொரு இமாலயப் பொறுமை.

திருமதி ஜானகி அம்மையார் சமையல் கலையில் ஒரு விற்பன்னர். நாமக்கல் கவிஞர், மதுரை சோமு, கிருபானந்த வாரியார், காமராஜர், கலைஞர் போன்ற பல்துறை பிரமுகர்களும் அம்மாவின் 'கைப்பக்குவத்தை'ப் பாராட்டாமல் போனதில்ல.

சாவி தம்பதிக்கு ஜெயந்தி, ஜெயா, உமா, மாலதி என்று நான்கு பெண்கள். பாலசந்திரன் (பாச்சா), மணி என்று இரண்டு பிள்ளைகள். இவர்களில் உமா, மாலதி, மணி மூவர் மட்டுமே இப்போது இங்கே சென்னையிலும், மற்றவர்கள் வெளிநாடு (அமெரிக்கா, குவைத், நியூஸிலாந்து) களிலும் இருக்கிறார்கள்.

''அப்பாவுக்கு எப்போதுமே பத்திரிகை ஒன்றுதான் பேச்சு, மூச்சு எல்லாம். தூக்கத்தில் கூட அநேகமாக அவரது கனவுகள் தம் எழுத்தைப் பற்றியும், பத்திரிகை பற்றியும்தான் இருக்கும். சின்ன வயதில் நாங்கள் என்ன படிக்கிறோம், எங்கே படிக்கிறோம் என்பது கூட அவருக்குத் தெரியாது. வீட்டுக்கு வரும் அவரது நண்பர்கள் எங்கள் படிப்பைப் பற்றி விசாரித்தால் அப்பா அவர்கள் எதிரிலேயே எங்களைக் கூப்பிட்டு விவரங்களைச் சொல்லச் சொல்வார். அப்போது எங்களுக்கு சிரிப்புதான் வரும்'' என்கிறார் மூத்த மகள் ஜெயந்தி. அவரது கணவர் விசுவநாதன் பொறியியல் பட்டதாரி. குவைத் நாட்டில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறார்.

தன் முதல் மாப்பிள்ளை விசுவநாதன் பற்றி சாவி சொல்கிறார்:

''ரொம்பவும் அடக்கமானவர். உழைப்பால் உயர்ந்தவர். நகைச்சுவையோடு பேசும் திறன் வாய்ந்தவர். அவரது நகைச்சுவைப்

பேச்சை நான் ரொம்பவும் ரசிப்பேன். ரசம் நன்றாக அமைந்து விட்டால் அதை ரசம் என்று சொல்ல மாட்டார். ர'ஜம்' என்பார். இப்படிச் சின்னச் சின்ன மின்னல் ஜோக்குகள் அவரிடமிருந்து அடிக்கடி பளிச்சிடும்.''

ஜெயந்தி விசுவநாதனுக்கு அருண், விஜய் என்று இரண்டு மகன்கள். இருவரும் இப்போது அமெரிக்காவில் பொறியாளர்கள்.

அடுத்த மகள் ஜெயா. இவர் சில காலம் கோபுலுவின் 'Adwave' விளம்பர நிறுவனத்தில் ஆர்ட்டிஸ்டாக இருந்து பயிற்சி பெற்றார். இப்போது நியூஸிலாந்தில் கணவர் அர்த்தநாரியுடன் வசித்து வருகிறார். கௌதம், ஆர்த்தி, அமிதாப் மும்மணிகளும் இவர்களின் செல்வங்கள்.

ஜெயாவின் வாழ்க்கையில் விதி விளையாடிய சோக சம்பவம் ஒன்று உண்டு. ஜெயாவின் கணவர் ராமதாஸ் மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான மஸ்கட்டில் வேலை பார்த்து வந்தார். திருமணமான புதிதில் தலை தீபாவளிக்கு சென்னைக்கு வந்து கொண்டிருந்தார். மஸ்கட்டிலிருந்து பம்பாய் வந்து அங்கிருந்து சென்னைக்கு விமானம் ஏறிப் புறப்பட்ட சில நிமிடங்களில் நிகழ்ந்த மிகக் கோரமான விபத்தில் உயிரிழந்தார். ஈரான் தலைநகர் டெஹ்ரானில் பணியாற்றிக் கொண்டிருந்த அர்த்தநாரி என்பவரின் மனைவியும் அதே விபத்தில் உயிரிழக்க நேரிட்டது. சாவியின் மாப்பிள்ளை ராமதாஸ் அந்த விபத்தில் உயிரிழந்த செய்தியைக் கேள்விப்பட்ட அர்த்தநாரி ஓராண்டு காலத்துக்குப் பின் சாவி அவர்களைத் தொடர்பு கொண்டு (நண்பர் ராமசாமி என்பவர் மூலம்) 'உங்கள் மாப்பிள்ளை விமான விபத்தில் போய்விட்ட செய்தி அறிந்தேன். என் மனைவியும் அதே விபத்தில் உயிரிழந்த செய்தி தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். தங்கள் மாப்பிள்ளையையும் என் மனைவியையும் பலி வாங்கிய அந்த விதி என்னையும் தங்கள் மகளையும்

ஏன் சேர்த்து வைக்கக் கூடாது?' என்று கேட்டிருந்தார். சாவி முற்போக்கு எண்ணங்கள் கொண்டவர். அதனால் உடனே அர்த்தநாரியை சென்னைக்குப் புறப்பட்டு வரச்செய்து தம் மகள் 'ஜெயாவைப் பார்த்துப் பேசிய பின் திருமணம் பற்றி முடிவு செய்யுங்கள்' என்று பதில் சொல்லி அனுப்பினார்

ஒரு பிராமணக் குடும்பத்தில் புரட்சித் திருமணமாக ஜெயா – அர்த்தநாரி திருமணம் நடந்தேறியது. இத்திருமணம் பற்றி குமுதத்தில் பால்யூ எழுதிய கட்டுரையைப் பற்றி இன்னும் சிலர் நினைவில் வைத்திருந்து பேசுவதுண்டு. இயக்குநர் கே.பாலசந்தர் இல்லத்தில் இப்படியொரு திருமணம் நடைபெற்ற போது 'இத்திருமணம் நடைபெற நான் முன் மாதிரியாகக் கொண்டது சாவி மகள் ஜெயாவின் திருமணம்தான்!' என்று வெளிப்படை யாகவே அந்த திருமண விழாவில் பேசினார். பாலசந்தர் இல்லத் திருமணம் சாவிக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது.

ஜெயாவின் கணவர் அர்த்தநாரி ஓர் அறிவு ஜீவி. ஆக்லாந்தில் பல்கலைக் கழகப் பேராசிரியராக இருக்கிறார். அவ்வப்போது கவிதைகள், கதை, கட்டுரைகள் எழுதுவது இவர் பொழுது போக்கு. எழுத்தை மட்டும் இவர் முழு நேரப் பணியாகக் கொண்டிருந்தால் இன்று தமிழில் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்ந்திருப்பார். சாவிக்குத் தன் மாப்பிள்ளை அர்த்தநாரியின் எழுத்துத் திறமை வீணாய்ப் போகிறதே என்ற வருத்தம் எப்போதும் உண்டு.

''மாப்பிள்ளை என்பதற்காகச் சொல்லவில்லை. அவரிடம் நான் கண்ட அந்த எழுத்துப் 'பொறி'யை வைத்துச் சொல்கிறேன்'' என்கிறார் சாவி. ஒரு சமயம் அர்த்தநாரிக்கு சாவி எழுதிய கடிதம் ஒன்றில் 'உங்களுக்குள் இருக்கும் எழுத்தாளரை நீங்கள் அடக்கி வைத்திருப்பது மகா பாவம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மைதான். சாவி இதழில் அர்த்தநாரி பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். மவுண்ட் பேட்டன் பிரபு மரணமடைந்த சமயம் சாவியில் ஒரு கட்டுரை எழுதியபோது தான் அடைந்த உணர்வுகளை அர்த்தநாரி இங்கே சொல்கிறார்:

''சில தினங்களுக்கு முன் 'நள்ளிரவில் சுதந்திரம்' என்ற பிரபலமான ஆங்கிலப் புத்தகத்தைப் பற்றிப் படித்தது நினைவுக்கு வந்தது. அதில் மவுண்ட் பேட்டன், நேரு, திருமதி மவுண்ட் பேட்டன் இவர்களைப் பற்றிப் படித்தவற்றை சாவியுடன் விமரிசித்துக் கொண்டிருந்ததும் நினைவுக்கு வந்தது. இருந்தாலும் இதற்கு முன் பத்திரிகையில் எழுதிப் பழக்கமில்லாத என்னைப் பார்த்து 'சாவியிலே ஒரு பக்கம் வரணும். கார்த்தாலே ரெடியா இருக்கணும்' என்று சொல்லிவிட்டு ஆசிரியர் சாவி பதில்கள் எழுதுவதில் முனைந்து விட்டார்.

மவுண்ட் பேட்டன் உயிரோடு இருந்தபோது எங்களுக்குள் பரிச்சயமில்லை. அப்படி இருக்க எங்கே அவருக்காகக் கண்ணீர் விட்டு எழுதுவது? எழுத வேண்டுமே என்றுதான் கண்ணீர் வந்தது. மீண்டும் நள்ளிரவில் சுதந்திரத்தைத் தேடிப் போனேன். இரவு முழுக்கப் படித்துக் கொண்டிருந்தேன். மவுண்ட்பேட்டன் செய்த காரியத்தை நினைத்துக் கோபம் கோபமாக வந்தது. இப்படி திடீரென்று மண்டையைப் போட்டதும் இல்லாமல் என்னையும் மாட்ட வைத்து விட்டாரே என்று. 'துக்கத்தில் எழுதவே வரமாட்டேன் என்கிறது' என்று சொல்லி தப்பித்து விடலாமா என்று புத்திசாலித்தனமாக மூளை வேலை செய்தது. 'அது எவ்வளவு முட்டாள் தனமான யோசனை!' என்று ஆசிரியர் கோபத்துக்கு அடிக்கடி அறிமுகமாகி இருந்த இன்னொரு மனம் சொன்னது.

எனக்கு நானே அழுது கொண்டிருப்பதை விட்டுவிட்டு மவுண்ட்பேட்டன் மறைவுக்கு, தமிழகத்தையே எப்படி அழ

வைப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தேன். நேரம் பறந்து கொண்டிருந்தது.

காலையில் ஆசிரியரிடம் நான் எழுதி இருந்த கட்டுரையைக் கொடுத்தேன்.

'அட! ரெடியா! நேரா கம்போஸிங்குக்கு அனுப்பிடறேன்' என்று சொல்லியபடி காரில் ஏறினார்.

நான் எழுதிய இரங்கல் அச்சில் ஏறுமா என்ற கவலையில், ஆசிரியர் அதை அங்கீகரிக்க வேண்டுமே என்ற கவலையில் ஆழ்ந்திருந்தேன்.

மாலையில் திரும்பி வந்த ஆசிரியர் 'எங்கே அர்த்தநாரி, ஆளையே காணோம்? என்று கேட்டுக் கொண்டே வந்த ஆசிரியர் 'அருமையாக எழுதி இருக்கார்' என்று பாராட்டினார். 'இரவில் வாங்கினால் என்ன? இரவல் வாங்க வில்லையே!' நல்ல வரி. நீங்க நிறைய எழுதணும்' என்றார்.

அன்று மவுண்ட் பேட்டன் மறைவுக்காகச் சந்தோஷப் பட்டது நான் ஒருவனாகத்தான் இருக்கும்!

இன்னொரு சமயம் நான் எழுதித் தந்த ஒரு கட்டுரையைப் படித்துப் பார்த்த சாவி அவர்கள் 'இது என்ன எழுதி இருக்கிறீர்கள்? புரியலையே?' என்றார்.

அதற்கு ஒரு விளக்க உரையைச் சொன்னதும் 'அப்படியா! அது சரி, இப்படியே ஒவ்வொரு வாசகராகப் போய் விளக்கம் கொடுக்கணும்னா நிறையச் செலவாகுமே!' என்றார் கிண்டலாக.

ஆசிரியர் சாவி எனக்கு பத்திரிகை ஆசிரியர் மட்டுமல்ல; எத்தனை பெரிய இடியே விழுந்தாலும், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதில் மனம் தளராமல் ஈடுபடும் வித்தையைக் கற்றுக் கொடுத்த ஆசானும் அவர்தான். 'எதை

இழந்தாலும் மீட்டு விடலாம். தைரியத்தை மட்டும் விடக் கூடாது' என்பார். சொல்வதோடு மட்டுமல்ல; பத்திரிகை நடத்துவதிலும், வாழ்க்கையிலும், பல கஷ்டங்களும், நஷ்டங்களும் வந்தபோதெல்லாம் அவர் செயலும் அப்படித்தான் இருந்தது.''

ஜெயாவுக்கு ஏற்பட்ட சோதனை போன்று சாவியின் மூன்றாவது மகள் உமாவுக்கும் (ஊர்மிளா) ஏற்பட்டது. உமாவின் வாழ்க்கையில் விதி விபரீதமாக விளையாடி விட்டது. கணவர் ராஜாராமுடன் டெல்லியில் வசித்து வந்தபோதுதான் ராஜாராம் இருதயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. ஓயாமல் இருமிக் கொண்டிருந்தார். சாவியின் நண்பர் டாக்டர் கோவிந்தராஜுலு சோதித்துப் பார்த்துவிட்டு பெரம்பூர் ரெயில்வே ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட ஏற்பாடு செய்தார். உடனே ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை மேற்கொண்டார்கள். டாக்டர் செரியன் ராஜாராமைப் பூரணமாகச் சோதித்து, ஆபரேஷன் செய்தாக வேண்டும் என்று முடிவாகச் சொல்லி ஆபரேஷனையும் அடுத்த நாளே செய்து முடித்தார். ஆபரேஷன் வெற்றி பெறாமல் ராஜாராம் உயிர் ஆஸ்பத்திரியிலேயே பிரிந்து விட்டது. அன்றே உமாவின் வாழ்க்கை இருள் சூழ்ந்ததாயிற்று.

மிக இளம் வயதில் கணவனை இழந்துவிட்ட தன் மகள் வாழ்க்கை சாவியைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. இரண்டொரு வருடங்களுக்குள் ராணுவத்தில் கர்னலாக இருந்த பிரசாத் அவர்களுக்கு உமாவை மணம் முடித்து வைத்தார். இதற்குப் பேருதவியாக இருந்த கர்னல் பிரசாத் அவர்களின் தங்கையின் கணவர் திரு. ராஜன் அவர்களுக்குத் தாம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருப்பதாகச் சொல்கிறார் சாவி.

கர்னல் பிரசாத் அவர்களுக்கு அதுதான் முதல் திருமணம். அவரது பெரிய மனதும், பெருந்தன்மையான போக்கும் சாவியின் புரட்சி எண்ணங்களும் ஒத்துப் போயின. திருமணமே வேண்டாம்

என்று சொல்லிக் கொண்டிருந்த பிரசாத் அவர்களை திருமணத்துக்குச் சம்மதிக்க வைத்தவர் அவருடைய சகோதரி சந்தோஷும், சந்தோஷின் கணவரும்தான். பிறகு உமாவை வந்து பார்த்த பிரசாத் சம்மதம் தெரிவித்ததும் உமா – பிரசாத் திருமணம் அண்ணா நகரிலேயே மிக எளிய முறையில் நடந்தேறியது.

பிரசாத் இப்போது ராணுவத்திலிருந்து விலகி 'மகேந்திரா அண்ட் மகேந்திரா'வில் பொது மேலாளராக உயர் பதவி வகித்து வருகிறார். உமாவின் மகன் நவீன் கேட்டரிங் படித்துப் பட்டம் பெற்று இப்போது சென்னையில் 'தாஜ் குரூப்'பில் பணியாற்றி வருகிறார். பன்னிரண்டே வயது நிரம்பிய மகள் வைஷ்ணவிக்கு இதற்குள்ளாகவே இரத்தத்தில் ராணுவம் ஓடுகிறது. நீச்சல், சைக்கிள் ஓட்டுவது, குதிரையேற்றம் போன்றவற்றுடன் பரத நாட்டியம், பியானோ போன்ற கலைகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

''என் வாழ்க்கையில் அர்த்தநாரி, பிரசாத் இருவரையும் நான் மறக்க முடியாது'' என்று பாசமிகு நன்றியுடன் சாவி குறிப்பிடும்போது அவர் கண்கள் பனிக்கின்றன.

நாலாவது மகள் மாலதியும், மருமகன் ராமமூர்த்தியும் இப்போது சென்னையில் வசிக்கிறார்கள்.

ராமமூர்த்தி அனுபவம் மிக்க ஒரு சார்ட்டர்ட் அக்கௌண்டன்ட். 'மாப்பிள்ளை ராமமூர்த்தி உழைக்க அஞ்சாதவர். மென்மையானவர். தெய்வ பக்தி மிக்கவர். எதையும் ஆராய்ந்து அணுகும் அவரது அமைதியான, சாத்வீகமான போக்கு எனக்கு ரொம்பவும் பிடிக்கும்' என்கிறார் சாவி.

மாலதி, ராமமூர்த்திக்கு இரண்டு பெண்கள். மூத்தவள் ரத்தி. இளையவள் திவ்யா. ரத்தி கல்லூரியில் முதலாண்டு. திவ்யா பத்தாம் வகுப்பில். இருவருமே புத்திசாலிப் பெண்கள்.

சாவியின் மகன் 'பாச்சா' என்கிற பாலசந்திரன் ஒரு

தேர்ந்த புகைப்படக் கலைஞர். அவர் எடுத்த பல படங்கள் தினமணி கதிர் போன்ற தமிழ்ப் பத்திரிகைகளின் அட்டைகளை அலங்கரித்திருக்கின்றன. டெலிவிஷனுக்காகச் சில நிகழ்ச்சிகளையும் வீடியோ காமிராவில் படமெடுத்துக் கொடுத்திருக்கிறார். தந்தையாருடன் பலமுறை வெளிநாடுகளுக்குப் போய் வந்திருக்கிறார். கலைஞர், காமராஜர் போன்ற தலைவர்களைப் படம் எடுத்த அனுபவமும் பாச்சாவுக்கு உண்டு. ஜப்பான், தாய்லாந்து, பங்களாதேஷ் முதலிய நாடுகளுக்குப் பயணம் செய்து எடுத்துள்ள படங்கள் ஏராளம். பங்களாதேஷ் சுதந்திரம் பெற்ற நேரத்தில் பிரதமர் முஜிபுர் ரஹ்மான் அவர்களை இவர் எடுத்த படங்கள் தினமணி கதிரில் வெளியாயின. கலைஞர் அவர்களைப் பல சந்தர்ப்பங்களில் பல கோணங்களில் பாச்சா எடுத்த படங்கள் கலைஞர் அவர்களாலேயே பாராட்டுப் பெற்றவை.

இன்று பாச்சா தமது மனைவி சீதா, மகள் ரம்யாவுடன் அமெரிக்காவில் வசதியாக வாழ்ந்து வருகிறார். மூவருமே அமெரிக்க வாழ்க்கைக்குப் பழக்கமாகி விட்டார்கள்.

பாச்சாவின் மனைவி சீதா மிக நன்றாகப் பாடுவார். மகள் ரம்யா பரத நாட்டியக் கலையில் தேர்ச்சி பெற்றவர். இப்போது அமெரிக்காவில் நியூஜெர்ஸியில் தன் படிப்புக்கு இடையே நேரம் கிடைக்கும்போதெல்லாம் ரம்யாவின் சலங்கை ஒலித்துக் கொண்டிருக்கிறது.

மற்றொரு மகன் மணி. பாச்சாவுக்கு முன்பாகவே அமெரிக்காவில் செட்டில் ஆனவர். பாச்சாவை அமெரிக்காவுக்கு அழைத்துக் கொண்டவரும் அவர்தான்.

''இங்கே நானும், என் மனைவியும் வயதான காலத்தில் தனியே இருக்க வேண்டிய சூழலில், வயதாகிவிட்ட எங்களுடன் இருந்து உதவி செய்ய விரும்பியதால், இந்தியாவுக்கே திரும்பி வந்து விட்டான். இப்போது அவன் எங்களுடன் இருப்பது

எங்களுக்கு ஆறுதலாக இருக்கிறது'' என்கிறார் சாவி. மணிக்குத் திருமணமாகி ஒரு மகன் இருக்கிறான். பெயர் வருண். அமெரிக்காவில் அம்மாவுடன் தங்கி கம்ப்யூட்டர் படித்து வருகிறான்.

சாவி இதுவரை தன் குடும்பத்தினருக்கென யாரிடமும் எந்தப் பரிந்துரைக்கும் போனதில்லை. அதே சமயம் பிறருக்காக சிபாரிசு தேடி அலையவும் தயங்கியதில்லை.

''நான் பி.யு.சி. முடித்து, கஷ்டப்பட்டு ஒரு சிபாரிசும் இல்லாமல் ராணி மேரி கல்லூரியில் பி.எஸ்.ஸி. சேர்ந்தேன். அப்பா ஒரு உதவியும் செய்யவில்லை. ஒரு வாரம் கழித்து என் சிநேகிதி சாந்தி (தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் சர்க்கரை மன்றாடியாரின் மகள்) 'உன் அப்பா இன்று காலை என் வீட்டுக்கு வந்திருந்தார். யாருக்கோ அட்மிஷன் விஷயமாக என் அப்பாவிடம் பேசிக் கொண்டிருந்தார்' என்றாள். எனக்கு எப்படி இருந்திருக்கும்? கஷ்டப்பட்டு என் கோபத்தை அடக்கிக் கொண்டேன்'' என்று சாவியின் மகள் ஜெயந்தி சொல்வதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

தன் மனைவி, மகள்கள், மகன்கள், மாப்பிள்ளைகள், மருமகள் இந்த வட்டத்தை விட்டால் சாவி அதிகமாக நேசிக்கும் குடும்ப உறுப்பினர் தம் சகோதரியின் மகன், அன்புக்குரிய மருமான் சந்திரமௌலிதான்.

''நான் மாமாவிடமிருந்து பல விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறேன். நேரம் தவறாமை, வரும் கடிதங்களுக்கு அன்றே பதில் எழுதுவது போன்றவை அவற்றில் சில. அவருடைய நண்பர்கள் வட்டம் மிகப்பெரிது. அரசியல் தலைவர்கள், இசைக் கலைஞர்கள், வியாபாரப் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்

பெருமக்கள் என்று அவரது நண்பர் குழாமின் எல்லை விரிந்து பரந்த ஒன்று. அவர்கள் வந்து மாமாவிடம் உரையாடுவதைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைக்கும். அப்போதெல்லாம் நான் மாமாவை எண்ணிப் பெருமைப்படுவேன். எனக்கு பெங்களூரில் வாசம். முப்பதாண்டுகளுக்கும் மேலாக 'பெல்' நிறுவனத்தில் பணிபுரிந்த பின் ஓய்வு பெற்றுள்ளேன். மாமா அடிக்கடி பெங்களூர் வருவார். அவருக்கு பெங்களூர் ரொம்பப் பிடிக்கும். மாமாவுக்கு 'கப்பன் பார்க்'கில் கற்பனைகள் உருவாகும். நண்பர்களோடு 'லால் பாக்' பூங்காவில் அமர்ந்தால் ஆகாச வெடி போல் நகைச்சுவை மலர்ந்து உதிரும்'' என்கிறார் மௌலி.

இப்படி சாவி என்ற ஆணி வேரில் வளர்ந்தோங்கிய ஆலமரமாய் அவரது குடும்பம் பல்கித் தழைத்து விழுதுகள் விட்டுப் பலருக்கு நிழல் தந்து கொண்டிருக்கிறது.

---

# 51. இருதய ஆபரேஷன்

இன்று வரை சாவி நோய் நொடி என்று பெரிதாகப் படுத்ததில்லை. எனினும் நீண்ட காலமாகவே அவரை விட்டுப் பிரியாத ஒரு நண்பர் உண்டு. அவர் திருவாளர் டயாபடீஸ்! தமக்கு சர்க்கரைக் குறைபாடு இருப்பதை சாவி ஒரு பொருட்டாகவே என்றும் கருதியதில்லை.

பெரிய அளவில் ஒரு சுகவீனம் என்றால் அது 1985ஆம் ஆண்டு சாவிக்கு அப்பல்லோ மருத்துவமனையில் நடைபெற்ற இருதய பைபாஸ் அறுவை சிகிச்சைதான்.

ஆபரேஷனுக்குச் சில மாதங்கள் முன் சாவி பெங்களூர் போயிருந்தபோது இருதயத்தில் லேசாக வலித்தது. இருதயத்தில் ஏதோ பிரச்னை என்பதற்கான அறிகுறியை சாவி அன்றுதான் உணர்ந்தார். சென்னை வந்ததும் டாக்டர் ஆர்.எஸ்.ராஜகோபாலனைப் பார்த்தார்.

'ஹார்ட் டிரபிள்தான்... சந்தேகமில்லை' என்றது கார்டியோ கிராம்.

பிறகுதான் அப்பல்லோ போய் ஆபரேஷன் செய்து கொண்டார். அந்த ஆபரேஷனையும் அவர் எவ்வளவு லேசாக எடுத்துக் கொண்டார் என்பதற்கு அவர் தமக்கு நடந்த ஆபரேஷன் பற்றி 'குமுதம்' வார இதழில் எழுதிய கட்டுரையே சான்று.

''....... அறையை விட்டு ஆபரேஷன் தியேட்டருக்குக்

கிளம்பு முன் இரண்டு துச்சாதனர்கள் வந்து என் உடைகளைக் களைந்து விட்டு ஒரு சின்ன டவலை மட்டும் என் இடுப்பில் சுற்றி விட்டுப் போகிறார்கள்.

ஆபரேஷன் தியேட்டரில் சில ஸ்ரீதேவிகளும், அம்பிகாக்களும் நர்ஸ் வேடத்தில் அங்குமிங்கும் பரபரப்போடு அலைவதைப் பார்க்கிறேன்.

பச்சை நிற அங்கிகளில் டாக்டர்களும் நர்ஸுகளும் சூழ்ந்து நிற்கின்றனர். தியேட்டர் முழுவதும் சூரிய வெள்ளம். ஆயுதங்களின் பளபளப்பு. என்னை ஸ்ட்ரெச்சிலிருந்து ஆபரேஷன் மேஜைக்கு மாற்றியதும் என் இடுப்பைச் சுற்றியிருந்த அந்தச் சிறிய துண்டும் அகற்றப்படுகிறது.

என் நிர்வாணம் எனக்கு ஒரு கூச்சத்தை ஏற்படுத்துகிறது. சுற்றிலும் உள்ள பெண்கள் பார்க்கிறார்களே என்று வெட்கம் பிடுங்கித் தின்கிறது.

எமனோடு உயிர்ப் போராட்டத்துக்கு நேரம் குறித்தாயிற்று. இன்னும் சில மணி நேரங்களில் என் தலைவிதி நிர்ணயிக்கப் படும் கட்டம். பிழைத்து வரப் போகிறேனா, அல்லது இந்த உலகத்திலிருந்தே விடுதலை பெறப் போகிறேனா என்ற கேள்விக் குறியோடு களம் புகுந்துள்ள நேரம். ஆனாலும் என் உயிர்ப் பிரசினையை மீறிக் கொண்டு மானப் பிரசினை மேலோங்கி நிற்கிறதே, அதுதான் விந்தை! இதற்குள் யாரோ ஒரு சிறு துணியால் என் மானத்தைக் காப்பாற்றுகிறார்கள். மனம் நிம்மதி பெறுகிறது. அப்புறம் என்னென்னவோ நடக்கிறது. நான் அரை மயக்கத்தில் இருக்கிறேன். வண்டியைத் தள்ளுகிறார்கள். மார்புக்கு மேலே மண்டை விளக்கை நகர்த்தி அட்ஜஸ்ட் செய்கிறார்கள். கத்திரிகளும் கத்திகளும் மின்னுகின்றன. ஊசி போடுகிறார்கள். இதோ, அனஸ்தேஷியா கொடுக்...

நான் கொஞ்சம் கொஞ்சமாக நினைவு இழந்து

கொண்டிருப்பதை உணர்கிறேன். திடீரென அந்த அறை, நான், டாக்டர்கள், நர்ஸ்கள், உபகரணங்கள், கூரை விளக்குகள், சுவர்கள் எல்லாம் கிறுகிறுவெனச் சுற்றி ஒரு வட்ட மேகத் துண்டாக மாறி மேலே மேலே போகிறோம்.

'ஐயோ, நான் செத்துப் போய் விட்டேன். மேலே போய்க் கொண்டிருக்கிறேன்' என்ற உணர்வுதான் என்னுள் அப்போது சுத்தமாக இருந்தது. மனைவியும் மக்களும் காத்துக் கொண்டிருக் கிறார்களே, அவர்களுக்கு இந்தச் செய்தியை இன்னும் யாரும் போய்ச் சொல்லவில்லையே என்று கவலைப்படுகிறேன். அப்படிக் கவலைப்படும்போதே அந்த நினைப்பும் போய் விடுகிறது.

அடுத்த விநாடி (ஆபரேஷன் நடைபெற்ற ஐந்தரை மணி நேரம் எப்படிப் போயிற்று?) மார்பில் யாரோ எதையோ தைப்பதை உணர்கிறேன். லேசாக – மிக மிக லேசாக – வலிக்கிறது.

'ஓ... நான் சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறேன்' என்று தெரிகிறபோது அந்த மகிழ்ச்சியில் மார்பில் போடும் தையல் வலி பெரிதாகத் தெரியவில்லை.

அதற்குப் பிறகு நடந்தது எதுவும் எனக்குத் தெரியாது.

மறுநாள் மயக்கம் தெளிந்து கண் திறந்து பார்த்தபோது என் உடம்பின் பல்வேறு பகுதிகளில் டியூப்கள் பொருத்தப்பட்டு விதவிதமான திரவ பாட்டில்கள், கருவிகளோடு இணைக்கப் பட்டிருந்தன. என் மீது ஒரு மருத்துவ அவரைப் பந்தலே படர விட்டிருந்தார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பின் ஐ.ஸியிலிருந்து மீண்டும் என் அறைக்குக் கொண்டு போகப்படுகிறேன். அங்கே என் இரண்டு கால்களிலும் ஏதோ வலி இருப்பதை உணர்கிறேன்.

இதயத்தில் அல்லவா ஆபரேஷன்? கால்களில் ஏன் வலிக்கிறது? கால்களைப் பார்க்க வேண்டும் போல் ஓர் உந்துதல். பார்த்தால் இரண்டு கால்களிலும் கணுக்காலிலிருந்து முழங்கால் வரை கிட்டத்தட்ட ஓர் அடி நீளத்துக்கு நீண்ட தையல் போடப் பட்டிருந்தது. காலில் ஏன் தையல்? இங்கிருந்துதான் வெய்ன் எடுத்து அடைபட்டிருந்த ரத்தக் குழாய்களுக்குப் பக்கத்தில் பை – பாஸ் குழாய் போட்டுச் சீரான ரத்த ஓட்டத்துக்கு வழி செய்திருக்கிறார்கள்.

மூன்று நாள் கழித்து என்னைப் பார்க்க நண்பர் சுஜாதா வந்திருந்தார். நான்தான் அதிகம் பேசினேன். என் ஆபரேஷன் அனுபவங்களை அவரிடம் எழுத்தாளர் கோணத்தில் சொன்னேன். 'இவ்வளவு பெரிய சமாசாரத்தை ரொம்ப லேசாக்கி இத்தனை நகைச்சுவையோடு சொல்கிறீர்களே!' என்று வியந்து சிரித்தார் சுஜாதா. என் பேச்சு அவருக்கு புதுத்தெம்பையும் தைரியத்தையும் அளித்திருக்க வேண்டும்.

அப்புறம் ஏழெட்டு நாட்களே ஆஸ்பத்திரியில் இருந்தேன். டாக்டர் கிரிநாத் வந்து, 'யூ ஆர் ஆல்ரைட். உங்களை டிஸ்சார்ஜ் செய்கிறேன். நீங்கள் வீட்டுக்குப் போகலாம்' என்றார்.

பிறவியிலேயே எனக்கு அமைந்துவிட்ட மனத் திட்பம், மனைவியின் மாங்கல்ய பலம், ஏழுமலையானுடைய அருள் மூன்றும் சேர்ந்து என்னைக் காப்பாற்றி விட்டன.''

ஆபரேஷன் செய்து கொண்டு மருத்துவமனையில் இருந்த போதும் சாவி சும்மா ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கவில்லை.

அவரைப் பார்க்கப் போன எழுத்தாளர் ஸுஜாதா விஜயராகவன் தான் கண்ட காட்சியை விவரிக்கிறார்:

''சாவி அவர்களுக்கு பை–பாஸ் சர்ஜரி நடைபெற்று ஒரு வாரம் கூட ஆகியிருக்காது. அவரைப் போய்ப் பார்க்கலாமா,

டாக்டர்கள் அனுமதிப்பார்களா என்றெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டு அப்பல்லோ மருத்துவமனைக்குப் போனேன். அவரைத் தூக்கத்திலும், ஓய்விலும் வைத்திருப்பார்கள் என்பதால் அவருடைய மனைவி, மக்களைப் பார்த்துப் பேசிவிட்டு வரலாம் என்ற எண்ணத்தில், தயக்கத்தோடு அறைக் கதவை மெல்லத் திறந்தேன்.

*'யார்? ஸுஜாதாவா? வாங்கோ வாங்கோ.'*

*சாட்சாத் சாவி சாரின் குரல்!*

*கற்றை கற்றையாக மடி நிறைய ப்ரூஃப் பார்க்க வேண்டிய பக்கங்கள்.*

*'மூன்று நாட்களாகவே ப்ரூஃப் பார்க்கத் தொடங்கி விட்டார்' என்று கவலையுடன் சிரித்தார் மாமி.*

*பத்திரிகை மற்றவர்களுக்கு ஒரு தொழிலாக இருக்கலாம். சாவிக்கு அது மூச்சு.''*

தன் உடல்நிலை பற்றிக் கவலைப்படாமல் 'வருவது வரட்டும், பார்த்துக் கொள்வோம்' என்று மிக தைரியமாக இருப்பதால்தான் பை–பாஸ் ஆகி பலப்பல ஆண்டுகள் ஆகியும் சாவிக்கு எந்தப் பிரச்னையும் இல்லாமல் இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

# 52. சாவி – இன்று

வயது என்பது சாவியைப் பொறுத்தவரை காலண்டர் காட்டுகிற வெறும் குறிப்புதான். வயது அவரை – அவரது இளமையான சிந்தனையை – மாறிவரும் உலகின் புதுப் புது நியதிகளோடு தன்னையும் பொருத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை – மாற்றியதே இல்லை.

சென்ற ஆண்டு அமெரிக்கா போய் மகன் பாச்சாவுடன் ஒரு மாதம் இருந்து விட்டு வந்தவுடன் என்னிடம் சொல்கிறார்:

''தெரியுமா உங்களுக்கு? இப்போ நானே தனியா ஈ.மெயில் அனுப்ப கத்துக்கிட்டேன்.''

எண்பத்தைந்து வயதில் கம்ப்யூட்டர் கற்றுக் கொள்ளும் ஆர்வம்!

நானும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். அன்று பார்த்த அதே உற்சாகம், ஆர்வம் இன்றும் அவரிடம் கொப்பளித்துக் கொண்டிருக்கிறது.

காலையில் எட்டு மணிக்கு அவர் வீட்டுக்குப் போவேன். அதற்குள் எழுந்து தன் காலைக் கடன்களையெல்லாம் முடித்து, குளித்து பூஜை செய்த பின்னர் அலுவலகத்துக்குப் போகத் தயாராக இருக்கும் இளைஞன் போல சுத்தமாக உடையணிந்து காலை தினசரிகளைப் படித்துக் கொண்டிருப்பார்.

உலக நடப்புகளில் தீவிர ஆர்வம் காட்டுகிறார். முக்கிய

செய்திகளின் கீழ் அடிக்கோடிட்டு குறிப்பெடுத்து வைக்கிறார். ஓய்வு நேரங்களில் கதை, கட்டுரைகள் எழுதி வருகிறார்.

சிற்சில நாட்கள் மாலை வேளைகளில் முக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தி விட்டு வருகிறார்.

டிசம்பர் வந்து விட்டால் தேனீயின் சுறுசுறுப்புதான். இசை விழா சீசன் சாவியின் மனதுக்கு இசைந்த சீசன். மியூஸிக் அகாடமியும், நாரத கான சபாவும், கிருஷ்ண கான சபாவும் சொந்த வீடுகள் போல. அநேகமாக அங்கேதான் சீசனின் போது இவரது குடியிருப்பு.

வாழ்நாள் முழுதும் எதிர் நீச்சல் போட்ட களைப்பு தெரியாத முகம். வாழ்க்கையை ரசிக்க வயது ஒரு பொருட்டே அல்ல என்று தீர்மானமாய் நம்புகின்ற ஒரு திடம்.

நான் சாவி அவர்களைச் சந்திக்காத நாட்கள் அபூர்வமே. அதுவும் சமீப காலமாக இந்த 'சாவி – 85' என்ற நூல் சம்பந்தமாக நான் இவரை தினமும் சந்திக்கத் தவறியதில்லை. இவரிடமிருந்து ஊக்கம் பெறாத நேரமும் இல்லை.

முதுமை அடைவதை யாராலும் தவிர்க்க முடியாதுதான். எல்லோரும் ஒரு காலத்தில் முதுமை அடையத்தான் வேண்டும் என்றாலும் சிலர் மட்டுமே கண்ணியமாக முதுமை அடைகிறார்கள். ஆங்கிலத்தில் 'ஏஜிங் கிரேஸ்ஃபுல்லி' என்பார்களே, சாவி அதற்குச் சிறந்த உதாரணம்.



"மகிழ்ச்சிகரமான நாட்களில் மட்டுமல்லாமல், துன்பகாலங்களிலும் எனக்குத் துணையாகித் தோளுக்கு வலிமை சேர்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ள தூய நண்பர் திரு. சாவி அவர்களின் 85வது பிறந்த நாளையொட்டி அன்புக்குரிய திரு.ராணிமைந்தன் அவர்கள் 'சாவி – 85' எனும் பெயரில் அருமையான நூலொன்றை உருவாக்கியிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

"உழைப்பு, நேர்மை, துணிவு – இந்த மூலதனம் ஒருவரை உயர்த்துமா?

உயர்த்தும் என்பதுதான் சாவியின் வாழ்க்கை"

– என்று இந்நூலின் ஆசிரியர் திரு. ராணிமைந்தன் இதன் முகப்புரையில் கூறுவது முற்றிலும் பொருந்தும்."

– டாக்டர் கலைஞர்